# மாவீரர் துயிலுமில்லங்களை விடுவியுங்கள்

## ரவிகரன் எம்.பி.



**விஜயரத்தினம் சரவணன்**

மாவீரர்களின் உறவுகளும், தமிழ் மக்களும் மாவீரர்களை விதைத்த இடத்தில் கண்ணீர் சிந்தி நினைவுகூருவதற்காக வடக்கு, கிழக்கில் இராணுவத்தின் கையகப் படுத்தலிலுள்ள..

02 ஆம் பக்கம்




வாரவெளியீடு

# தமிழன்

THAMILAN

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 05, இதழ் : 36, குரோதி வருடம், மாசி மாதம் 25ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை (09.03.2025) ஹிஜ்ரி-1446, ரமழான் - 08, 0115886187 - பக்கங்கள் 20+8+8+8

விலை ரூ.130


## நக்கல் நமசிவாயம்

முன்னரெல்லாம் தேர்தல் வந்தாலே மக்களை நல்லா கவனிப்பாங்க அரசியல்வாதிமார்..... இப்ப அரசியல்வாதிகளைத்தான் மக்கள் கவனிக்கவேண்டியதா இருக்கு...






## சன்டே சாம்பார்



★ இந்தியப் பிரதமரின் கொழும்பு விஜயம் சொல்லும் செய்தி என்ன ?

★ கொழும்பு மாநகர மேயர் வேட்பாளராக மனோவை நியமிக்க சஜித் முயற்சி

★ கிழக்கு மாகாண அடிப்படைவாத குழுக்களைத் தேடி இரகசிய வேட்டை

03 ஆம் பக்கம்

# தேர்தல் மே 8இல்!

உள்ளூராட்சித் தேர்தலை எதிர்வரும் மே 8ஆம் திகதி நடத்துவதற்கு தேர்தல் ஆணைக்குழு உத்தேசித்திருப்பதாக அறியமுடிகின்றது. வழமையாக தேர்தலை வார இறுதித் தினமொன்றில் நடத்தும் தேர்தல் ஆணைக்குழு இம்முறை வாரத்தின் நடுப்பகுதியில் தேர்தலை நடத்த முடிவு செய்திருப்பதாகத்தெரிய தகவல்கள் சொல்கின்றன. தேர்தலுக்கான திகதி இன்னும் சில தினங்களில் அறிவிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

## பொறுங்கோ... விரைவில் வருகிறேன் பார்லிமென்ட்...



கொழும்பு றோயல் - தோமஸ் கல்லூரிகளுக்கிடையிலான கிரிக்கெட் போட்டி எஸ்.எஸ்.சி. மைதானத்தில் நடைபெற்றபோது முன்னாள் ஜனாதிபதி ரணில் தனது பாடசாலை நண்பர்களுடன் அதனைப் பார்வையிடும் காட்சி. படப்பிடிப்பு - இஷான் சஞ்சீவ



# மத்தள விமான நிலையத்தில் பழுதுபார்க்கும் வேலைத்தளம்

## சிவில் விமான சேவைகள் அமைச்சு கவனம்

02 ஆம் பக்கம்


வியாபாரம் முன்னேற இங்கு கரையேறுங்கள்



வருடாந்த வட்டி 7% இலிருந்து

PEOPLE'S BANK BUSINESS LOANS

மேலும் விபரங்களுக்கு அருகில் உள்ள மக்கள் வங்கிக் கிளைக்கு வாருங்கள்.

PEOPLE'S BANK
Pride of the Nation


# முகாமைத்துவ அதிகாரிகளை நியமிக்க அரசு தீர்மானம்

அரச சேவையில் முகாமைத்துவ அதிகாரிகளை நியமிக்க அரசாங்கம் முடிவு செய்துள்ளதாக பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு தெரிவித்துள்ளது.

இதற்காக எதிர்வரும் மே மாதம் திறந்த போட்டிப் பரீட்சை நடத்தப்படுமென அமைச்சின் செயலாளர் எஸ்.ஆலோக்க பண்டார தெரிவித்துள்ளார்.

2020ஆம் ஆண்டு நடைபெறவுள்ள போட்டிப் பரீட்சைக்குச் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்களின் அடிப்படையில் அதிகாரிகள் தெரிவுசெய்யப்படுவார்களென அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதற்காக 1,30,000க்கும் மேற்பட்ட விண்ணப்பங்கள் கோரப்படவுள்ளன. பரீட்சை முடிவுகளின் அடிப்படையில், 2,200 பேர் அரச சேவையில் இணைத்துக்கொள்ளப்பட வுள்ளனர். தற்போது முகாமைத்துவ அதிகாரிகளுக்கான 4,000க்கும் மேற்பட்ட வெற்றிடங்கள் உள்ளதென அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

2018ஆம் ஆண்டிலேயே இறுதியாக முகாமைத்துவ அதிகாரிகள் அரச சேவைக்கு இணைத்துக்கொள்ளப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.


செலான் வங்கியிடமிருந்து உங்கள் தங்கப் பவுணிற்கு...

அதிகபட்ச முற்பணம் ரூ. 166,000/= வட்டிவீதம் மேலும் குறைக்கப்பட்டுள்ளது.

● அதிகபட்ச இரகசியத்தன்மை
● சிநேகபூர்வமான உடனடி சேவை
● சிறந்த பாதுகாப்பு

மேலதிக விபரங்களுக்கு அருகிலுள்ள செலான் வங்கியை நாடுங்கள்

011 200 88 88

செலான் வங்கி




# காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தை சிறந்ததாக மாற்றவேண்டும்

## ஜனாதிபதி சுட்டிக்காட்டு

''திறமையான மற்றும் செயற்றிறன்கொண்ட முதலீடுகளில் கவனம் செலுத்தி எதிர்காலத்தில் இந்த நாட்டின் தேசிய பொருளாதாரத்துக்கு பரந்த பங்களிப்பை வழங்கும் நிறுவனமாகக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தை மாற்றவேண்டும்'' - என்று ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க வலியுறுத்தினார்.

இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபன அதிகாரிகளுடன் நேற்று முன்தினம் (07) ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலின்போதே ஜனாதிபதி இதனை வலியுறுத்தினார்.

இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் தற்போதைய செயற்பாட்டு நடவடிக்கைகள்...

02 ஆம் பக்கம்

# மனித – விலங்கு மோதல்கள் குறித்து சுற்றாடல் அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவில் கவனம்



★ வரலாற்றில் முதல் தடவையாக சுற்றாடல் தொடர்பான சகல நிறுவனங்களும் ஓர் அமைச்சின் கீழ் – உறுப்பினர்கள் மற்றும் அதிகாரிகள் பாராட்டு

★ ஒவ்வொரு நிறுவனங்களின் வகிபாகம் தொடர்பில் தனித்தனியாகக் கலந்துரையாடப்பட்டது

மனித – விலங்கு மோதல்கள் தொடர்பில் சுற்றாடல் அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவில் விரிவாகக் கலந்துரையாடப்பட்டதுடன், இது தொடர்பில் விஞ்ஞான ரீதியான தீர்வுகளுக்குச் செல்ல வேண்டியதன் அவசியமும் இங்கு வலியுறுத்தப்பட்டது.

குறிப்பாக, அந்தந்த நிறுவனங்களின் வகிபாகங்கள் குறித்து இங்கு வெவ்வேறாகக் கலந்துரையாடப்பட்டதுடன், காட்டு விலங்குகளின் பிரச்சினைகள், போதுமான மனித மற்றும் பௌதீக வளங்கள் இல்லாமை போன்றவை அடையாளம் காணப்பட்ட பிரச்சினைகள் என்பனவும் இதில் அடங்கும்.

யானை – மனித மோதல்கள் உள்ளிட்ட பயிர்களுக்கு சேதம் ஏற்படுத்தும் ஏனைய உயிரினங்களான செங்குரங்குகள், மர அணில்கள் மற்றும் மயில்கள் தொடர்பில் காணப்படும் பிரச்சினைகள் தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர்கள் குழுவின் கவனத்துக்குக் கொண்டுவந்தனர். செங்குரங்குகள், மர அணில்கள் மற்றும் மயில்களின் பெருக்கத்தைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுப்பது அவசியம் என்றும், இதற்குரிய நடவடிக்கை எடுக்காவிட்டால் விவசாயத்துறை பாரிய பிரச்சினைக்கு முகங்கொடுக்கவேண்டியிருக்கும் என்பது பற்றியும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

இந்தப் பிரச்சினைக்கு உடனடியாகத் தீர்வுகளை வழங்குவது கடினமென்றாலும், விரைவில் தீர்வுகளை வழங்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அமைச்சர் (வைத்தியர்) தம்மிக்க பட்டபெந்தி தெரிவித்தார்.

அத்துடன், யானை - மனித மோதல்களை நிறுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் யானைகள் நடமாடும் எல்லைகள் அடையாளம் காணப்பட்டிருப்பதாகவும் அவற்றின் நடமாட்டத்துக்கு இடையூறு ஏற்படுத்தும் தடைகளை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகவும் பிரதியமைச்சர் அன்டன் ஜயக்கொடி தெரிவித்தார்.

மேலும், யானைகள் ரயில்களில் மோதுவதைத் தடுக்கும் வகையிலான கமரா அமைப்புகள் பொருத்துவது உள்ளிட்ட தேவையான நடவடிக்கைகள் இரண்டு வாரங்களுக்குள் எடுக்கப்படுமென்றும் அவர் குறிப்பிட்டார்.

சுற்றாடல் அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு அமைச்சர் (வைத்தியர்) தம்மிக்க பட்டபெந்தியின் தலைமையில் அண்மையில் (05) கூடியபோதே இந்த விடயங்கள் குறித்துக் கலந்துரையாடப்பட்டது.

அமைச்சின் கீழ் உள்ள அந்தந்த நிறுவனங்களின் அதிகாரிகள் தமது நிறுவனங்கள் குறித்து குழுவுக்கு விளக்கமளித்ததுடன், வரலாற்றில் முதன்முறையாக சுற்றாடல் தொடர்பான சகல நிறுவனங்களும் ஒரே அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டமை தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர்களும் அதிகாரிகளும் பாராட்டைத் தெரிவித்தனர்.

அத்துடன், ஏப்ரல் 15ஆம் திகதி நடைபெற விருப்பது விலங்குகளின் தொகைமதிப்பீடு இல்லையென்றும் எளிய முறையிலான கணக்கெடுப்பு மாத்திரமே என்றும் பிரதியமைச்சர் அன்டன் ஜயக்கொடி இங்கு தெரிவித்தார். இது பற்றி மேலும் கருத்துத் தெரிவித்த அவர், இது தொடர்பில் எவ்விதமான தகவல்களும் இல்லாத பின்னணியில் ஏதாவது ஒருசில தரவுகளையாவது பெற்றுக்கொள்வதற்காக நடத்தப்படும் கணக்கெடுப்பு மாத்திரமே இது என்றார்.

இவ்வாறான நிலையில், இந்த முயற்சியை கேலி செய்வது பொருத்தமற்றது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

சட்டவிரோதமாக மேற்கொள்ளப்படும் மணல் அகழ்வு குறித்து குழுவில் கலந்துரையாடப்பட்டதுடன், இடம்பெறுகின்ற பெரும்பாலான மணல் அகழ்வுகளில் 50 வீதமானவை சட்டவிரோதமானவை என பிரதியமைச்சர் அன்டன் ஜயக்கொடி சுட்டிக்காட்டினார்.

இந்தக் குழுவில் கருத்துத் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, வனவிலங்குத் திணைக்களத்துக்குக் காணப்படும் மனிதவளம் போதுமான அளவில் இல்லாமை குறித்து கவனம் செலுத்தப்படவேண்டும் - என்றார்.

பயிர் காப்புறுதி, ஆயுட் காப்புறுதி மற்றும் சொத்துகளுக்கான காப்புறுதி தொடர்பான அரசாங்கத்தின் கொள்கைகள் குறித்தும் அவர் குழுவில் கேள்வியெழுப்பினார். இதற்குப் பதிலளித்த,பிரதி அமைச்சர் அன்டன் ஜயக்கொடி, இழப்பீட்டை இரட்டிப்பாக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாகச் சுட்டிக்காட்டினார். அத்துடன், உயிர் மற்றும் சொத்து இழப்புகளைத் தடுப்பதே அரசாங்கத்தின் நோக்கமென்றும் கூறினார்.

இந்தக் குழுக் கூட்டத்தில் பிரதியமைச்சர் அன்டன் ஜயக்கொடி, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

## கடன் மறுசீரமைப்பு: ஜப்பானுடன் ஒப்பந்தத்தில் இணைந்த இலங்கை அரசு



இலங்கை அரசாங்கத்துக்கும் ஜப்பான் அரசாங்கத்துக்குமிடையிலான வெளிநாட்டுக் கடன் மறுசீரமைப்பு செயல்முறை தொடர்பில் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனத்துடன் இருதரப்பு திருத்த ஒப்பந்தமொன்றில் இலங்கை கையெழுத்திட்டுள்ளது.

ஜப்பான் அரசாங்கம் இலங்கையின் வெளிநாட்டுக் கடன் மறுசீரமைப்பு செயல் முறையை முன்னெடுப்பதில் முக்கிய பங்கு வகித்துள்ளது. அத்துடன், பிரான்ஸ் மற்றும் இந்தியாவுடன் இணைந்து அதிகாரபூர்வ கடன் வழங்குநர் குழுவுக்குத் தலைமை தாங்குகிறது.

இந்நிலையில், நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார விவகார அமைச்சில் நேற்று முன்தினம் (07) அதிகாரபூர்வ கையெழுத்து நிகழ்வு நடைபெற்றது.

இந்தப் பரிமாற்றக் குறிப்புகளில் இலங்கை அரசின் சார்பாக நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார மேம்பாட்டு அமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தனவும் ஜப்பான் அரசின் சார்பாக இலங்கைக்கான ஜப்பான் தூதுவர் அகியோ இசோமாட்டாவும் கையெழுத்திட்டனர்.

## காப்புறுதிக்...

குறித்து இதன்போது மீளாய்வு செய்யப்பட்டதோடு, இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் நஷ்டத்தைச் சந்தித்தால், அதில் முதலீடு செய்தவர்கள்தான் நேரடியாகப் பாதிக்கப்படுவார்கள் என்றும் எனவே, முறையான முகாமைத்துவத்தின் மூலம் அதனை அதிக இலாபம் ஈட்டும் அரச நிறுவனமாகப் பேண வேண்டும் என்றும் ஜனாதிபதி மேலும் வலியுறுத்தினார்.இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் நுசித் குமாரதுங்க உள்ளிட்ட பணிப்பாளர்கள் சபை உறுப்பினர்கள் மற்றும் சிரேஷ்ட அதிகாரிகள் உள்ளிட்டோர் இந்தக் கலந்துரையாடலில் இணைந்துகொண்டனர்.

## மத்தள விமான...

(நா.தினுஷா)

மத்தள விமான நிலையத்தில் பழுதுபார்க்கும் வேலைத்தளமொன்றை உருவாக்குவது தொடர்பில் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சு கவனம் செலுத்தியுள்ளது.

இதுதொடர்பான பேச்சுவார்த்தைகளை இன்றிலிருந்து (09) ஆரம்பிக்கவும் இந்த வேலைத்திட்டத்தை இந்திய நிறுவனமொன்றுடன் இணைந்து முன்னெடுக்கவும் எதிர்பார்த்துள்ளதாக போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

வெள்ளிக்கிழமை இடம்பெற்ற போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சின் நிதி ஒதுக்கீடு மீதான குழுநிலை விவாதத்தின்போது இதுதொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

மத்தள விமான நிலையத்தை நிர்மாணிப்பதற்காக 36. 5 பில்லியன் ரூபா செலவு செய்யப்பட்டுள்ளது. ஆனால், கடந்த ஐந்து வருடங்களில் 38.5 பில்லியன் ரூபா நட்டத்தை அடைந்துள்ளது.

எதிர்வரும் 09ஆம் திகதி இதுதொடர்பில் பேச்சுவார்த்தை நடத்த எதிர்பார்த்துள்ளோம். முதல்நிலை சர்வதேச இந்திய நிறுவனத்தை இணைத்துக்கொண்டு மத்தள விமான நிலையத்தில் பழுதுபார்க்கும் வேலைத்தளமொன்றை உருவாக்க முடியுமா என்பது தொடர்பில் கலந்தாலோசிக்கவும் எதிர்பார்த்துள்ளோம். இந்த யோசனைக்கு ஒரு சாதகமான பதிலும் கிடைத்துள்ளதாக சுட்டிக்காட்டியிருந்தார்.

இதேவேளை, தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் அறிக்கையொன்றில் 2017 மற்றும் 2022க்கு இடைப்பட்ட காலப்பகுதியில் மாத்திரம் மத்தள ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்தால் தோராயமாக 42.81 பில்லியன் நட்டம் ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், 2022ஆம் ஆண்டுக்கான விமான நிலையத்தின் இயக்கச் செலவுகள் 2.03 பில்லியன் ரூபாவாக இருந்ததாகவும் இது அதன் வருமானத்தை விட 26 மடங்கு அதிகமாகும் என்றும் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## மாவீரர்...

மாவீரர் துயிலுமில்லங்களை விடுவிக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், அமைச்சரும் பாராளுமன்ற சபை முதல்வருமான விமல் ரத்நாயக்கவிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

பாராளுமன்றில் நேற்று முன்தினம் (07) இடம்பெற்ற 2025ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத்திட்ட போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானசேவைகள் அமைச்சின் குழுநிலை விவாதத்தில் பங்கேற்று கருத்துத் தெரிவிக்கும்போதே பாராளுமன்ற உறுப்பினர் ரவிகரன், அமைச்சர் விமல் ரத்நாயக்கவிடம் இக்கோரிக்கையை விசேடமாக முன்வைத்தார்.

இதன்போது அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

இறந்தவர்களை நினைவுகூருதலென்பது அந்தந்த சமயங்களுக்கேற்ப மக்கள் செய்து வருவது வழமையாகும்.

எங்களுடைய மக்கள் வடக்கு, கிழக்கில் நினைவுநாளாக நவம்பர்-27 அன்று துயிலுமில்லங்களிலும் மே-18அன்று முள்ளிவாய்க்காலிலும் நினைவுகூருவார்கள்.

கடந்த வருடம் உங்களுடைய ஆட்சியில் தடையில்லாமல் உணர்வுபூர்வமாக நவம்பர் 27 அன்று நிம்மதியாக நினைவுகூர்ந்தார்கள்.

துயிலுமில்லங்கள் சிலவற்றில் இராணுவத்தினர் இருக்கின்றார்கள். இராணுவத்தினரின் எண்ணிக்கை வடக்கு, கிழக்கில் அதிகமாகவும் முல்லைத்தீவில் இன்னும் அதிகமாகவும் இரண்டு மக்களுக்கு ஒருபடையினர் என்றும் உள்ளதாக பலரும் சுட்டிக்காட்டுகின்றனர்.

மக்கள் தங்களுடைய உறவுகளை எண்ணி நினைத்து, ஒருசொட்டுக்கண்ணீர் சிந்தி, தமது மனதை ஆறுதல்படுத்துவதற்கு இராணுவம் அத்துமீறி கையகப்படுத்தி வைத்துள்ள முள்ளியவளை, அளம்பில், தேராவில், ஈச்சங்குளம் உள்ளிட்ட வடக்கு, கிழக்கிலுள்ள இன்னும் சில துயிலுமில்லங்களையும் விடுவியுங்கள். வடக்கு, கிழக்கு தமிழ் மக்களின் சார்பாக இந்தக் கோரிக்கையை முன்வைக்கின்றேன் - என்றார்.

## ரமழான் சிந்தனை



யார் நோன்பாளியை நோன்பு துறக்கச்செய்கிறாரோ அவருக்கு அந்த நோன்பாளியின் நற்கூலியைப் போன்ற நன்மைகள் உண்டு. இதனால் அந்த நோன்பாளியின் நன்மையில் எந்தக் குறைவும் ஏற்படாது என நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். (புகாரி, முஸ்லிம்)

நாங்கள் நோன்பு துறக்கும்போது எம்முடன் வேறு நோன்பாளிகள் யாரும் இருந்தால் அவர்களையும் நோன்பு துறக்க வைப்பதன்மூலம் அந்த நோன்பாளி செய்த நன்மைகள் அனைத்தும் எமக்குக் கிடைக்கிறது. இதனால் அந்த நோன்பாளியின் நன்மைகளிலிருந்து எதுவும் குறைவடையாது. எனவே, அடைந்திருக்கும் ரமழானில் எங்களிடம் இருக்கும் உணவைக்கொண்டு நோன்பு துறக்க வைப்பதன் மூலம் அதிக நன்மைகளை அடைந்துகொள்ள முயற்சிப்போம்.

(தொழுகை நேரங்கள்)
(05ஆம் திகதி முதல் 09ஆம் திகதிவரை)

| | | |
|---|---|---|
| சுபஹ் | - | 5.06 |
| சூரிய உதயம் | - | 6.22 |
| ழுஹர் | - | 12.23 |
| அஸர் | - | 3.41 |
| மஃரிப் | - | 6.22 |
| இஷா | - | 7.32 |

## பேராதனைப் பல்கலை நூலகர் நேபாளத்துக்கு

(பேராதனை நிருபர்)

பேராதனைப் பல்கலைக்கழக பிரதம நூலகர் கலாநிதி ஆர்.மகேஸ்வரன் நேபாள நாட்டின் காத்மண்டு பல்கலைக்கழகத்தில் நடைபெறவுள்ள டிஜிட்டல் நூலக மேம்படுத்தல் திட்ட அமுலாக்கல் பற்றிய மூன்றாண்டு திட்டத்தின் ஆரம்ப கூட்டத்தில் கலந்து கொள்ளவுள்ளார்.



ஐரோப்பிய யூனியன் உதவி வலையமைப்பின்கீழ் இயங்கும் இராஸ்மஸ் முண்டஸ் நிறுவனத்தின் இலங்கை-இந்திய நேபாள நாடுகளுக்கான நூலக வலையமைப்பு அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் பேராதனை, களனி, ருஹுணு பல்கலைக்கழக நூலக அபிவிருத்தித் திட்டத்தின் ஆரம்ப கூட்டத்தில் கலந்துகொள்ள இலங்கையின் பிரதிநிதியாகவே இன்று ஒன்பதாம் திகதி முதல் பதினைந்தாம் திகதி வரை நடைபெறவுள்ள கூட்டத்தில் கலந்துகொள்ளவுள்ளார்.







சிவா இராமசாமி
mesivaraj@yahoo.com

# ★ இந்தியப் பிரதமரின் கொழும்பு விஜயம் சொல்லும் செய்தி என்ன?

# ★ கிழக்கு மாகாண அடிப்படைவாத குழுக்களைத் தேடி இரகசிய வேட்டை

# ★ கொழும்பு மாநகர மேயர் வேட்பாளராக மனோவை நியமிக்க சஜித் முயற்சி





இந்தியப் பிரதமர் நரேந்திரமோடி ஏப்ரல் முற்பகுதியில் இலங்கை வருவதாக வெளிவந்துள்ள செய்தி தேசிய மக்கள் சக்தி ஆட்சியாளர்களுக்குப் பெரிதாக மகிழ்ச்சியைக் கொடுத்திருப்பதாகத் தெரியவில்லை.

ஏற்கனவே அதானியின் காற்றாலை மின்திட்டத்தால் இந்தியாவின் அதிருப்தியைப் பெற்றுள்ள இலங்கை அரசு, இப்போது இந்தியப் பிரதமரை எதிர்கொள்வதில் தர்மசங்கடத்தை எதிர்நோக்கியிருக்கிறது. அதேபோல சீனாவுடன் நெருங்கி, சீனாவின் பல புதிய திட்டங்களைப் பரிசீலித்துவரும் கொழும்பு, இந்தியப் பிரதமரின் வருகை இராஜதந்திர ரீதியிலான நெருக்கடியைத் தோற்றுவிக்கும் என்றும் கருதுவதாகத் தெரிகிறது.

இந்தியப் பிரதமர் கொழும்பு வரும்போது தலதா மாளிகைக்கு அவரை அழைத்துச் செல்ல அரச மேலிடத்தில் ஆலோசிக்கப்பட்டது. கண்டி ஸ்ரீ தலதா மாளிகையின் புனித தந்ததாது மக்களின் வழிபாட்டுக்கு வைக்கும் செயற்பாடு ஏப்ரல் மாத இரண்டாம் வாரத்தில் இடம்பெறவுள்ளதால் அதற்கு முன்னோட்டமாக இந்தியப் பிரதமரை அங்கு அழைத்துச் சென்று அந்த மிகவும் பூர்வாங்க ஆரம்பத்தை வழங்க அரசு திட்டமிட்டது.

ஆனால், இலங்கை விஜயத்தின்போது இரண்டு இடங்களுக்கு மட்டுமே செல்ல திட்டமிட்டுள்ளார் இந்தியப் பிரதமர். அந்த இரண்டு இடங்களும் இந்தியாவுக்கு முக்கியமானவை என்று காட்டுவதற்காக மோடி அலுவலகம் அதனைத் தேர்ந்தெடுத்ததோ தெரியவில்லை. திருகோணமலையில் சம்பூரில் அமைக்கப்படவுள்ள சூரிய மின்கலத் திட்டமொன்றுக்காக அடிக்கல் நாட்டி வைக்கவுள்ளார் இந்தியப் பிரதமர். தேசிய மின் விநியோகத்துக்காக அந்த மின்கல மின்னுற்பத்தி வழங்கப்படும். திருகோணமலையில் கால் வைப்பதன் மூலம் இந்தியா பல செய்திகளை மீண்டும் வலியுறுத்தி நிற்கிறது. இலங்கையின் கேந்திரஸ்தானமான திருகோணமலையில் தங்களது ஆதிக்கம் இருக்கும் என்பதுதான் அது.

அதேபோல் அநுராதபுரம் ஸ்ரீமகாபோதி (Sri Maha Bodhi) என்பது இலங்கையின் முதல் தலைநகரமான அநுராதபுரத்திலுள்ள புனித வெள்ளரசு மரம் கொண்ட வழிபாட்டிடமாகும். புத்தர் இருந்து ஞானம் பெற்ற வெள்ளரசு மரத்தின் கிளையிலிருந்து வளர்க்கப்பட்டதே இது என்று கூறப்படுகிறது. இது கி.மு. 288ஆம் ஆண்டில் நடப்பட்டதாக இலங்கை வரலாற்று நூல்கள் கூறுகின்றன. மனிதனால் நடப்பட்டதும் அவ்வாறு நடப்பட்ட காலம் அறியப்பட்டதுமான மரங்களில் உலகிலேயே மிகப் பழமையான மரம் இதுவே எனச் சொல்லப்படுகிறது. இங்கேயும் இந்தியப் பிரதமர் வழிபட்டு, இலங்கையின் பழைய வரலாறை நினைவூட்டுவது இப்போதைய ஆட்சியாளர்களுக்குப் பொருத்தமாக இருக்குமென்று கருதினாரோ தெரியவில்லை.

எப்படியோ இந்தியப் பிரதமரின் வருகையை முன்னிட்டு உச்சகட்ட பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. புதுடில்லியிலிருந்து விசேட பாதுகாப்பு உயர்மட்டக் குழு கொழும்பு வந்து இந்தியப் பிரதமரின் இலங்கை விஜயத்துக்கான பாதுகாப்பு முன்னேற்பாடுகளைச் செய்ய ஆரம்பித்துள்ளன. மே முதல் வாரத்தில் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடைபெறுமென்பதால் மோடியின் இந்த விஜயம் அரசியல் ரீதியாக எவருக்கும் சாதகமாக அமைந்துவிடக் கூடாதென இந்தியப் பிரதமர் அலுவலகம் கருதுவதாகவும் தெரிகிறது.

### உள்ளூராட்சி மன்றத் தேர்தல் ஏற்பாடுகள் தீவிரம்

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் மே மாத முதல் வாரத்தில் நடைபெறுமென எதிர்பார்க்கப்படும் சூழ்நிலையில், அதற்கான முன்னேற்பாடுகள் தீவிரமாக இடம்பெற்று வருகின்றன. அரசியல் கட்சிகளும் சுயேச்சைக் குழுக்களும் கட்டுப்பணத்தைச் செலுத்த ஆரம்பித்துள்ளன.

இந்தத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தி கடந்த இரண்டு பிரதான தேர்தல்களிலும் ஈட்டிய அமோக வெற்றியை எட்டாதென பலரும் கருத்து வெளியிட்டு வந்தாலும் உள்ளூராட்சி மன்றங்களைக் கைப்பற்றுவது உறுதியென தேசிய மக்கள் சக்தி நம்புகிறது. ஆனால், வரவு-செலவுத் திட்டத்தில் நிவாரணமின்மை, அத்தியாவசியப் பொருட்களின் விலையுயர்வு என்பவற்றால் மக்கள் இந்த ஆட்சி மீது அதிருப்தியில் இருப்பது தெரிகிறது. குறிப்பாக, இவர்களுக்கு கடந்த தேர்தலில் ஆதரவளித்தவர்களே ஆட்சியை விமர்சிக்கும் நிலைமை உள்ளது.

ஆளுங்கட்சி பலவீனங்களைக் கொண்டிருந்தாலும் எதிர்க்கட்சி பலவீனமாக இருப்பதால் அந்த இடைவெளியை சரியாகப் பயன்படுத்தி தனது கட்சியை வலுப்படுத்திச் செல்கிறார் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க. எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில் மேடை பிரசாரங்களில் பங்குபற்றுவதில்லையெனத் தீர்மானித்திருக்கும் ஜனாதிபதி அநுர, அரசியல் பிரசார நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு கட்சியின் சிரேஷ்ட பிரமுகரான ரில்வின் சில்வாவை கேட்டுள்ளாரென அறியமுடிந்தது.

எதிர்க்கட்சியைப் பொறுத்தவரை ஐக்கிய மக்கள் சக்தி, ஐக்கிய தேசியக் கட்சி ஆகிய கட்சிகள் எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கு முன்னதாக கூட்டணியொன்றை அமைக்க எடுத்த முயற்சிகள் இதுவரை வெற்றியளிக்கவில்லை. அதேபோல தமிழ் அரசியல் கட்சிகள் கூட பிரிந்து நிற்கின்றன. அதேபோல் வேட்பாளர் தெரிவிலும் பெரும் இழுபறி நிலைமை காணப்படுகிறது. கொழும்பு மாநகர சபைக்கு மேயர் வேட்பாளரொருவரைத் தெரிவுசெய்யும் நடவடிக்கைகளை பிரதான அரசியல் கட்சிகள் முன்னெடுத்து வருகின்றன. ஐக்கிய மக்கள் சக்தி தனது மேயர் வேட்பாளராக தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பியை நியமிக்க ஆலோசனை செய்தது. ஆனால், அவர் அதனை ஏற்கவில்லை. ஐக்கிய தேசியக் கட்சியும் ஐக்கிய மக்கள் சக்தியும் இதர கட்சிகளும் இணைந்து பொதுவான சின்னத்தின் கீழ் போட்டியிட்டால் இந்தக் கோரிக்கையை பரிசீலிக்க முடியுமென்று மனோ எம்.பி. இதன்போது தெரிவித்திருப்பதாக அறியமுடிந்தது. மனோவிடம் கோரிக்கை விடுத்த பின்னர் முஜிபுர் ரஹ்மானையும் களமிறக்க ஐக்கிய மக்கள் சக்தி ஆலோசித்தது. ஆனால் முஜிபுரும் அதனை ஏற்றுக்கொள்ளவில்லையென அறியமுடிந்தது.

ஐக்கிய தேசியக் கட்சி கொழும்பு மாநகர சபைக்கான தலைமை வேட்பாளராக சாகல ரத்னாயக்கவை நியமிக்கவுள்ளது. அதேசமயம் தேசிய மக்கள் சக்தி தனது மேயர் வேட்பாளராக அதன் கொழும்பு அமைப்பாளர் கெலி பல்தசாரை நியமிக்கவுள்ளது.

(தொடர்ச்சி 05 ஆம் பக்கம்)







## தொழில் முயற்சியாளர்களாக பெண்களை உருவாக்க அர்ப்பணிப்புடன் செயற்படும் RDB

- தொழில்முனைவோருக்கான நிதி ஒதுக்கல்.
- செயற்றிட்டங்களின் அறிமுகம்.
- பயிற்சி மற்றும் மூலோபாயத் திட்டமிடல்.
- திறன் மேம்பாடு.
- நிதி அறிவு தேர்ச்சி.
- நிதி ஒழுக்கம் பயிற்சி.
- தொழிற் பயிற்சி பாடநெறிகள் அறிமுகம்.

தேசிய பொருளாதாரத்துக்குப் பெருமைமிக்க தொழில் முயற்சியாளர்களாக பெண்களை உருவாக்குவதற்கு வங்கி அர்ப்பணிப்புடன் செயற்படுகிறது.

இலங்கைப் பொருளாதார மற்றும் சமூக நிலைமைகளை வலுப்படுத்துவதற்கும் பெண்களின் எதிர்காலத்தைக் கட்டியெழுப்புவதற்கும் தனித்துவமான பணியில்


லசந்த பெர்னாண்டோ (தலைவர்)


ஜனித்த பிரியசாந்த (பொதுமுகாமையாளர்)

ஈடுபட்டுள்ள பிரதேச அபிவிருத்தி வங்கி (RDB), அவ்வாறான பெருமைமிக்க பெண் பரம்பரையினரை எதிர்காலத்திலும் உருவாக்குவதை முதன்மைப் பணியாக மேற்கொள்ளும் ஒரு வங்கியாகும்.

நம் பெண்கள் ஆக்கபூர்வமான உணர்வுகள் நிறைந்தவர்களும் புதிய பாதைகளில் தமது திறன்களால் வாழ்க்கையை வெல்லக்கூடியவர்களுமாவர். பெண் என்பவள் தனியே குடும்ப நடவடிக்கைகளினுள் முடங்கிக் கிடந்தால், அது உண்மையில் முட்டாள்தனம். எனவே, ஒரு பெண் தனது வீட்டிலிருந்து பொருளாதாரத்துக்குப் பங்களிக்க முடிந்தால், அது குடும்பம் மற்றும் நாட்டின் வளர்ச்சிக்குக் காரணமாக அமையுமென்பது RDB வங்கியின் நம்பிக்கையாகும்.

குடிசனத்தொகை மதிப்பீடு புள்ளிவிபரவியல் திணைக்களத்தின் தரவுகளின்படி, இலங்கையின் சனத்தொகையில் 51.6 வீதமானவர்கள் பெண்களாவர். உலக மக்கள் தொகையில் 52% பெண்களாவர். இந்த சதவீத மதிப்புகளைக் கருத்திற்கொண்டு பெண்களானவர்கள் மக்கள்தொகையில் உள்நாட்டிலும் உலகளாவிய ரீதியிலும் 50% ஐ தாண்டி வலுவாக உள்ளனரென்பது எங்களுக்குத் தெளிவாகிறது. மேலும் அவர்கள் மனித வளத்தில் முன்னணியில் உள்ளார்கள். பெண்கள் முன்னணியில் இருக்கும் ஒருநேரத்தில், உலகின் நிலையான உயிர்வாழ்வு மற்றும் வளர்ச்சிக்குப் பெண்களின் பலம் மற்றும் மதிப்புகள் எவ்வளவு தூரம் பயன்படுத்தப்படுமென்பது குறித்த விவாதம் உள்ளது.

ஒரு சமூக கூட்டணியாக, குடும்பத்தின் தலைவர் இல்லாதிருப்பினும் குடும்பத்தின் தலைவர் ஆணாக இருப்பினும் அவருக்கு இரண்டாவதாக கண்ணுக்குத் தெரியாத கரமாக விளங்குவது இல்லத்தரசியோ அல்லது ஒரு பெண்ணோ ஆகும். குடும்ப அமைப்பின் நிர்வாக நடவடிக்கைகள், முகாமைத்துவம், நலன்புரி நடவடிக்கைகள் மற்றும் ஊட்டச்சத்து உள்ளிட்ட குடும்ப கூட்டுத்தாபனத்தின் எதிர்கால ஸ்திரத்துக்கு அனைத்து திட்டங்களைத் தயாரிப்பதிலும் செயற்படுத்துவதிலும் இல்லத்தரசியாக இருக்கும் பெண் முக்கிய பங்கு வகிக்கிறார்.

வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களில் கவனம் செலுத்தும்போது அவர்கள் பெண்களை இலக்காகக் கொண்ட பல்வேறு திட்டங்களை செயற்படுத்துகிறார்கள். இங்கு, அரசுரிமையுடைய ஒரேயொரு அபிவிருத்தி வங்கியாக தனித்துவமான பங்கை RDB வங்கியே கொண்டுள்ளது. இதற்குக் காரணம், பெண்களுக்கு அங்கீகாரம் அளிப்பதிலும் நாட்டின் வளர்ச்சிக்கு பெண்களை ஈடுபடுத்த ஊக்குவிப்பதிலும் வங்கி உயரிய திறன் மற்றும் இயலுமையைக் கொண்டுள்ளது.

கடந்த ஆண்டுகளைப்போலவே இந்த ஆண்டும் உலக மகளிர் தினக் கொண்டாட்டங்கள் மார்ச் 08 அன்று நாடு முழுவதும் கிளையளவில் செயற்படுத்தப்படும். இந்த ஆண்டு RDB வங்கியின் 40ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் வகையில் வங்கி 'RDB லியசவிய ப்ளஸ்' கணக்குக்கு பெறுமதி கூட்டும் வகையில் பின்வரும் செயற்றிட்டங்களை அறிமுகப்படுத்தியுள்ளது

- 15,000 தொழில்முனைவோரை வலுப்படுத்துதல்.
- சிறந்த தொழில்முனைவோர் தெரிவு போட்டி - 2024
- கணக்கு மீதி அடிப்படையில் மனங்கவர் பரிசுகள்.
- தொழில்முனைவோரை மேம்படுத்த சிறப்பு பயிற்சிப் பட்டறைகள்.
- மதிப்புக்குரிய தாய்மைக்கான 'அன்புள்ள அம்மா' நிகழ்ச்சித்திட்டம்
- உங்கள் சிறார்களுக்கு மதிப்புமிக்க பரிசாக RDB கெகுளு கணக்கொன்று.
- நிவாரண அடிப்படையில் நிதி வசதிகள்.
- www.seilama.lk தளத்தின் மூலம் இலவச விளம்பர வாய்ப்புகள் ஆகியவை மகளிர் உங்களுக்கு இம்முறை 'RDB லியசவிய ப்ளஸ்' கணக்கிலிருந்து உரித்தாகும்.

மார்ச் மாதம் 08 ஆம் திகதியிலிருந்து நாடளாவிய ரீதியில் கிளை மட்டத்தில் பெண்களுக்கான சேவைகள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதுடன், மகளிர் சேமிப்பு ஊக்குவிப்பு மாதம் முழுவதும் இலங்கை வாழ் மகளிர் உள்ளிட்ட சகல வாடிக்கையாளர்களையும் RDB வங்கி அழைக்கின்றது.





தமிழன்
THAMILAN WEEKLY
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 0114 846 097
மின்னஞ்சல் : thamilanweekly@gmail.com/ thamilaneditor@gmail.com

ஞாயிற்றுக்கிழமை, மார்ச் 09, 2025

# சிறுவர் பாதுகாப்பு கட்டாயத் தேவை!

இலங்கையில் மாத்திரமன்றி சர்வதேச ரீதியிலும் காலம் காலமாகப் பேசப்படும் ஒரு விடயமாக சிறுவர் துஷ்பிரயோகம் காணப்படுகிறது. சிறுவர் உரிமைகள், சிறுவர் பாதுகாப்பு என்பனவற்றுக்கென சட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டாலும் இன்றும் நூறு வீதம் இவை தவிர்க்க முடியாதவையாகவே காணப்படுகின்றன.

நாடு முழுவதிலுமிருந்து தினந்தோறும் வெளியாகும் செய்திகளில் சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான குற்றச்சாட்டுகள் தொடர்ச்சியாக பயமுறுத்தும் அதிர்வெண்ணுடன் காணப்படுவதால், சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான பரவலான பிரச்சினையை இலங்கை எதிர்கொள்கிறதென்பது வெளிப்படையாகத் தெரியவருகிறது. அதற்கமைய சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பில் பதிவாகும் சம்பவங்களின் எண்ணிக்கையை கடந்த பத்து ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில், பாரியளவில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாகத் தெரியவில்லை.

இலங்கையில் சிறுவர்களைக் கடத்தல், யாசகம் பெறச் செய்தல், தொழிலுக்கு அமர்த்தல், கல்வியை இடைநிறுத்தல், கொடுமைப்படுத்தல், பாரதூரமான பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தல், பாலியல் சுரண்டலுக்கு உட்படுத்தல், பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தல், சட்டபூர்வமான பாதுகாவலரிடமிருந்து சிறுவர்களைக் கடத்தல், பாலியல் உறவுக்கு தொடர்புகளைப் பெறுவதற்கு தூதாக சிறுவர்களைப் பயன்படுத்தல், சிறுவர்களை கவனிக்காமை, 16 வயதுக்குக் குறைந்த சிறுமியை விபசாரத்துக்குப் பயன்படுத்தல் என பல்வேறு வகையான சிறுவர் துஷ்பிரயோகச் சம்பவங்கள் பதிவாகின்றன.

கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்னரும் சரி, இன்றும் சரி மேற்கூறப்பட்டவை எண்ணிக்கை அடிப்படையில் சற்று வீழ்ச்சியடைந்துள்ளனவே தவிர, முழுமையாகக் குறைவடையவில்லை. குறிப்பாக, சிறுவர்களைக் கொடுமைப்படுத்தல், துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தல், கல்வியை இடைநிறுத்தல், கடத்தல், தொழிலுக்கு உட்படுத்தல் என்பன உயர் மட்டத்திலேயே காணப்படுகின்றன.

தேசிய சிறுவர் பாதுகாப்பு ஆணையம் சமீபத்தில் 2024ஆம் ஆண்டில் நாடு முழுவதும் சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான வழக்குகள் மற்றும் தொடர்புடைய முறைப்பாடுகள் குறித்து அதிர்ச்சி தரும் புள்ளிவிவரங்களை வெளியிட்டது.

முறைப்பாடு செய்யப்பட்ட பல்வேறு வகையான குற்றங்கள் மற்றும் துஷ்பிரயோகங்களில் குழந்தைகளுக்கு எதிரான கொடுமைப்படுத்தல் என்பது மிகவும் பரவலாக உள்ளது. கொடுமைப்படுத்தல் தொடர்பாக 1,950 முறைப்பாடுகள் கடந்த ஆண்டில் பதிவாகியுள்ளன. இதற்கு அடுத்தபடியாக கவனிப்பு மற்றும் பாதுகாப்பு தேவைப்படும் குழந்தைகள் சம்பந்தப்பட்ட 2,756 முறைப்பாடுகள் இருந்தன. பாலியல் துன்புறுத்தல் தொடர்பில் 580 முறைப்பாடுகளும் கடுமையான பாலியல் துஷ்பிரயோகம் தொடர்பில் 321 முறைப்பாடுகளும் அறிக்கை இடப்பட்டுள்ளமை கவலையளிக்கின்றது. குழந்தைத் தொழிலாளர் தொடர்பில் 165 முறைப்பாடுகளும் குழந்தை கடத்தல் தொடர்பில் 24 முறைப்பாடுகளும் தகாத உறவுகள் குறித்து 10 முறைப்பாடுகளும் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

கட்டாயக் கல்வி மீறல் பிரச்சினைகள் தொடர்பில் 1,628 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன. இது குழந்தைகளின் கல்வி உரிமையை உறுதிசெய்வதில் முறையான சவால்களைச் சுட்டிக்காட்டுகிறது.

சிறுவர் துஷ்பிரயோக வழக்குகள் மற்றும் முறைப்பாடுகள் கொழும்பில்தான் அதிக எண்ணிக்கையில் பதிவாகியுள்ளன. அங்கு கடந்த ஆண்டில் குறைந்தது 870 சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

அதைத் தொடர்ந்து கம்பஹாவில் 820 சம்பவங்களும் குருநாகலில் 600 சம்பவங்களும் பதிவாகியுள்ளன. இரத்தினபுரி (466 சம்பவங்கள்) மற்றும் அநுராதபுரம் (477 சம்பவங்கள்) உள்ளிட்ட பிற மாவட்டங்களிலும் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையில் முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன.

இந்த அதிர்ச்சி தரும் புள்ளி விவரங்கள் குழந்தைகளுக்கான வலுவான பாதுகாப்பு வழிமுறைகளுக்கான அவசரத் தேவையை பிரதிபலிக்கின்றன.

மனித உரிமைகளுக்கான உலகளாவிய பிரகடனத்தின்படி, குழந்தை துஷ்பிரயோகம் என்பது உடல் மற்றும் மன ரீதியான தீங்குகள் மட்டுமல்ல, அதற்கும் அப்பாற்பட்டும் உண்டு.

குழந்தையின் அத்தியாவசியத் தேவைகளான உடல் மற்றும் உணர்வு ரீதியானவற்றைப் புறக்கணிப்பதும் இதில் அடங்கும். இந்தத் தேவைகளை வழங்கத் தவறுவது அவர்களின் உரிமைகளை மீறுவதாகும் என்று சுட்டப்படுகின்றது.

குழந்தை துஷ்பிரயோக வழக்குகளைத் தீர்ப்பதில் ஒரு முக்கிய பிரச்சினை சட்டச் செயற்பாட்டில் ஏற்படும் அதிகப்படியான தாமதமாகும். இவற்றையெல்லாம் நாடு எப்படித் தாண்டி வரப்போகின்றதென்பது பெரும் கேள்விக்குறியே.

சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான முறைப்பாடுகள் கவலையளிக்கும் வகையில் அதிகரித்துள்ளதால், இது விடயத்தில் அவசர கவனம் செலுத்தப்பட வேண்டும். வளமான கலாசாரம், பெருமைமிகு பாரம்பரியம் மற்றும் வலுவான சமூக விழுமியங்களுக்குப் பெயர்பெற்ற ஒரு நாடு, தற்போது அதிகரித்து வரும் குழந்தைகளுக்கு எதிரான முறையற்ற கொடூரம் மற்றும் வன்முறைப் போக்குகளின் கடுமையான யதார்த்தத்தை எதிர்கொள்கிறது.

பல்வேறு குழந்தைகள் நல அமைப்புகளின் அறிக்கைகள், நகர்ப்புற மற்றும் கிராமப்புறங்களில் துஷ்பிரயோகத்தின் ஒரு வடிவத்தை தெளிவாக வெளிப்படுத்தியுள்ளன.

அனைத்து வயதுக் குழந்தைகளும் புறக்கணிப்பு, உடல் ரீதியான தீங்கு மற்றும் சுரண்டலுக்குப் பலியாகின்றனர். முறைப்பாடுகளின் இந்த அதிகரிப்பு, வலுவான பாதுகாப்பு நடவடிக்கைகள், சிறந்த விழிப்புணர்வு மற்றும் சமூகத்தின் மிகவும் பாதிக்கப்படக்கூடிய உறுப்பினர்களைப் பாதுகாப்பதற்கான மிகவும் முன்னெச்சரிக்கை அணுகுமுறை ஆகியவற்றின் அவசரத் தேவையை எடுத்துக்காட்டுகிறது.

# சீன வாந்தியும் இந்திய பாசமும்



மீநிலங்கோ தெய்வேந்திரன்

இலங்கையின் வடபுலத்தில் இந்தியாவைத் தவிர வேறெவரையும் அனுமதிக்க மாட்டோம். வடக்கில் சீனா காலூன்ற முடியாது எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினரொருவர் தெரிவித்ததாக ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தன.

இந்த அடிமுட்டாள்தனமான அரசியலை நகைச்சுவையாகக் கடந்து போகவேண்டுமென்றுதான் நினைத்தேன். ஆனால், இவ்வாறான இந்திய பாசத்தையும் சீனா மீதான வன்மத்தையும் கக்கும் முதலாவது தமிழ்த் தேசிய அரசியல்வாதி இவரல்ல. தமிழ்த் தேசியத் தலைமைகளின் இந்தியப் பாசத்தின் வரலாறு நீண்டது.

கடந்த அரை நூற்றாண்டுகால ஈழத்தமிழர் வரலாற்றில் இந்தியாவை நம்பி ஈழத்தமிழர்கள் பெற்றது என்ன என்ற கேள்விக்கான காத்திரமான பதிலை இன்றுவரை யாராலும் முன்வைக்க இயலவில்லை.

போர் முடிந்தது முதல் இந்தியாவை நம்பும்படி சொல்கிறவர்கள், கடந்த 15 ஆண்டுகளில் ஈழத்தமிழரின் நலன்சார்ந்து இந்தியா எதைச் சாதித்தது என்று சொல்லவேண்டும். இந்தியாவை நம்பும்படி கோருகிறவர்கள் இறுதிப்போரில் இந்தியாவின் பங்கு குறித்து மனந்திறந்து பேசத் தயாரா? இறுதிப்போரில் சிந்திய இரத்தத்தின் கறையின் பெரும்பகுதி இந்தியாவின் கைகளில் உள்ளதென்ற உண்மையை மறுக்க முடியுமா. ஆனாலும் கிளிப்பிள்ளைபோல “இந்தியாவை நம்புங்கள்” என்ற வாய்ப்பாட்டை தொடர்ந்து ஒப்புவிக்க இவர்கள் தவறுவதில்லை.

சீனா பற்றிய கதைகளும் இவ்வாறானவையே. 1961இல் சீன - இந்திய எல்லைப் போரில் சீனாவே ஆக்கிரமிப்பாளன் என்ற கருத்து இன்றுவரை வாய்ப்பாடு போல ஒப்புவிக்கப்பட்டு வருகிறது. சீன - இந்திய எல்லைத் தகராறு பற்றி புதிதாகக் கிடைக்கிற ஒவ்வொரு தகவலும் தகராறைப் பேசித் தீர்ப்பதற்கு நேருவின் நிர்வாகம் எவ்வளவு தூரம் இடையூறாக இருந்துவந்தது என்று காட்டுகிறது. எனினும், அதுபற்றிய செய்திகள் தமிழிலில் எங்கும் காணக் கிடைப்பதில்லை.

வியட்நாம் போரின்போது அமெரிக்காவின் கொடிய போரை எதிர்த்து அமெரிக்காவுக்குள்ளேயே பெரும் ஆர்ப்பாட்டங்கள் வெடித்தெழுந்த பின்புங்கூடத் தமிழரிடையே இடதுசாரிகளை விட்டால் எந்தத் தமிழ்த் தலைமையும் அமெரிக்காவைக் கண்டிக்கத் துணியவில்லை. மாறாக, வியட்நாமியருக்கு எதிரான கருத்துகள் பரப்பப்பட்டன. அதில் ஒன்று வியட்நாமின் கம்யூனிஸ்ட்கள் தென் வியட்நாமை விடுவித்தால் அங்கே வாழ்கிற தமிழகத்து வட்டிக்கடைக்காரர்கள் பாதிக்கப்படுவார்கள் என்று ‘சுதந்திரன்’ ஆசிரியர் கோவை மகேசன் தெரிவித்த மணிவான கருத்து இங்கு நினைவுறுத்தத் தக்கது.

அமெரிக்கா கம்யூனிச சர்வாதிகாரத்திலிருந்து ஜனநாயக நாடுகளையெல்லாம் காப்பாற்றப் போரிடுவதாகவே தமிழ்த் தேசியத் தலைவர்கள் சொல்லி வந்தார்கள். ஆனால், இறுதியில் வரலாறு மக்களின் பக்கத்திலேயே நின்றது. அமெரிக்கா ஜனநாயகத்தின் பெயரால் மேற்கொண்ட ஆட்சிக்கவிழ்ப்புகளுக்கும் இவர்கள் முட்டுக் கொடுத்தார்கள். தமிழ்த் தேசியத் தலைவர்கள் எனப்படுவோரின் பக்கச்சார்பானதும் நேர்மையற்றதுமான வாதங்களின் தாக்கத்திலிருந்து தமிழ்த் தேசியவாதம் இன்னமும் விடுபடவில்லை. அது விடுபடக் காலமெடுக்கும். விடுபடாத வரை, விடுதலை என்பது இன்னுமொரு அடிமைத்தனம் நோக்கிய நகர்வாகவே இருக்கும். இந்தியா குறித்த பாராளுமன்ற உறுப்பினரின் கூற்று அந்த வழித்தடத்தில் வருவதே.

இறுதிப் போரில் அமெரிக்காவினதும் மேற்குலகினதும் பங்கு யாரும் அறியாததல்ல. ஆனால், அதே மேற்குல கிடமே நீதி கேட்கும் அவலத்தை என்னவென்பது. விடுதலைப் போராட்டங்கள் அறம் பற்றியன. அறஞ்சார்ந்த பார்வையால் வழிநடத்தப்படாத விடுதலைப் போராட்டங்கள் வென்றதில்லை. நீதிக்காகப் போராடச் சொல்லும் தமிழ்த் தேசியவாதம், தமிழரின் மொழி உரிமைபற்றிப் பேசத் தொடங்கிய காலந்தொட்டுத் தனி நாடு கேட்கிற நிலைக்குத் தள்ளப்படுகிற வரையும் அதற்கப்பாலும் எத்தகைய அறஞ் சார்ந்த பார்வையைக் கொண்டிருந்தது? இந்தக் கேள்வியை இப்போதாவது ஈழத்தமிழர்கள் ஆழ விசாரிப்பது நல்லது.

தமிழர் ஓர் ஒடுக்கப்பட்ட சமூகம் என்ற உண்மை இன்னமும் நமக்கு உறைக்கவில்லை. இன்னமும் ஆண்ட பரம்பரைக் கனவுக்குள் திரும்பத் திரும்ப அமிழ்த்தப்படுகிறோம். நம்மில் சிலருக்கு அந்தக் கனவுக்கும் நிஜ வாழ்வுக்கும் வேறுபாடு தெரியாது. இன்னமும் நமக்குச் சொல்லப்பட்டுவந்த மூவேந்தர் முச்சங்கம் என்பன பற்றிய புனைவுகளையே வரலாறாக நம்புகிறோம்.

தமிழ் நமது கண்முன்னால் சீரழிகிறது. ஆனாலும் அதன்



தொன்மையையும் தூய்மையையும் மேன்மைகளையும் பற்றிய புனைவுகளில் மகிழ்ச்சியடைகிறோம். “பேச்சுப் பல்லக்கு தம்பி கால்நடை” என்பதுதான் தமிழர் இருப்பின் யதார்த்தம்.

1950களில், குறிப்பாக 1961 சத்தியாக்கிரகத்தின் தோல்வியை அடுத்து ஏற்பட்ட திகைப்பின் தொடர்ச்சியாக நமக்கு முன்னுதாரணமான ஒரு நாடாக இஸ்ரேல் காட்டப்பட்டது. இஸ்ரேல் இயற்றிவந்த கொடுமைகள் பற்றி பேச இஸ்ரேலின் உருவாக்கம் எவ்வளவு அநீதியானது என்றோ நமக்குச் சொல்லப்பட்டதில்லை.

“மீண்டும் ஒருமுறை ஆளுகிறார்கள்” என்ற அந்தப் ‘பொதுமை’ தமக்குப் போதுமானதாகவே தலைவர்கட்குத் தெரிந்தது. நமது நிலை பலஸ்தீனத்தின் அராபியர்களது போன்றது என்பதையும் அந்த ஒற்றுமை பல வகைகளிலும் பொருந்தி வருகிறது என்பதையும் இன்றாவது நாம் உணர்ந்திருக்கிறோமா?

பங்களாதேஷ் விடுதலையை வென்று தந்த இந்தியாவே தமிழீழ விடுதலையை வென்று தரும் என்ற கனவு ஊட்டி வளர்க்கப்பட்டது. அந்தக் கனவின் மீதி இன்னமும் இருக்கிறது. “என்ன காந்தி செத்திட்டாரா” என்ற தேநீர்க்கடை நகைச்சுவை போலத்தான் அதுவும். ஆனால், இன்னமும் இவ்வாறான தேநீர்க்கடைப் பேச்சுகளைக் கேட்கமுடிவது துயரம்.

இந்தியாவின் எடுப்பாகச் செயற்பட்ட முஜிபுர் ரஹ்மான் மக்களின் ஆதரவை இழந்து இராணுவச் சதியில் உயிரிழந்த நாள் வரை, முஜிபுர் தமிழருக்கு முன்னுதாரணமாகக் காட்டப்பட்டு வந்தார். நமக்கான முன்மாதிரிகளுக்கான ஒரே தகுதி, தோற்றப்பாடான வெற்றி மட்டுமே என்றுதான் எண்ணத் தோன்றுகிறது. இவ்வாறான வெற்றிகளுக்கான விலையென்னவென்றோ அவை ஏற்படுத்தும் பாதிப்புகள் என்னவென்றோ நாம் யோசிப்பதில்லை. அவற்றை ஆதாரமாகக்கொண்டு பின்தொடரக் கூடாவர்கட்குப் பின்னாற் போகுமாறு தூண்டப்படுகிறோம். அதுதான் மிகவும் கெடுதலானது. தூண்டுவோரின் நோக்கங்களை ஆராயாமல் விடுவது ஆபத்தானது. இந்த வகையிலேயே குறித்த பாராளுமன்ற உறுப்பினரின் கூற்றையும் நோக்க வேண்டியுள்ளது.

வடக்கில் இந்தியாவை அனுமதிப்பதன் நோக்கமென்ன? அதனால் மக்களுக்கு விளைந்த பயனென்ன? இந்தியப் பொருளாதார நலன்கள் மக்களுக்கு எவ்வளவு பாதிப்பை ஏற்படுத்தும் என்பதை இவர்கள் அறியமாட்டார்களா?

கிழக்கில் வரவிருந்த இந்திய நிறுவனத்தின் சம்பூர் அனல் மின்நிலையத்தின் தீங்குகள் பற்றி இறுதிவரை வாய்திறக்காத யோக்கிய சிகாமணிகள்தானே இவர்கள். அதானியின் திட்டங்கள் நாட்டுக்கு ஏற்படுத்தியிருக்கக்கூடிய பாதிப்புகள் குறித்து கிஞ்சித்தும் கவலையற்று இருந்தவர்கள்தான் இவர்கள்.

இலங்கையின் பாராளுமன்றில் “நாட்டின் இறைமைக்கும் ஆட்புல ஒருமைப்பாட்டுக்கும் தீங்கு விளைவிக்க மாட்டேன்” என்று சத்தியப்பிரமாணம் செய்துவிட்டு இந்தியாவைத் தவிர வேறுயாரையும் அனுமதிக்க மாட்டோம், வடக்குக்கு சீனா வரக் கூடாது என்ன வகையான போக்கிரித்தனம்.

“எமது மீனவர்களுடன் சீனாவுக்கு என்ன வேலை” என்று கேட்பவர்கள், “இலங்கைக் கடற்பரப்பில் இந்திய மீனவர்களுக்கு என்ன வேலை, எமது மீனவர்களுடன் இந்தியத் துணைத் தூதுவருக்கு என்ன வேலை” என்று கேட்கத் திராணியிருக்கிறதா?.

இன்று வடபுலத்து மீனவர்கள் இந்திய இழுவைப்படகுகளால் சொல்லொணாத் துயரங்களை எதிர்நோக்குகிறார்கள். இது குறித்து கண்டனக் குரல் எழுப்பவோ இந்திய அத்துமீறல்களுக்கு எதிராகப் போராடவோ தயாராக இல்லாதவர்கள்தான் சீனா வரக்கூடாது, இந்தியா வரலாம் என்பவர்கள்.

இலங்கைக்குள் யாரும் வரமுடியாது. இலங்கையின் இறைமையை எக்காரணம் கொண்டும் யாருக்கும் அடகுவைக்க முடியாது என்றல்லவா சொல்லியிருக்க வேண்டும். ஒரு பொறுப்புள்ள பாராளுமன்ற உறுப்பினராக நாட்டின் மீதான அக்கறையை அல்லவா முன்னிறுத்தியிருக்க வேண்டும். சிங்களப் பெருந்தேசியவாதிகள் குற்றஞ்சாட்டுவது போல ஈழத்தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் தேசப்பற்று இல்லாதவர்கள் என்ற கூற்றை மெய்ப்பிக்கும் பணிகளில் தமிழ்த் தேசியப் பாராளுமன்ற உறுப்பினர்கள் தொடர்ச்சியாக ஈடுபட்டு வந்திருக்கிறார்கள்.

சுதந்திரத்துக்கு முன்னர் தமிழ்த் தேசியத் தலைவர்கள் பிரித்தானியாவை நம்பினார்கள். பிரித்தானிய ஆட்சி போன பின்பே தமிழருக்கு எதிரான பாரபட்சம் வலுத்தது என்பதால், பிரித்தானியரை நம்புவதற்குரிய சூழ்நிலை இருந்தது என்று கூறுகிறார்கள்.

ஆனாலும், 1957ஆம் ஆண்டு திருகோணமலை, கட்டுநாயக்க தளங்களை பிரித்தானியர் இலங்கையரிடம் மீளக் கையளிப்பதை நமது தமிழ்த் தலைவர்கள் எதிர்த்தபோதும் சிங்கள மொழிச் சட்டத்துக்கு எதிராக நடவடிக்கை எடுக்கக் கோரி மகாராணியாருக்கு அடித்த தந்தி முதலாகக் கோடீஸ்வரன் வழக்கு மேன்முறையீட்டு வரை எதிலுமே பிரித்தானிய அரசு தமிழருக்கு ஆதரவாக எதையுமே செய்யவில்லை.

அமெரிக்க, பிரித்தானிய, டச்சு எண்ணெய்க் கம்பனிகள் மூன்றும் 1960இல் தேசியமயமாக்கப்பட்டபோது, அது தர்மமல்ல என்று தமிழரசுத் தலைவர் செல்வநாயகம் சொன்னார். அந்த நன்றிக்காக அமெரிக்க ஏகாதிபத்தியம் ஏதாவது செய்ததா? இல்லை. ஆனாலும், அத்தனை தமிழ்ப் பாராளுமன்றத் தலைமைகளும் இன்றுவரை எந்த ஏகாதிபத்தியத்துக்கும் எதிராக வாய்திறந்ததில்லை.

சீனா ஈழத்தமிழருக்கு என்ன தீங்கிழைத்தது என்ற கேள்வியை நாம் கேட்டாக வேண்டும். ஏனெனில், சீனப் புரட்சியைத் தொடர்ந்த மக்கள், சீனம் மீதான வெறுப்பைத் தமிழ்த் தேசியத் தலைமைகள் தொடர்ச்சியாக வெளிப்படுத்தி வந்துள்ளன. 1950கள் முதல் நாட்டின் எந்தப் பொருளாதாரப் பிரச்சினை பற்றியும் அக்கறையற்றதாகவும் எந்தவிதமான சர்வதேச அலுவல்களிலும் அக்கறையற்றதாகவும் காட்டிக்கொண்டு லுமும்பாவின் படுகொலை பற்றியோ கியூபா மீதான அமெரிக்கப் படையெடுப்புப் பற்றியோ அலட்டிக்கொள்ளாத தமிழரசுக் கட்சி இந்திய - சீன மோதலில் சீனாவை ஆக்கிரமிப்பாளன் என்று கண்டித்து அறிக்கை விட்டது. இவ்வாறு சீனாவை வலிந்து கண்டிக்கும் போக்கு தமிழ்த் தேசியவாதத்தின் ஊனம்.

சீனா தமிழரின் நண்பனா என்ற கேள்வியை ஆராய முதல் இந்தியா தமிழரின் நண்பனா என்ற கேள்வியைக் கேட்கவேண்டும். கண்மூடித்தனமான இந்திய விஸ்வாசம் ஈழத்தமிழரை எவ்வாறு நட்டாற்றில் விட்டது என்பதை சிந்திக்க வேண்டும். சீனா தமிழரின் நண்பனல்ல. ஆனால், இலங்கையின் உள்அலுவல்களில் இந்தியாவின் குறுக்கீடு கண்டிக்கத்தக்கது. இலங்கையின் இறைமைக்குத் தீங்கு விளைவிக்கும் எந்தவொரு உறவும் ஆபத்தானது. இலங்கைக்குக் கேடானதும் இலங்கை அரசுக்கு எதிரானதும் தமிழருக்கு நல்லதாக அமைய அவசியமில்லை. அதிலும் முக்கியமாகத் தமிழரைக் காரணங்காட்டிக் குறுக்கிடுகிற எவரும் தமிழரின் நன்மை கருதிக் குறுக்கிடவில்லை என்பதை நாம் நன்கு நினைவிலிருத்த வேண்டும்.

# 36,000 ஏக்கரில் புதிதாக தென்னை பயிரிடத் திட்டம்: அதில் 16,000 ஏக்கர் வடக்கு தென்னை முக்கோண வலயத்தில்

## பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சர் சமந்த வித்யாரத்ன அமைச்சுசார் ஆலோசனைக் குழுவில் தெரிவிப்பு

**★ ஐந்து ஏக்கருக்கு குறைவான தென்னந்தோட்ட உரிமையாளர்களுக்கு உர மானியம்**

**★ இந்திய உதவித் திட்டத்தின்கீழ் இவ்வாண்டில் 4,700 வீடுகள் – வீட்டுப் பயனாளிகளைத் தேர்ந்தெடுப்பதில் அரசியல், கட்சி, நிறப் பாகுபாடு இல்லை.**

**★ பெருந்தோட்ட நிறுவனங்களில் அடையாளம் காணப்பட்ட பயன்படுத்தப்படாத சுமார் 30,000 ஹெக்டெயர் நிலங்களை முதலீட்டாளர்களுக்கு வழங்குவதற்கும் திட்டம்.**

இந்த வருடத்தில் 36,000 ஏக்கரில் புதிதாக தென்னை பயிரிடத் திட்டமிட்டுள்ளதாகவும் அவற்றில் 16,000 ஏக்கர் வடக்கு தென்னை முக்கோண வலயத்திலும் எஞ்சிய 20,000 ஏக்கர் ஏனைய பகுதிகளிலும் இடம்பெறுமென பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சர் சமந்த வித்யாரத்ன தெரிவித்தார்.

பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு அமைச்சரின் தலைமையில் கடந்த 05ஆம் திகதி பாராளுமன்றத்தில் கூடியபோதே அவர் இதனைத் தெரிவித்தார். இக்கூட்டத்தில் பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப்பும் கலந்து கொண்டார்.

தென்னை பயிர்ச்செய்கையை மேம்படுத்தும் நோக்கில் இவ்வாண்டில் 2.5 மில்லியன் தேங்காய் விதைகள் உற்பத்தி செய்யப்படுமென்றும் அமைச்சர் தெரிவித்தார். மேலும், ரஷ்யாவிலிருந்து இலவசமாகப் பெறப்பட்ட 55,000 மெட்ரிக் தொன் MOP உரத்தில் 27,500 மெட்ரிக் தொன் தற்போது தென்னை பயிர்ச்செய்கைக்காகவும் 56,000 மெட்ரிக் தொன் கலப்பு உரத்தைத் தயாரிப்பதற்கும் பயன்படுத்தப்படுவதாகவும் இதன் மூலம் ஐந்து ஏக்கருக்கும் குறைவான தென்னந்தோட்ட உரிமையாளர்களுக்கு உர மானியம் வழங்குவதாகவும் அமைச்சர் சமந்த வித்யாரத்ன தெரிவித்தார்.



அதற்கமைய, அந்தக் கலப்பு உரம், சந்தை விலை அண்ணளவாக 9,500 ரூபா கொண்ட 50 கிலோ கிராம் உர மூட்டையை 4,000 ரூபா மானிய விலையில் இந்த மாத இறுதியில் நாடுபூராகவும் உள்ள தென்னைப் பயிர்ச்செய்கையாளர்களுக்கு வழங்க நடவடிக்கை எடுப்பதாக அமைச்சர் கூறினார்.

இந்திய உதவித் திட்டத்தின் கீழுள்ள 10,000 வீட்டுத்திட்டத்தில் இவ்வாண்டில் 4,700 தோட்டப்புற வீடுகளை நிர்மாணிக்க எதிர்பார்ப்பதாகவும் இதன்போது தெரிவிக்கப்பட்டது.

இதற்கு முன்னர் வீட்டுப் பயனாளிகளைத் தேர்ந்தெடுக்கும்போது அரசியல் தொடர்புகளின் அடிப்படையில் இடம்பெற்றுள்ளதாக அறிக்கையிடப்பட்டிருந்தாலும் இம்முறை எந்தவிதக் கட்சி, நிறப் பாகுபாடுமின்றி முன்னுரிமை அடிப்படையில் மிகவும் வெளிப்படைத்தன்மையுடன் அந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாகவும் அமைச்சர் தெரிவித்தார். மண்சரிவு எச்சரிக்கையுள்ள பகுதிகளில் அமைந்துள்ள வீடுகளில் வசிக்கும் மக்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.





அத்துடன், தோட்ட வீடுகளை மேம்படுத்துவதன் மூலம் உட்கட்டமைப்பு அபிவிருத்திக்கு உள்நாட்டு நிதியங்களிலிருந்து 1,300 மில்லியன் ரூபா செலவிட எதிர்பார்ப்பதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

அமைச்சின் பணிகள் மற்றும் எதிர்காலத் திட்டங்களை குழுவின் முன் சமர்ப்பித்த அமைச்சின் செயலாளர் பிரபாத் சந்திரகீர்த்தி தெரிவிக்கையில், பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சின்கீழ் உள்ள பெருந்தோட்ட நிறுவனங்களில் பயன்படுத்தப்படாத சுமார் 30,000 ஹெக்டெயர் நிலங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் அவற்றை முதலீட்டாளர்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

அத்துடன், 2024ஆம் ஆண்டில் இந்நாட்டின் மொத்த தேயிலை உற்பத்தி சுமார் 262 மில்லியன் கிலோ கிராம் எனவும் 2025இல் அந்த இலக்கு 275 மில்லியன் கிலோ கிராம் தேயிலை எனவும் செயலாளர் தெரிவித்தார். அத்துடன், உலகில் முதல் இறப்பர் ஆராய்ச்சி நிலையத்தை ஆரம்பித்த இந்நாட்டின் இறப்பர் ஏற்றுமதியில் குறைவு ஏற்பட்டுள்ளதாகச் சுட்டிக்காட்டிய அவர், 2025ஆம் ஆண்டில் அந்த இலக்கு 78 மில்லியன் கிலோ கிராம் இறப்பர் எனவும் தெரிவித்தார். 2025ஆம் ஆண்டில் இந்நாட்டின் தென்னை பயிர்ச்செய்கை இலக்கு 2,875 மில்லியன் தேங்காய்கள் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

அத்துடன், கிளைபோசேட் அதிகமாக பயன்படுத்துவது உள்ளிட்ட காரணங்களால் இலங்கையின் தேயிலை மற்றும் கறுவா என்பவற்றின் உயர் தரம் குறைவடையும் எச்சரிக்கை காணப்படுவதாகவும் அது தொடர்பில் அதிக கவனம் செலுத்துவது முக்கியமானது எனவும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

தேயிலை உரங்களின் தரம், மரமுந்திரிகை பயிர்ச்செய்கையை மேம்படுத்தல் உள்ளிட்ட இந்த அமைச்சுடன் சம்பந்தமான விடயங்கள் தொடர்பிலும் பாராளுமன்ற உறுப்பினர்கள் குழுவின் கவனத்துக்குக் கொண்டுவந்தனர்.

இக்கூட்டத்தில் அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்களின் அதிகாரிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## சண்டே சாம்பார்... (03 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

### ஞானசார தேரர் சொன்ன செய்தி

உயிர்த்த ஞாயிறு தின குண்டுத் தாக்குதல் சம்பவத்தின் பிரதான சூத்திரதாரி யாரென்பது தனக்குத் தெரியுமென பொதுபலசேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்துள்ளமை அரசியல் வட்டாரங்களில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

மகா சங்கத்தினரைச் சந்தித்து ஆசீர்வாதம் பெற்றுக்கொள்வதற்காக (06) அவர் கண்டி சென்றிருந்த நிலையில், ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

“உயிர்த்த ஞாயிறு தினத்தில் இடம்பெற்றதால் ஈஸ்டர் தாக்குதல் என்று கூறுகிறார்கள். போயா தினத்தில் இடம்பெற்றிருந்தால் அதனை போயா தின தாக்குதல் என்று கூறியிருப்பார்கள். இந்தத் தாக்குதல் சம்பவத்தின் பின்னணியில் பிரதான சூத்திரதாரியொருவர் இருப்பதாகக் கூறினார்கள். தற்போது அவரை தேடுகிறார்களா?

பிரதான சூத்திரதாரி யாரென்பது எனக்குத் தெரியும். ஆனால், ஊடகங்களுக்கு அதைக் கூற முடியாது. நாட்டின் ஜனாதிபதிக்கும் பாதுகாப்புக்குப் பொறுப்பாக இருப்பவர்களுக்கும் அறிவித்து விட்டே அதனைப் பகிரங்கமாக அறிவிப்பேன்.

பிரதான சூத்திரதாரியின் ஆரம்பம், அவர் தொடர்புபட்டிருந்த நபர்கள், அவர் இருந்த இடம், பிரதான சூத்திரதாரி சஹ்ரானுக்கு பயிற்சியளித்த விதம், அவரை வழிநடத்திய விதம் என சகல விடயங்களும் எனக்குத் தெரியும்” என்று குறிப்பிட்டுள்ளார் ஞானசார தேரர்.

கிழக்கில் இஸ்லாமிய அடிப்படைவாத குழுக்கள் செயற்படுவதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால கடந்த வாரம் அறிவித்திருந்த நிலையில், ஞானசார தேரர் திடீரென இவ்வாறு கூறியிருப்பது இஸ்லாமியர்களை ஏதோவொரு சம்பவத்தில் சிக்கவைக்கும் நோக்கமா என்று பலரும் கேள்வியெழுப்பியுள்ளார்.

எவ்வாறாயினும் ஞானசார தேரரின் கருத்துகள் குறித்து ஆராய பாதுகாப்பு அமைச்சு நடவடிக்கைகளை எடுத்து வருவதாக அறியமுடிந்தது.

### அரச புலனாய்வுத்துறை விசேட தகவல் வெளியீடு

இதற்கிடையில் கிழக்கு மாகாணத்தில் இயங்குவதாகச் சொல்லப்படும் இஸ்லாமிய அடிப்படைவாத செயற்பாடுகள் குறித்து ஜனாதிபதி தலைமையில் கூடிய தேசிய பாதுகாப்புச் சபை தீவிரமாக ஆராய்ந்துள்ளது.

இவ்வாறு இரகசியமாக இயங்கிவரும் ‘சூப்பர் முஸ்லிம்’ அமைப்பு குறித்து அண்மையில் உளவுத்துறையினர் கண்டறிந்த தகவல்களை அடிப்படையாகக்கொண்டு விசேட அறிக்கையும் பாதுகாப்புச் சபையிடம் முன்வைக்கப்பட்டுள்ளது.

குறித்த முஸ்லிம் அமைப்பு ‘சூப்பர் முஸ்லிம்’ என்றும் அதன் தலைவர் கலந்தர் லெப்பை முஹமது என்றும் அரச உளவுத்துறை கண்டுபிடித்துள்ளது. கல்முனையை தளமாகக் கொண்டு செயற்படுவதாகக் கூறப்படும் ‘சூப்பர் முஸ்லிம்’ எனும் அமைப்பில், சுமார் 300 உறுப்பினர்கள் இருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. மேலும், உளவுத்துறை அறிக்கையின்படி, ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் அவருடன் பணியாற்றுவதாகக் கூறப்படுகிறது. எவ்வாறாயினும், இந்த ‘சூப்பர் முஸ்லிம்’ எனும் அமைப்பு தொடர்பில், எஸ்.ஐ.எஸ். எனப்படும் தேசிய உளவுச் சேவை தீவிர கண்காணிப்பு மற்றும் விசாரணைகளை முன்னெடுத்துள்ளதாகவும் அறிய முடிகின்றது.

ஸ்ரீ ஜயவர்தனபுர வைத்தியசாலையில் முன்னர் சேவையாற்றியதாகக் கூறப்படும் வைத்தியரொருவர் இந்தக் குழுவுக்குத் தலைமை வகிப்பதாகவும் இணையதளம் ஊடாக இக்குழுவினர் அடிப்படைவாதத்தை விதைத்து வருவதாகவும் தேசிய பாதுகாப்புச் சபையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அனர்த்தமொன்றை அடுத்து கிடைக்கப்பெற்ற நன்கொடைகளை வைத்து இவ்வமைப்பு தோற்றம் பெற்றுள்ளதாகவும் தற்போதும் வெளிநாட்டு நன்கொடைகள் அவ்வமைப்புக்கு கிடைப்பதாக சந்தேகிக்கப்படுவதாகவும் அது தொடர்பில் ஆராயப்பட்டு வருவதாகவும் அரச புலனாய்வுத்துறை முக்கியஸ்தர்கள் இங்கு சுட்டிக்காட்டியுள்ளனர்.

இந்த ‘சூப்பர் முஸ்லிம்’ எனும் அமைப்பின் தலைவராக கருதப்படும் நபரும் அவ்வமைப்பின் போதகர்களும் யூடியூப் மற்றும் பேஸ்புக் உள்ளிட்ட சமூக வலைத்தளங்கள் ஊடாக தமது பிரசாரங்களை முன்னெடுப்பதாகவும் அவ்வமைப்பில் 33 செயற்பாட்டாளர்களும் 250 வரையான ஆதரவாளர்களும் உள்ளமை தொடர்பில் தகவல்கள் உள்ளதாகவும் பொலிஸ் தலைமையகத் தகவல்கள் தெரிவித்தன.

இந்நிலையிலேயே அவ்வமைப்பு தொடர்பில் தீவிர அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

### சாணக்கியனின் சர்ச்சைக்குரிய பேச்சு

முன்னாள் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோனை கைது செய்யுமாறு நீதிமன்ற உத்தரவு பிறப்பிக்கப்படுவதற்கு இரண்டு நாட்களுக்கு முன்னர் முன்னாள் பிரபல அமைச்சர் ஒருவரின் வர்த்தக மையமொன்றில் கூட்டமொன்று நடந்துள்ள நிலையில், அந்தக் கூட்டத்தில் ஏதேனும் சூழ்ச்சி திட்டமிடப்பட்டதா என்ற சந்தேகங்கள் ஏற்பட்டுள்ளதாக இலங்கை தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட எம்.பி. இரா.சாணக்கியன் தெரிவித்தமை சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

பாராளுமன்றத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற 2025 வரவு-செலவுத் திட்டத்தின் கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு மற்றும் கடற்றொழில், நீரியல் வளங்கள் அமைச்சின் ஒதுக்கீடு மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றும்போதே சாணக்கியன் இவ்வாறு தெரிவித்திருந்தார்.

முன்னாள் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோனை கைதுசெய்யுமாறு நீதிமன்ற உத்தரவு பிறப்பிக்கப்படுவதற்கு முன்னர் கடந்த அரசாங்கத்திலிருந்த பிரபல அமைச்சரொருவரின் வர்த்தக மையத்தில் கூட்டமொன்று நடத்தப்பட்டுள்ளது. இந்நிகழ்வில் கலந்துகொண்டவர்கள் தொடர்பில் பார்த்தால் அது பிரச்சினைக்குரியதே.

குறித்த கூட்டத்தில் இராணுவ புலனாய்வுப் பணிப்பாளராக இருந்த சூளா கொடிதுவக்கு, கொழும்பு குற்றவியல் பிரிவிலிருந்த பிரதி பொலிஸ் மா அதிபர் நெவில் ஆகியோர் இருந்துள்ளனர். இந்தக் கூட்டத்துக்கு முன்னாள் இராஜாங்க அமைச்சர் பிள்ளையானுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. ஆனால், அவர் வராமையால் அவரின் சகா இனியபாரதியை அனுப்பியுள்ளார். இனியபாரதி ஹில்டன் ஹோட்டலில் இருந்துள்ளார். அவரின் வாகனத்தை சுதா என்பவர் செலுத்தியுள்ளார். இங்கு என்ன சூழ்ச்சி செய்யப்பட்டதென்று தெரியவில்லை. இது தொடர்பில் உங்களுக்கு எதுவும் தெரியுமா? இனியபாரதி என்பவர் கடந்த காலங்களில் பல்வேறு கொலைகளுடன் தொடர்புடையவர். பிள்ளையான் தொடர்பிலும் பல தகவல்கள் உள்ளன.

நீங்கள் தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்துவதாகக் கூறுகின்றீர்கள். ஆனால், கணேமுல்லை சஞ்சீவவைக் கொன்ற பெண்ணை இன்னும் தேடுகின்றீர்கள். நாட்டின் பொலிஸ் மா அதிபரையும் தேட முடியவில்லை. உங்களுக்குப் பொறுப்புள்ளது. பாதுகாப்பு தொடர்பான பிரச்சினை உள்ளது. குறித்த கூட்டத்தில் என்ன நடந்ததென்று தெரியவில்லை என்று கூறியிருந்தார் சாணக்கியன்.

ஆனால், சாணக்கியனின் இந்தக் குற்றச்சாட்டை இனியபாரதி செய்தியாளர் மாநாடொன்றில் நிராகரித்திருந்தார். அதேசமயம், சில தினங்களுக்கு முன்னர் சாணக்கியனை தொடர்புகொண்ட முன்னாள் அமைச்சர் டிரான் அலஸ் அவருடன் அளவளாவியதுடன் விரைவில் சந்திப்போம் என்றும் கூறியுள்ளார்.


Now you can subscribe to the below Newspapers mentioned Published by Liberty Publishers.

| Paper | Period | Cost Per Copy | No of Days | Rate |
|---|---|---|---|---|
| the daily morning | One Month | 70.00 | 22 | 1540.00 |
| | Three Month | | 64 | 4480.00 |
| | Six Month | | 129 | 9030.00 |
| | One Year | | 261 | 18270.00 |
| the sunday morning | One Month | 180.00 | 4 | 520.00 |
| | Three Month | | 13 | 2340.00 |
| | Six Month | | 26 | 4680.00 |
| | One Year | | 52 | 9360.00 |

| Paper | Period | Cost Per Copy | No of Days | Rate |
|---|---|---|---|---|
| தமிழன் | One Month | 40.00 | 22 | 880.00 |
| | Three Month | | 64 | 2560.00 |
| | Six Month | | 129 | 5160.00 |
| | One Year | | 261 | 10440.00 |
| தமிழன் | One Month | 130.00 | 4 | 520.00 |
| | Three Month | | 13 | 1690.00 |
| | Six Month | | 26 | 3380.00 |
| | One Year | | 52 | 6760.00 |

FOR MORE INFORMATION PLEASE CONTACT

Address : - The Manager Circulation
Liberty Publishers Private Limited
46/8, Dompe Road,
Kalukondayawa,Malwana.

DELIVERY FREE

Hotline :- 076 136 7623

Tel No: - 0112 127 209



# போரால் பாதிக்கப்பட்ட சமூகங்களுக்கு நீதி வழங்கப்படவில்லை

## ஏற்றுக்கொண்டார் ரணில்

இலங்கையின் முன்னாள் ஜனாதிபதியும் ஆறு தடவைகள் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்க, 06 ஆம் திகதி ஒளிபரப்பாகிய அல் ஜசீரா தொலைக்காட்சியின் ‘ஹெட் டு ஹெட்’ நிகழ்ச்சிக்கான நேர்காணலின்போது பதவிநீக்கம் செய்யப்பட்ட ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை வழக்குத் தொடுப்பிலிருந்து பாதுகாக்கவில்லை என்று மறுத்தார்.

2019ஆம் ஆண்டு இலங்கையை உலுக்கிய கொடிய பயங்கரவாதத் தாக்குதல்களுடன் அரசாங்கத்துக்கு தொடர்பிருப்பதாகக் கூறப்படும் குற்றச்சாட்டுகளைத் தனது சொந்த நிர்வாகம் நம்பகத்தன்மையுடன் விசாரிக்கத் தவறிவிட்டதென்ற புதுப்பிக்கப்பட்ட குற்றச்சாட்டு களையும் அவர் மறுத்தார்.

2024ஆம் ஆண்டு பதவியிலிருந்து வெளியேற்றப்பட்ட விக்கிரமசிங்க, மெஹ்தி ஹசனுடனான ஒரு மணிநேர நேர்காணலில் 8 நிமிடங்கள் நேர்காணலிருந்து வெளியேறிவிடுவதாக அச்சுறுத்தினார். ஆனால், இறுதியில் நாட்டின் உள்நாட்டுப் போரைத் தொடர்ந்து போர்க்குற்ற விசாரணைகளை அரசாங்கம் கையாண்ட விதம் மற்றும் 1980களின் பிற்பகுதியில் அவரது கண்காணிப்பின் கீழ் செய்யப்பட்ட சித்திரவதை குற்றச்சாட்டுகள் ஆகியவற்றை உள்ளடக்கிய ஒரு சூடான விவாதத்துக்கு அமர்ந்திருந்தார்.

2022ஆம் ஆண்டு வெகுஜன போராட்டங்களைத் தொடர்ந்து நாட்டைவிட்டு வெளியேறிய முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு அவர் பாதுகாப்பு அளித்தாரா என்று கேட்டபோது, “என் நாட்டில், வழக்குத் தொடருவது குறித்து முடிவெடுப்பது ஒரு அரசியல் பிரமுகர் அல்லாத சட்ட மா அதிபர்தான். நாங்கள் அவருக்கு முன் ஆதாரங்களை மட்டுமே அனுப்ப முடியும்” என்று விக்கிரமசிங்க கூறினார்.

கோட்டாபய மற்றும் முன்னாள் பிரதமரும் ஜனாதிபதியுமான அவரது சகோதரர் மஹிந்த ராஜபக்ஷ இருவரும் ஊழல், போர்க்குற்றங்கள் மற்றும் நாட்டை ஒரு பெரிய நிதி நெருக்கடியில் தள்ளியது தொடர்பாக பரவலாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளனர்.

2022ஆம் ஆண்டு விக்கிரமசிங்க ஜனாதிபதியாகப் பொறுப்பேற்ற பிறகு கோட்டாபய ராஜபக்ஷவை கைதுசெய்யாமல் நாட்டுக்குள் திரும்ப அனுமதித்தது குறித்து கேட்டபோது, “அவர் மீண்டும் உள்ளே வரலாம். அவர் மீது எந்த குற்றச்சாட்டும் இல்லை. நான் எப்படி தடுக்க முடியும்? நான் ஒரு சர்வாதிகாரியா?” என்றார்.

2019 உயிர்த்த ஞாயிறு தின குண்டுவெடிப்புகளில் ஐஎஸ்ஐஎஸ்-சார்புடைய ஒருவரால் நடத்தப்பட்ட ‘பிற சக்திகளை’ அவரது சொந்த அரசாங்கம் பாதுகாத்ததாக கத்தோலிக்கத் திருச்சபையின் புதுப்பிக்கப்பட்ட குற்றச்சாட்டுகள் குறித்தும் ஹசன் கேள்வியெழுப்பினார்.

இதற்குப் பதிலளிக்கும் விதமாக விக்கிரமசிங்க குற்றச்சாட்டுகளை “அனைத்து முட்டாள்தனம்” என்றும் “கத்தோலிக்க திருச்சபையின் அரசியலுக்கு ஓர் எடுத்துக்காட்டு’’ என்றும் கூறினார்.

“இலங்கையில் கத்தோலிக்கத் திருச்சபையின் தலைவர் முட்டாள்தனமாகப் பேசுகிறாரா?” என்று ஹசன் கேட்டார். “ஆம்” என்று விக்கிரமசிங்க கூறினார்.

2019ஆம் ஆண்டு பிரதமராக இருந்த விக்கிரமசிங்க, கர்தினால் மெல்கம் ரஞ்சித்தின் பொது அறிக்கைகளுக்கும் தொலைக்காட்சி பதிவுக்கு முன்பு அல் ஜசீராவின் தலைமை குழுவுக்கு கர்தினால் தெரிவித்த பிரத்தியேக கருத்துகளுக்கும் பதிலளித்தார்.

அல் ஜசீராவுடனான தொலைபேசி அழைப்பில் விக்கிரமசிங்க உண்மையிலேயே சுயாதீனமான விசாரணைக்கான திருச்சபையின் கோரிக்கையை கவனிக்கத் தவறிவிட்டார் என்றும் விக்கிரமசிங்கவின் ஜனாதிபதி காலத்தில் முந்தைய விசாரணை மற்றும் அறிக்கையை “அது எழுதப்பட்ட காகிதத்துக்கு மதிப்புக்குரியது அல்ல” என்றும் ரஞ்சித் கூறினார்.

தமிழீழ விடுதலைப் புலிகளுடனான உள்நாட்டுப் போருக்கு உண்மை மற்றும் நல்லிணக்கத்துக்குத் திரும்பிய ஹசன், ‘‘2009இல் முடிவடைந்த மோதலில் பாதிக்கப்பட்ட ஆயிரக்கணக்கானோருக்கு நீதி வழங்கப்பட்டதா’’ என்று கேட்டார். விக்கிரமசிங்க ஒப்புக்கொண்டார். “இல்லை. எந்தச் சமூகத்துக்கும் நீதி வழங்கப்படவில்லை.” போரில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி தடுக்கப்பட்டதையும் சில மருத்துவமனைகள் குண்டுவீசப்பட்டதையும் அவர் ஏற்றுக்கொண்டார். ஆனால், அத்தகைய குண்டுவெடிப்புகள் முறையாக நடந்தன என்பதை மறுத்தார். “மருத்துவமனைகளில் விமானப்படை குண்டுவீசித் தாக்குதல் நடத்திய சந்தர்ப்பங்கள் இருந்தன. அவற்றில் சிலவற்றின் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது. ஆனால், பெரியளவில், இதுவா? நான் அப்படிச் சொல்ல மாட்டேன்.”

“ஐ.நா. குழுவின் கூற்றுப்படி இலங்கை அரசாங்கப் படைகள் போரில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி வழங்குவதைத் தடுத்தன” என்று ஹசன் கூறினார்.

“அது நடந்தது என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன்” என்று போரின் இறுதிக் கட்டத்தின்போது எதிர்க்கட்சித் தலைவராக இருந்த விக்கிரமசிங்க ஒப்புக்கொண்டார்.

அமெரிக்க வெளியுறவுத் துறை போர்க்குற்றங்கள் செய்ததாகக் குற்றஞ்சாட்டிய ஜெனரல் ஷவேந்திர சில்வாவை, ஜனாதிபதியாக மீண்டும் இலங்கையின் ஆயுதப் படைகளுக்குத் தலைவராக நியமித்ததற்கான காரணம் குறித்து விக்கிரமசிங்க கூறுகையில், “ஒரு தேர்தலின்போது இராணுவத் தளபதிகளை மாற்றக் கூடாதென்பது ஒரு நடைமுறை. நான் பொறுப்பேற்றபோது அதைச் சரிபார்த்தேன், ஜெனரல் சில்வா அதில் ஈடுபடவில்லை என்பதில் நான் திருப்தியடைந்தேன்” என்றார்.

1980களின் பிற்பகுதியில் ஓர் அமைச்சராக அவர் வசித்து வந்த பட்டலந்த என்ற வீட்டுத் தொகுதியில் சட்டவிரோதமாக தடுத்து வைக்கப்பட்டிருந்தமை, சித்திரவதை செய்யப்பட்டமை மற்றும் கொலைகள் குறித்து தனக்குத் தெரியும் என்று அரசாங்க ஆணைக்குழு கூறிய குற்றச்சாட்டுகளை விக்ரமசிங்க மறுத்தார்.

அல் ஜசீரா ஒரு நகலைப் பெற்ற அறிக்கையின் இருப்பை விக்கிரமசிங்க முதலில் மறுத்தார். பின்னர் அதன் செல்லுபடியை கேள்விக்குள்ளாக்கினார். அது பாராளுமன்றத்தில் ஒருபோதும் விவாதிக்கப்படவில்லையென்று கூறினார்.

“அது பாராளுமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை. எனக்கு எதிராக எதுவும் கண்டுபிடிக்கப்படவில்லை.”

இலங்கை வரலாற்றில் மிகப்பெரிய அரசியல் மற்றும் நிதி நெருக்கடிகளில் ஒன்றின் மத்தியில் 2022இல் பாராளுமன்றத்தால் ஜனாதிபதியாக நியமிக்கப்பட்ட விக்கிரமசிங்க, தேர்தல் தோல்வியடைந்தது குறித்து பேசும்போது, “இரண்டு ஆண்டுகளில் நான் பொருளாதாரத்தை மீண்டும் பாதையில் கொண்டுவந்தேன். அதாவது பணவீக்கம், சுருக்கம். இது மிக மிகக் கடினம். நீங்கள் அதிலிருந்து தப்பிப்பீர்களா? இல்லை, எனக்கு அது புரியவில்லை” என்று அவர் கடந்த ஆண்டு தேர்தலில் மூன்றாவது இடத்தைப் பிடித்தது பற்றி கூறினார்.

“நான் மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறேன். நான் வேலையைச் செய்தேன்” என்று அவர் கூறினார். ஜனாதிபதியாக அவர் தரகு செய்த ஒரு முக்கிய IMF ஒப்பந்தத்தை ஓரளவுக்குக் குறிப்பிடுகிறார்.

“நான் பொறுப்பேற்றிருக்கா விட்டால் நாட்டின் அரசியல் மற்றும் பொருளாதாரச் சரிவு ஏற்பட்டிருக்கும்” என்றார்.

## ரணில் ஏன் இந்த நிகழ்ச்சிக்குப் போனார்?

ஏதோ விஜய் படம் ரீலிஸான மாதிரி பெரிய ஆரவாரமாய்க் கொண்டாடி மெஸேஜுக்கு மேல் மெஸேஜ் போட்டு போஸ்ட் எல்லாம் போட்டு மென்ஷன் பண்ணியதால் அல் ஜசீராவைப் போட்டேன். அடப்பாவமே… ‘If you don’t want me , I am prepared to leave.’ என்று சொல்லிக்கொண்டிருந்தார். ஒருசிலருக்கு கடவுள் அந்தஸ்தில் இருக்கும் மாபெரும் ராஜதந்திரி. அதுவும் தன்னை விட முப்பது வயது இளமையான மஹ்தி ஹஸன் என்ற பிரசித்திபெற்ற ஊடகவியலாளரிடம்.

முழுதாய்ப் பார்த்து முடித்தாயிற்று. என் கேள்வி எல்லாம் எந்த தைரியத்தில் இப்படி ஒரு நிகழ்ச்சிக்குப் போய் மூக்குடைபட்டார் என்பதுதான். போரால் பாதிக்கப்பட்ட டயஸ்போரா மக்கள் இருக்கும் அரங்கில் அல் ஜசீரா ஊடகத்தை எதிர்கொள்ள எந்த அசட்டுத் துணிவில் இவர் போனார். வின்னர் படத்தில் அடிவாங்கிய வடிவேல் பரவாயில்லை என்கிற அளவுக்கு இருந்தது நிலைமை. சுற்றியிருக்கும் ஜால்ராக்கள் உன்னை விட்டால் ஆளில்லை. நீதான் சர்வதேச கதாநாயகன் என்று காதில் சதா சொன்னதால் ஒருவேளை போய் இருக்கக்கூடும்.

மஹ்தி கேட்ட கேள்விகள் எல்லாமே யாருக்குமே புதிசு அல்ல. ‘‘இரவைக்கு நெட்பிளிக்ஸ் பார்த்தபிறகா இடியப்பமும் பால்சொதியும் சாப்பிடுகிறீர்கள் அல்லது அதற்கு முன்பா’’ என்று பவ்யமாய்க் கேட்கும் ஊடகத்துறையைச் சேர்ந்தவர்களுக்கு இதெல்லாம் வியப்பை ஏற்படுத்தலாம். ஆனால், இலங்கையின் அரசியல் சரித்திரம் தெரிந்த யாருக்குமே மிகச் சாதாரண கேள்விகள்.

ராஜபக்ஷவை பிரசித்தமாக எதிர்ப்பதாய்ச் சொல்லிக்கொண்டிருக்கிறீர்கள். ஆனால், ரணில்- ராஜபக்ஷ என்று மக்கள் ஏன் சொல்கிறார்கள். நீங்கள் அவரைப் பாதுகாப்பதால் அப்படி ஒரு பெயர் வந்ததா?

உள்ளூராட்சித் தேர்தலை நடத்த பணம் இல்லை என்று காரணம் கூறினீர்கள். எலிசபத் மகாராணியினதும் ஜப்பான் பிரதமரதும் மரண வீடுகளுக்குப் போவதற்கு எல்லாம் பணம் இருந்ததா?

என்று அனல் தெறிக்கும் கேள்விகள்.

ஒரு கட்டத்தில் நீ பிறக்க முன்பே நான் அரசியலில் இருக்கிறேன் என்று சொல்வார் ரணில் பரிதாபமாய்..

மஹ்தி விடுவதாய் இல்லை. பதினாறு வருடங்களுக்கு முன்பு தமிழ்ப் படுகொலைகளுக்கு நீதி ஏன் கிட்டவில்லை என்று கேட்கும்போது I am not saying anything I said no contest . so bring next question’ என்று முணங்கும்போது ஆறாம் வாய்ப்பாடு தெரியாத மாணவன் ஒருவன்போல இருந்தது. தமிழ்ப் படுகொலைகளுக்குப் பொறுப்புடன் பதில் கொடுக்க எந்த அரசியல்வாதியுமே லாயக்கில்லாதபோது இன முரண்பாட்டின் ஆணிவேரான ஐக்கிய தேசியக் கட்சியின் பலமிகு அமைச்சராகவும் ஆறு தடவைகள் பிரதமர், ஜனாதிபதிப் பதவியை அலங்கரித்தவருமான இவர் ஏன் இந்நிகழ்ச்சிக்குப் போனார்.

அதைவிட நகைச்சுவை என்னவென்றால், ரணில் சார்பாய்ப் பேச என்.ஜே.தேவா என்ற ஒரு தூதுவர் பொறுமையிழந்து இதெல்லாம் ராஜபக்ஷக்களிடம் கேட்க வேண்டிய கேள்விகள். இவரது அரசியலை ராஜபக்ஷக்கள் நாசம் செய்துவிட்டார்கள் என்று அடித்துவிட உடனே மஹ்தி, அப்படி என்றால் இவர் ஏன் 2023ஆம் ஆண்டு நவம்பர் மாதம் மஹிந்த ராஜபக்ஷவின் பிறந்த நாள் விழாவில் கேக் எல்லாம் வெட்டிப் பாட்டுப் பாடினார் என்று கேட்க, மண்டபம் முழுக்க வெடிச் சிரிப்பு. திரும்பவும் கேட்கிறேன், இவர் ஏன் இந்நிகழ்ச்சிக்குப் போனார்..

ஒருகட்டத்தில் ’நான் உன் கேள்விக்குப் பதில் அளிக்கப் போனால் சத்தம் போடுகிறாய். என்னைப் பேச விடாமல் தடுக்கிறாய். ‘no contest’ என்று வெறுத்துப் போய் சொல்லத் தொடங்கினார். இதென்ன சின்னப்பிள்ளைத்தனம் என்று மஹ்தி கேட்க, ‘கை ‘if I am childish , Ghandi was also childish ,I am only doing what ghandi did’ என்றபோது அந்த யூரியா பாக்டரி, படலந்த வதை முகாம் என்று நாம் நினைப்பதெல்லாம் கேள்வியாய் இறுகி வந்தது.

படலந்த அறிக்கை என்பது சந்திரிகா என்ற மங்குனி தன் தேர்தல் பிரசாரத்துக்கு மட்டும் பாவித்துவிட்டு கிடப்பில் போட்ட ஒன்று. பாதிக்கப்பட்ட நிறைய பேரின் சாட்சிகள் அதில் உண்டு. படலந்த ரிப்போர்ட்டைத் தூக்கிக் காட்டி மஹ்தி சுட்டிக் காட்டிய சாட்சியாளர் வின்சன்ட் அதில் முக்கியமான நபர். படலந்த அறிக்கை பற்றி மஹ்தி சொல்லும்போது ரணிலின் முகத்தைப் பார்க்கவேண்டும். அவ்வளவு கொதிப்பு. பப்படம் நான்கைத் தூக்கிப் போட்டால் பொரிந்து வரும். திரும்பவும் கேட்கிறேன்.இவர் ஏன் இந்நிகழ்ச்சிக்குப் போனார்.

உயிர்த்த ஞாயிறு தின குண்டுத் தாக்குதல் பற்றிய சதியின் பின்புலம், கோட்டாபய ராஜபக்ஷவுக்குத் தண்டனை வழங்காமல் விட்டது, யுத்தக் குற்றவாளி என்று அமெரிக்கா கறுப்புப் பட்டியலில் சேர்த்த சவேந்திர சில்வாவுக்குப் பதவி வழங்கி அலங்கரித்தது என்றெல்லாம் சமாளிக்கத் திராணி இல்லாத கேள்விகள் ஒன்றன் பின் ஒன்றாய் வந்து விழுந்தன.

கெட்ட கேட்டுக்கு’’ we are non-violent nation’ என்றார். அடேய் இது மட்டும் வேணாம் டா ஜெயசூரியவுக்கு ஃபுல்டோஸ் போடுறாயே என்று எனக்கே சலிப்பானது. நினைத்தது சரி. இருபத்தாறு வருட யுத்தத்தில் ஒரு இலட்சம் பேர் கொலை செய்யப்பட்டார்கள். இதுதான் வன்முறையற்ற தேசமா என்று சுர்ரென்று வந்தது மஹதியிடமிருந்து பதில்.

ரணில் -காந்தி - புத்தர் பற்றிப் பேசும்போது மட்டும் மஹ்தி கொஞ்சம் அமைதியாய் இருந்தார். ஆடியன்ஸாய் இருந்தால் கோனவல சுனிலையும் சொத்தி உபாலியையும் வளர்த்தெடுத்தவர்கள் காந்தி - புத்தர் பற்றிப் பேசலாமா என்று மஹ்திக்கு பாய்ண்ட்ஸ் எடுத்துக் கொடுத்திருக்கலாம்.

போதாக்குறைக்கு ஒருவன் எழும்பி, 1983ஆம் ஆண்டு இன அழிப்பு நடந்துகொண்டிருந்தபோது கெபினட் அமைச்சராய் என்ன செய்துகொண்டு இருந்தீர்கள் என்று கேட்டான். வன்முறையற்ற நாடு என்று முன்னர் சொன்ன ரணிலார் இப்போது டியூனை மாற்றி இன அழிவுகள் எங்கேயும் நடப்பதுதானே என்ற தொனியில் உருட்ட, இது போர்க்குற்றம் இல்லையா என்று மஹ்தி கேட்க, பார்த்த எனக்கே பரிதாபத்தில் களைப்பாகிவிட்டது.

கடைசியாய் ஒரு விசயம். ஆங்கிலம் என்பது வெறும் மொழி. அந்த எழவு நமக்குத் தாராளமாய் வரும் என்று கோட்டையும் சூட்டையும் மாட்டிக்கொண்டு போனால் இப்படியொரு உண்மையான ஊடகவியலாளன் டவுசரையும் அண்டர்வேரையும் தலைவழியால் கழட்டுவான். அதுதான் அல்ஜசீரா நேர்காணலில் நடந்திருக்கிறது. சரி. கடைசியாய் ஒருதடவை கேட்கிறேன். இவர் ஏன் இந்நிகழ்ச்சிக்குப் போனார்.?

**ஸபார் அஹ்மத்**

# பெண்களும் சாதனை படைக்க முடியும்



**மலைவாசன்**

**தேசிய மகளிர் தினத்தையொட்டி இக்கட்டுரை பிரசுரிக்கப்படுகிறது**








இணைய யுகமென வர்ணிக்கப்படும் இந்த இருபதாம் நூற்றாண்டில் ஒருவர் தான் நினைத்த மாத்திரத்தில் உலகின் எந்த மூலையில் வாழ்பவருடனும் அவரின் முகத்தைப் பார்த்து உரையாடக்கூடிய விதத்தில் விஞ்ஞானம் அபரிமித வளர்ச்சியடைந்துள்ளது.

முன்னொரு காலத்தில் அடுப்பூதும் பெண்களுக்குக் கல்வி எதற்கென சிந்தித்தவர்களாக நமது முன்னோர்கள் தமது பெண்பிள்ளைகளுக்குக் கல்வி கற்பதற்கான வாய்ப்புகளை வழங்காது ஆடவர்கள் அடக்கி ஒடுக்கி வீடுகளில் பூட்டி வைத்தார்கள்.

ஆனால், இன்று பெண்கள் தாம் எந்தவிதத்திலும் ஆண்களுக்கு சளைத்தவர்களல்லர் என்பதை தமது செயற்பாடுகளின் மூலம் நிரூபித்து வருகின்றனர். பெண்களில் ஏற்பட்டு வரும் இந்த மாற்றம் மனமகிழ்வைத் தருவதோடு அவர்களைப்பற்றி பெருமைகொள்ளச் செய்துள்ளது.

நமது தாய்த்திருநாடான இலங்கை உலகிலேயே முதல் பெண் பிரதமராக சிறிமாவோ பண்டாரநாயக்கவையும் முதல் ஜனாதிபதியாக சந்திரிகா பண்டாரநாயக்க குமாரணதுங்கவையும் உருவாக்கி அவர்களை உலகுக்கு அறிமுகம் செய்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

பொதுவாக உலகளாவிய ரீதியில் பெண்கள் பல துறைகளிலும் முத்திரை பதித்து தமது திறமைகளை வெளிப்படுத்தி வருவதனால்தான் ஒவ்வொரு வருடமும் மார்ச் மாதம் சர்வதேச மகளிர் தினம் கொண்டாடப்படும் அளவுக்குப் பெண்கள் முன்னேறியுள்ளார்கள்.

நமது நாட்டு அரசியலைப் பொறுத்தவரையில் பெண்களில் பலர் அரசியலில் ஈடுபட்டு அமைச்சர்கள், ஆளுநர்கள், பிரதமர்கள், ஜனாதிபதி என பல பதவிகளை வகித்து கோலோச்சியுள்ளார்கள். இந்த நாட்டின் பெரும்பான்மைச் சமூகத்தினரான சிங்களவர்களில் பெண்களே இந்தச் சாதனைகளைப் படைத்துள்ளார்கள்.

ஆனால், இந்த நாட்டில் வாழும் சிறுபான்மை இன மக்களான தமிழ், முஸ்லிம் மக்கள் உள்ளார்கள். இந்த நாட்டில் வாழும் தமிழ் மக்களில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வாழும் தமிழ் மக்கள் இந்த நாட்டை பூர்வீகமாகக் கொண்டுள்ளதனால் அவர்கள் 'இலங்கைத் தமிழர்கள்' என அழைக்கப்படுகிறார்கள். வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு வெளியே வாழும் தமிழ் மக்கள் தென்னிந்தியாவிலிருந்து வருவிக்கப்பட்ட மக்களின் வழித்தோன்றல்கள் என்பதனால் அவர்கள் 'இந்திய வம்சாவளித் தமிழர்கள்' என அழைக்கப்படுகிறார்கள்.

இலங்கைத் தமிழர்களைப் பொறுத்தவரையில் அந்த மக்களில் ஒரு பெண்ணான திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸ் வடக்கு மாகாண ஆளுநராகவும் மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து தங்கேஸ்வரியும் யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்து பாராளுமன்றத்துக்கு தெரிவுசெய்யப்பட்ட இராஜமனோகரி புலேந்திரன் கல்வி இராஜாங்க அமைச்சராகவும் விஜயகலா மகேஸ்வரன் ஆரம்பத்தில் மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சராகவும் அதன் பின்பு கல்வி இராஜாங்க அமைச்சராகவும் திகழ்ந்து பெண்களுக்குப் பெருமை சேர்த்தார்கள்.

முஸ்லிம் மக்களில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபகத் தலைவர் எம்.எச்.எம்.அஷ்ரப்பின் திடீர் மறைவின் பின்னர் அவரின் பாரியாரான பேரியல் அஷ்ரப் அமைச்சர் பதவி வகித்தத்தோடு, அதன் பின்பு மலேசியாவின் இலங்கைத் தூதுவராக நியமிக்கப்பட்டு இந்த நாட்டில் வாழும் முஸ்லிம் மக்களுக்குப் பெருமை சேர்த்தார். முன்னைய காலத்தில் அஞ்சான் உம்மா, மக்கள் விடுதலை முன்னணியின் மாகாண சபை உறுப்பினராக வரலாறு படைத்தார். ஆனால், துரதிர்ஷ்டவசமாக தற்போதைய பாராளுமன்றத்தில் எந்தவொரு முஸ்லிம் பெண்ணும் உறுப்பினராக இல்லை.

இந்த நாட்டில் வாழும் இந்திய வம்சாவளித் தமிழர்களில் கடந்த காலத்தில் வேலம்மாள் செல்லச்சாமி, அனுஷியா சிவகுமார், சரஸ்வதி சிவகுரு ஆகியோர் மாகாண சபை உறுப்பினர்களாகத் திகழ்ந்தார்கள். சில பெண்கள் உள்ளூராட்சி மன்றங்களில் - குறிப்பாக, பிரதேச சபைகளில் உறுப்பினர்களாக பதவி வகித்து தமது சமூகத்துக்குப் பெருமை சேர்த்தார்கள். ஆனால் 2024.11.14 ஆம் திகதி வரை இந்த நாட்டில் வாழும் இந்திய வம்சாவளித் தமிழர்களில் எந்தவொரு பெண்ணும் பாராளுமன்ற உறுப்பினரான வரலாற்றைக் கொண்டிருக்கவில்லை.

2024.11.14ஆம் திகதி இடம்பெற்ற இந்த நாட்டின் பத்தாவது பாராளுமன்றத்துக்கான பொதுத் தேர்தலில் முதல் தடவையாக மூன்று மலையக தமிழ்ப் பெண்கள் தேசிய மக்கள் சக்தியின் சார்பில் போட்டியிட்டு வெற்றியீட்டி தற்போதைய பாராளுமன்றத்தில் உறுப்பினர்களாக உள்ளார்கள். அவர்களுள் ஒருவர் மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சராக அநுரகுமார திசாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தியின் அரசாங்கத்தில் பதவி வகிப்பதன் மூலம் சாதனை படைத்துள்ளார். அவர் தான் மாத்தறை மாவட்டத்திலிருந்து பாராளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்ட சரோஜா சாவித்திரி போல்ராஜ்.

கடந்த காலங்களில் இந்த நாட்டில் பெண்களுக்கு ஒவ்வொரு கட்சியும் அதனது வேட்பாளர் பட்டியலில் இருபத்தைந்து சத வீதத்தைப் பெண்களுக்கு ஒதுக்க வேண்டும் என்னும் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. ஆனால், அந்தக் கோரிக்கை இதுவரை நடைமுறைப்படுத்தப்படாமை பெண்களுக்கு ஏற்படுத்தப்பட்ட அநீதி என்பதில் இரு வேறு கருத்துக்கு இடமில்லை. எதிர்காலத்திலாவது தற்போதைய பாராளுமன்றத்தில் 159 ஆசனங்களைக்கொண்டுள்ள தேசிய மக்கள் சக்தி பாராளுமன்றத்துக்கு ஒரு பிரேரணையை கொண்டுவந்து குறைந்தபட்சம் உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல்களிலாவது பெண்களுக்கு ஒவ்வொரு கட்சியும் அதன் வேட்பாளர் பட்டியலில் இருபத்தைந்து சதவீதத்தை ஒதுக்கீடு செய்வதை சட்டமாக்கி பெண்களுக்கு உரிய அந்தஸ்தை வழங்கும் விதத்தில் செயற்பட வேண்டும்.

கடந்த சில வருடங்களாக இந்த நாட்டில் வாழும் இந்திய வம்சாவளித் தமிழர்களில் தோட்டத் தொழிலாளர்களின் பிள்ளைகளில் உரிய கல்வித் தகைமைகளைக் கொண்ட இருபத்துநான்கு பேர் கடந்த 2023.11.27ஆம் திகதி தலவாக்கலை பெருந்தோட்ட நிறுவனத்தால் வெளிக்கள உத்தியோகத்தர்களாக நியமனம்பெற்று அவர்கள் தாம் எந்த விதத்திலும் ஆண்களுக்கு சளைத்தவர்களல்லர் என்பதை நிரூபித்து பெண்களுக்குப் புகழ் சேர்த்துள்ளார்கள்.

நுவரெலியா பிட்ரூ தோட்டம் களனிவெளி பிளான்டேசனால் நிர்வகிக்கப்படுகிறது. அந்தத் தோட்டத்தில் தோட்டத் தொழிலாளியின் மகளான சிவகவி கலைவாணி தனது சுய முயற்சியின் மூலம் தேயிலை நிலைய உத்தியோகத்தராகவும் அந்தத் தோட்டத்துக்கு வருகை தரும் உல்லாசப் பயணிகளுக்கு வழிகாட்டியாகவும் மற்றும் தேயிலை பதனிடும் அறையின் செயற்பாடுகள் பற்றி சுற்றுலாப் பயணிகளுக்கு விரிவாக எடுத்துரைப்பவராகவும் திகழ்வதன் மூலம் புதியதொரு துறையில் முத்திரை பதித்துள்ளார்.

எனவே, விடாமுயற்சியின் மூலம் வாழ்வில் உச்ச நிலையை அடைய முடியும் என்பதை இந்த நாட்டில் வாழும் ஒவ்வொரு பெண்ணும் உணர்ந்து அதற்கான முயற்சிகளை மேற்கொண்டால் வாழ்வில் சாதிக்க முடியாததென்று ஒன்றும் இல்லை.

ஆகவே, மகளிர் தினம் அனுஷ்டிக்கப்படும் இக் காலகட்டத்தில் பெண்கள் உரிய செயற்பாடுகளை முன்னெடுப்பதன் மூலம் சாதனை படைக்கலாம் என்பதை மனதிலிருத்தி செயற்பட்டு மகளிருக்குப் பெருமை சேர்க்க முன்வர வேண்டும்.

## Philanthropic கட்டுமான அறக்கட்டளை இலங்கை தேசிய மருத்துவமனையிலுள்ள கால் - கை வலிப்பு கட்டிடத்தில் இரண்டாம் நிலை தியேட்டரை அமைக்கும் திட்டம் நிறைவு

Philanthropic கட்டுமான அறக்கட்டளை இலங்கை தேசிய மருத்துவமனையிலுள்ள கால் - கை வலிப்பு கட்டிடத்தில் இரண்டாம் நிலை தியேட்டரை அமைக்கும் திட்டத்தை நிறைவுசெய்துள்ளது.

இந்தக் கட்டிடத்திலிருக்கும் தியேட்டருக்கு அருகாமையில் புதிய தியேட்டர் அமைந்துள்ளது. இக்கட்டிடத்தை அமைக்க நன்கொடையாளர்களால் மாற்று அறுவை மற்றும் கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சைகளை செய்ய இருப்பவர்களுக்காக கட்டப்பட்டது.

இந்தத் திட்டத்துக்கான உந்துதல் ஏப்ரல் 2024இல் மறைந்த Arch. Susil Weddikkaraவால் இலங்கை தேசிய மருத்துவமனைக்கு வருகை தந்த பேராசிரியர் Chithra Weddikkara தேசிய சுகாதார அமைப்புக்கு உதவ விரும்பினார்.

மேலும், அப்போது Chithra Weddikkaraவின் மருத்துவராக இருந்த ஆலோசகர் அறுவை சிகிச்சை நிபுணர் Dr. Prabath Kumarasingheவின் ஆலோசனையைப் பெற்றிருந்தார். NHSL இல் நேரடி நன்கொடையாளர்களுக்கு கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை தியேட்டரின் நன்மையை Dr. Kumarasinghe குறிப்பிட்டார்.

இந்தத் திட்டத்துக்காக ஒதுக்கப்பட்ட திட்டச் செலவு சுமார் 30 மில்லியன் ரூபாவாகும். மேலும், தியேட்டர் இடத்தைப் புதுப்பிப்பதிலுள்ள நேரத்தைக் குறைக்க ஓர் அமைப்புடன் பொருத்தப்பட்டது. இந்நிதி இலங்கையில் வசிக்கும் நன்கொடையாளர்களிடமிருந்து திரட்டப்பட்டது. இந்நிதி அங்கு பெரும்பாலான நன்கொடைகள் கட்டுமானத் துறையினரிடமிருந்து வந்தது.

வெகுஜன ஊடக அமைச்சரின் செயலாளர் Dr. Anil jayasinghe, நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார மேம்பாட்டு அமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன, இலங்கை தேசிய மருத்துவமனையின் Deputy Director General Dr. Wickramasinghe Philanthropic கட்டுமான அறக்கட்டளையின் தலைமை அறங்காவலர் Prof. Chitra Weddikkara ஆகியோர் கலந்துகொண்டனர்.



திறப்பு விழா பெப்ரவரி 20ஆம் திகதி சுபநேரமான காலை 9.35 மணிக்கு ஆரம்பித்து வைக்கப்பட்டது. கட்டுமானத் துறையின் மதிப்புமிக்க உறுப்பினர்கள், மருத்துவர்கள், NHSL உறுப்பினர்கள் நன்கொடையாளர்கள் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

இந்தத் தியேட்டரின் மூலம் கல்லீரல், கணைய புற்றுநோய் அறுவை சிகிச்சைகள் மற்றும் மாற்று அறுவை சிகிச்சைகளுக்கான காத்திருப்பு நேரம் குறைக்கப்படுமென்றும் இலங்கை தேசிய மருத்துவமனைக்குள் உள்ள நோயாளிகளுக்கு 'உயிருள்ள நன்கொடையாளர்' கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சைகள் அணுகக்கூடியதாக மாறும் என்றும் Dr. Kumarasinghe நம்புகிறார்.

இத்திட்டத்தை நிறைவுசெய்ய சுமார் 10 மாதங்கள் எடுத்தன. மேலும் திட்ட செயற்படுத்தல் ஜனவரி 31, 2025 அன்று தொடங்கி 16 நாட்களுக்குள் நிறைவடைந்தது. ஏற்கனவே உள்ள கட்டிடத்தை புதுப்பிப்பதிலுள்ள ஆபத்துகளைக் கருத்திற்கொண்டு திட்டத்துக்கு இது மிகவும் நல்ல விளைவாகும். இந்த முடிவில் தொண்டு நிறுவனம் மிகவும் மகிழ்ச்சியடைகிறது. நன்கொடையாளர் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சையில் இது பெரிய மாற்றத்தை ஏற்படுத்தும் என்று நம்புகிறது.



## அதிக அடக்குமுறைகளைக் கொண்ட தொழிற்றுறையாக பெருந்தோட்டத் துறை

### நீதி கிடைக்குமாவென சபையில் சாணக்கியன் கேள்வி



பெருந்தோட்ட மலையக மக்கள் கடந்த 200 வருடங்களுக்கு மேலாக இந்த நாட்டுக்கு பெரும் சேவையை தமது உழைப்பின் மூலமாக வழங்கி வருகின்றனர். ஆனால் அவர்கள் அவ்வாறு நாட்டின் முன்னேற்றத்துக்கு முதுகெலும்பாக உழைத்த போதும் அவர்களின் வாழ்க்கைத் தரம், சமூக அந்தஸ்து மற்றும் அடிப்படை உரிமைகளை வழங்குவதில் இந்த நாடு பாரபட்சமாக இருந்து வருகின்றது. எமது சமூகத்தின் கோரிக்கைகளை சாதகமாக பரிசீலனை செய்வதற்கு பதிலாக எப்படி தட்டிக்கழிக்கலாம் என்பதில் அதிக கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது. இன்றுவரை அது தொடர்ந்து கொண்டுதான் இருக்கின்றது என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன் என பாராளுமன்றத்தில் கருத்துத் தெரிவித்த இரா. சாணக்கியன் எம்.பி. மேலும் தெரிவிக்கையில் ,

மிக முக்கியமாக தொழிற்சங்கங்களுடைய காவலனாக கடந்த காலங்களில் செயற்பட்டவர் அமைச்சர் வசந்த சமரசிங்க. அமைச்சர் அவர்களே உங்களுக்கு தெரியும் கடந்த காலத்தில் தோட்டத் தொழிலாளர்களின் சம்பளம் 1000 ரூபாவாக அதிகரிக்கப்பட்டது. அதனை தொடர்ந்து கடந்த அரசாங்கத்தின் காலப்பகுதியில் இதனை 1700 ரூபாவாக அதிகரிக்க பாரிய முயற்சி எடுக்கப்பட்டது. அதில் பெருந்தோட்ட கம்பனிகள் இந்த தொகையை அதிகரிக்க இணங்காமை காரணமாக அவர்கள் நீதிமன்றத்தை நாடி இருந்தார்கள். அதனை தொடர்ந்து அந்த வர்த்தமானியை இரத்துச் செய்து 2024ஆம் ஆண்டு மீண்டும் சம்பள நிர்ணய சபையின் ஊடாக மீண்டும் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டார்கள். அந்த நேரத்தில் அமைச்சர் அவர்களே உங்களுடைய கட்சியினுடைய தொழிற்சங்கத்தின் ஊடாக 2136 அல்லது 2163 ரூபா முன்மொழியப்பட்டது? இரண்டு தொகைகளில் ஒன்று.

தற்போதைய தேசிய மக்கள் சக்தியின் தொழிற்சங்கமான அகில இலங்கை தோட்டத் தொழிலாளர் சங்கம். இது உங்களுடைய தோட்ட தொழிலாளர்களுக்கான சங்கம். இந்நிலையில் 2136 ரூபா உயர்வை தவிர வேறு எதற்கு நாம் இணங்கமாட்டோம் என உங்களது சங்கத்தின் சார்பில் கடந்த காலங்களில் கூறப்பட்டது. ஆனால் இன்று ஜனாதிபதியின் உரையில் 1700 ரூபா என்று குறிப்பிடப்பட்டுள்ளது. கடந்த காலங்களில் உங்களுக்கு தெரியும் 1350 ரூபா அடிப்படை சம்பளமாகவும் 350 ரூபா கொடுப்பனவாகவும் வழங்குவதற்கே பாரிய எதிர்ப்பை தெரிவித்தனர். ஆனால் தற்போது உங்களது வரவு-செலவுத் திட்டத்தில் 1700 ரூபா கூறப்பட்டுள்ளது. அப்படி என்றால் நீங்கள் ஆட்சிக்கு வருவதற்கு முன்னர் நீங்கள் இருந்த நிலைப்பாட்டுக்கும் இன்று இந்த நிலைப்பாட்டுக்கும் இடையே எவ்வாறு வித்தியாசம் ஏற்பட்டது?

மலையக மக்கள் இந்த அரசாங்கத்தை நம்பியே வாக்களித்திருக்கிறார்கள். இந்த அரசாங்கத்தை நம்பி வாக்களித்திருப்பினும் இந்த அரசாங்கம் இம்மக்களை மீண்டும் ஏமாற்றுகின்றது. இதுவொரு ஏற்றுக்கொள்ள முடியாத விடயம். அரச ஊழியர்களை எடுத்துக் கொண்டால் அவர்களுக்கு ஏப்ரல் மாதம் முதல் சம்பள உயர்வை வழங்குவதாக குறிப்பிட்டுள்ளீர்கள்.

(தொடர்ச்சி 08 ஆம் பக்கம்...)

# இலங்கையில் பாடசாலை செல்லும் வயதில் தாயாகும் சிறுமிகள்



## காரணங்களும் தீர்வுகளும் என்ன?



இலங்கையில் பாடசாலை செல்லும் வயதிலுள்ள சிறுமிகள் மத்தியில் பதிவாகியுள்ள குழந்தை கர்ப்பிணிகளில் 10 வயதான சிறுமி ஒருவரும் அடங்குவதாக அதிகாரபூர்வ தகவல்களினூடாக உறுதி செய்யப்பட்டுள்ளது.

கடந்த 2023ஆம் ஆண்டு 163 பாடசாலை மாணவிகள் கர்ப்பமடைந்துள்ளதுடன், 2024ஆம் ஆண்டு அந்த எண்ணிக்கையானது 213 வரை அதிகரித்துள்ளதாக பொலிஸ் சிறுவர் மற்றும் மகளிர் துஷ்பிரயோக விசாரணைப் பிரிவின் தரவுகள் தெரிவிக்கின்றன.

இதன்படி, 2024ஆம் ஆண்டு பதிவான குழந்தைத் தாய்மார்களுக்கு மத்தியில் 10 வயதான சிறுமி ஒருவரும் அடங்குவதாக பொலிஸ் சிறுவர் மற்றும் மகளிர் துஷ்பிரயோகப் பிரிவின் தகவல்கள் குறிப்பிடுகின்றன.

எனினும், அதிகாரப்பூர்வமாகப் பதிவாகியுள்ள குழந்தைத் தாய்மார்களை விடவும் அதிக எண்ணிக்கையிலான குழந்தைத் தாய்மார்கள் இலங்கையில் இருக்கக்கூடுமென பொலிஸ் சிறுவர் மற்றும் மகளிர் துஷ்பிரயோகப் பிரிவுக்குப் பொறுப்பான பிரதி பொலிஸ் மா அதிபர் ரேணுகா ஜயசுந்தர பி.பி.சிக்குத் தெரிவித்துள்ளார்.

**★ பாலியல் கல்வி குழந்தைகளுக்கு எப்போது, எப்படி சொல்லித் தர வேண்டும்?**

**★ திருமணமாகாதவர்களுக்கும் கருக்கலைப்பு உரிமை: உயர்நீதிமன்ற தீர்ப்பு நடைமுறையில் சாத்தியமா?**

**★ அவசர கருத்தடை மாத்திரைகளை மருந்தகங்களில் நேரடியாக வாங்க தடை வருமா?**

**★ இலங்கையில் வெறும் ஐந்தே நிமிடங்களில் விலங்குகளைக் கணக்கெடுக்க திட்டம் - எப்படி?**

கடந்த 1989ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 20ஆம் திகதி ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையால் அனுமதிக்கப்பட்ட சிறுவர் உரிமைகள் தொடர்பான ஒப்பந்தத்தின் பிரகாரம், 18 வயதுக்குக் குறைவான அனைவரும் சிறுவர்களென அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

இலங்கையின் தண்டனைச் சட்ட கோவையின் 363(இ) சரத்தின் பிரகாரம், 16 வயதுக்குட்பட்ட பெண்ணொருவரின் ஒப்புதல் பொருந்தாது என்பதால், அவ்வாறானவர்களுடன் உடலுறவு கொள்வதானது பாலியல் வன்கொடுமை எனக் கருதப்படுகின்றது.

**சிறு வயது காதல் காரணமாக ஏற்படும் சம்பவங்கள்**

தற்போது பதிவாகின்ற குழந்தைகள் கர்ப்பமடைவதானது, காதல் தொடர்புகளின் பெறுபேறுகளால் ஏற்படுகின்ற சம்பவமென பிரதி பொலிஸ் மா அதிபர் குறிப்பிடுகின்றார்.

இதில், 16 வயதுக்குக் குறைவான சிறுமிகளின் விருப்பத்துடன் இடம் பெறுகின்ற சம்பவங்களில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளமையே எமக்குள்ள பிரச்சினையாகும். அது துஷ்பிரயோகமென சட்ட ரீதியாக உரித்தானாலும் அது பலவந்தமாக இடம்பெற்ற சம்பவங்கள் அல்ல. காதல் ஏற்பட்டு விருப்பத்துடன் இடம்பெற்ற சம்பவங்களாலேயே அந்தச் சிறுமிகள் கர்ப்பமடைந்துள்ளனர்.

இவ்வாறான சந்தர்ப்பங்களில் பலவந்தமாக இடம்பெற்ற துஷ்பிரயோகங்களில் கர்ப்பமடைவதைத் தடுப்பதற்கு வாய்ப்பில்லை. இந்தச் சம்பவங்கள் தொடர்பில் முறைப்பாடு கிடைக்கும்போது, அந்தச் சிறுமி கர்ப்பமடைந்து பல மாதங்களாகியிருக்கும் எனவும் அவர் கூறுகின்றார்.

பலவந்தமாக இடம்பெறுகின்ற துஷ்பிரயோகங்கள் தொடர்பில் கட்டாயம் பொலிஸ் நிலையங்களுக்கு முறைப்பாடுகள் கிடைக்கும். அதன் பின்னர் தேவையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும். கர்ப்பமடைவதைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளையும் முன்னெடுக்க முடியும்.

சம்பவம் இடம்பெற்று முதல் 24 அல்லது 48 மணித்தியாலங்களுக்குள் வருகை தரும் பட்சத்தில், நீதிமன்றம், மருத்துவர்கள் அது தொடர்பான தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வார்கள். ஆனால், அவர்களுடன் சம்பந்தப்பட்ட சிறுமிகள் தொடர்புகளைப் பேணுகின்றமையால் பல சம்பவங்கள் இடம்பெறுகின்றன. இதனால், அவர்கள் அவற்றை மறைத்து காலம் செல்லும்போதே அறிந்துகொள்ள முடிகின்றதென்றும் அவர் குறிப்பிட்டார்.

இலங்கையிலுள்ள சட்டத்தின் பிரகாரம், குழந்தைகள் கர்ப்பமடைந்தால், தாயின் உயிருக்கு ஆபத்து ஏற்படாத வகையில் தவிர்த்து, கர்ப்பத்தைக் கலைப்பதற்கு சட்டத்தின் இயலுமை இல்லை.

நாட்டில் தற்போது பதிவாகின்ற சில சம்பவங்களில், கர்ப்பத்துக்குப் பொறுப்புக் கூறவேண்டிய ஆண்கள், 18 வயதுக்குக் குறைவான சிறுவர்கள் எனவும் பிரதி பொலிஸ் மா அதிபர் ரேணுகா ஜயசுந்தர தெரிவிக்கின்றார்.

அண்மைக்கால தரவுகளின் அடிப்படையில், இவ்வாறான சம்பவங்களில் 14 முதல் 17 வயதுக்கிடைப்பட்ட பெண் குழந்தைகள் உட்படுத்தப்படுகின்றமை அதிகரித்துள்ளதாகவும் அவர் கூறுகின்றார்.

குழந்தைத் தாய்மார்களின் குழந்தைகள் பாதிக்கப்பட்டவர்களாகவே இந்த உலகத்தைக் காண்பதாகக் கூறும் பிரதி பொலிஸ் மா அதிபர், இந்தச் சம்பவங்கள் தொடர்பில் சமூகத்தின் கவனம் திரும்ப வேண்டுமெனவும் கேட்டுக்கொண்டுள்ளார்.

யாரும் இந்த விடயம் தொடர்பில் கலந்துரையாடுவதை நான் காணவில்லை. இவர்களை நீதிமன்றம் வேறு யாருக்காவது ஒப்படைத்துவிடும். பெரும்பாலும் அவர்களின் குடும்பத்திடமே ஒப்படைக்கப்படும். விருப்பமென்றால் வளர்த்துக்கொள்ள முடியும்.

**தெளிவின்மையால் ஏற்படுகின்ற குழந்தை கர்ப்பமடைதல்**

பாலியல் தொடர்பான போதிய தெளிவின்மையே குழந்தைகள் இவ்வாறான பேராபத்துக்கு முகங்கொடுக்கக் காரணமென பிரதி பொலிஸ் மா அதிபர் ரேணுகா ஜயசுந்தர கூறுகின்றார்.

பாலியல் தொடர்பான கல்வி, அது தொடர்பில் காணப்படும் அறிவு மற்றும் தேவையற்ற விதத்தில் கர்ப்பமடைவதைப் பாதுகாத்துக்கொள்வது ஆகியவை குறித்த தெளிவின்மை இதற்கு ஒரு காரணம். பாலியல் உறவைப் பேணும் ஒருவராயின், அவர் கட்டாயமாக கருத்தடை சாதனங்கள் குறித்து அறிந்துகொள்ள வேண்டும். அதற்கு வயது எல்லை எதுவும் கிடையாது

நாங்கள் இந்தச் சம்பங்கள் குறித்துப் பார்க்கும்போது அந்தச் சிறுமிகள் அது தொடர்பில் அறிந்திருப்பதில்லை என்பதை உணர்ந்துகொள்ள முடிகின்றது என்பதை விசாரணை அனுபவங்களினூடாக அவர் குறிப்பிட்டார்.

நாங்கள் இந்தப் பிரச்சினைகள் குறித்து ஆராயும்போது, குடும்பங்களில் காணப்படும் பிரச்சினைகள் குறித்து அதிகளவில் அவதானிக்கின்றோம். பெரும்பாலான சிறார்கள் பாதுகாப்பற்ற முறையில் இருக்கின்றார்கள். தாயும், தந்தையும் பிரிந்துள்ளமை அதற்கான காரணம். இவ்வாறான நிலையிலேயே காதலுக்கு மிகவும் விரைவாக அடிமையாகின்றனர்.

எவ்வாறாயினும், சரியாக இந்த நிலைமைக்கான காரணம் தொடர்பில் கூற முடியாதென பொலிஸ் சிறுவர் மற்றும் மகளிர் துஷ்பிரயோக விசாரணைப் பிரிவின் பிரதானி பிரதி பொலிஸ் மா அதிபர் ரேணுகா ஜயசுந்தர குறிப்பிடுகின்றார்.

**முறையற்ற விதத்தில் அறிவைப் பெறும் குழந்தைகள்**

குழந்தைகளுக்கு பாலியல் துஷ்பிரயோகம் தொடர்பான அறிவைப் பெற்றுக்கொள்வதற்கு உரிய நடைமுறை இல்லாமையால், பாலியல் தொடர்பில் முறைசாரா விதத்தில் அவர்கள் அறிவைப் பெற்றுக் கொண்டுள்ளதாக மாத்தளை மாவட்ட தாய் மற்றும் குழந்தை சுகாதார மருத்துவ அதிகாரி டாக்டர் நுவன் தொடவத்த, பி.பி.சி. சிங்கள சேவையிடம் தெரிவித்துள்ளார்.

பாடசாலைக் கல்வியில் முறையான விதத்தில் இவற்றைக் கற்பிப்பதில்லை. அதனால், முறைசாரா விதத்தில் அவர்கள் இது தொடர்பான அறிவைப் பெற்றுக்கொண்டுள்ளனர். பெரியோரிடம், நண்பர்களிடம், பாலியல் திரைப்படங்களைப் பார்த்து இவ்வாறான அறிவைப் பெற்றுக்கொண்டுள்ளனர். தெளிவின்மை காரணமாகவே குழந்தைகள் கர்ப்பமடைகின்றனர். அவ்வாறானவர்களை நாங்கள் சந்திக்கின்றோம்.

இலங்கையில் 12 முதல் 14 வயது குழந்தைகளுக்குக்கூட இது தொடர்பில் தெரியாது. துஷ்பிரயோகம் செய்பவர்கள் பெரியவர்களாக இல்லாதபோதிலும்கூட, அவர்கள் அது குறித்து அறிந்திருக்க மாட்டார்களென அவர் கூறுகின்றார்.

குழந்தைகள் ஆபத்தில் விழும் சந்தர்ப்பங்கள் தொடர்பான தெளிவு வழங்கப்படுவதில்லையெனக் கூறும் மருத்துவ அதிகாரி தொடவத்த, எதிர்காலத்தைத் திட்டமிடும் வகையிலான கல்வி இல்லாமையானது, பாரிய பிரச்சினை எனத் தெரிவிக்கின்றார்.

துஷ்பிரயோகத்தை ஒருபுறத்தில் வைப்போம். எமது இளைய சமூகத்தில் குறிப்பிடத்தக்களவிலான குழந்தைகள் 18 வயதில் திருமணம் செய்துகொண்டு, 19 வயதில் குழந்தைகளைப் பெற்றுக்கொள்கின்றனர். அவர்கள் தங்களுக்கென ஒரு குடும்பம் என்ற கற்பனை உலகத்துக்குள் விரைவாகப் பிரவேசிக்க முயல்கின்றனர்.

இந்தக் குழந்தைகள் ஆபத்தில் விழக்கூடிய சந்தர்ப்பங்கள் தொடர்பில் தெளிவு வழங்கப்படுவதில்லை. உதாரணமாக சமூக ஊடகப் பயன்பாட்டைக் கூற முடிகின்றது. அவ்வாறான இடத்தில் அதிக ஆபத்து எந்த இடத்தில் இருக்கின்றது. அதை புத்திசாதுரியமாக எவ்வாறு பயன்படுத்துவது என்பவை எந்தவோர் இடத்திலும் கல்வி முறையில் கற்பிக்கப்படவில்லை என அவர் குறிப்பிடுகின்றார்.

குழந்தைகளுக்கு பாலியல் தொடர்பான அறிவைப் பெற்றுக்கொடுக்கும் வயது தொடர்பில் டாக்டர் நுவன் தொடவத்தவிடம் வினவப்பட்டது.

சிறு வயது முதலே, தமது உடலிலுள்ள உறுப்புகள் குறித்த தெளிவு கிடைக்கும் சந்தர்ப்பத்திலேயே, சிறிது சிறிதாக இந்த அறிவை வழங்க ஆரம்பிக்க வேண்டும். மூன்று வயது குழந்தைக்கு மாதவிடாய் சுழற்சி புரிவதில்லை. எனினும், வயிற்றைப் பிடிப்பது, முகத்தைப் பிடிப்பது, மார்பைப் பிடிப்பது புரியும். குழந்தைப் பருவ அபிவிருத்தி நிலையங்களூடாக இது தொடர்பான கல்வியை ஆரம்பிக்க வேண்டுமென அவர் குறிப்பிடுகின்றார்.

குறிப்பிட்ட வேலைத் திட்டத்தினூடாக கல்வி முறைமையில் இவ்வாறான சம்பவங்களைக் குறைத்துக்கொள்ள முடியும் எனவும் அவர் சுட்டிக்காட்டுகின்றார்.

**(நன்றி பி.பி.சி.)**

## அதிக அடக்குமுறைகளை... (07 ஆம் பக்கத் தொடர்ச்சி...

ஆனால் தோட்டத் தொழிலாளர்கள் விடயத்தில் ஆகக் குறைந்தது 1700 ரூபா சம்பளத்தை பற்றி கூட ஏன் அந்த விளக்கத்தை வழங்கவில்லை? இன்று தோட்டத் தொழிலாளர் மக்களின் வாக்குகளை இந்த 159 என்ற எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு மாத்திரமே பயன் படுத்துகின்றீர்கள் என்பது மிகத் தெளிவாக விளங்குகிறது. வர்த்தகர்களுக்கு உதவி புரிகின்ற நடவடிக்கையைதான் நீங்களும் முன்னெடுக்கின்றீர்கள். இதனை மிகவும் கவலையான விடயமாகவே நான் நோக்குகின்றேன்.

இந்த நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்கும் அந்நிய செலாவணியை கொண்டு வருவதற்கும் கடுமையாக பாடுபடும் இனம் தான் எம்முடைய மலையக மக்கள். இந்த மக்களுடைய அடிப்படை தேவைக்கு நீங்களும் துணை நிற்காது இருப்பது மிகவும் கவலை தரும் விடயம். அந்தவகையில் எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலின்போது உங்களுக்கு வாக்களித்து இந்த சபைக்கு அனுப்பிய இந்த மக்களே உங்களை விரட்டி அடிப்பார்கள். நீங்கள் மலையகத்தை இழக்கப்போகின்றீர்கள். இன்று இந்த சபையில் இந்த விடயங்களை தட்டிக் கேட்க கூட முடியாத முதுகெலும்பு இல்லாத பிரதிநிதிகளை தான் தேசிய மக்கள் சக்தியின் ஊடாக இந்த மக்கள் தெரிவு செய்திருக்கின்றார்கள் என்பதை அம்மக்கள் இனங்கண்டிருப்பார்கள். ஏனென்றால் இந்த சபையிலே தங்களுடைய கட்சியினுடைய நிலைப்பாட்டுக்கு மாறாக ஒரு கருத்துக் கூட சொல்ல முடியாத அளவிலேயே இருக்கின்றார்கள்.

ஜீவன் தொண்டமான் அவர்களின் உரையின் ஒரு பகுதியை வாசிக்கின்றேன். இன்று அதிக அடக்கு முறைகளை கொண்ட தொழிற்றுறையாக பெருந்தோட்ட துறை காணப்படுகின்றது. தோட்ட முகாமையாளர்களின் தான்தோன்றித்தனமான அடக்குமுறைகளுக்கு மலையக சமூகம் முகங்கொடுக்க நேரிடுகிறது. தோட்ட முகாமையாளர்கள் அங்கு வசிக்கின்ற தொழிலாளர்களையும் குடியிருக்கும் மக்களையும் அடிமைகளாக நடத்துகின்றனர். இந்த முகாமையாளர்கள் பற்றிய விடயமும் தொடர்ச்சியாக கூறப்பட்டு வரும் விடயம். அதனால் தான் அம்மக்களுக்கு அந்த காணி உரிமை வேண்டும் என பேசுகின்றார்கள். அமைச்சர் சரோஜா இருக்கின்றீர்கள். உங்களது அரசாங்கத்தில் இது பற்றி கூறுங்கள். வாக்கை மாத்திரம் பெற்று இந்த மக்களை ஏமாற்றிவிடாமல் தயவுசெய்து இந்த மக்களுக்காக குரல் கொடுங்கள்.

அதேபோன்று மாகாண சபைத் தேர்தல் பற்றியும் ஒருசில வார்த்தைகள் கூற வேண்டும். கடந்த டிசம்பர் மாதம் தமிழரசுக் கட்சி சார்பில் நாம் ஜனாதிபதியை சந்தித்த போது, மாகாண சபைத் தேர்தலை கடந்த தேர்தல் முறையின் கீழ் நடத்துவதற்கு, கடந்த பாராளுமன்றத்தில் சுமந்திரன் முன்வைத்த தனிநபர் பிரேரணையை நான் கொண்டு வர போகின்றேன் என கூறிய போது, இல்லை அதனை அரசாங்கமே செய்யும் என கூறினார்கள். உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான சகல ஆயத்தங்களும் இடம்பெற்றுள்ளன. ஆனால் ஏன் மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு தயார் நிலைக்கு கொண்டு வருவதற்கு அந்த சட்டத்தை கொண்டுவரவில்லை? இதற்கு நீங்கள் நிச்சயமாக பதில் கூற வேண்டும்.

அதேபோன்று கோடீஸ்வரன் தொடர்ச்சியாக கடந்த நான்கு மாதங்களாக கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தை பற்றி எத்தனையோ தடவை கேள்வி கேட்டிருக்கிறார். இதுவரைக்கும் ஒரு பதில் இல்லை. இந்த அம்பாறை மாவட்டத்தில் கல்முனையில் இருக்கின்ற தமிழ் மக்கள் இதனை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். உங்களுடைய அரசாங்கத்தினால் இதனை செய்ய முடியாது. செய்ய முடியாவிடின் பதிலையாவது கூறுங்கள்.

அதேபோலதான் கடந்த அரசாங்கத்தின் காலப்பகுதியில் சில அதிகளவான சனத்தொகை கொண்ட பிரதேச செயலகங்களை இரண்டாக பிரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. குறிப்பாக மட்டக்களப்பிலே களுவாஞ்சிக்குடி பிரதேச செயலகம், செங்கலடி பிரதேச செயலகம் கோரைதீவுபற்று பிரதேச செயலகம். இந்த விடயத்திலும் அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும் என கோரிக்கை விடுக்கிறேன். அத்துடன் தோட்டத் தொழிலாளர்கள் குறித்து ஒரு நேர்மையான தீர்மானத்தை எடுக்க முடியாவிடின் அந்த மக்களுக்கு ஆகக்குறைந்தது உண்மையையாவது கூறிவிடுங்கள் என கேட்டுக் கொள்கிறேன் என்றார்.

## இலங்கை காப்புறுதி (SLIC Life) நிறுவனம் Suba Pathum புலமைப்பரிசில்களுக்கான விண்ணப்பங்களை கோருகிறது

இலங்கை காப்புறுதி நிறுவனமான இலங்கை காப்புறுதி ஆயுள் நிறுவனம் (SLIC Life ) , நாட்டின் எதிர்கால சந்ததியினரின் மேம்பாட்டுக்கு தொடர்ந்து பங்களித்து வருகிறது. மிகவும் இலாபகரமான அரசுக்கு சொந்தமான நிறுவனங்களில் ஒன்றான, SLIC Life) நிறுவனம் ஒரு பொறுப்பான நிறுவனமாக உள்ளது.

2014 ஆம் ஆண்டில், நாடு முழுவதும் உள்ள அதன் ஆயுள் அங்கத்தவர்களின் குழந்தைகளுக்காக இலங்கை காப்புறுதி நிறுவனம் (SLIC Life) Subapathum புலமைப்பரிசில் திட்டத்தை SLIC Life நிறுவனம் தொடங்கியது. இந்நிறுவனம் அன்று முதல் இன்று வரை எடுத்த முயற்சியின் பயனாக ரூ. 200 மில்லியனுக்கும் அதிகமான பெறுமதியான 2,000 க்கும் மேற்பட்ட புலமைப் பரிசில்களை வழங்கியுள்ளது.

இந்த ஆண்டு புலமைப்பரிசில் திட்டம் தரம் 05 புலமைப்பரிசில், க.பொ.த. சாதாரண தர மற்றும் க.பொ.த. உயர் தர தேர்வுகளில் சிறந்து விளங்கிய 225 மாணவர்களுக்கு வெகுமதியளிக்கும். மூன்று தேர்வுகளிலிருந்தும் தலா 75 முதல் தரவரிசை பெற்ற மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

தரம் 05 புலமைப்பரிசில், க.பொ.த. சாதாரண தர மற்றும் க.பொ.த. உயர்தரத் பரீட்சைகளில் அவர்களின் செயற்றிறனை அடிப்படையாகக் கொண்டு, உதவித்தொகைக்குத் தகுதியான மாணவர்கள், ஐந்து ஆண்டுகளுக்கு ரூ. 20,000, இரண்டு ஆண்டுகளுக்கு ரூ. 40,000 மற்றும் மூன்று ஆண்டுகளுக்கு ரூ. 50,000 நிதி உதவித்தொகையைப் பெறுவார்கள்.




விண்ணப்பங்களை இப்போது SLIC Life வலைத்தளம் மூலம் 2025 மார்ச் 01 முதல் 31 வரை சமர்ப்பிக்கலாம். இந்த உதவித்தொகை திட்டத்துக்கு online விண்ணப்பங்கள் மட்டுமே பரிசீலிக்கப்படும். மேலதிக தகவல்களுக்கு, www.sliclife.com இல் உள்ள SLIC Life அதிகாரப்பூர்வ வலைத்தளத்தைப் பார்வையிடவும் அல்லது 1377 ஐ அழைக்கவும்.

# பொலிஸாருக்கே டிமிக்கி விடும் தேசபந்து





எம்.எஸ்.அமீர் ஹுசைன்

நீதிமன்ற வளாகத்துக்குள் வைத்து கனேமுல்ல சஞ்சீவ சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பாக சூத்திரதாரி என்று கருதப்படும் பெண் செவ்வந்தி 2025.02.19ஆம் திகதியிலிருந்து தேடப்பட்டு வருகின்றார். அவரை தேடிக் கண்டுபிடிக்க 12 பொலிஸ் குழுக்களை பொலிஸ் குற்றத்தடுப்புப் பிரிவு நியமித்திருக்கின்றது. அவர் டுபாய்க்கு தப்பிச் சென்றுவிட்டாரா அல்லது குற்றச்செயலின் பின்னாலிருந்து செயற்படும் பாதாள உலகக் கோஷ்டியால் கொல்லப்பட்டாரா? என்ற கேள்விகள் எழுந்துள்ளன. இலங்கைக்குள் இவ்வளவு நாள் தேடியும் கிடைக்காததால் சில நேரங்களில் இந்தியாவுக்குச் தப்பிச் சென்றுவிட்டாரா? என்ற ஊகங்களும் எழுந்திருக்கின்றன.

இந்நிலையில், மற்றொரு குற்றச்செயலுடன் தொடர்புபட்டதாக மாத்தறை நீதிவான் நீதிமன்ற உத்தரவுக்கமைய முன்னாள் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோனையும் பொலிஸார் தேடி வருகின்றனர். பல பொலிஸ் குழுக்களை நியமித்து முன்னாள் பொலிஸ் மா அதிபரைத் தேடும் குற்றத் தடுப்புத் திணைக்களப் பிரிவு பொலிஸார், அவர் வசித்து வந்ததாகக் கருதப்படும் ஹோகந்தர மற்றும் கிரிஉல்லை ஆகிய இடங்களில் இருக்கும் வீடுகளைச் சோதனை செய்தபோது தேசபந்து அங்கு இல்லை என்று அறிவித்துள்ளனர்.

எனினும், தேசபந்து தென்னக்கோன் சார்பாக அவரது சட்டத்தரணிகள் மேன் முறையீட்டு நீதிமன்றத்தில் மனுவொன்றைத் தாக்கல் செய்து அவரை கைதுசெய்வதைத் தடுப்பதற்கான உத்தரவை 2025.03.01ஆம் திகதி கோரியிருக்கின்றனர். அதனால் கடந்துபோன வார நாட்களுக்குள் அவர் நீதிமன்றத்தில் சரணடையலாம் என்று எதிர்பார்க்கப்பட்டபோதும் அவ்வாறு நடக்கவில்லை.

ஏற்கனவே முன்னாள் ஜனாதிபதியாக இருந்த ரணில் விக்கிரமசிங்க காலத்தில் பல குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டு அவர் மீது கடுமையான அதிருப்திகள் வெளிப்பட்டிருந்த நிலையில், தேசபந்து தென்னக்கோன் பொலிஸ் மா அதிபராக நியமிக்கப்பட்டார். தற்போது இந்தப் பிடிவிறாந்து உத்தரவு வெளியாகியிருக்கின்றது. அதேநேரம் முன்னாள் பொலிஸ் மா அதிபருக்கு மறைந்திருப்பதற்காக புகலிடம் கொடுப்பவர்களுக்கு எதிராகவும் குற்றவியல் தண்டனை சட்டக் கோவையின் அடிப்படையில் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் 2025.03.05ஆம் திகதி குறிப்பிட்டார்.

2024.12.31ஆம் திகதி வெலிகம பிரதேசத்தில் ஹோட்டலொன்றில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் உயிரிழந்த சம்பவம் தொடர்பான மரண விசாரணை அறிக்கை 2025.02.27ஆம் திகதி வெளியாகியிருக்கின்றது.

இந்த மரண விசாரணை அறிக்கையின் படி மரணமடைந்த கான்ஸ்டபிள் கொல்லப்பட்டார் என்ற அடிப்படையில் அது ஒரு குற்றச்செயல் என்ற வரையறையின்படி மாத்தறை நீதிவான் நீதிமன்றம் முன்னாள் பொலிஸ் மா அதிபர் மீது குற்றச்சாட்டை முன் வைத்து அவரை கைதுசெய்து நீதிமன்றத்தின் முன்னிலையில் ஆஜர்படுத்த உத்தரவிட்டிருக்கின்றது. இந்தச் சம்பவத்துடன் மேலும் 07 பேர் சம்பந்தப்பட்டிருப்பதாக மன்று அறிவித்திருக்கின்றது. அவர்கள் அனைவரும் கைது செய்யப்பட வேண்டுமென்ற உத்தரவும் நீதிமன்றம் மூலம் விடுக்கப்பட்டிருக்கின்றது.





இவ்வளவு நாள் தேடும் அளவுக்கு பொலிஸ் மா அதிபர் எங்கே தலைமறைவாகியிருக்கின்றார்? அவர் வெளிநாடு செல்ல முடியாதபடி வெளிநாட்டுத் தடை விதிக்கப்பட்டு கடவுச்சீட்டையும் தடைசெய்ய நீதிமன்றம் உத்தரவிட்டிருக்கின்றது. அவ்வாறாயின் முன்னாள் பொலிஸ் மா அதிபர் மற்றுமொரு கடவுச்சீட்டின் மூலம் போலியான பெயரைப் பயன்படுத்தி நாட்டைவிட்டு ஓடிவிட்டாரா? எவ்வாறாயினும் முன்னாள் பொலிஸ் மா அதிபர் ஒருபோதும் பாதுகாப்பில்லாத நிலையில் இருந்திருக்க முடியாது. அவர் பொலிஸ் பாதுகாப்புடன்தான் எங்காவது இருந்திருக்க வேண்டும். அவ்வாறாயின், அவர் இருந்த இடத்தைப் பொலிஸார் நன்கு அறிந்திருக்க வேண்டும்.

அப்படியானால் பொலிஸாருக்கு அவரை கைதுசெய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதில் நிறைய சிக்கல்கள் இருக்கின்றன என்று சிந்திக்கவேண்டியிருக்கின்றது. ஏற்கனவே குறித்த சம்பவம் நிகழ்ந்தபோது வெலிகம பகுதி பொலிஸ் பொறுப்பதிகாரிக்கு குறிப்பிட்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பான பதிவுகளை மாற்றமான முறையில் இவர்கள் குற்றத்தின் பிடியில் சிக்காதவாறு பதிவுசெய்யுமாறு அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டபோதும் அப்பிரதேச பொலிஸ் பொறுப்பதிகாரி அவ்வாறு செய்யவில்லை. அவர் மிகவும் நேர்மையாகவும் வீரத்துடனும் நடந்துகொண்டுள்ளார் என்றும் அறிய முடிகின்றது. இவ்வாறானதொரு நிலையில், பொலிஸ் மா அதிபரொருவர் பொலிஸ் திணைக்களத்துக்கும் சட்டத்துறைக்கும் டிமிக்கி விடும் நிலை ஏற்பட்டிருக்கின்றது. மறுமுனையில் செவ்வந்தி என்ற ஒரு சாதாரண பெண்ணைத் தேடிவருகின்றனர்.

எப்படியோ நீதிமன்றமும் பொலிஸ் திணைக்களமும் பல சவால்களைச் சந்தித்து வரும் காலமாக மாறியிருக்கின்றது. ஏற்கனவே சட்டத்தின் ஆட்சி தொடர்பாக ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க சட்ட மா அதிபர் தொடர்பாகவும் அதிருப்தி வெளியிட்டிருந்தார். இதற்கிடையில் கிழக்கு மாகாணத்தில் இஸ்லாமிய அடிப்படைவாத மற்றும் பயங்கரவாதக் குழுக்களின் செயற்பாடுகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக புலனாய்வுத் துறையினருக்குத் தகவல் கிடைத்திருப்பதாக அண்மையில் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க பாராளுமன்றத்தில் குறிப்பிட்டதோடு, அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில் அண்மையில் குறிப்பிட்டார்.

ஏற்கனவே இவ்வாறாக புதிதாக இப்படியானதொரு கதையை வெளியிட்டிருப்பதன் மர்மம் என்ன என்ற கேள்வி எழுகின்றது. தற்போது உலகம்பூராகவும் உள்ள முஸ்லிம்கள் புனித ரமழான் மாதத்தை அனுஷ்டித்து வருகின்றனர். இலங்கை வாழ் முஸ்லிம்களும் நோன்பிருந்து ஏனைய நாட்களைவிட அதிகமாக இஸ்லாமிய சன்மார்க்க செயற்பாடுகளில் ஈடுபட்டு வரும் காலமாக புனித ரமழான் மாதம் இருந்து வருகின்றது.

பகல் முழுவதும் நோன்பிருந்து இரவு நேரத்தில் பள்ளிவாசல்களில் சன்மார்க்கக் கிரியைகளுக்காகக் கூடுகின்றனர். இரவுநேரத் தொழுகை மற்றும் சன்மார்க்க உபன்னியாசங்கள் நடத்தப்படுகின்றன. இத்தகைய நடவடிக்கைகளுக்கு ஏதாவதொரு வகையில் முட்டுக்கட்டை போடும் தந்திரோபாயமாக இத்தகைய இஸ்லாமிய பயங்கரவாத புரளி இருக்குமோ என்ற சந்தேகங்களும் இடம்பெற்று வருகின்றன.

அண்மையில் சிறையிலிருந்து பிணையில் வெளிவந்துள்ள பொது பலசேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலபொட அத்தே ஞானசார தேரரும் இதே கதையைக் கட்டவிழ்த்துவிட்டுள்ளார். 2015ஆம் ஆண்டிலிருந்து கூறிவரும் அதே கதையை மீண்டும் கூற ஆரம்பித்துள்ளார். இந்த விடயங்களை மூன்று செய்தியாளர் மாநாடுகள் மூலம் கூறியதோடு, சில தினங்களுக்கு முன்னர் அஸ்கிரிய மல்வத்து பீடங்களுக்குச் விஜயம் செய்து அங்கு மகா நாயக்க தேரர்களுக்கு முழந்தாளிட்டு வணங்கிய பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில், மீண்டும் இனவாதத்தைக் கக்கும் வகையில் கருத்துகளை வெளியிட்டுள்ளார். முஸ்லிம்கள் தொடர்பாக பூசி மெழுகி நல்லவர்கள் என்றும் ஒருசிலர் இருக்கின்றார்கள். அவர்களே பயங்கரவாதிகள் என்றும் தீவிரவாதிகள் என்றும் பறைசாட்டியுள்ளனர்.

அத்துடன், இஸ்லாமிய பாடநூல்கள் சிலவற்றைக் காட்டி அவற்றில் குர்ஆனுக்கு மாற்றமான விடயங்கள் இருக்கின்றன. அவை பற்றி அரசு கவனம் செலுத்த வேண்டுமென்றும் இந்த அரசாங்கம் இத்தகைய தீவிரவாத நடவடிக்கைகள் தொடர்பாக அவதானமாக இருக்க வேண்டுமென்றும் எச்சரிக்கை விடுத்துள்ளார். மறுபுறமாக கிறிஸ்தவ சமூகம் மீதும் சேறு பூசி கிறிஸ்தவ போதகர் சார்ள்ஸ் தோமஸ் மீதும் கடுமையான குற்றச்சாட்டுகளை ஞானசார தேரரது குழுவினரும் லங்கா ஜனதா கட்சியின் தலைவர் அக்மீமன தயாரத்ன தேரர் மற்றும் தேசிய மகளிர் கூட்டணியினர் முன்வைத்துள்ளனர்.

போதகர் சார்ள்ஸ் அரச ஆதரவில் பாடசாலைகளில் பிரசாரங்களை மேற்கொண்டு வருவதன் மூலம் சிங்கள பௌத்த சமூகத்தைச் சேர்ந்த பிள்ளைகள் மூளைச்சலவை செய்யப்படுகின்றனர். அவரது பிரசாரங்களை உடனடியாக நிறுத்த நடவடிக்கை எடுக்காவிட்டால் தாம் முன்வந்து நிறுத்த நேரிடும். அப்போது வீணான பிரச்சினைகள் வரலாம் என்று அக்மீமன தயாரத்ன தேரர் உட்பட இந்தக் குழுவினர் எச்சரிக்கை விடுத்துள்ளனர். அத்துடன், ஐக்கிய அமெரிக்க உதவித் திட்டமான (USAID) மீதும் இவர்கள் பழி சுமத்தி வருகின்றனர்.





இந்நிலைமைகளை அவதானிக்கும்போது ஏதோ நாட்டுக்கு மீண்டும் கெட்ட சகுனம் பிறக்கின்றது என்ற மோசமான சமிஞ்ஞை வெளிப்படுகின்றது. தேர்தல் காலமும் நெருங்கி வருவதால் இவர்கள் நாட்டில் ஒருவிதமான பழைய சாயலிலான மதவாத, பேரினவாத, இஸ்லாமிய பயங்கரவாத, அடிப்படைவாத பீதியை கிளப்பில் மக்கள் மத்தியில் அமைதியின்மைக்குத் தேவையான சூழ்நிலையை உருவாக்கி வருகின்றனர் என்பது நன்றாகத் தெரிகின்றது. இத்தகைய செயற்பாடுகள் மீது அரசு கவனம் செலுத்தி உரிய நடவடிக்கை எடுக்காவிட்டாலும் சட்ட ஏற்பாடுகளின் அடிப்படையில் சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் கவனம் செலுத்துவது மிகவும் சிறந்ததும் மதிநுட்பமுமான வழிமுறையாகும்.

ஏற்கனவே இந்த ஞானசார தேரர் கங்கொடவில நீதிமன்றத்துக்குள் பலவந்தமாக புகுந்து குழப்பம் விளைவித்து நீதிமன்றத்தை அவமதிக்கும் வகையில் நடந்துகொண்டமைக்காக 06 வருடங்களுக்கு கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. ஆனாலும் பின்னர் அப்போதைய ஜனாதிபதியாக இருந்த மைத்திரிபால சிறிசேனவின் தயவில் வெளியே வந்தார். அதனைத் தொடர்ந்து இஸ்லாமியர்களை மிக இழிவுபடுத்தி இஸ்லாம் ஒரு புற்றுநோய் என்றும் மதக் கலவரங்களைத் தூண்டும் வகையிலும் நடந்துகொண்டார் என்ற அடிப்படையில் 06 மாத கால சிறைத்தண்டனைக்கு உள்ளாகி தற்போது பிணையில் வெளியே வந்துள்ளார்.


இருந்தாலும் மீண்டும் அதே வழியில் பயணத்தை ஆரம்பித்திருப்பது ஆபத்தானதாக இருக்கின்றது. அதனால் இத்தகைய இன, மத, நல்லிணக்கத்தைத் தூண்டி மதங்கள் மீது அவப்பெயரை ஏற்படுத்தும் வகையில் செயற்பட முடியாதவாறு சட்டத்தின் பிரிவுகளில் இருக்கின்ற வரப்பிரசாதங்களைப் பயன்படுத்தியே தடுப்பு நடவடிக்கைகளைக் கையாள வேண்டும். அரசியலமைப்பின் பிரிவு 10, பிரிவு 15 குற்றவியல் தண்டனைச் சட்டக் கோவையின் பிரிவுகள் சில, ஐ.சீ.சீ.பி.ஆர். (ICCPR) என்று சிவில் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச சாசனத்தின் பிரிவுகள் ஆகியவற்றின்கீழ் இத்தகையவர்களின் போக்குகளைக் கட்டுப்படுத்த வழிமுறைகள் உள்ளன. அதனால் அவற்றை சமாதானம், சகவாழ்வு, மத நல்லிணக்கம், நாட்டில் சட்டம் ஒழுங்கை ஆதரித்து நிம்மதியாக வாழ விரும்பும் சமூகத்தின் அங்கத்தவர்கள் என்ற வகையில் அதற்காக ஈடுபடக்கூடிய சிவில் சமூக பிரதிநிதிகள் முன்வந்து தேவையான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும்.

# நந்தவனம் பௌண்டேசனால் சாதனைப் பெண்களுக்கு கௌரவம்

உலகம் வேகமாக நவீனமயமாகி வருகிறது. இதற்குப் பெண்களின் பங்களிப்பும் மிக முக்கியமானதாகும். ஆனால், பெண்களுக்கான முக்கியத்துவம் முழுமையாகக் கொடுக்கப்படுகிறதா என்ற கேள்வியையும் புறந்தள்ளிவிட முடியாது. எவ்வளவு நெருக்கடிகள் வந்தாலும் இன்றையப் பெண்கள் தங்களின் தனித்துவமான திறமையால் பல துறைகளில் முன்னேறி வருகின்றனர்.

ஆட்சியதிகாரம், கல்வி, மருத்துவம், சட்டத்துறை, தொழில் துறை என பெண்கள் தங்கள் தலைமையிலான பல முன்னெடுப்புகளால் வெற்றிபெற்று வருகிறார்கள். உழைக்கும் பெண்களைக் கொண்டாட வேண்டியது முதல் கடமையாக எடுத்துக்கொள்ள வேண்டும். ஆண்களுக்கு நிகராக பெண்களின் திறமையும் மதிக்கப்பட வேண்டும் என்பதற்காகவே ஆண்டுதோறும் மகளிர் தினத்தில் பெண்களை கௌரவித்து வருகிறோம்.








கொண்டாட்டத்தோடு நின்று விடாமல் அவர்களின் திறமைகளை மதித்து ஊக்கப்படுத்த வேண்டும் என்பதற்காக தமிழ்நாட்டில் திருச்சியிலிருந்து இயங்கிவரும் நந்தவனம் பௌண்டேசன், லிம்ரா பேக்ஸ் பிரைவேட் லிமிடெட் அனுசரணையுடன் சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு சர்வதேச அளவில் பல துறைகளில் சாதித்துவரும் பெண்களைத் தேர்ந்தெடுத்து சாதனைப் பெண்கள் என்ற விருது வழங்கிக் கௌரவப்படுத்தி வருகிறது.

இதற்கிணங்க 2025ஆம் ஆண்டுக்கான சாதனைப் பெண்கள் விருது வழங்கும் விழா இன்று (09) சென்னை அரும்பாக்கத்திலுள்ள விஜய் பார்க் ஹோட்டலில் நடைபெறவிருக்கிறது.

இதன்போது இலங்கை, மலேசியா மற்றும் பின்லாந்து போன்ற நாடுகளிலிருந்தும் கேரளா மற்றும் தமிழ்நாட்டின் பல மாவட்டங்களிலிருந்தும் மொத்தம் 25 சாதனைப் பெண்களைத் தெரிவுசெய்துள்ளதாக நந்தவனம் பௌண்டேசன் தலைவர் நந்தவனம் சந்திரசேகன் தெரிவித்துள்ளார்.

சென்னையில் நடைபெறும் விருது வழங்கும் விழாவில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன ஆலோசகர் புரவலர் ஹாஷிம் உமர், இலங்கை தினகரன் - வாரமஞ்சரி பிரதம ஆசிரியர் தே. செந்தில் வேலவர், இலங்கை வீரகேசரி பிரதம ஆசிரியர் ஸ்ரீகஜன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொண்டு சாதனைப் பெண்களுக்கு விருதுகள் வழங்கி கௌரவிக்கவுள்ளனர்.




# ‘வாதங்களை மேவிய எண்ணங்கள்’

## ஒரு பத்திரிகை உருவாக்கிய எழுத்தாளனின் கதை

### – கூறுகிறார் நூலாசிரியர் தினேஷ் ரவிச்சந்திரராஜா



***ப**குத்தறிவும் கற்பனையுமே மனிதனை விலங்கிலிருந்து வேறுபடுத்துகின்ற சிறப்புக் குணங்கள். நாள்தோறும் வளர்ந்துகொண்டே இருப்பதுதான் அறிவு. யாரால் சொல்லப்பட்டாலும் அதன் மெய்ப்பொருள் காணும் திறனையே அறிவு என்கிறோம்.*

*வெள்ளையனின் அடிமைச்சிறையிலிருந்து நம்நாடு விடுதலை பெற்று 77ஆண்டுகள் நிறைவடைந்துள்ள நிலையில், இன்றும் பல தடங்கள் மாறுபடாது மற்றுமொரு வடிவில் பின்பற்றிக்கொண்டுதான் இருக்கின்றன. இதனை எவ்வாறு களைவது எனுமிடத்து எமக்குள் பல்வேறு கேள்விகளும் குழப்பங்களும் ஏற்படுகின்றதல்லவா?*

***இவ்வாறு நம் எண்ணங்களில் தோன்றும் கேள்விகள், குழப்பங்கள், அதற்கான தீர்வுகளை தன் வாழ்க்கை அனுபவத்தின் பிரவாகமாக ‘வாதங்களை மேவிய எண்ணங்கள்’ எனும் நூலினூடாக எடுத்தியம்பியுள்ளார் நூலாசிரியர் தினேஷ் ரவிச்சந்திரராஜா.***

***‘நூல்’ குறித்து நூலாசிரியர் ‘தமிழன்’ வாரவெளியீட்டுடன் பகிர்ந்துகொண்ட விடயங்கள் வருமாறு:***

‘‘நான் தினேஷ் ரவிச்சந்திரராஜா. நான் பிறந்து வளர்ந்தது கொழும்பு வாழைத்தோட்டத்தில்தான். எனது ஆரம்பக் கல்வியை கொழும்பு -12, அல்-ஹிக்மா கல்லூரியில் கற்றேன். தரம் - ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் மாவட்ட மட்டத்திலும் தேசிய மட்டத்திலும் நல்ல பெறுபேற்றைப் பெற்றதால் கொழும்பு சேனாநாயக்க கல்லூரியில் கல்வியைத் தொடர்வதற்கு வாய்ப்புக்கிட்டியது. எனது தந்தை சிறைச்சாலை பாதுகாவலராக (ஜெய்லர்) பணியாற்றிய அதேவேளை, எனது தாய் வீட்டுப் பணிகளைக் கவனித்துக்கொண்டு பகுதிநேர வகுப்புகளையும் முன்னெடுத்துச் சென்றார்.

பாடசாலைக் கல்வியை நிறைவுசெய்த நான் ரஞ்சன் விஜேரத்ன தேசிய எக்கடமியில் கல்வி கற்றதுடன், அதே எக்கடமியில் ஒருங்கிணைப்பாளராகவும் செயற்பட்டேன். எனக்கு மும்மொழிகளிலும் பேசவும் எழுதவும் வாசிக்கவும் முடியும்.

இந்நிலையில், ஐக்கிய தேசிய கட்சியின் இளைஞர் அணியின் அகில இலங்கை உபதலைவராகச் செயற்பட வாய்ப்புக் கிடைத்தது. அப்போது ஐக்கிய தேசிய கட்சியின் தலைவராக ருவன் விஜேவர்தன செயற்பட்டார். இந்நிலையில், கட்சியின் சமூக வலைத்தளப் பக்கங்கள் அறிமுகப்படுத்தப்பட்டபோது நான் கூடுதலாக எழுதத் தொடங்கினேன்.

தனிப்பட்ட முறையில் நான் கொழும்பு மத்தியில் பிறந்து வளர்ந்த தமிழன். தமிழர்களின் ஆதரவு இருந்த அதேவேளை, ஒரு பக்கம் எனக்கு சிங்கள மக்களின் ஆதரவும் இருந்தது. இந்நிலையில், எனக்கு அரசியலுக்கு வரவேண்டுமென்ற ஆசை ஏற்பட்டது.

நான் தமிழன் என்பதால் தமிழர்களின் வாக்குகள் கிடைக்கப்பெறும். எனினும், சிங்கள மக்களின் வாக்குகளைப் பெறவேண்டுமெனில் சிங்கள வாக்காளர்களைக் கவரவேண்டும். இதனால் நான் சிங்கள மொழியில் எழுதுவதற்கு முடிவு செய்தேன். கொஞ்சம் கொஞ்சமாக எழுதத் தொடங்கினேன். இதுவே பின்னாட்களில் ஆய்வுக் கட்டுரைகளையும் எழுதுவதற்கு வழிகோலிட்டது. இவ்வாறு நான் எழுதும் கட்டுரைகளை எனது முகப்புத்தகத்தில் (பேஸ்புக்) பதிவேற்றினேன். எனது எழுத்தாக்கங்களுக்கு ஏகோபித்த வரவேற்பு கிடைத்தது.

இலங்கையில் முகப்புத்தகத்தில் எழுதிய விடயங்களைப் புத்தகமாக வெளியிட்டவர்கள் அரிது. அந்தவகையில் நான் எழுதிய எழுத்தாக்கங்களைத் தொகுத்து ஒரு புத்தகமாக வெளியிட எண்ணினேன்.

2016ஆம் ஆண்டு குவைத்திலுள்ள இலங்கைத் தூதரகத்தில் பணியாற்றுவதற்காக அப்போதைய அரசால் நான் அனுப்பி வைக்கப்பட்டேன்.

குவைத்திலிருக்கும்போது சுமார் 25 நாடுகளுக்குப் பயணிக்கக்கூடிய வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. இவ்வாறு வெளிநாடுகளுக்குப் பயணிக்கும்போது பார்த்தது - கேட்டது மற்றும் என்னுடைய அனுபவங்களை எழுதினேன். இதற்கு என்னுடைய சமூக வலைத்தளப் பக்கத்தைப் பின்தொடர்பவர்களிடம் நல்ல வரவேற்புக்கிடைத்தது.

நான் இவ்வாறு எழுதுவதற்கு என்னை ஊக்கப்படுத்திய ஒரு விடயம் இருக்கின்றது. நான் பாடசாலைக்குச் செல்லும் காலத்தில் இலங்கையில் வெளியான மூத்த பத்திரிகையான ‘சிந்தாமணி’ தாங்கிவரும் அரசியல் கட்டுரைகளை வாசிப்பதில் அலாதி பிரியம் எனக்கு. அப்போது கட்டுரையாளராகப் பிரபலமாக இருந்த சிவராமின் அரசியல் கட்டுரைகளை விடுவதே இல்லை. அவரின் கட்டுரைகளைத் தேடி வாசிப்பதில் எனக்கு அத்தனை பிரியம். அந்த ஆர்வமே என்னை எழுத்துலகுக்குள் உந்தித் தள்ளியது.

இருந்தும் பின்நாட்களிலேயே நான் எழுதத் தொடங்கினேன். இவ்வாறு நான் எழுதிய உள்நாட்டு, வெளிநாட்டு அரசியல் மற்றும் ஆய்வுக் கட்டுரைகளை எனது முகப்புத்தகத்திலேயே பதிவேற்றம் செய்திருந்தேன். அவ்வாறு நான் எழுதிய கட்டுரைகள் பெரும்பாலும் சிங்கள மொழியிலேயே அமைந்திருந்தன.

என் முகப்புத்தகப் பகுதியைப் பின்தொடர்ந்த அதிகமானோர் எனது சகோதர மொழி சகோதரர்கள் என்பதால் நான் அதிகமான கட்டுரைகளை சிங்கள மொழியிலேயே எழுதினேன். எனினும், தமிழில் எழுதாமலில்லை. தமிழனாக இருந்துகொண்டு தமிழில் எழுதாமல் எப்படி?

அவ்வாறு நான் எழுதிய சிங்கள மொழியில் அமைந்த கட்டுரைகளின் தொகுப்பே இன்று நான் வெளியிட்டுள்ள ‘வாதங்களை மேவிய எண்ணங்கள் (Undisputed Thoughits)’ என்ற சிங்கள மொழில் அமைந்த நூல். இப்புத்தகத்தில் 34 விடயங்களைப் பற்றிய என்னுடைய எண்ணங்களை வெளிபடுத்தியுள்ளேன்.

### நம்மைவிட்டகலா அடிமைத்தனம்

இதில் முதலாவது கட்டுரையாகவுள்ளது ரயில்வே திணைக்களத்தைப் பற்றியது. அதாவது, இலங்கையில் 2018இற்குப் பின்னர் ரயில்வே திணைக்களத்தால் பாரிய ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது. அந்நேரத்தில் ரயில்வே திணைக்களத்தில் இடம்பெறும் நிர்வாகக் குறைபாடுகள் குறித்ததான அந்தக் கட்டுரை அமைந்திருந்தது.

வெள்ளையர்கள் எங்கள் நாட்டை அடிமையாக வைத்திருந்தபோது அவர்களே எங்களுக்கு முதலாவது ரயிலை அறிமுகப்படுத்தினர். அப்போது வெள்ளையர்களே எஞ்சின் ட்ரைவர்களாகவும் இருந்தனர். அப்போது அவர்கள் கையிலொரு பெட்டியொன்றை கொண்டுவருவர். அவர்கள் ரயில் எஞ்சினிலிருந்து இறங்கியதும் 50 - 100 மீற்றர் தூரத்திலேயே அவர்களின் அலுவலகம் இருக்கும். எனினும், அவர்கள் அந்தப் பெட்டியை எடுத்துச் செல்வதில்லை. மாறாக, தங்களின் அடிமைகளாக வைத்துள்ளோரின் கைகளில் அதனைக் கையளித்துவிட்டுச் செல்வர். அப்போது அந்த அடிமைகளுக்கு சிறியளவிலான ஒரு சதமோ அல்லது இரண்டு சதமோ கொடுத்துவிட்டுச் செல்வர். அவர்கள் அவ்வாறு பணம் வழங்குவதற்குக் காரணம், தாங்கள் மேலாண்மையாளர்கள் என்றும் பணம் பெறுவோர் அடிமையென்றும் காட்டுவதற்குமேயாகும். இந்த நடைமுறையை வெள்ளையர்கள் இலங்கைக்கு நடைமுறைப்படுத்தியது முதல் இலங்கை சுதந்திரம் பெறும் வரை இருந்து வந்தது. நாடும் சுதந்திரம் பெற்றது. வெள்ளையர்களும் வெளியேறிவிட்டனர்.

எனினும், வெள்ளையர்களின் அந்தப் பணம் வழங்கும் நடைமுறையை நான் குறித்த கட்டுரையை எழுதும் வரை அப்படியே பின்பற்றி வந்தனர். இதுபோன்ற பல விடயங்களை நாம் துடைத்தெறிய வேண்டுமென்பதே எனது எண்ணம். அதனையே எனது நூலில் குறிப்பிட்டுள்ளேன்.

### அமெரிக்க – கனடா முறுகல்

அதேபோன்று சர்வதேச அரசியல் பக்கம் சென்றால் அமெரிக்காவின் அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ட்ரம்ப் வெற்றிபெறுவார் என்றும் கனேடிய பிரதமர் ஜஸ்டீன் ட்ரூடோ தேர்தலில் தோற்பார் என்றும் எனது ஆய்வு கட்டுரையில் தெரிவித்திருந்தேன். இந்நிலையில், அமெரிக்காவின் ஜனாதிபதியாக ட்ரம்ப் மீண்டும் ஆட்சிப்பொறுப்பை ஏற்றுக்கொண்டுள்ளார். எதிர்வரும் கனடா தேர்தலில் அந்நாட்டுப் பிரதமர் ட்ரூடோ தோல்வியடையும் நிலை உருவாகியுள்ளது.

மற்றுமொரு கட்டுரையில் கனடாவுக்கும் அமெரிக்காவுக்கும் எப்போதாவது யுத்தமொன்று மூளுமெனத் தெரிவித்திருந்தேன். அதுவும் தற்போது இடம்பெறும் சாத்தியக்கூறுகள் தென்படுகின்றன. அதாவது, அமெரிக்க ஜனாதிபதியாக தற்போது பொறுப்பேற்றுக்கொண்டுள்ள ட்ரம்ப் கனடாவை மற்றுமொரு மாகாணமாக இணைத்துக்கொள்ளவுள்ளதாகத் தெரிவித்து வருகிறார்.

### அதுகுறித்து அன்றே கூறினேன்...

அதேபோன்று இலங்கையில் கோட்டாபய ராஜபக்‌ஷவின் ஆட்சிக்காலத்தில் இடம்பெற்ற ‘அரகலய’வுக்குப் பின்னர் பெற்றோல் விலை அதிகரித்தது. இந்நிலையில், நான் எழுதிய ஒரு கட்டுரையில் நாடு பொருளாதார ரீதியில் வீழ்ச்சி காணப் போகின்றது. அப்போது இலங்கையை இரண்டு தடவைகள் காப்பாற்றிய ஒருவரே ஜனாதிபதியாக வரவேண்டி வரும் எனத் தெரிவித்திருந்தேன்.

இக்கட்டுரை எழுதிய நான் இலங்கையைவிட்டு வெளிநாட்டுக்குச் சென்றுவிட்டேன். 2021ஆம் ஆண்டுதான் இக்கட்டுரையை எழுதியிருந்தேன். அதேபோன்று 2022ஆம் ஆண்டு அவர் வந்துதான் நாட்டைக் கொண்டுசென்றார்.

### இலங்கையில் அதிவேக வீதிகளுக்கு வித்திட்ட பாகிஸ்தான் யுத்தம்

அதேபோன்று இந்திய - பாகிஸ்தான் யுத்தம்தான் இலங்கையில் அதிவேக வீதிகள் வருவதற்குக் காரணமாகுமென எழுதியிருந்தேன். அதற்கான அரசியல் காரணங்கள் என்ன? சிறிமா என்ன செய்தார்? இதனால் இலங்கைக்கு என்னென்ன தாக்கங்கள் வந்தன? என்பது குறித்தான அந்தக் கட்டுரை இலங்கை மக்களிடையே பாரிய வரவேற்பைப் பெற்றது. அரசியல் மட்டுமன்றி சமூக, பண்பாட்டு விழுமியங்கள் குறித்தான என்னுடைய கண்ணோட்டத்தை என்னுடைய எழுத்தாக்கங்களில் வெளிப்படுத்தியுள்ளேன்.

### சிறுவர் துஷ்பிரயோகமும் இளவயது திருமணமும்

அதேபோன்று சிறுவர் துஷ்பிரயோகம், இளவயது திருமணம் போன்ற விடயங்கள் உள்ளடங்கியதான ஓர் எழுத்தாக்கமும் காணப்படுகிறது. இளவயதினர் தங்கள் இருபாலாருக்குமிடையிலான ஈர்ப்பால் காதல் வயப்பட்டு தமது வயதை அறியாது சில தவறுகளைச் செய்து விடுகின்றனர். அவ்வாறான சந்தர்ப்பங்களில் அவர்களை எவ்வாறு கையாள்வது?

இலங்கையில் பெரும்பாலும் சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் இளவயது திருமணம் ஆகிய இரண்டையும் குழப்பிக்கொண்டிருக்கின்றனர். இந்நிலையில், அமெரிக்காவில் இவ்விடயத்துக்கு ஒவ்வொரு மாகாணத்துக்கும் ஒவ்வொரு நீதிமுறைகள் காணப்படுகின்றன. இதற்கு இலங்கையில் எவ்வகையான சட்டதிட்டங்கள் காணப்படுகின்றன. இவை இரண்டையும் ஒப்பிட்டு அந்தக் கட்டுரையை எழுதியுள்ளேன.

அமெரிக்க மாகாணங்களில் குறித்த இருபாலாருக்குமான வயதெல்லையைக் கருத்திற்கொண்டே அவர்களுக்கு தண்டனை வழங்குவதாக அல்லது சீர்த்திருத்தப் பாடசாலைக்கு அனுப்புவதாக என்று தீர்மானிக்கின்றனர்.

இலங்கையில் அவ்வாறு பெண்பிள்ளையொருவருக்கு பிரச்சினையொன்று ஏற்பட்டு அவர் சீர்திருத்தப் பாடசாலைக்கு அனுப்பப்படுவராயின், அப்பிள்ளை இந்த உலகத்துக்கு முகங்கொடுக்க முடியாதவராகிவிடுகிறார். இதற்கு எவ்வாறான மாற்றம் வரவேண்டும். குறித்த அந்த இருபாலாரையும் நாம் எவ்வாறு அணுகவேண்டும் என்பது குறித்தான என்னுடைய கண்ணோட்டத்தை எழுத்துருவில் தெரிவித்துள்ளேன்.

### எகிப்தில் தித்திக்கும் இலங்கை மாம்பழம்

நான் குவைத்திலுள்ள இலங்கைத் தூதரகத்தில் கடமையாற்றியவேளை அங்குள்ள சிறைச்சாலைகளுக்கு வழமையாகச் சென்று வருவதுண்டு. காரணம், அங்குள்ள சிறைகளில் வாடும் இலங்கையர்களைப் பார்வையிடுவதற்காக. இந்நிலையிலுள்ள - அங்கு எகிப்தைச் சேர்ந்த சிறைக்காவலலொருவரின் நட்பு கிடைத்தது.

அதற்கு முன்னர் நான் எகிப்துக்குப் பயணித்து அங்குள்ள பிரம்மாண்ட பிரமிட்டுகளைத் தரிசித்துள்ளேன். இன்னொரு ருசியான தகவல் என்னவென்றால், அங்கு கிடைக்கப்பெறும் மாம்பழங்களை சுவைக்கக் கிடைத்தமையே. ‘வன் ஒவ் தி பெஸ்ட்’ என்பதற்கு அர்த்தத்தை அந்த மாம்பழங்களின் சுவையில் அறிந்தேன. அத்தனை சுவை. கூறும்போதே மனம் ஏங்குகிறது. வாய் உமிழ்கிறது.... கிடைத்தால் சுவைக்க மறந்துவிடாதீர்கள். தற்போது இலங்கையில் விளையும் மாம்பழங்களை எங்களுக்கே சுவைக்கக் கிடைக்காதது துரதிர்ஷ்டமே...

இந்நிலையில், ஒருநாள் நட்பின் அடிப்படையில் குறித்த அந்த சிறைக்காவலரைச் சந்தித்தேன். தேநீர் அருந்துவதற்காக இருவரும் சென்று அலவளாவிக்கொண்டிருந்தபோது அவர், ‘‘உனக்குத் தெரியுமா? உங்களின் நாட்டிலிருந்துதான் (இலங்கையிலிருந்து) எகிப்துக்கு மாம்பழம் தருவிக்கப்பட்டது’’ என்றார்.

எகிப்து ஒரு விவசாய நாடல்ல. இங்கு நூற்றுக்கு தொண்ணூறு வீதம் பாலைவன பிரதேசம். நைல் நதியை அண்டிய (நதியின் ஓரத்தில்) பகுதியில் மாத்திரமே மரங்கள் செழித்து வளர்கின்றன. மா, கொய்யா, பப்பாசி உள்ளிட்ட பலவகையான பழவகைகளும் மற்றும் கரும்பும் செழித்து வளர்கின்றன. நான் அங்கு சென்று என் கண்கூடாகப் பார்த்து வந்தேன். பயிரிடப்பட்டு வருகின்றன.

அதுமட்டுமன்றி நைல் நதி படுகையில் மாத்திரமே விவசாயம் நடைபெறுகிறது. எஞ்சிய அனைத்தும் பாலைவனப் பிரதேசமாகும்.

இதனையடுத்து நான் இதுகுறித்த தேடுதல் வேட்டையைத் தொடங்கினேன். எகிப்து இன்று ரஷ்யா வரை மாம்பழம் ஏற்றுமதி செய்கிறது. ஆனால், எகிப்துக்கு மாம்பழத்தை அறிமுகப்படுத்தியது நமது நாடு (இலங்கை). குவைத்தில் கூட எகிப்தில் விளையும் மாம்பழங்களை சுவைக்கக்கூடிய வாய்ப்புக் கிடைத்தது. அத்தனை சுவை.

எகிப்துக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட நம் நாட்டு மாம்பழம் இன்று அந்நாட்டின் ஏற்றுமதி பொருளாக மாற்றப்பட்டுள்ளது. இது எத்துணை மகத்தான வளர்ச்சி.

இலங்கையில் இன்று எங்காவது நம் நாட்டில் விளையும் நல்ல மாம்பழங்களை சுவைக்க முடிகிறதா?, மருந்துகள் போடப்பட்டு, அதன் இயற்கையான நிறம் மாற்றமடைந்து, சுவையற்ற (பிஞ்சில் பழுத்தது போன்றது) மாம்பழங்களே எமக்குக் கிடைக்கின்றன. இது யாருடைய தவறு? பயிர்ச்செய்கையாளரதா?, விற்பனையாளரதா? அல்லது அரசாங்கத்துடையதா? கேள்விக்கணைகள் நீள்கிறதல்லவா?

தேசியக் கொள்கையொன்று இருக்கவேண்டும். இலங்கையில் தேசியக் கொள்கையொன்று இல்லாததே இதற்கான காரணமென இந்நூலின் ஒரு பகுதியில் தெரிவித்துள்ளேன். இன்று கனடா மர ஏற்றுமதியில் முன்னணி வகிக்கும் நாடு. அந்நாட்டில் மரமொன்று வெட்டப்படுமாயின் எத்தனையோ மரக்கன்றுகள் நடப்படுகின்றன.

இலங்கையில் இதற்கான சட்டங்கள் இருப்பினும் கேட்பாரற்று கிடக்கின்றன உறங்கும் நிலையில் சட்டப்புத்தங்களில். இலங்கையில் தேசிய கொள்கையொன்று இல்லாமையே இதற்கான காரணம் என்கிறார் நூலாசிரியர்.

எகிப்தில் விளையும் இலங்கை மாம்பழங்களின் சுவையைப்போன்று இந்நூலாசிரியர் தினேஷ் ரவிச்சந்திரராஜாவின் ஒவ்வொரு கதைக் கருக்களும் உங்களை எண்ணங்களின் தித்திப்புக்கும் திகைப்புக்கும் வித்திடும் என்ற நம்பிக்கையுடன் விடைபெறுகிறோம்.

***‘வாதங்களை மேவிய எண்ணங்கள்’ வாசிக்க.. சுவைக்க.... உங்கள் கருத்துகளை எம்முடன் பகிர்ந்துகொள்க... நன்றி!!***

கே.சுபானி
Sujanisubani@gmail.com

# ஆட்சிக்கவிழ்ப்பு கதை ஆரம்பம்!

**உமர் அலி உஸ்மான்**

நாட்டில் மாற்றத்தை ஏற்படுத்துவதாகக் கூறி ஆட்சிக்கு வந்தவர்கள் இன்று நாட்டில் எரிபொருள் வரிசையை ஏற்படுத்தி 159 பேர் பாராளுமன்றம் செல்வதற்கு ஆணை வழங்கிய மக்கள் இன்று நிர்க்கதியாகியுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு தெரிவித்துள்ளார்.

இதன்போது, நாட்டில் இன்று எரிபொருள் விநியோகச் செயற்பாடு முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளது எனவும் எரிபொருள் விநியோகஸ்தர்கள் அரசாங்கத்துடன் ஏற்படுத்திக்கொண்ட ஒப்பந்தத்தில் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தலையிட்டுள்ளமையால் இந்த நெருக்கடி ஏற்பட்டுள்ளது எனவும் நாட்டில் தற்போது எரிபொருள் வரிசை காணப்படுகிறது எனவும் சஜித் பிரேமதாச அங்கு மக்கள் மத்தியில் தெரிவித்துள்ளார்.

மேலும், குறித்த விடயம் தொடர்பில் அரசாங்கம் மேற்கொண்ட நடவடிக்கை என்ன எனக் கேள்வியெழுப்பிய சஜித் பிரேமதாச, அரசாங்கம் எரிபொருள் விநியோகஸ்தர்களுடன் உடனடியாகக் கலந்துரையாடி தீர்மானமொன்றுக்கு வரவேண்டும் எனவும் அங்கிருந்து அரசாங்கத்துக்குக் கோரிக்கை விடுத்திருந்தார்.

அவர் இவ்வாறு தெரிவிக்கவும் நாட்டில் எரிபொருள் வரிசை உருவாகவும் காரணமாக இருந்தது பெற்றோலியக் கூட்டுத்தாபனம். எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு வழங்கிவந்த மூன்று வீத தரகுப்பணத்தை உடனடியாக நிறுத்திக்கொண்டதே இப்பிரச்சினைக்குக் காரணமாகும். இதனால் அன்று நள்ளிரவு முதல் எரிபொருள் விநியோகஸ்தர்கள் பெற்றோலியப் பொருட்களை விநியோகிப்பதிலிருந்து விலகுவதாக எரிபொருள் விநியோகஸ்தர்கள் சங்கம் தெரிவித்து தற்போதுள்ள பெற்றோலியப் பொருட்களை மட்டுமே விநியோகித்து வருவதாகவும் எரிபொருள் இருப்புகளுக்கு எந்த ஓடர்களையும் வழங்கப்போவதில்லை என்றும் சங்கம் தெரிவித்திருந்தது.

இதனால் நிறைய எரிபொருள் நிரப்பு நிலையங்கள் ஸ்தம்பித்துப்போனதுடன், எரிபொருள் வரிசையும் நாட்டின் பல பாகங்களிலும் உருவானது. கோட்டா அரசம் கவிழ முதலில் இந்த எரிபொருள் வரிசைதான் காரணமாக இருந்ததை பலரும் அரசாங்கத்துக்கு அடிக்கோட்டிட்டுக் காட்ட ஆரம்பித்தனர்.

மின்சக்தி அமைச்சு எமது நாட்டின் முதுகெலும்பு என்பதுடன், முக்கியமான திணைக்களங்களைக்கொண்ட அமைச்சுமாகும். இந்த அமைச்சின் பணிகள் சிறப்பாக அமைய வேண்டும் என்று பலரும் எதிர்பார்ப்பதுடன், நாட்டு மக்களின் நலனைக் கருத்திற்கொண்டு, நாட்டின் பொருளாதார நிலைமையைக் கருத்திற்கொண்டு இந்த அமைச்சு செயற்பட வேண்டிய தேவையிருக்கிறது. ஏனைய அமைச்சுகளைப்போன்று வெறுமனே வியாபார நிறுவனமாகச் செயற்படாமல் இந்த நாட்டு மக்களின் பொருளாதார நிலைமையைக் கருத்திற்கொண்டு அமைச்சு தனது பணிகளை மேற்கொள்ளவேண்டுமென எதிர்க்கட்சி எம்.பிக்கள் பலரும் பாராளுமன்றத்திலும் குரல் எழுப்பினர்.




கடந்த நாட்களாக ஒரு பெரிய எரிபொருள் பிரச்சினை நாட்டில் உருவாகியது. பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மூன்று வீத தரகுப்பணத்தை விநியோகஸ்தர்களுக்கு நீண்டகாலமாக கொடுத்துவந்தது. அதில்தான் அவர்களது மொத்த செலவினங்களும் அடங்குகின்றன என்பது விநியோகஸ்தர்கள் மூலம் அறியக்கிடைக்கிறது. இந்த 3 வீத தரகுப்பணத்தை சிபெட்கோ நிறுவனம் மாத்திரமல்லாது அமெரிக்கா, அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளின் நிறுவனங்களும் வழங்குகின்றன. எனவே, இவ்வாறான நிலையில் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் திடீரென இவ்வாறானதொரு முடிவெடுத்தமை தவறான தீர்மானமாகும். அவர்களுடன் கலந்துரையாடி இதுதொடர்பில் ஒரு தீர்மானத்துக்கு வந்திருக்க வேண்டுமென ஹிஸ்புல்லாஹ் எம்.பி. பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அதேபோல் வணக்கஸ்தலங்களுக்கு கடந்தகாலங்களில் சூரிய கலம் மூலம் மின்சக்தியை உற்பத்திசெய்ய அனுமதி வழங்கப்பட்டிருந்தது. ஆனால், பள்ளிவாசல் மற்றும் தேவாலயங்களுக்கு வலுசக்தி அமைச்சு மூலமாக இன்னும் அனுமதி வழங்கப்படவில்லை. தற்போதைய சூழ்நிலைகளில் மதஸ்தலங்கள் நிதி நிலைமைகளை மேற்கொள்ள பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குகின்ற சூழ்நிலை காணப்படுகிறது. இதனைக் கருத்திற்கொண்டு மதஸ்தலங்களுக்கு சூரிய மின்கலம் ஊடாக மின்சக்தியைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமெனவும் சூரிய கலம் மூலம் மின்சக்தியை உற்பத்திசெய்யும் நடவடிக்கைகளுக்கு அரசாங்கம் முக்கியத்துவம் கொடுக்கவேண்டுமெனவும் அவரது உரையில் அவர் கேட்டுக்கொண்டார்.


PMD
POLICE MEDIA DIVISION



இந்நிலையில், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் எரிபொருள் விநியோக செயல்முறைக்கு இடையூறு விளைவிப்பதற்காக எரிபொருள் விநியோகஸ்தர்களெனக் கூறிக்கொள்ளும் குழுவொன்று தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர் என்றும் எரிபொருள் விநியோகத்தில் விநியோகஸ்தர்களுக்கு வழங்கப்பட்டு வந்த 3 வீத தரகுப் பணத்தை இரத்துச்செய்ய இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் எடுத்த முடிவு தொடர்பாக எழுந்துள்ள பிரச்சினை காரணமாக எரிபொருள் விநியோகஸ்தர்கள் என்று கூறிக்கொள்ளும் குழு தொடர்பில் முறைப்பாடு கிடைத்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அரசுக்கும் பொதுமக்களுக்கும் இடையூறு விளைவிக்கும் வகையில் இந்தக் குழு செயற்படுவதாக முறைப்பாட்டு மனுவில் கூறப்பட்டுள்ளது. இந்நிலையில், குற்றப் புலனாய்வுப் பிரிவினர் இது தொடர்பான விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாகவும் எரிபொருள் விநியோகத்தைப் பயன்படுத்தி பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுத்தும் நபர்களுக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் பொலிஸார் எச்சரிக்கை விடுத்திருந்தனர்.

அதுமட்டுமன்றி எரிபொருள் விநியோகஸ்தர்கள் சங்கத்தின் துணைத் தலைவர் குசும் சந்தநாயக்க மற்றும் சாந்த சில்வா உள்ளிட்ட பணிப்பாளர்கள் குழுவை கடந்த 04ஆம் திகதி எரிபொருள் விநியோகத்தில் ஏற்பட்ட கோளாறு தொடர்பான அறிக்கையைப் பெறுவதற்காக குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் ஆஜராகுமாறு அழைப்பாணை விடுக்கப்பட்டது. அரசாங்கத்தை அவமானப்படுத்தும் நோக்கில் எரிபொருள் விநியோக நடவடிக்கைகளை சீர்குலைக்க இந்தப் பிரதிநிதிகள் முயற்சிப்பதாக குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கு முறைப்பாடொன்று கிடைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இப்படி பல்வேறு நடவடிக்கைகளின் மத்தியில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அறிமுகப்படுத்திய புதிய விலை நிர்ணய சூத்திரத்துக்கு எரிபொருள் விநியோகஸ்தர்கள் உடன்பட்டுள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

அமைச்சரவை செய்தியாளர் சந்திப்பில் பேசிய நளிந்த ஜயதிஸ்ஸ, இந்த சூத்திரம் இப்போது அமுலில் உள்ளதை உறுதிப்படுத்தினார். விநியோகஸ்தர்கள் சமர்ப்பித்த திட்டங்களை மறு ஆய்வு செய்ய மார்ச் 18ஆம் திகதி மற்றொரு கலந்துரையாடல் திட்டமிடப்பட்டுள்ளதென்றும் எரிபொருள் விநியோகம் தொடர்பாக எந்தப் பிரச்சினையும் இல்லையென்றும் அவர் கூறினார்.

ஆனாலும் அது அவ்வளவு தூரம் உண்மையான நிலைப்பாடாக இல்லை என்பதை அவதானிக்க முடிகிறது. இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு சொந்தமான எரிபொருள் நிரப்பு நிலையங்களை வெளிநாட்டு நிறுவனங்களுக்கு மாற்ற அரசாங்கம் முயற்சிப்பதாகப் பெற்றோலிய விநியோகஸ்தர்கள் சங்கம் கவலை வெளியிட்டுள்ளது. இதற்காக அரசாங்கம் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக அதன் உப தலைவர் குசும் சந்தநாயக்க தெரிவித்துள்ளார்.

இதேவேளை, லங்கா ஐஓசி எரிபொருளின் விநியோகஸ்தர்கள் எரிபொருள் ஓடர்கள் வழங்குவதை நிறுத்த முடிவுசெய்துள்ளனர். அதன் தலைவர் கோசல விதான ஆரச்சி கூறுகையில், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் செல்வாக்கு காரணமாக ஓர் ஓடருக்கு 35,000 ரூபா நஷ்டம் ஏற்படுவதாகவும் அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இதனிடையே, நொச்சியாகம பிரதேசத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, எரிபொருள் விநியோகம் தொடர்பில் எழுந்துள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதில் அரசாங்கத்துக்கு தொலைநோக்குப் பார்வை இல்லையெனக் குற்றஞ்சுமத்தினார். இப்படியான இழுபறி நிலையிலும் அரசியல் பேசுகிறார்களே தவிர, தீர்வை யாரும் முன்வைப்பதாக இல்லை.

ஆனாலும், தற்போதைய கழிவு கொடுப்பனவு நடைமுறையின் கீழ் எதிர்வரும் இரண்டு வாரங்களுக்கு எரிபொருள் விநியோகத்தை மேற்கொள்வதற்கு பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் இணங்கியுள்ளதாக எரிபொருள் நிலைய உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் குமார் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அத்துடன், புதிய கழிவு கொடுப்பனவு சூத்திரத்தில் ஏதேனும் திருத்தங்கள் மேற்கொள்வதற்குப் பரிந்துரை முன்வைக்கப்படுமாயின், அது தொடர்பாக ஆராயப்படுமென்று பெற்றோலியக் கூட்டுத்தாபனத் தலைவர் குறிப்பிட்டதாகவும் அவர் மேலும் சுட்டிக்காட்டினார்.

எரிபொருள் நிலைய உரிமையாளர்கள் சங்கத்தினருக்கும் இலங்கை கனியவள கூட்டுத்தாபனத்தினருக்குமிடையிலான கலந்துரையாடலொன்று கனியவள கூட்டுத்தாபனத் தலைமையகத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. இந்தக் கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிட்ட எரிபொருள் நிலைய உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் குமார் ராஜபக்ஷ இவ்வாறு குறிப்பிட்டார்.

இப்படி எரிபொருளுக்கு பிரச்சினை இருக்கையில், இலங்கை மின்சார சபை கடந்த ஜனவரி மாதம் நாட்டின் மின்சாரக் கட்டணத்தில் திருத்தங்களை மேற்கொண்டிருந்தது. இந்நிலையில், இந்தத் திருத்தத்துடன் மின்சாரம் உற்பத்தி செய்வதற்கான செலவு புதிய கட்டணத்தால் ஈடுகட்டப்படாதென்று சர்வதேச நாணய நிதியம் மதிப்பிட்டுள்ளதாக இலங்கைக்கான சர்வதேச நாணய நிதியத்தின் தலைமை அதிகாரி பீட்டர் ப்ரூயர் ஓர் ஊடக சந்திப்பில் தெரிவித்தார். இந்நிலையில், குறித்த திருத்தத்தால் - மின் உற்பத்திச் செலவுகள் கட்டணத்தால் ஈடு செய்ய முடியாத நிலை உருவாகியுள்ளதாக பீட்டர் புவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எதிர்காலத்தில் இலங்கை மின்சார சபை நட்டமடையக்கூடிய சாத்தியங்கள் மிக அதிகமெனத் தெரிவித்துள்ளார். குறிப்பாக, புதிய கட்டணங்கள் காரணமாக செலவுகளை ஈடுசெய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

(தொடர்ச்சி 18ஆம் பக்கம்)

# பெருந்தோட்டங்கள் மட்டுமல்ல தொழிலாளர்களும் பயனடையும் விதத்தில் அரசாங்கம் செயற்பட வேண்டும்

**மலைவாசன்**

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் முதலாவது வரவு -செலவுத் திட்டம் கடந்த 2025.02.17 ஆம் திகதி ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவினால் சமர்ப்பிக்கப்பட்டது. அந்த வரவு -செலவுத் திட்டத்தில் தோட்டத்தொழிலாளர்களுக்கு நாளாந்த சம்பளமாக 1700 ரூபா வழங்க தோட்ட முதலாளிமார் சம்மேளனத்துடன் பேச்சுவார்த்தை நடத்தி இணக்கம் காணப்பட்டுள்ளதாக வர்த்தக அமைச்சர் வசந்த சமரசிங்க கடந்த 2025.02.18 ஆம் திகதி பாராளுமன்றத்தில் வரவு -செலவுத் திட்டம் சம்பந்தமாக உரையாற்றியபோது குறிப்பிட்டார். ஆனால், தோட்ட முதலாளிமார் சம்மேளனம் தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த சம்பளத்தில் மாற்றம் ஏற்பட்டுள்ளமை குறித்து இதுவரை கருத்துத் தெரிவிக்கவில்லை. உண்மையை உள்ளது உள்ளபடி குறிப்பிடின் தோட்டத் தொழிலாளர்களுக்கு நாளாந்த சம்பளமாக 1700 ரூபா வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டாலும் அந்த தொகை வானளாவ உயர்ந்துவரும் வாழ்க்கைச் செலவுகளை சமாளிக்கக் கூடிய தொகை அல்ல என்பதில் இரு வேறு கருத்துகளுக்கு இடமில்லை.

இன்னொரு விதத்தில் கடந்த கால வரலாற்றை முன்னோக்கி ஆராய்ந்தால் இந்த நாட்டிலுள்ள பெருந்தோட்டங்கள் அரச பொறுப்பில் இருந்த காலத்தில் அரசாங்கத்துக்கு கோடிக் கணக்கான ரூபா நட்டம் ஏற்பட்டது. அந்த நட்டத்தை தவிர்த்து வருமானத்தைப் பெறும் நல்ல நோக்கத்தில் தான் முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாச இந்த நாட்டிலுள்ள தேயிலை, இறப்பர், தென்னை தோட்டங்களை இருபத்திரண்டு கம்பனிகளிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுத்து அதனூடாக அரசாங்கத்துக்கு பெருந்தோட்டங்கள் மூலம் வருமானம் ஈட்ட வழி சமைத்தார்.

ஆனால், சில தோட்டங்கள் இன்னும் அரச பெருந்தோட்ட கூட்டுத்தாபனம், மக்கள் தோட்ட அபிவிருத்தி சபை, எல்கடுவ பிளாண்டேசன் ஆகிய அரச நிறுவனங்களினால் பரிபாலனம் செய்யப்பட்டு வருவதாகவும் இந்த நிறுவனங்கள் மூன்றும் நட்டத்தில் இயங்குவதாகவும் பத்திரிகைகள் வாயிலாக அறியமுடிகிறது.

எனவே வீண் விரயங்களை தவிர்த்து வருமானத்தை ஈட்டும் விதத்தில் செயற்படுவதைக் கொள்கையாகக் கொண்டுள்ள தேசிய மக்கள் சக்தி அரசாங்கம், மேலே குறிப்பிட்டுள்ள அரச நிறுவனங்களிடமிருந்து பெருந்தோட்டங்களை மீளப்பெற்று தனியார் நிறுவனங்களிடம் ஒப்படைக்க துரித நடவடிக்கை எடுத்து அந்தத் தோட்டங்கள் மூலம் அரசாங்கத்துக்கு வருமானத்தை ஈட்ட முன்வர வேண்டும்.

இந்த நாட்டிலுள்ள பெருந்தோட்டங்களை ஆங்கிலேயர்கள் (பிரித்தானியர்கள்) நிர்வகித்த காலகட்டத்தில் அவர்கள் பெருந்தோட்ட எல்லைகளை நன்றாக அறிந்து பெருந்தோட்ட காணிகள் வெளியாரினால் கபளீகரம் செய்யப்படுவதை தடுக்கும் பொருட்டு விழிப்புணர்வு செய்யப்பட்டு பெருந்தோட்ட நிலப்பரப்புகள் இழக்கப்படுவதை தவிர்க்கும் விதத்தில் செயற்பட்டார்கள்.

ஆனால் பிரித்தானியர்களின் காலத்தில் சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்களை காண கிடைக்கவில்லை. ஆனால் இந்த நாட்டிலுள்ள பெருந்தோட்டங்கள் தனியார் கம்பனிகளிடம் அரசாங்கத்தினால் ஒப்படைக்கப்பட்டபோது பெருந்தோட்டங்களின் மாயங்கள் பற்றி கவனத்தின் கொள்ளாது செயற்பட்டதனாலும் தனியார் கம்பனிகள் பெருந்தோட்ட எல்லைகள் குறித்த அவதானத்துடன் செயற்படாததனாலும் பெருந்தோட்டக் காணிகள் வெளியாரினால் அவ்வப்போது கபளீகரம் செய்யப்பட்டதனால் சிறு தேயிலைத் தோட்டங்கள், சிறு இறப்பர் தோட்டங்கள், சிறு தென்னந்தோட்டங்கள் உருவாகின. அதன் மூலம் அரசாங்கத்தினால் ஒப்படைக்கப்பட்ட பெருந்தோட்ட நிலப்பரப்புகள் குறைவடைந்தன.




இந்த நாட்டிலுள்ள பெருந்தோட்டங்கள், கம்பனிகளால் பொறுப்பேற்கப்பட்டதன் பின்பு நாடளாவிய ரீதியில் உள்ள பெருந்தோட்டங்களின் சில பகுதிகள் காடு மண்டிக்கிடப்பதை காணக்கூடியதாக உள்ளது. இதனால் தோட்டத் தொழிலாளர்கள் காலத்துக்குக் காலம் குளவிக் கொட்டு, சிறுத்தைக்கடி ஆகியவற்றினால் பாதிக்கப்பட்டு வருகிறார்கள்.

எனவேதான் 2025ஆம் ஆண்டுக்கான வரவு -செலவுத் திட்டத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து உரையாற்றிய ஜனாதிபதி நாடளாவிய ரீதியில் உள்ள பெருந்தோட்டக் காணிகளில் பயிர்ச்செய்கைக்கு உட்படுத்தாத காணியை தனியாரிடம் ஒப்படைத்து அதன் மூலம் அரசாங்கத்துக்கு வருமானத்தைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கவுள்ளதாக குறிப்பிட்டார்.

இச்சந்தர்ப்பத்தில் அமெரிக்காவின் இலங்கைக்கான தூதுவர் மஹிந்த சமரசிங்க பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சராக செயற்பட்ட காலத்தில் நாடளாவிய ரீதியில் பெருந்தோட்டக் காணிகளில் 35000 ஏக்கர் பயிர்செய்கைக்கு உட்படுத்தாது இருந்ததாக குறிப்பிட்டார்.

தற்போது அந்த எண்ணிக்கையில் மாற்றம் ஏற்பட்டிருக்கலாம். எனவே, தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் இந்த நாட்டிலுள்ள பெருந்தோட்டங்களை நிர்வகிக்கும் தோட்ட முதலாளிமார் சம்மேளனத்துடன் பேச்சுவார்த்தை நடத்தி பயிர்ச்செய்கைக்கு உட்படுத்தாத பெருந்தோட்டக் காணிகளை எந்தெந்த பகுதிகளில் என்னென்ன பயிர்கள் செழிப்பாக வளரக்கூடிய சீதோஸ்ணம் உள்ளதோ அந்தந்த பிரதேசங்களில் அந்தந்த சீதோஸ்ணத்துக்கு ஏற்றவிதத்தில் பயிர்ச் செய்கைகளை மேற்கொள்ள பெருந்தோட்டங்களில் நிரந்தரமாக வேலை செய்யும் தோட்டத் தொழிலாளர்களுக்கு குத்தகை அடிப்படையில் பகிர்ந்தளிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். அவ்வாறு நடவடிக்கை எடுப்பின் தோட்ட முதலாளிமார் சம்மேளனம் பயிர்ச் செய்கைக்கு உட்படுத்தாதுள்ள காணிகள் மூலம் வருமானம் ஈட்ட வழி கிட்டும்.

புள்ளி விபரத் தகவலுக்கு இணங்க பாலுற்பத்தி 1977 ஆம் ஆண்டுக்கு முன்பு 60 சதவீதமாக இருந்தது. தற்போது அது 10 சத வீதமாக குறைந்துள்ளதாக அறிய முடிகிறது.

எனவே பெருந்தோட்டங்களில் பயிர்ச்செய்கைக்கு உட்படுத்தாதுள்ள காணிகளை தோட்டத் தொழிலாளர்களுக்கு பகிர்ந்தளித்து அரசாங்கம் அவுஸ்திரேலியா, நியூஸிலாந்து ஆகிய நாடுகளிடமிருந்து திடகாத்திரமாகவுள்ள கறவைப் பசுக்களை தருவித்து தோட்டத் தொழிலாளர்களுக்கு கடன் அடிப்படையில் வழங்க நடவடிக்கை எடுப்பின் பெருந்தோட்டத் தொழிலாளர்கள் அந்த வாய்ப்பை சிறந்த முறையில் பயன்படுத்தி இந்த நாட்டை பாலுற்பத்தியில் தன்னிறைவு காணச் செய்வார்கள். அவர்கள் தோட்டங்களில் வேலை செய்து வருமானத்தை பெறுவதோடு பாலுற்பத்தியின் மூலம் மேலதிக வருமானத்தை ஈட்டி அவர்கள் வளமாக வாழ்வதோடு இந்த நாட்டின் பொருளாதார மேம்பாட்டுக்கான தமது பங்களிப்பையும் நல்க முடியும்.



# பாரதீய ஜனதாவுக்கு எதிராக ஒன்றுசேர்ந்த தமிழகக் கட்சிகள்

ரமணி

பாரதீய ஜனதாக் கட்சி பதவியேற்ற பின்னர் சத்தமில்லாமல் செய்துவரும் காரியங்களால் தமிழ்நாட்டுக்கும் இந்தியாவுக்கும் பாதிப்பு ஏற்படுமென தமிழகத் தலைவர்கள் அஞ்சுகிறார்கள்.

ஒரே நாடு ஒரே தேர்தல், தொகுதி மறுசீரமைப்பு ஆகிய இரண்டு திட்டங்களை அமுல்படுத்துவதில் பாரதீய ஜனதா அரசு முனைப்புக் காட்டி வருகிறது. மத்திய அரசு தேர்தலையும் மாநிலத் தேர்தலையும் ஒரே நாளில் நடத்த வேண்டுமென்பதில் பாரதீய ஜனதா பிடிவாதமாக உள்ளது. அதற்காக ஓர் ஆணைக்குழுவை நியமித்து ஒப்புதல் பெற்றுள்ளது. ஆணைக்குழுவில் இருப்பவர்கள் அனைவரும் அரசாங்கத்தின் நிகழ்ச்சிகளுக்கு ஒத்து ஊதுபவர்களென்பது கடந்த கால வரலாறு.

இப்போது தொகுதி மறுசீரமைப்புப் பற்றி அமித் ஷா உரக்கப் பேசுகிறார். தமிழக எதிர்க்கட்சித் தலைவர்களும் மத்திய அரசுக்கு ஆதரவு தெரிவிக்கும் சில தலைவர்களும் கடும் எதிர்ப்புக் காட்டுகின்றனர். தமிழக பாரதீய ஜனதா கட்சி, தமிழ் மாநில காங்கிரஸ், நாம் தமிழர் கட்சி, புதிய தமிழகம், புதிய நீதி கட்சி உள்ளிட்ட ஐந்து கட்சிகளைத் தவிர அனைத்துக் கட்சிக் கூட்டங்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டு மற்ற அனைத்துக் கட்சிகளும் கலந்துகொண்டன.

புதிய பாராளுமன்றத்தை அமைக்கும் போதே எம்.பிக்களின் எண்ணிக்கை அதிகரிப்பதற்கேற்றவாறு கட்டப்பட்டது. தற்போது 543 எம்.பிக்களும் 245 மாநிலங்களவை எம்.பிக்களும் உள்ளனர். புதிய பாராளுமன்றத்தில் 888 எம்.பிக்களும் 348 மாநிலங்களவை உறுப்பினர்களும் அமரக்கூடிய வசதியுள்ளது.

தொகுதி மறுசீரமைப்புக்கு எதிராக தமிழகத்தில் அனைத்துக் கட்சிக் கூட்டத்தை முதலமைச்சர் ஸ்டாலின் நடத்தினார். அங்கு சில தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன. தொகுதி மறுசீரமைப்பு தொடர்பாக மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த பாராளுமன்ற உறுப்பினர்களைக்கொண்ட கட்சிகளின் பிரதிநிதிகள் அடங்கிய கூட்டு நடவடிக்கை குழுவொன்றை அமைத்திடவும் அதற்கான முறையான அழைப்பை மேற்படி கட்சிகளுக்கு அனுப்பி வைக்கவும் இக்கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. மேலும் 30 வருடங்களுக்கு மறுவரையறை தள்ளிவைக்கவும் தீர்மானிக்கப்பட்டது.

848 தொகுதிகளாக அதிகரித்தால், உத்தர பிரதேசத்தில் 63 தொகுதிகள் கூடுதலாகக் கிடைக்கும். தமிழ்நாட்டுக்கு 10 தொகுதிகள்தான் கூடுதலாகக் கிடைக்கும். எந்தவகையில் பார்த்தாலும், இந்திய ஜனநாயகத்தை, இந்திய பாராளுமன்றத்தின் தலைமைப் பொறுப்பை வடவர்கள் எடுத்துக்கொள்ளும் சூழலை உருவாக்கும் நிலைதான் ஏற்படும்.

2026ஆம் ஆண்டு தொகுதி மறுசீரமைப்பு செய்யப்போவதை பொதுவாக மக்கள் தொகை கணக்கிட்டுத்தான் செய்வார்கள். மக்கள் தொகையைக் கட்டுப்படுத்த வேண்டுமென்பது இந்திய நாட்டின் மிக முக்கியமான இலக்கு. அந்த இலக்கில் தமிழ்நாடு வெற்றிபெற்று இருக்கிறது. கடந்த பத்து ஆண்டுகளாக வெற்றிகரமாக குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டங்கள், பெண்கள் கல்வி மற்றும் சுகாதாரம் முன்னெச்சரிக்கை மூலமாக இதைச் சாதித்திருக்கிறது. இப்போதிருக்கின்ற 543 பாராளுமன்றத் தொகுதிகளில் தொடர்ந்து செய்யவிருப்பதால் மக்கள்தொகை குறைவால் எம்.பிக்களின் தொகை குறையும் அபாயம் உள்ளது. 29 எம்.பிக்கள் இழப்பு ஏற்படும்.

பாராளுமன்றத் தொகுதியின் எண்ணிக்கை 848 ஆக உயர்த்தப்பட்டு தற்போதைய விகிதாசாரத்தின்படி மறுசீரமைப்பு செய்யப்பட்டால் தமிழகத்துக்கு கூடுதலாக 22 தொகுதிகள் கிடைக்க வேண்டும். ஆனால், தற்போதைய மக்கள்தொகையின்படி மறுசீரமைப்பு செய்தால் 10 தொகுதிகள்தான் கூடுதலாகக் கிடைக்கும். இதனால் 12 கூடுதல் தொகுதிகளை இழக்க நேரிடும். இந்த இரண்டு முறைகளில் தமிழகத்துக்கான பிரதிநிதித்துவம் குறைந்து அதிக மக்கள்தொகை கொண்ட மாநிலங்களுக்கு அதிகமாக பிரதிநிதித்துவம் கிடைக்கும். இதனால் தமிழ்நாட்டின் குரல் நசுக்கப்படும். இது வெறும் உறுப்பினர்களைப் பற்றிய கவலை அல்ல. தமிழ்நாட்டின் உரிமை சார்ந்த கவலை. நம் தமிழ்நாடு எதிர்கொள்ளவிருக்கின்ற முக்கிய பிரச்சினைகளில் எல்லா அரசியல் கட்சிகள் மற்றும் தலைவர்கள் ஒன்றிணைய வேண்டுமென்ற வேண்டுகோளை உங்கள் எல்லோரும் முன் நான் வைக்கிறேன் - என ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்தத் தொகுதி மறுசீரமைப்பு என்பது தமிழ்நாட்டுக்கு மட்டுமல்ல, ஒட்டுமொத்த தென்னிந்தியாவுக்கே அபாயகரமான செயல். இதுக்குள் நமக்கான கருத்து வேறுபாடும் நிச்சயம் இருக்காதென நினைக்கிறேன். வரக்கூடாதென்று விரும்புகிறேன். இந்திய நாட்டின் அமைப்பின் கூட்டாட்சிக்கும் தென் மாநிலங்களின் அரசியல் உரிமைக்கும் இது அச்சுறுத்தலை ஏற்படுத்துகிறது. இது இந்திய ஜனநாயகத்தில் தமிழ்நாட்டுக்குக் கிடைக்கிற அரசியல் பிரதிநிதித்துவ உரிமையில் நேரடியான தாக்குதல். இப்படி சமநிதியற்ற அநீதியான தொகுதி மறுசீரமைப்பு செயற்படுத்தப்பட்டால் இந்திய அரசியலமைப்பில் தமிழ்நாட்டின் குரல் நெரிக்கப்படும் என்று ஸ்டாலின் தெரிவித்தார்.

அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் உரையாற்றிய தலைவர்கள் அனைவரும் மிகவும் காட்டமாகப் பேசினார்கள். பாரதீய ஜனதாவுடன் இணக்கமாகச் செயற்படும் அன்புமணியும் மிகவும் ஆக்ரோஷமாகக் கருத்துத் தெரிவித்தார்.

தொகுதி மறுசீரமைப்பால் தமிழகத்தின் தொகுதிகள் குறைக்கப்பட மாட்டாதென அமித்ஷா தெரிவித்துள்ளார். தி.மு.க. மட்டுமல்ல, கர்நாடகத்தை ஆளும் காங்கிரஸ் கட்சியின் முதலமைச்சரான சித்தராமையாவும் தெலுங்கானா மாநிலத்தின் காங்கிரஸ் முதலமைச்சரான ரேவந்த் ரெட்டியும்கூட அமித் ஷாவின் வாக்குறுதியை சந்தேகத்துடனேயே பார்க்கின்றனர்.

கடந்த வெள்ளிக்கிழமையன்று செய்தியாளர்களிடம் தொகுதி மறுவரையறை தென்னிந்திய மாநிலங்களில் எம்மாதிரி தாக்கத்தை ஏற்படுத்துமென்பது குறித்து அமித்ஷா தெளிவுபடுத்தவில்லை.

மறுவரையறையால் தென் மாநிலங்களில் தொகுதிகளின் எண்ணிக்கை குறையாது என்கிறாரே தவிர, தென்னிந்தியாவிலும் வட இந்தியாவிலும் எவ்வளவு இடங்கள் அதிகரிக்கும் என்பதைச் சொல்லவில்லை. எந்த அடிப்படையில் அதிகரிக்கும்? எனக் கேள்வியெழுப்பினார் ரேவந்த் ரெட்டி.

அதேபோல, கர்நாடக முதலமைச்சர் சித்தராமையாவும் அமித் ஷா தென் மாநிலங்களுக்கு அளித்த வாக்குறுதி நம்பத் தகுந்ததல்ல எனக் குறிப்பிட்டிருக்கிறார்.

முதல்வர் ஸ்டாலின் அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டினார். இந்தக் கூட்டத்தில் அ.தி.மு.க, காங்கிரஸ், வி.சி.க, ம.தி.மு.க. உள்ளிட்ட 58 கட்சிகள் பங்கேற்றன. கூட்டத்தில் அனைத்துக் கட்சிகளும் ஒரே நிலைப்பாட்டில் தொகுதி எண்ணிக்கை மறுவரையறையை எதிர்த்தன. இந்த விவகாரத்தைக் கையாள்வது தொடர்பாக அரசுக்கு ஆலோசனைகளை வழங்கினர்.

அ.தி.மு.க. சார்பில் கலந்துகொண்ட அக்கட்சியின் அமைப்புச் செயலாளரும் முன்னாள் அமைச்சருமான ஜெயக்குமார், “பாராளுமன்றத்தில் தமிழ்நாட்டின் 7.2% என்ற தற்போதைய பிரதிநிதித்துவம் குறைக்கப்படக் கூடாதென்று தீர்மானத்தில் சேர்க்க வேண்டும். முதல்வர் கொண்டுவந்த தீர்மானத்துக்கு அ.தி.மு.க. முழு ஆதரவு அளிக்கிறது” என்று கூறினார்.

பா.ம.க. தலைவர் அன்புமணி ராமதாஸ் பேசியபோது, “தொகுதி மறுசீரமைப்பு பற்றிய விழிப்புணர்வை அதிகப்படுத்திடவும் அடுத்தடுத்த போராட்டச் செயல் திட்டங்களை வகுக்கவும் நமது முதலமைச்சர் மற்ற மாநிலங்களுக்கு நேரில் சென்று ஒருங்கிணைக்க வேண்டும். அதேபோல, சாதிவாரி கணக்கெடுப்பை நடத்த நடவடிக்கை எடுக்கவேண்டும்”- என்றார்.

ஒவ்வொரு மக்கள்தொகை கணக்கெடுப்புக்குப் பிறகும் மக்களவைத் தொகுதிகளை மறுவரையறை செய்ய வேண்டுமென இந்திய அரசமைப்புச் சட்டம் கூறுகிறது. அதன்படி இந்தியாவில் மூன்று தடவைகள் தொகுதிகள் மறுசீரமைக்கப்பட்டிருக்கின்றன.

கடைசியாக 1971ஆம் ஆண்டின் மக்கள்தொகை கணக்கெடுப்பை அடிப்படையாக வைத்து, 1973இல் தொகுதிகள் மறுசீரமைக்கப்பட்டன. இதற்குப் பிறகு 1975இல் நெருக்கடி நிலை அமுல்படுத்தப்பட்டு, மக்கள்தொகை கட்டுப்பாட்டுத் திட்டங்கள் தீவிரமாக செயற்படுத்தப்பட்டன. இதனால், மக்கள்தொகை நிலைபெறும்வரை தொகுதி மறுவரையறையை நிறுத்திவைக்கத் தீர்மானிக்கப்பட்டது. ஆகவே, அடுத்த 25 ஆண்டுகளுக்கு தொகுதி மறுவரையறை செய்யாமல் இருக்கும் வகையில் அரசமைப்புச் சட்டம் திருத்தப்பட்டது.

2001இல் இந்த 25 ஆண்டு கால வரையறை முடிவுக்கு வந்தது. இதனால் 2002இல் அடல் பிஹாரி வாஜ்பாயி பிரதமராக இருந்தபோது, தொகுதி மறுவரையறை மேலும் 25 ஆண்டுகளுக்குத் தள்ளிப்போடப்பட்டது. ஆகவே, 2026க்குப் பிறகு நடக்கும் முதல் மக்கள்தொகை கணக்கெடுப்பை அடிப்படையாக வைத்து, தொகுதிகளை மறுவரையறை செய்யவேண்டும்.

மக்கள்தொகை கணக்கெடுப்பு வழக்கம்போல நடந்திருந்தால், 2026ஆம் ஆண்டுக்குப் பிந்தைய மக்கள்தொகை கணக்கெடுப்பு 2031ஆம் ஆண்டில்தான் நடந்திருக்கும். ஆனால், 2021ஆம் ஆண்டில் மக்கள்தொகை கணக்கெடுப்பு நடத்தப்படாததால், அந்தக் கணக்கெடுப்பு 2026ஆம் ஆண்டுக்குப் பிறகு நடந்தால், அதனடிப்படையில் அடுத்த சில ஆண்டுகளிலேயே தொகுதிகளை மறுவரையறை செய்யலாம்.

இந்தப் பின்னணியில்தான் 2026ஐ ஒட்டி தொகுதி மறுவரையறை நடந்தால், அது தமிழ்நாட்டைக் கடுமையாகப் பாதிக்குமென தி.மு.க. உள்ளிட்ட கட்சிகள் கருதுகின்றன. ஆகவேதான், பாராளுமன்றத் தொகுதிகளின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டால், தற்போதுள்ள விகிதாசாரத்திலேயே தொகுதிகளின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டுமென அவை கோருகின்றன.

மத்திய அரசுக்கு எதிராக தமிழகத்தின் குரல் ஓங்கி ஒலிக்கத் தொடங்கவுள்ளது.

# திருடர்களைப் பிடிப்பதனால் System Change நடந்துவிடுமா?

மகிழ் மகன்

நாட்டில் ஏற்பட்டிருக்கும் அரசாங்கத்தாலும் அதன் அமைச்சர்களாலும் அவர்கள் திருடர்களைப் பிடிப்பதனால் மாத்திரம் System Change நடந்துவிடுமா?

உண்மையான System Change கிராம மட்டத்திலேயே ஏற்படவேண்டும். கிராம மட்டத்தில் பல பொது அமைப்புகள் இருந்தாலும் அவற்றுள் பிரதானமானவை கிராம அபிவிருத்திச் சங்கங்கள். அவற்றுள் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்களும் உள்ளடங்கும்.

அவ்வாறு கூறுவதற்குக் காரணம், கிராம அபிவிருத்திச் சங்கங்கள் உருவாக்கப்பட்டதன் நோக்கம் கிராமத்தின் சமூக, பொருளாதார மற்றும் கலாசாரம் முதலான அனைத்து விடயங்களிலும் அபிவிருத்தியை நோக்கி இட்டுச்செல்கின்ற பிரதான இயந்திரமாகக்கொள்வதற்காகும்.

இலங்கை சுதந்திரமடைந்ததன் பிற்பாடு 1948இல் உருவாக்கப்பட்ட ‘Gramasamvadhanaya’ - அதாவது, கிராம மேம்பாட்டு இயக்கம் அல்லது ஆங்கிலத்தில் ‘Village Development Movement’ என அழைக்கப்பட்ட அமைப்பை அடிப்படையாகக் கொண்டு கிராம அபிவிருத்திச் சங்கங்கள் உருவாக்கப்பட்டிருந்தன.

1940ஆம் ஆண்டுமுதல் கிராம மேம்பாடு அல்லது அபிவிருத்தி என்கின்ற விடயதானமானது அப்போதைய கைத்தொழில் மற்றும் வணிகத்துக்குப் பொறுப்பான திணைக்களத்தின் ஒரு பகுதியாக இருந்திருந்தாலும் 1978ஆம் ஆண்டு கிராம அபிவிருத்திக்கான தனியான அமைச்சு உருவாக்கப்படும் வரை அது பல அமைச்சுகளின் கீழ் காணப்பட்டிருக்கின்றது. அதனைத்தொடர்ந்து 1987ஆம் ஆண்டு இந்திய - இலங்கை ஒப்பந்தத்துக்கமைவாக கொண்டுவரப்பட்ட 13ஆம் திருத்தத்தின் கீழ் மாகாண சபைகளின் அதிகார வரம்புக்குள் கிராம அபிவிருத்திச் சங்கங்கள் தற்போதுவரை காணப்படுகின்றன.

System Change பற்றி கதைக்க ஆரம்பித்துவிட்டு கிராம அபிவிருத்திச் சங்கங்கள் பற்றி ஏன் அதிகமாக கூறிக்கொண்டிருக்கிறேனென நீங்கள் சிந்திக்கலாம்.

உண்மையில் கிராம அபிவிருத்திச் சங்கங்கள் மீள் ஒழுங்குபடுத்தப்படுவது (re-structuring) தற்போதைய அரசாங்கம் கூறுகின்ற System Changeற்கு அத்தியாவசியமானதாகும். ஏனெனில், மக்கள் தமது தேவைகளை தாம் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ செலுத்தும் வரிப்பணத்திலிருந்து தீர்த்துக்கொள்ளக்கூடிய - தீர்மானம் எடுக்கக்கூடிய பலம் உடையவர்களாக மாறவேண்டும். அதனை சரியான முறையில் மேற்கொள்வதற்கு ஒரு கிராமத்திலிருக்கும் விளையாட்டுக் கழகங்கள் முதல் கலை, கலாசாரம் மற்றும் ஏனைய அனைத்து பொது அமைப்புகளினதும் பிரதிநிதிகளைக்கொண்ட ஓர் அமைப்பாக கிராம அபிவிருத்திச் சங்கங்கள் மாறவேண்டியது System changeனை கிராம மட்டங்களிலிருந்து ஏற்படுத்துவதற்கு அடிப்படையான விடயமாக அமையும்.

அவ்வாறு அமையும்போது, பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் ஒரு கிராமத்தின் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் குறைந்தது ஒரு பிரதிநிதியாவது கலந்துகொள்ளவும் அவருடைய கிராமத்தின் தேவையை முன்மொழியவும் சந்தர்ப்பம் ஏற்படுத்தப்படும். அந்தப் பிரதிநிதியின் கருத்து ஒட்டுமொத்த கிராமத்தின் கருத்தாகவும் அமைவதற்காகவே கிராம அபிவிருத்திச் சங்கங்களில் குறித்த கிராமத்தில் காணப்படும் ஏனைய பொது அமைப்புகளின் பிரதிநிதித்துவம் இருக்கவேண்டும் என்கின்ற தேவை கூறப்பட்டிருந்தது.

**அனைவருக்கும் சந்தர்ப்பம் வழங்க நேரம் போதுமானதா?**

நீங்கள் சிந்திக்கலாம், அவ்வாறு அனைவருக்கும் சந்தர்ப்பங்கள் வழங்குவதற்கு பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்துக்கான நேரம் போதுமானதாக அமையுமா என்று. ஆனால் 50 கிராம அபிவிருத்திச் சங்கங்களைக்கொண்ட ஒரு பிரதேசத்தின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் மாதமொருமுறை மக்களின் தேவைகளைக் கேட்டறிய இரண்டு மணிநேரம் ஒதுக்க இயலாது எனக் கூறினால் எப்படி System Changeஇனைக் கொண்டுவருவது?

இன்னுமொரு சந்தேகம் வரலாம். கிராம அபிவிருத்திச் சங்கப் பிரதிநிதிகள் வழங்கப்பட்ட நேரத்தினுள் தமது கிராமத்தின் பிரச்சினையைக் கூறிவிடுவார்களாவென்று. தற்போது அதற்குப் பதில் கூறுவதாகவிருந்தால் உறுதியாகக் கூறமுடியாது. ஆனால், ஒரு கிராம சேவகர் பிரிவில் பெரும்பாலும் ஒரு கிராம அபிவிருத்திச் சங்கமும் சில சந்தர்ப்பங்களிலே இரண்டுக்கு மேற்பட்ட கிராம அபிவிருத்திச் சங்கங்களும் உள்ள நிலையும் காணப்படுகின்றது. ஒவ்வொரு கிராம சேவகர் பிரிவிலும் தலா ஒவ்வொரு கிராம சேவை உத்தியோகத்தர், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் என நிலையான மூன்று உத்தியோகத்தர்களும் பிரதேச செயலகங்களில் தேவைக்கதிகமான ஆளணியும் தேங்கிக்கிடக்கும் நிலையில், கிராம மட்ட அமைப்புகளை எவ்வாறு தமது பிரச்சினைகளை சரியான முறையில் குறைந்தளவு நேரத்தில் முன்வைப்பது என்கின்ற வழிப்படுத்தல்களையும் தேவையான பயிற்சிகளையும் வழங்குவது ஒன்றும் கல்லில் நாருரிப்பதாகவோ அல்லது மலையைப் பிழந்து மார்பில் சாத்துவதாகவோ அமையப்போவதில்லை.

எனவே, ஒவ்வொரு கிராமத்தின் பிரதிநிதிகளும் தங்கள் கிராமத்தின் தேவைகளை நிரல்படுத்தி அதனை முன்னுரிமைப்படுத்தி பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் முன்வைக்கும்போது அங்கே சமுகமளித்திருக்கும் அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனத்தின் அதிகாரிகளின் தொழில்நுட்ப ஆலோசனைகளையும் ஒத்துழைப்பையும் ஒன்றிணைத்து அவற்றைத் தீர்ப்பதற்கான வழிமுறைகளையும் மற்றும் தீர்வுகளையும் பெற்றுக்கொள்ளக்கூடிய வினைத்திறனான ஒரு சந்தர்ப்பமாக பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களைப் பயன்படுத்திக்கொள்ளலாம்.

**எப்படி அனைத்துக் கிராமங்களினதும் பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்வது?**

உங்களுக்கு மேலும் ஒரு சந்தேகம் வரலாம். அதாவது எப்படி அனைத்துக் கிராமங்களினதும் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வு காணலாம்? என்பதே. அனைத்துக் கிராமங்களினதும் பிரச்சினைகளிலிருந்தும் அந்தந்தக் கிராமங்களின் பிரதிநிதிகளின் பங்குபற்றலுடன் அனைத்துக் கிராமங்களையும் இயன்றளவு உள்ளடக்கக்கூடிய முன்னுரிமைப்படுத்தப்பட்ட ஒழுங்கில் பிரச்சினைகளைத் தெரிவுசெய்து தீர்வு காணக்கூடிய ஒரு ஜனநாயக முறையிலான பொறிமுறையை உருவாக்கவேண்டியது அவசியமாகவிருக்கின்றது.

அனைவராலும் ஏற்றுக்கொள்ளக்கூடிய பக்கச்சார்பற்ற பொறிமுறை காலத்தின் தேவையாகும். பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் தீர்வு எட்டமுடியாத பிரச்சினைகள் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களுக்குக் கொண்டு செல்லப்படுவது குறித்த பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரின் கடப்பாடாகவும் அதற்குத் தேவையான ஒத்துழைப்பை வழங்குவது பிரதேச செயலகத்துக்குட்பட்ட அரச அதிகாரிகளின் வகிபாகமாகவும் அமையும்.

**வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல் மற்றும் ஊழல் ஒழிப்பைப் பலப்படுத்தல்**

இவ்வாறான ஒரு நடைமுறை ஏற்படுத்தப்படும்போது தற்போதைய தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் பிரதான தேர்தல் பிரசாரமாகவிருந்த வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல் மற்றும் ஊழல் ஒழிப்பு என்பவற்றை இலகுவாக அடிமட்டத்திலிருந்து நிலைநாட்டலாம். புதிய அரசாங்கத்தின் முதலாவது பாதீடு பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டிருக்கும் தருவாயில் அதன் நிதி ஒதுக்கீடுகள் அரசியல் மயப்படுத்தப்படாமல் மக்களின் உண்மையான தேவைகளை நிவர்த்திசெய்ய நிச்சயம் பயன்படுத்தப்படும் புதிய System/முறைமை உருவாக்கப்படும். அத்தோடு மக்களின் தேவையை முன்னிலைப்படுத்தாமல் தங்கள் வாக்குவங்கியை அதிகரிக்கும் முகமாக மக்களின் வரிப்பணத்தை வீணவிரயம் செய்யும் அரசியல்வாதிகளின் கண்மூடித்தனமான தீர்மானமெடுக்கும் பலம் அவர்களிடமிருந்து பறிக்கப்படும் நிலைமை உருவாக்கப்படும். இவ்வாறு ஒரு வெளிப்படைத்தன்மையான நிலை ஏற்படுத்தப்பட்டால் அரச அதிகாரிகள் தொடக்கம் கிராம அமைப்புகள் வரை தமது செயற்பாடுகளில் பொறுப்புக்கூறுபவர்களாக மாறுவதோடு அண்மையில் எமது பிரதேசத்தில் பரவலாகப் பேசப்பட்ட இந்தியத் திரைப்பட நகைச்சுவை நடிகர் வடிவேலுவின் “கிணத்தக்காணல்ல” பாணியில் அமைந்த “கிரவுண்ட காணல்ல” சம்பவங்கள் நிச்சயமாக தவிர்க்கப்படலாம்.

**அதிகாரத்துவத்தின் பிழைகளைத் தடுத்தல்**

முறையற்ற விடயங்கள் நடக்கும்போது சட்டநடவடிக்கை எடுக்கக்கூடிய அதிகாரம் கிராம அபிவிருத்திச் சங்கங்களின் தற்போதைய யாப்பு உபவிதியின் மூலம் அவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்ற அதேவேளை, அதனை மேலும் பலப்படுத்துவதாகவும் மேல் கலந்துரையாடப்பட்டிருக்கும் கட்டமைப்பு மற்றும் செயற்பாட்டு மாற்றங்களையும் உள்ளடக்கியதாக குறித்த யாப்பு உபவிதியின் மீள் அமைக்கப்படுவதும் கட்டாயமாகும்.

**கடந்த கால அரசாங்கங்களின் செயற்பாடுகளிலிருந்தான படிப்பினைகள்**

கடந்த அரசாங்கங்களினாலும் கமநெகும, கம்பெரலிய, கிராமசக்தி போன்ற திட்டங்கள் ‘கிராம அபிவிருத்தியை கிராம மக்களின் பங்குபற்றுதலுடன் மேற்கொள்ளல்’ எனும் தொனிப்பொருளின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தாலும் அவையும் முழுக்க முழுக்க அரசியல் மயப்படுத்தப்பட்டே காணப்பட்டிருந்தன.

புதிதாக அமைந்திருக்கும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கமும் பழைய இயந்திரத்தையே வைத்துக்கொண்டு வெளித்தோற்றத்தை மாற்றுகின்றதா அல்லது அவர்கள் கூறியதைப் போன்று முறைமை மாற்றத்தை /System Change இனைக் கொண்டுவருகின்றதா என்பதற்குக் காலமே பதில் சொல்லும்.

# ஆசிரிய தெரிவு முறைகளும் அரசின் அநீதிப் போக்கும்

**பாடசாலையில் ஐந்து வருடங்களாக கற்பித்தல் செயற்பாட்டில் ஈடுபட்டு வருகின்ற அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் அவர்களை ஆசிரியர் சேவைக்குள் இணைத்துக் கொள்வதிலுள்ள அரசின் அநீதி போக்கும் தேவைக்கேற்றாற்போல் மாறுகின்ற ஆசிரியர் தெரிவு முறைகளும்.**

2021.01.15ஆம் ஆண்டு காலப்பகுதியில் எமது நாட்டில் அனைத்து மாகாணங்களிலும் ஆசிரியர் பற்றாக்குறை நிலவியது. இவ்வாசிரியர் பற்றாக்குறைக்கு அப்போதிருந்த அரசாங்கத்தால் தீர்வொன்றைக் காண்பதற்கு முடியாமல்போயிருந்த நிலையில், குறித்த அரசாங்கத்தால் நாடளாவிய ரீதியில் கிட்டத்தட்ட 53,000 பட்டதாரிகளுக்கு ஒரு வருட பயிற்சி எனும் அடிப்படையில் நியமனங்கள் வழங்கப்பட்டு அவர்களது பிரதேசத்துக்குரித்தான பிரதேச செயலகங்களில் இணைக்கப்பட்டிருந்தனர். இவ்வாறு இணைக்கப்பட்டவர்களுள் சிலரை (22,000 பேர்) அப்போது அவர்களது தனிப்பட்ட விருப்பத்துக்கமைவாகவும் அதேவேளை கல்விப்புலம் சார்ந்த அதிகாரிகளினது (ZDE, PDE) திசைமுகப்படுத்தப்பட்ட நேர்முகத் தேர்வு என்பவற்றினூடாகவும் பட்டத்தின்போது அவர்கள் பயின்ற பாடங்களையும் வைத்து பாட வெற்றிடங்களுக்கேற்ற வகையில் பாடசாலைகளில் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளுக்காக நியமிக்கப்பட்டார்கள்.

இவ்வாறு அவர்கள் நியமிக்கப்பட்டு ஐந்து வருடங்களையும் கடக்கின்ற நிலையில், தற்போது வரை அபிவிருத்தி உத்தியோகத்தர் எனும் பதவி நிலையிலேயே உள்ளனர். ஆரம்பத்தில் நாடளாவிய ரீதியில் 22,000 பேராக இருந்த அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் இப்போது 15,300 பேராகவே பணியை மேற்கொள்கின்றனர்.

**பாடசாலையில் ஆசிரியர் பணிக்காக இணைக்கப்பட்டுள்ள அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் இன்றுவரை எதிர்கொள்ளும் தொழில்சார் சவால்கள்**

குறித்த அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் 2021.01.15ஆம் திகதியளவில் நாடளாவிய ரீதியில் ஆசிரியர் பணிக்காக நியமிக்கப்பட்டனர். 2021.01.03 வரைக்கும் பயிற்சி சம்பளமாக 20,000 ரூபாவைப் பெற்றுவந்தனர். 2022.01.03இற்கு பிற்பாடு நிரந்தர அபிவிருத்தி உத்தியோகத்தர் தரம்-III ற்கான சம்பளத்தால் பெற்றனர்.

இவர்களது பணிநேரம் காலை 07.30 மணிக்கு முன்பாக பாடசாலைக்குச் சென்று கைவிரல் அடையாள இயந்திரத்தில் தமது வரவை உறுதிப்படுத்தி மாலை 03.15 மணிக்குப் பிற்பாடே தங்களது பணி நிறைவுபெற்று வீடு செல்வார்களை. இங்கு பாடசாலையை எடுத்துக்கொண்டால் பாடசாலை பணி நேரமாக காலை 07.30 மணி தொடக்கம் 01.30 மணி வரையாகும். இவ்வாறு இருக்கும்போது 01.30 மணி தொடக்கம் 03.15 மணி வரையான நேரப்பகுதியில் பாடசாலையிலிருந்து அதிபர்கள் உட்பட ஏனைய ஆசிரியர்கள் பணி முடிந்து சென்ற பின் பாடசாலைகளில் இணைக்கப்பட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் தனிமையிலேயே இருக்கின்றனர். அதுமட்டுமன்றி பாடசாலை தவணை விடுமுறைக் காலங்களிலும் அதிபர், ஆசிரியர்கள் வருகை தராதபோதிலும் காலையில் 7.30 மணிக்கு முன்பதாக பாடசாலைக்கு வருகை தந்து வழமை போன்று 03.15 வரையும் தனிமையில் இருந்தே பின் வீடு சென்றனர். இது பணிநேரம் தொடர்பாக எதிர்கொள்ளும் சவால்கள்.

தங்களோடு பணிபுரிகின்ற ஏனைய ஆசிரியர்களால் தொழில் ரீதியாக ஏற்படுத்தப்படுகின்ற உளரீதியான தாக்கங்கள் பல்கலைக் கழகம் சென்று விசேட பட்டம் முடித்திருந்தாலும், பொதுப் பட்டத்தை முடித்திருந்தாலும் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் எனும் தொழில் வேற்றுமையைப் பாராட்டுவது, இவர்களுக்கு கற்பித்தல் செயற்பாட்டோடு ஏனைய பொருத்தமற்ற வேலைப் பகிர்வுகளை வழங்குவது ஓர் ஆசிரியர் எவ்வாறு கற்பித்தல் செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக செயற்பாட்டு ஆவணங்கள் தயாரித்து கற்பிக்கின்றார்களோ அதனைப்போன்றே பாடசாலையில் இணைக்கப்பட்டுள்ள அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் செயற்பாடும் காணப்படுகின்றது.

**பாடசாலையில் இணைக்கப்பட்டுள்ள அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் கற்பித்தல் செயற்பாட்டால் விளைவிக்கப்பட்ட விளைவுகள்**

எமது நாட்டில் தேசிய பரீட்சைகள் மூன்று உள்ளன.

01. ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை.
02. க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை.
03. க.பொ.த. உயர் தரப் பரீட்சை

போன்ற தேசிய ரீதியான பரீட்சைகளில் இதுவரை சித்தியடையாத பிரதேசங்களிலுள்ள பாடசாலைகளில் கற்கின்ற மாணவர்கள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களும் எமது கைவசம் உள்ளன. தேவையேற்படின் காட்சிப்படுத்த முடியும். மாணவர்களிடையே எண்ணறிவு வீதம், எழுத்தறிவு வீதம் குறைந்து காணப்பட, மாணவர்களை அக்குறைபாட்டிலிருந்து விடுவித்து தேர்ச்சி நிலைக்குக் கொண்டுசென்றமை.

ஐந்து வருடங்களாக அபிவிருத்தி உத்தியோகத்தராக இருந்து ஆசிரியராக கடமை புரிகின்ற பட்டதாரிகளை ஆசிரியர் சேவைக்குள் இணைப்பதில் அரசினது அநீதிப்போக்கு

கடந்த ஐந்து வருடங்களாக பாடசாலைகளில் அபிவிருத்தி உத்தியோகத்தராக இருந்து ஆசிரியர் பணியை மேற்கொண்டு வருகின்ற பட்டதாரிகள் ஆசிரியர் பயிற்சி தொடர்பாக ஐந்து வருட அனுபவங்களைப் பெற்று தமது சேவையை ஆற்றி வருகின்றனர். இது இவ்வாறிருக்க ஆசிரியர் ஆட்சேர்ப்புக்கென ஒரு சட்டக்கோவையுள்ளது. அதனை நாங்கள் ஏற்றுக்கொள்கின்றோம். சட்டப் பிரமாணக்கோவையின் 2014ஆம் ஆண்டுக்குப் பின்னர் புதிய திருத்தத்தில் "பட்டதாரிகள், திணைக்களங்களில் பணிபுரிகின்ற அபிவிருத்தி உத்தியோகத்தர்களை ஆசிரியர் சேவைக்குள் உள்வாங்குவதென்றால் போட்டிப் பரீட்சை ஒன்றினூடாகவே உள்வாங்க முடியும்" என்று கூறப்பட்டுள்ளது.

அதேவேளை புதிதாக திருத்தப்பட்ட அதே சட்டப் பிரமாணக்கோவையில் பட்டதாரிகள் ஆசிரியர் வாண்மை விருத்தி, ஆசிரியர் பயிற்சி இவ்வாறான விடயங்களில் தோற்றிருந்தால் அவர்களை நேர்முகத் தேர்வினூடாக சேவையில் இணைத்துக் கொள்ளலாம் எனவும் கூறப்பட்டுள்ளது.

குறித்த பாடசாலையில் இணைக்கப்பட்டுள்ள அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் கடந்த ஐந்து வருடங்களாக இவ்வாறான செயற்பாடுகளிலே உள்ளனர். அப்படி இருக்கும்போது இவர்களை ஏனைய பட்டதாரிகள், திணைக்களங்களில் பணியாற்றி வருகின்ற அபிவிருத்தி உத்தியோகத்தர்களோடு இணைத்து போட்டிப் பரீட்சை நடத்தி இவர்களை ஆசிரியர் சேவைக்குள் அநீதியான முறையில் இணைக்க எண்ணுவது குறித்த தரப்பினருக்கு மிலேச்சத்தனமான அநீதி இழைப்பதற்குச் சமமாகும்.

ஆசிரியர் சேவைக்கான போட்டிப் பரீட்சை என்பது ஒரு திறமையான ஆசிரியரைத் தெரிவு செய்தல் என்பதல்ல. மாறாக, வெற்றிடங்கள் குறைவாகவும் போட்டியாளர்கள் அதிகமாகவும் இருக்கின்ற பட்சத்தில் முரண்பாடுகளின்றி வெற்றிடத்துக்கேற்ப ஆசிரியர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான தெரிவேயாகும்.

பாடசாலைகளில் கடந்த ஐந்து வருடங்களாக அபிவிருத்தி உத்தியோகத்தராக இருந்தாலும் ஆசிரியராகப் பணியாற்றுகின்ற ஆசிரியர் அபிவிருத்தி உத்தியோகத்தர்களாக இருந்தாலும் இத்தெரிவு முறை தேவையா? நாடளாவிய ரீதியில் அதிக ஆசிரியர் வெற்றிடங்கள் தலைவிரித்தாடிய போதே திசைமுகப்படுத்தப்பட்ட தெரிவுகளை நடத்தியே இவர்களை கற்பித்தலுக்காக பாடசாலைக்குள் இணைத்துக்கொண்டனர்.

இவ்வாறான நிலையில் இவர்கள் அனைவரும் பல்கலைக்கழகப் பட்டதாரிகள். ஒரு பட்டதாரி தன்னுடைய கற்றல் காலங்களில் எத்தனை பரீட்சைகளை கடந்திருப்பார். அவனுக்கு மீண்டும் மீண்டும் பரீட்சை வைப்பதென்பது பல்கலைக்கழகங்களில் கடமைபுரிகின்ற விரிவுரையாளர்களது திறமையை - கல்வித் தகைமையை விமர்சனங்களுக்கு உள்வாங்குவது போன்றதாகும். இவ்வாறு நாங்கள் கருத்துக் கூறினால் அதற்குச் சிலர் துறைசார் அனுபவம் முக்கியம் - அவசியம் என்பார்கள்.

இங்கு பாடசாலையில் இணைக்கப்பட்டுள்ள அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் வரலாற்றைப் புரட்டிப் பார்த்தால் ஐந்து வருட விளைவு கண்ட அனுபவம் உண்டு. அனைத்து கல்விப்புலங்களிலும் உள்ளவர்கள் மனச்சாட்சியோடு சிந்திக்க வேண்டும். ஆனால், இவர்களை தேவைக்கேற்றால்போல் வரன்முறையாக பயன்படுத்திக் கொண்டிருக்கின்ற அரசு இவர்கள் விடயத்தில் நிலையான முடிவை எடுக்காமல் அநீதி விளைவிக்கின்ற முடிவாக மாற்ற எண்ணுவது அரசு விடும் பாரிய தவறு. அத்தோடு இவர்களது இப்பிரச்சினையை அரசியலாக்காமல் அவசியமான ஒரு தொழில் சேவையாக எண்ணவேண்டுமென நாங்கள் எதிர்பார்க்கின்றோம்.

"இவர்கள் ஆசிரியர் சேவையை அபிவிருத்தி உத்தியோகத்தர்களாகவிருந்து செய்தாலும் இவர்கள் ஆசிரியர்களல்ல" என்று தம்பட்டம் அடிக்கின்றனர். அவ்வாறெனில் அவர்களால் வளர்த்தெடுக்கப்பட்டு நல்ல பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களை அவர்கள் ஒரு திறமையான மாணவர்களல்ல என்று எடுத்துக்கொள்ள முடியும்.

கல்வி என்பது ஒரு நாட்டின் தூண். அதனை முறையான வகையில் பயன்படுத்தினால் அந்நாடு பிற்காலத்தில் ஓர் அபிவிருத்தியடைந்த நாடாக மாறிவிடும், மாறுவதற்கு வழிகோலும். ஆனால், இலங்கையைப் பொறுத்தமட்டில் பட்டம் முடிந்த பட்டதாரிகளை ஒரு முட்டாளாகப் பார்க்கின்ற சமூகம் உருவாகியுள்ளதென்றே கூறமுடியும். திறமை சித்திபெற்று பல்கலைக் கழகம் சென்று பட்டம் முடிந்து பின் அவருக்கான தொழிலை அரசாங்கம் வழங்குகின்றபோது ஏற்படும் சவால்கள் எண்ணிக் கணக்கெடுக்க முடியாததொன்று.

01. நியமனம் கிடைக்க கொடி தூக்க வேண்டும்.

02. கல்வித் தகைமைக்குள் முன்னிலையில் இருந்தாலும் ஆசிரியர் ஆட்சேர்ப்பின்போது முக்கியத்துவம் வழங்குவதில்லை. இவற்றையெல்லாம் அரசு சிந்திக்கவேண்டும்.

குறித்த தரப்பினரை ஆசிரியர் சேவைக்குள் இணைப்பதில் அரசின் அநீதி போக்கையே காணமுடிகிறது.

**இவர்களது நியமனத்தில் அடுத்த கட்டத்தில் இருக்கின்ற தொழில் முறைகள், பாதிப்புகள் சிந்திக்கத் தவறிய அநீதி இழைக்கும் அரசு.**

ஐந்து வருட ஆசிரியர் தொழில் அனுபவம் பெற்ற இவர்களை திணைக்களங்களுக்கு மாற்றினால் அவர்களது திணைக்களத் தொழில் அனுபவம் பூச்சியமாகும். அவ்வாறு தொழில் அனுபவம் இல்லாது - பயிற்சி இல்லாது தொழிலுக்கு அமர்த்த நினைப்பது இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்குத் தீங்கிழைப்பதற்குச் சமமாகும். "விளைவின்றி விதைப்பு" இதனை ஏன் சிந்திக்கத் தவறுகின்றது அரசு.

உலகத்தையே உலுக்கிய 'கொரோனா' தொற்றால் நாடு அனைத்து விடயங்களிலும் பாதாளத்துக்குள் தள்ளப்பட்டது. இப்படியான காலகட்டத்துக்குள்ளும் தங்களது உயிரைப் பணயமாக வைத்து நாட்டிலுள்ள மாணவர்களிடையே கல்வியை சரிய விடாமல் பாதுகாத்து தூக்கிவிட்டார்கள். அநீதி இழைக்கும் அரசு இதனை சிந்தித்துப் பார்த்ததுண்டா? இவர்களுக்கு வழங்குகின்ற நன்றிக் கடன்தான் அநீதியா?

" இவர்களது ஆசிரியர் சேவை இணைப்பை விரைவுபடுத்துங்கள்"

"சிந்தியுங்கள்; நன்றிக்குரித்தானவர்களை வியாபாரமாக்க எண்ணாதீர்கள்"

**க. அனிரன்**
**(தலைவர்),**
**பட்டதாரி ஒன்றியம்,**
**இலங்கை.**



# இலங்கையை பாதுகாக்க அவசர சீர்திருத்தங்கள் தேவை

**இம்தியாஸ் ஹசன்**

விரிவான மற்றும் மூலோபாயத் தீர்வுகளைக் கோரும் அரசியல் பதற்றங்கள் மற்றும் பொருளாதார சவால்களை எதிர்கொள்ளும் ஒரு முக்கியமான கட்டத்தை இலங்கை எதிர்கொள்கிறது. அதிகரித்துவரும் தீர்க்கப்படாத கொலைகள், குற்றச்செயல்கள், சர்ச்சைக்குரிய வரவு-செலவுத் திட்ட விவாதங்கள் மற்றும் அதிகரித்துவரும் பொருட்களின் விலைகள் போன்ற பிரச்சினைகள் மீதான சமீபத்திய மக்கள் எதிர்ப்பு தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் மீதான விசாரணையையும் சந்தேகத்தையும் தீவிரப்படுத்தியுள்ளது.

அதேசமயம், பாராளுமன்றத்தில் மக்கள் விடுதலை முன்னணியின் வரலாற்று நடவடிக்கைகளை எதிர்க்கட்சிகள் கடுமையாக விமர்சித்து வருகின்றன. இந்த பன்முக நெருக்கடிக்குத் தீர்வு காண்பதற்கு வெளிப்படைத்தன்மை, அரசியல் நல்லிணக்கம், பொருளாதார மறுமலர்ச்சி, ஊழலற்ற பாதுகாப்புத் துறை மற்றும் சமூக ஒற்றுமை ஆகியவற்றை உள்ளடக்கிய ஒரு முழுமையான அணுகுமுறை தேவைப்படுகிறது.

***அரசியல் நல்லிணக்கம் மற்றும் ஜனநாயக நிறுவனங்களை வலுப்படுத்துதல்***

எந்தவொரு நிலையான தேசத்தின் அடித்தளமும் வலுவான மற்றும் வெளிப்படையான அரசியல் நிறுவனங்களில் தங்கியுள்ளது. தற்போதைய அரசியல் முட்டுக்கட்டைகளை நிவர்த்திசெய்ய திறந்த விவாதங்களை வளர்க்க அனைத்து அரசியல் பிரிவுகள், சிவில் சமூக அமைப்புகள் மற்றும் சமூகத் தலைவர்களை ஒன்றிணைக்கும் ஒரு தளத்தைத் தொடங்குவது ஆரோக்கியமான செயற்பாடாகும். இந்த உரையாடல் தேசிய முன்னுரிமைகள் மற்றும் குறைகளை நிவர்த்திசெய்து அனைத்து குரல்களும் கேட்கப்படுவதையும் மதிக்கப்படுவதையும் உறுதிசெய்வதை நோக்கமாகக்கொண்டிருக்க வேண்டும்.

தீர்க்கப்படாத கொலைகளுடன் சம்பந்தப்பட்ட விசாரணைகள் உட்பட கடந்தகால முறைகேடுகள் பற்றிய குற்றச்சாட்டுகள் மீதான பாரபட்சமற்ற விசாரணைகளை உறுதிப்படுத்த நீதித்துறையின் சுயாட்சியை வலுப்படுத்த வேண்டும். சட்டத்தின் ஆட்சியை நிலைநிறுத்துவது நீதியை வழங்குவதோடு மட்டுமல்லாமல், அரசாங்க நிறுவனங்களின் மீது பொதுமக்களின் நம்பிக்கையையும் மீட்டெடுக்கும்.

அண்மைக்காலமாக கேள்விக்கு உட்படுத்தப்பட்டிருக்கும் அரசியல் ஸ்திரமின்மைக்குப் பங்களிக்கக்கூடிய அரசியலமைப்பு விதிகளை மறுபரிசீலனை செய்து திருத்தம் செய்யவேண்டிய கட்டாயத்துக்கு இளம் அரசாங்கம் முகங்கொடுத்துள்ளது. இவ்விடயம் பாராளுமன்றத்தில் அடிக்கடி பேசப்படும் போதெல்லாம் அரசாங்கம் ஒருவகையான மழுப்பல் கதைகளையே கூறிவருவதை அவதானிக்கக்கூடியதாகவேயுள்ளது. இதில் இதுவரை அரசாங்கம் அதன் வெளிப்படைத்தன்மையைக் காட்டத் தவறுகிறது. சமநிலைகளை வலுப்படுத்துதல், அதிகாரங்களைப் பங்கிடுவதை உறுதிசெய்தல் மற்றும் அடிப்படை உரிமைகளைப் பாதுகாத்தல் ஆகியவை மீள்திறன்மிக்க ஜனநாயகத்தை நோக்கிய முக்கிய படிகளாகும்.

2022ஆம் ஆண்டில் நிதி நெருக்கடியால் தீவிரமடைந்துள்ள இலங்கையின் பொருளாதார சவால்களுக்கு ஒரு மூலோபாய மற்றும் பன்முகப் பதில் தேவைப்படுகிறது.

**நிதி ஒழுக்கம் மற்றும் கடன் மேலாண்மை:** 2025 பாதீடு மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 6.7 வீத நிதி பற்றாக்குறையைத் திட்டமிடுகிறது. இது சர்வதேச நாணய நிதியத்தின் (IMF) பரிந்துரைக்கப்பட்ட இலக்கான 5.2%ஐ விட அதிகமாகும். இந்த இடைவெளியைக் குறைக்க சமபங்கு உறுதி செய்யும்போது வரி தளத்தை விரிவுபடுத்தும் முற்போக்கான வரி சீர்திருத்தங்களை செயற்படுத்துதல் அவசியமாகும். குறைந்த வருமானம் கொண்ட மக்களை விகிதாசாரத்தில் பாதிக்கும் மறைமுக வரிகளை நம்பியிருப்பதைக் குறைப்பது சமூக நீதியை ஊக்குவிக்கும்.

**செலவு பகுத்தறிவு:** பொருளாதார வளர்ச்சி மற்றும் சமூக நலனைத் தூண்டும் துறைகளுக்கு அரசு செலவினங்களுக்கு முன்னுரிமை கொடுக்கவேண்டும். கல்வி, சுகாதாரம் மற்றும் உட்கட்டமைப்பு ஆகியவற்றில் முதலீடுகள் இதில் அடங்கும். அதேநேரத்தில் அத்தியாவசியமற்ற செலவினங்களைக் கட்டுப்படுத்தல் வேண்டும்.

**சிறு மற்றும் நடுத்தர தொழில்கள் (SMEs):** SME கள் பொருளாதாரத்தின் முதுகெலும்பாகும். மலிவுக் கடனுக்கான அணுகலை எளிதாக்குதல், தொழில்நுட்ப உதவிகளை வழங்குதல் மற்றும் அதிகாரத்துவ தடைகளைக் குறைத்தல் ஆகியவை இந்த நிறுவனங்கள் செழிக்க ஏதுவாக அமையும். SME களை ஆதரிப்பதற்காக அர்ப்பணிக்கப்பட்ட தேசிய மேம்பாட்டு வங்கியை நிறுவுவதற்கான அரசாங்கத்தின் திட்டம் இந்த விஷயத்தில் பாராட்டத்தக்க முயற்சியாகும்.

**ஏற்றுமதியைப் பல்வகைப்படுத்தல்:** குறுகிய அளவிலான ஏற்றுமதிப் பொருட்களைச் சார்ந்திருப்பதைக் குறைப்பது மிகவும் முக்கியமானது. தகவல் தொழில்நுட்பம், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, அதிக மதிப்புள்ள விவசாயம் போன்ற துறைகளில் முதலீடு செய்வது அந்நியச் செலாவணி வருவாய்க்கான புதிய வழிகளைத் திறக்கும்.

**அந்நிய நேரடி முதலீட்டை ஈர்ப்பது (FDI):** FDIக்கு சாதகமான சூழலை உருவாக்குவது, அரசியல் ஸ்திரத்தன்மையை உறுதிசெய்தல், ஒழுங்குமுறை கட்டமைப்புகளை ஒழுங்குபடுத்துதல் மற்றும் முதலீட்டாளர்களுக்கு சலுகைகளை வழங்குதல் ஆகியவற்றை உள்ளடக்கியது. வெளிப்படையான மற்றும் நிலையான கொள்கைகள் முதலீட்டாளர்களின் நம்பிக்கையை அதிகரிக்கும்.

சமூக கட்டமைப்பை வலுப்படுத்தும் முயற்சிகளால் பொருளாதாரக் கொள்கைகள் பூர்த்திசெய்யப்பட வேண்டும். பொருளாதார அதிர்ச்சிகளிலிருந்து பாதிக்கப்படக் கூடிய மக்களைக் காக்க சமூகப் பாதுகாப்புத் திட்டங்களை விரிவுபடுத்தி மேம்படுத்தவும். இந்தத் திட்டங்கள் போதுமான நிதியுதவி மற்றும் திறமையாக நிர்வகிக்கப்படுவதை உறுதிசெய்வது அவற்றின் வெற்றிக்கு அவசியமாகும்.

கொள்கை முடிவுகள் தொடர்பாக அரசாங்கத்தின் வழக்கமான தகவல் தொடர்பு நம்பிக்கையை வளர்க்கிறது. பொது கருத்துகளுக்கான தளங்களைப் பயன்படுத்துதல் மற்றும் கவலைகளுக்குப் பதிலளிப்பதன் மூலம் அரசாங்கத்துக்கும் அதன் குடிமக்களுக்குமிடையிலான இடைவெளியைக் குறைக்க முடியும். கல்வி மற்றும் திறன் மேம்பாட்டில் முதலீடு செய்வது, ஆற்றல்மிக்க பொருளாதாரத்தின் தேவைகளைப் பூர்த்திசெய்ய பணியாளர்களை சித்தப்படுத்துகிறது. தொழில் பயிற்சிக்கு முக்கியத்துவம் கொடுப்பதன் மூலம் குறிப்பாக, இளைஞர்களிடையே வேலையின்மை மற்றும் வேலையின்மைக்கு தீர்வு காண முடியும்.

நவீன உட்கட்டமைப்பு மற்றும் தொழில்நுட்ப ஒருங்கிணைப்பு ஆகியவை பொருளாதார வளர்ச்சிக்கான ஊக்கிகளாக உள்ளன. போக்குவரத்து வலையமைப்புகளை மேம்படுத்துவது வணிகம் செய்வதற்கான செலவைக் குறைக்கிறது மற்றும் போட்டித்தன்மையை அதிகரிக்கிறது. மேற்குப் பிராந்திய மெகாபோலிஸ் போன்ற திட்டங்கள் நகர்ப்புற உட்கட்டமைப்பை மாற்றுவதையும் பொருளாதார நடவடிக்கைகளை மேம்படுத்துவதையும் மற்றும் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளன. டிஜிட்டல் மயமாக்கலை ஏற்றுக்கொள்வது அரசாங்க சேவைகளை நெறிப்படுத்தலாம் மற்றும் புதுமைகளை வளர்க்கலாம். டிஜிட்டல் பொருளாதார அதிகார சபையை நிறுவுதல் மற்றும் இலங்கை தனித்துவ அடையாளத் திட்டம் (டிஜிட்டல் ஐடி) ஆகியவை பணமில்லா பொருளாதாரத்தை உருவாக்குவதற்கும் சேவை வழங்கலை மேம்படுத்துவதற்குமான படிகளாகும்.

நீண்ட கால பொருளாதாரத் திட்டமிடலுக்கு சுற்றுச்சூழலைக் கருத்திற்கொள்ள வேண்டும். சூரிய, காற்று மற்றும் நீர்மின்சாரத்தில் முதலீடு செய்வதன் மூலம் இறக்குமதி செய்யப்படும் எரிபொருட்களை நம்பியிருப்பதைக் குறைப்பது, ஆற்றல் பாதுகாப்பு மற்றும் சுற்றுச்சூழல் நிலைத்தன்மையை அடைய முடியும். மேலும், சுற்றுச்சூழல் நட்பு விவசாய நுட்பங்களை ஊக்குவிப்பது இயற்கை வளங்களைப் பாதுகாக்கிறது மற்றும் உணவுப் பாதுகாப்பை உறுதிசெய்கிறது. விவசாயிகளுக்கு பயிற்சி மற்றும் வளங்களை வழங்குவது இந்த மாற்றத்தை எளிதாக்கும்.

இதனிடையே, சமீபத்திய வாரங்களில், நீதிமன்ற அறைக்குள் ஓர் உயர்மட்ட கொலை உட்பட ஆபத்தான வன்முறைச் சம்பவங்களை இலங்கை கண்டுள்ளது.

பெப்ரவரி 19, 2025 அன்று, கணேமுல்ல சஞ்சீவ என அழைக்கப்படும் பிரபல பாதாள உலக நபரான சஞ்சீவ குமார, கொழும்பிலுள்ள புதுக்கடை நீதிமன்ற வளாகத்துக்குள் சுட்டுக்கொல்லப்பட்டார். வழக்குரைஞர் போல் மாறுவேடமிட்டு ஒரு சட்ட நூலுக்குள் மறைத்து வைத்திருந்த துப்பாக்கியை கடத்தியவர். நீதிமன்ற விசாரணையின்போது தாக்குதலை நடத்தினார். நீதிமன்ற அறையின் பாதுகாப்பான எல்லைக்குள் நிறைவேற்றப்பட்ட இந்தப் படுகொலையின் துணிச்சலான தன்மையானது இலங்கையின் நீதித்துறை அமைப்பில் பாதுகாப்பு நடவடிக்கைகளின் செயற்றிறன் பற்றிய குறிப்பிடத்தக்க கவலைகளை ஏற்படுத்தியுள்ளது.

இந்த மீறலுக்கு பதிலளிக்கும் வகையில் நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார நீதிமன்ற அறை பாதுகாப்பைப் பலப்படுத்த உடனடி சீர்திருத்தங்களை அறிவித்தார்.

(தொடர்ச்சி 18 ஆம் பக்கம்...)

# “பெருந்தோட்டத் தொழிலாளர்களின் தடம் பதிக்கும் குறிப்புகள்”

சந்தனம் சத்தியநாதன்



தொழிலாளர் என்பவர் யார்? அவரின் சேவை அல்லது கடமை என்ன? என்ற கேள்விகளுக்கு விடையாக, உழைக்கும் அனைவரும் தொழிலாளர்கள் என்றால் அவர்களில் பல்வேறு பிரிவினர்களை நாம் அன்றாட வாழ்க்கையில் காணமுடியும். சிலர் தமது உடலால் உழைப்பவர்கள். சிலர் மூளை உழைப்பாளர்கள். தமது கல்வி அறிவை மட்டும் பயன்படுத்தி காரியாலயங்களில் உழைப்பவர்கள். உதாரணமாக, அரச அலுவலகத்தில் வேலை செய்பவர் மூளை உழைப்பாளி எனவும் பெருந்தோட்டத்தில் தேயிலை மலையில் கொழுந்தெடுக்கும் பெண் தொழிலாளியை உடல் உழைப்பாளி எனவும் நாம் புரிந்துகொள்ள முடியும்.

இருப்பினும், தமது உடல் உழைப்பைக் கடனுக்கு விற்பனைசெய்பவர்களே தொழிலாளர்கள் என்று நாம் உறுதியாகச் சொல்ல முடியும். காலை முதல் மாலை வரை தமது கடின உழைப்புச் சக்தியை கடனுக்கு விற்பனை செய்துவிட்டு மாலை வரை காத்திருந்து அதற்கான கூலியைப் பெற்றுக்கொள்பவர்கள் நாட்கூலி தொழிலாளர்கள். மாதம் முழுவதும் தமது உழைப்புச் சக்தியை கடனுக்கு விற்பனை செய்துவிட்டு அடுத்த மாதம் 10ஆம் திகதி அதற்கான ஊதியத்தை மொத்தமாக பெறுபவர்கள் அநேகமாக பெருந்தோட்டத் தொழிலாளர்கள். அவர்களும் இப்பிரிவினில் உள்ளவர்கள் என்று கூறலாம். அவர்களும் இந்தத் தொழிலாளர் வர்க்கத்தைச் சார்ந்தவர்கள் என்ற முடிவுக்கு வர முடியும்.

எனவே, தொழிலாளர் வர்க்கம் தொழிற்றுறைகளில் வேலை செய்யும்போது கட்டாயமாக அவர்களின் தொழில், தொழில் சார்ந்த பிரச்சினைகள், தொழில் உரிமை பிணக்குகள் தோன்றுவது இயல்பானதே. அவ்வாறு ஏற்படும் பிணக்குகளைத் தீர்ப்பது ஒரு தனி நபருக்கு முடியாமல் போகும் நிலை ஏற்படலாம். தனது தரப்பு நியாயத்தை தனக்கு எடுத்துச்சொல்ல முடியாதுபோகும்போது மூன்றாம் தரப்புக் குழுவொன்று அவசியமாகிறது. அப்படி தேவைப்படும் குழுதான் தொழிற்சங்கம் என்பதை காலப்போக்கில் தொழிலாளர்கள் புரிந்து தமது தொழில் பிரச்சினைகளைப் பேசுவதற்கு தொழிற்சங்கங்களை உருவாக்கினார்கள்.

ஆனால், தற்போதுள்ள தொழிற்சங்கங்கள் அவ்வாறு செயற்படுகின்றனவா என்பதை தொழிலாளர்கள் புரிந்துகொள்வது அவசியம். தொழிற்சங்கத்தின் செயற்பாடுகளால் அதன் புனிதத்தன்மை பேணப்படுகின்றதா என்பதை அவரவர் மனச்சாட்சியைத் தொட்டுக் கேட்டால் பதில் சொல்லும்.

இவ்வாறு நாம் தொழிற்சங்கங்களைப் பற்றி ஆராய்கின்றபோது, நமது பார்வையை சற்று இலங்கையின் பக்கம் திருப்பினால்....

1833இல் இலங்கை அச்சாளர் சங்கம் இந்நாட்டில் முதலாவதாக ஆரம்பிக்கப்பட்ட தொழிற்சங்கமாகும் என்பது உறுதியாகிறது. 1919இல் காலனித்துவ ஆட்சி முறைமையானது மக்களின் சமூக, அரசியல் வாழ்க்கையில் அடிப்படை மாற்றங்களை ஏற்படுத்தும் வரை இலங்கையில் தொழிற்சங்க வளர்ச்சியில் எதுவித முன்னேற்றமும் காணப்படவில்லை.

காரணம், இலங்கை ஒரு விவசாயப் பொருளாதார நாடாக இருந்தமையே! விசேடமாக பிரித்தானிய ஆட்சியாளர்கள் இலங்கை மக்களின் கல்வி



நடவடிக்கைகளை விரிவடையச் செய்வதன் மூலம் இங்கிலாந்தில் அவர்களுக்கு உயர் கல்வி வசதிகளைப் பெற்றுக்கொடுப்பதன் மூலமும் சமூக, அரசியல் துறையில் பெரும் புரட்சிகரமான மாற்றங்களை ஏற்படுத்தினர்.

இங்கிலாந்துக்குச் சென்ற இலங்கையர்கள் அக்காலத்தில் இங்கிலாந்திலும் ஐரோப்பாவிலும் தலையோங்கியிருந்த சமூக, அரசியல் கல்வி மூலம் மறுமலர்ச்சி பெற்றனர். 1900ஆம் ஆண்டுகளில் பிரித்தானிய தொழிலாளர்கள் இயக்கமானது பிரித்தானிய தொழிலாளர் கட்சியின் ஆரம்ப கர்த்தாக்களான பியட்ரிஸ் மற்றும் சிட்னி மெப் எனும் தொழி லாளர் களாக விளங்கிய பொருளாதார நிபுணர்களின் தாக்கத்துக்குள்ளாகியது.

தமது இலக்குகளை அடையும்பொருட்டு தொழிலாளர் இயக்கங்களால் அடிப்படை அரசியல், பொருளாதார சீர்திருத்தங்களை ஏற்படுத்துதல் வேண்டுமென்ற மெப்பின் சிந்தனையால் அந்நாட்டு மக்கள் கவரப்பட்டு ஊக்குவிக்கப்பட்டனர்.

சம்பளத்தை முடிந்தளவு ஆகக் குறைவாக வழங்குவதற்கு தொழில் வழங்குவோர் முயற்சிக்கும் சந்தர்ப்பத்தில் தொழிற்சங்கங்கள் தோன்றும் எனும் சித்தாந்தம் ஜேர்மன் இனத்தைச் சேர்ந்த சமூகவியல் தத்துவஞானியான கார்ல்





மார்க்ஸ் என்பவரால் முன்வழங்கப்பட்டது.

அத்தகைய சம்பள முறைமைகளை மாற்றுவதற்கான போராட்டத்தைத் தொழிலாளர்களால் தனித்து மேற்கொள்ள இயலாதெனவும் அறிவு படைத்தோர் இதில் தலையிட்டு தொழிற்சங்கங்களுக்கு சிறந்த அரசியல் தலைமைத்துவத்தை வழங்குதல் வேண்டும் என்பதையும் மார்க்ஸ் வலியுறுத்தினார்.

1930ஆம் ஆண்டுகளில் ‘மெப்’ மற்றும் ‘கார்ல் மார்ஸ்’ எனும் இருவரின் கோட்பாடுகளால் கவரப்பட்ட இலங்கை தொழிற்சங்கத் தலைவர்கள் நகர்ப்புறங்களிலும் தோட்டத் துறைகளிலுமுள்ள தேர்ச்சியற்ற தொழிலாளர்களுக்கான தொழிற்சங்கங்களை உருவாக்கினார்கள்.

இக்காலத்தில் பிரதான தொழிற்சங்கங்கள் மெப்பின் அரசியல் பொருளாதார கோட்பாட்டை அடிப்படையாகக்கொண்டே ஆரம்பிக்கப்பட்டன. வகுப்புவாதத்தை அடிப்படையாகக்கொண்டு ஆரம்பிக்கப்பட்ட மார்க்ஸ் லெனின் தொழிற்சங்க இயக்கமானது செல்வந்தர்களை எதிர்த்து நின்றதுடன், கைத்தொழில் அமைப்புகளின் நிர்வாகத்தை தொழிலாளர் வசம் எடுத்தல் வேண்டும் எனவும் கோஷம் எழுப்பியது. எனினும், இத்தொழிற்சங்கங்களுக்கு கேகாலை, இரத்தினபுரி, களுத்துறை மற்றும் மாத்தறை இறப்பர் தோட்டங்களில் கடமை புரிந்தோரில் ஒருசிலரையே சேர்த்துக்கொள்ளக்கூடியதாக இருந்ததாகச் சொல்லப்படுகிறது.

இந்தத் தொழிலாளர்களை மார்க்சிய அரசியல் இயக்கத்தில் வைத்துக்கொள்ளும் பொருட்டு காலனித்துவ ஆட்சி முறைமைக்கும் வகுப்புவாத ரீதியிலான ஏற்றத்தாழ்வுக்கும் எதிர்ப்புத் தெரிவிப்பதும் தொழில் புரியும் நிலையங்களில் மாற்றத்தைக் கோருவதுமான கட்சி குரல்கள் உபயோகிக்கப்பட்டன. இந்தத் தொழிற்சங்க இயக்கமானது அப்போது இலங்கையிலிருந்து மற்றைய தொழிற்சங்கங்கள் பின்பற்றிய மெப்ஸ் கோட்பாட்டுக்கு முரணான கொள்கைகளையே பின்பற்றியது.

இலங்கை சுதந்திரத்தைப் பெற்றதன் பின்பு சுதந்திர ஜனநாயக அரசாங்கமொன்று ஆட்சிக்கு வந்ததால் இந்தத் தொழிற்சங்கமானது காலனித்துவ ஆட்சி முறைமைக்கு எதிராக குரல் எழுப்புதலை நிறுத்திக்கொண்டது.

1950ஆம் ஆண்டு காலப்பகுதியில் தேயிலையின் தசாப்தத்தின் முடிவு காலம் வரை ஓர் உன்னத நிலையிலேயே காணப்பட்டது. கொரிய யுத்தப் பூரிப்பு அஸ்தமித்துவிட்ட பின்னர் கூட தேயிலை விலைகள் ஓர் உயர்ச்சிப் போக்கையே காட்டிய வண்ணமிருந்தன. உதாரணமாக, 1953ஆம் ஆண்டு ரூபா 2.53 ஆகவிருந்த இறாத்தலொன்றுக்கான தேயிலை விலை 1955ஆம் ஆண்டு ரூபா 3.30ஆக உயர்வடைந்தது. ஆனால், தேயிலைக் கைத்தொழிலின் சிறப்பு நிலையைப் புலப்படுத்துவதற்கான குறிகாட்டிகளுள் அதன் விலை முக்கியத்துவம் குறைந்ததொன்றே எனலாம். விலை தவிர்ந்த ஏனைய சில குறிகாட்டிகளைக்கொண்டு தேயிலைத் தொழிலின் நன்னிலையை இன்னும் சிறந்த முறையில் படம் பிடித்துக் காட்ட முடியும்.

1940களின் இறுதியிலும் 1950களின் ஆரம்பத்திலும் பணவீக்கம் என்பது உலகளாவிய நிலையில் ஏற்பட்டபோது உற்பத்திச் செலவில் அதிகரிப்பு ஏற்படுவதைத் தவிர்க்க முடியாதிருந்த போதும் அதன் பின்பு உற்பத்தி அலகுக்கான செலவில் மேலும் உயர்வு ஏற்படுவதைத் தடுக்கக்கூடிய வகையில் ஊழிய உற்பத்தித் திறமையானது அதிகரித்திருந்தது. ஒரு தொழிலாளி உற்பத்திசெய்யும் தேயிலையின் அளவு 1950ஆம் ஆண்டு 563 இறாத்தல் என்ற அளவிலிருந்து 1955ஆம் ஆண்டு 701 இறாத்தலாகவும் 1960இல் 755 இறாத்தலாகவும் உயர்வடைந்தது. இதனடிப்படையில் தேயிலை உற்பத்தி பற்றி அனைவரும் கதைத்தபோதும் அத்துறையில் தொழில் புரியும் தொழிலாளர்களின் வாழ்வாதாரம் மற்றும் சமூக நலன்களை யாரும் பேச முன்வராமை வருந்தத்தக்கது.

பெருந்தோட்டச் சமூகத்தின் வரலாறு பற்றி பேசும்போது முதலில் கோப்பி பயிர்செய்கை ஆரம்பிக்கப்பட்டது.

பின்னர் தேயிலை பயிர்ச்செய்கை ஆரம்பமானது. இதனடிப்படையில் அக்காலகட்டத்தில் பெரிய கங்காணிமார்களே தொழிலாளர்களின் சகல விடயங்களுக்கும் பொறுப்புவாய்ந்தவர்களாக இருந்தனர். பெரிய கங்காணிமார்களின் ஆதிக்கத்தை நேரில் கண்ட கோ. நடேசய்யர் இந்த மக்களின் மீட்சிக்காக தொழிற்சங்கமொன்றை ஆரம்பிக்க யோசித்தார்.

மலையக மக்களுக்காக முதல் தொழிற்சங்கத்தை ஆரம்பித்தவர் தேசபக்தன் கோ. நடேசய்யர் என்பது வரலாற்று உண்மையாகும். ஒவ்வொரு காலப்பகுதியிலும் அவ்வப்போது மலையக சமூகத்தை மீட்க யாராவது வந்தாலும் அவர்களால் முழுமையாக இம் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வைக் காண முடியாதவர்களாகவே 200 வருடங்களைக் கடத்திவிட்டனர்.

இனியாவது ஒரு மீட்பர் புதிதாக வந்து பிரச்சினைகள் தீருமா? என்று பொறுத்திருந்து பார்ப்போம்...!



# ஆருப்பையா கங்காணி

த.யுவராஜ்

பொலி சொல்லிவிட்டு முதல் கைப்பிடி கொழுந்தை பிடுங்கி தலைசாக்கில் போட்டுவிட்டு கொழுந்து பிடுங்க ஆரம்பித்ததும் கங்காணியின் குரல் கேட்டது.

**கங்காணி:** ஏ லெச்சுமி, மொதலாந்தேதி அதுமா பொலி சொன்னியா புள்ள.

**லெச்சுமி:** அத சொல்லாம எப்படி கங்காணி. அதெல்லா சொல்லிதா தொடங்கினே.

**கங்காணி:** அதானே பாத்தே. மறந்துடியோனு நெனச்சேன்.

**லெச்சுமி:** அது எப்படியண்ணே, நமக்கு சோறு போடுற சாமிய மறப்பேன்.

**கங்காணி:** சரி சரி தவறுதலா சொல்லீட்டே. மன்னிச்சுக்க.

**லெச்சுமி:** ஏண்ணே, மன்னிப்பு எல்லா கேக்குறீங்க. நம்ம பாட்டன் முப்பாட்டன் நமக்கு சொல்லிக்கொடுத்துட்டுப் போன இந்த தொழில மரியாத கொடுத்து பாத்துக்குறது நம்ம கடம இல்லையண்ணே.

**கங்காணி:** அதுனா உண்மையான கத லெச்சுமி. 200 வருசத்துக்கு முன்னால நம்ம மக்கள இந்தியாவுல இருந்து கூட்டிக்கிட்டு வரும்போது நாம தொழில் செய்யும்போது அலுப்பு தெரியான இருக்க பாட்டு படிக்கிறதையும் நாம செய்ற தொழில எப்படி மதிக்கனு அப்படின்றதையும் சொல்லி கொடுத்து தா கூட்டிக்கிட்டு வந்தாங்க.

**லெச்சுமி:** அப்படி அவங்கள கூட்டிக்கிட்டு வரும்போது நம்மலோட பொக்கிஷமான கூத்துக்கலைகளையும் கொண்டுவர அவங்க மறக்கல.

**கங்காணி:** ஆமா புள்ள அதுல இப்போ பல கூத்துகள் இல்லாமலே போயிடுச்சி. இருக்க சில கூத்துகளும் இப்போ அழிஞ்சிக்கிட்டு வருது.

அப்படி அழிஞ்சிக்கிட்டு வார கூத்துகள தொடர்ந்து நடத்தி செல்றதுக்கும் அத கொண்டு நடத்துறதுக்கும் இப்போ இங்க பழைய ஆக்கள் யாருமே இல்ல.

**லெச்சுமி:** அதுனா உண்ம தாண்ணே. இப்பொ இருக்க இளவட்டத்துக்கு இந்த கூத்து மேல எந்த நாட்டமும் இல்ல.

இப்போ இருக்க பசங்க எல்லா ஊருல எந்த நல்லது கெட்டது நடந்தாலும் மொத வேலையா பாருக்குப் போய்ட்டு நல்லா குடிச்சிட்டு வந்து கொழப்பம் பன்றதுல தா மொத ஆளா இருக்காங்க.

இது நம்ம ஊருல நடக்குற விசேசம். இத நாம தா சரிய செய்யனும் அப்படிங்கிற எண்ணம் யாருகிட்டையும் இருக்குறதே இல்ல.

இப்படி இருந்த எப்படி அண்ணே நம்ம முன்னோர்கள் சொல்லி கொடுத்த கூத்துகள அழியாம பாதுகாக்குறது.

**கங்காணி:** நம்மளுக்கு ஒவ்வொரு விசேசம் போதும். இந்த குடி பழக்கத்த பழகி கொடுத்ததே இந்த அரசாங்கம் தானே.

இதுல நம்ப பசங்கள குத்தம் சொல்லி எதுவும் நடக்கப்போறது இல்ல.

**லெச்சுமி:** ஏண்ணே நம்ம பசங்க வீணாபோறதுக்கு அரசாங்கத்த குத்தம் சொல்றீங்க.

**கங்காணி:** அப்படி இல்ல லெச்சுமி, எந்த ஒரு விசேசம் நடந்தாலும் மொத பாரத்தா தொரந்து வைப்பாங்க. நம்ப ஆளுங்க அங்க போய்ட்டு மொத வேலயா நல்லா குடிச்சிட்டு தா அடுத்த வேலையவே பாக்கப் போறாங்க.

இதுல எங்கருந்து நம்ப ஆளுங்க இந்த கூத்த எல்லா பாதுகாக்கப் போறாங்க.

**லெச்சுமி:** இந்த குடிபழக்கத்துக்கு காரணம் அரசாங்கம்னு நீங்க சொன்னா அத நம்ப ஊர்கள்ள நிறுத்துறதுக்கு நடவடிக்க எடுக்களாம் தானே அண்ணே.

**கங்காணி:** அது எப்படி லெச்சுமி அத நிப்பாட்டிட்டா அரசாங்கத்துக்கு எங்கருந்து வருமானம் வரும்.

**லெச்சுமி:** ஆமாண்ணே அப்படி ஒரு விசியம் இருக்குது தா.

ஆனா அண்ணே இந்த கூத்துக்கள், கலைகள், அப்பறம் இந்த பாட்டு வகைகளையும் எப்படி அண்ணே பாதுகாக்குறது.

**கங்காணி:** அதுக்கு நாம மொத நமக்கு தெரிஞ்ச அப்பறம் அழிஞ்சிக்கிட்டு வார இந்த கூத்துகளையும் கலைகளையும் தொகுத்து எழுத்து வடிவுல கொண்டு வரனும்.

அதுக்கு பெறகு நம்மலோட அடுத்த சந்திதிக்கு அத சொல்லி கொடுக்கனும். அத அவங்கள கத்துக்க வைக்கனும்.

அதோட வருசத்துக்கு ஒரு தடவ சரி ஊர் எல்லா ஒன்னு கூடி ஒரு பொது எடத்துல நம்மளுக்கு பரிச்சியமான கூத்த கட்டி ஆடனும்.

இப்படி தொடந்து செஞ்சிக்கிட்டு வந்த நம்ம கூத்துகள அடுத்த தலைமுறைக்கு இலகுவா கொண்டு சேர்க்கலாம்.

அதனால நம்ம முன்னோர்கள் கத்துகொடுத்துட்டுப் போன நம்மலோட பாரம்பரிய கலைகளையும் கூத்துகளையும் பாதுகாத்து நம்மலோட அடுத்த தலைமுறைக்கு கொண்டு செல்றது நம்மலோட தலையாயக் கடமை. அத கண்டிப்பா நாம ஒவ்வொருவரும் கண்டிப்பா செய்யனும்.

# பிழையற்ற தமிழ் அறிவோம்

### சின்னத்திரையா, சின்ன திரையா? கைபேசியும் கைப்பேசியும்!

அண்ணாமலை பல்கலைக்கழகம் என்று எழுதுகின்ற பத்திரிகைகள் உள்ளன. சட்டப் படிப்பு, கல்வித் துறை, வருகை பதிவேடு என்றெல்லாம் வருவனவற்றை ஏடுகளில் பார்க்கும்போது தமிழ் நெஞ்சம் கொதிக்கிறது. அதேநேரம், ஒற்று மிகக் கூடாத இடத்தில் ஒற்றெழுத்தைப் போட்டு எழுதி அந்தச் சொல் இன்று எங்கும் நீக்கமற நிறைந்துவிட்டது. அச்சொல்: 'சின்னத்திரை' என்பதாம். வீட்டில் பார்க்கும் தொலைக்காட்சியைத்தான் இப்படிச் சுட்டுகிறோம். திரைப்பட அரங்கிலிருப்பது பெரிய திரை. ஆதலின் இது சிறிய திரை.

சிறிய, பெரிய, சின்ன, பெரிய எனும் சொற்களுக்கு முன் வல்லினம் மிகாது. சிறிய திரை, சின்ன திரை, பெரிய தம்பி, சின்ன கடை, பெரிய பையன் என்று இயல்பாக எழுதிட வேண்டும். 'சின்னத் திரை' என்றால் சின்னம்+திரை - ஏதோ ஒரு சின்னம் வரையப்பட்ட திரை என்று பொருளாகும். சிறிய கொடியை 'சின்ன கொடி' என்றுதான் சொல்ல வேண்டும். 'சின்னக்கொடி' என்றால் ஒரு சின்னம் (எழுகதிர், இரட்டை இலை, கதிர் அரிவாள், தாமரை) பொறித்த கொடி என்று பொருளாகும்.

'தொலைக்காட்சி' என்று சரியாகச் சொல்லும் நாம் 'தொலை பேசி' என்று ஏன் பிழையாகச் சொல்லிப் பழகிவிட்டோம் என்பது தெரியவில்லை. பேசியைத் தொலைத்துவிடு என்றன்றோ பொருள்தரும். தொலைவிலிருந்தும் காணக்கூடியது 'தொலைக்காட்சி' எனில் தொலைவிலிருந்து பேசக் கூடியது 'தொலைப்பேசி'தானே?

கை என்றால் உடம்பின் ஓர் உறுப்பு என்பதன்றிச் சிறியது என்னும் பொருளும் உண்டு. கைக்குட்டை, கைப்பை, கைக்குழந்தை, கைப்பெட்டி எனச் சொல்லுகிறோம். கையில் வைத்துப் பேசுகின்ற (சிறிய) பேசியும் கைப்பேசிதானே? ஏன் இதனை மட்டும் கைபேசி என்கிறார்கள்? பிழையன்றோ? கைக்கடிகாரம் எவ்வளவு காலமாக வழங்கப்பட்டுவரும் சொல். எப்படி இந்தக் கை பேசி வந்ததோ? இப்படியே நீளச் சொன்னால் முடிவே இல்லை. ஆதலின் வல்லெழுத்து மிகும் இடங்கள், மிகா இடங்கள் பற்றி ஒரு சுருக்கமான பட்டியல் தருகிறோம்.

**வல்லெழுத்து மிகும் இடங்கள்:**

01. அ, இ, எ - இம்மூன்று எழுத்தின் முன்னும், அந்த, இந்த, எந்த என்பவற்றின் முன்னும் மிகும்.
(எ-டு) அப்பையன், இப்பையன், எக்குழந்தை?
அந்தப் பையன், இந்தத் தாத்தா, எந்தச் சாத்தன்?

02. ஓரெழுத்து ஒரு மொழி முன் மிகும்.
(எ-டு) பூப் பறித்தான், கைக் குழந்தை.

03. ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் முன் மிகும்.
(எ-டு) அறியாப் பிள்ளை, தீராத் துன்பம்.

04. அகர, இகர ஈற்று முன் மிகும்.
(எ-டு) வரச் சொன்னான், ஓடிப் போனான்.

05. வன்தொடர்க் குற்றுகரம் முன் மிகும்.
(எ-டு) எட்டுத் தொகை, கற்றுக் கொடுத்தான்.

06. திரு, நடு, முழு, பொது என்னும் சொற்கள் முன் மிகும்.
(எ-டு) திருக்கோவில், நடுத்தெரு, முழுப்பேச்சு, பொதுப்பணி.

07. இரண்டாம் வேற்றுமை, நான்காம் வேற்றுமை விரியின் பின் மிகும்.
(எ-டு) பூனையைப் பார்த்தான், கடைக்குப் போனான்.

08. பண்புத் தொகையில் மிகும்.
(எ-டு) வெள்ளைத் தாமரை, மெய்ப்பொருள், பசுமைத் தாயகம்.

09. இருபெயரொட்டுப் பண்புத் தொகையில் மிகும்.
(எ-டு) தைத் திங்கள், வட்டக் கல், கோடைக்காலம்

10. உவமைத் தொகையில் மிகும்.
(எ-டு) முத்துப்பல், கமலச் செங்கண்.

**(தமிழ் வளரும்)**
**( நன்றி தினமணி)**

## குறுக்கெழுத்துப் போட்டி - 58

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | ■ | 2 | | 3 | | ■ | 4 |
| | ■ | | ■ | | ■ | | ■ | 5 | |
| | ■ | 6 | | | | | ■ | ■ | |
| | ■ | ■ | ■ | | ■ | ■ | | ■ | |
| ■ | ■ | 7 | | | ■ | | 8 | ■ | ■ |
| | ■ | ■ | 9 | ■ | 10 | ■ | | | 11 |
| 12 | | 13 | ■ | 14 | | ■ | | ■ | |
| | ■ | | ■ | | ■ | 15 | | ■ | ■ |
| | ■ | | ■ | ■ | | ■ | 16 | | 17 |
| ■ | | 18 | ■ | 19 | 20 | ■ | ■ | 21 | |

**இடமிருந்து வலம்**
01. கடுகு சிறிதானாலும் .....பெரிது.
02. அரங்கத்தில் நடிப்பது.
05. பிரிவுபடுத்து.
06. மேளம் அடிப்பவரை இப்படிக் கூறுவர்.
07. காலை மடித்துநின்று பணிதல்.
12. பறவை.
14. துன்பம்.
15. பிடுங்கி நடும் பயிர் (ஓரெழுத்து இல்லை)
16. கப்பல் ஓட்டுபவர்.
19. குற்றத்தின் நிமித்தம் பிடிபடுபவர்.
21. சூடாகிப் பொங்குவது.

**மேலிருந்து கீழ்**
01. பாதுகாப்பவன்.
02. தினத்தைக் குறித்து நிற்பது.
03. குமரிப் பெண் (குழம்பியுள்ளது).
04. ஆற்றில் போட்டாலும் ....போடு.
10. அதிக வெப்ப காலத்தை இப்படி அழைப்பர்.
11. நியாயம் ஒத்த சொல்.
14. பயம்.
17. காலடி வைத்தல்.

**கீழிருந்து மேல்**
06. ஓர் இராசி.
09. இசை.
16. தகப்பனின் இரண்டாந்தாரம்.
20. திருவாளர் என்பதை சுருக்கமாக இப்படிக்கூறுவர்.
21. நவராத்திரி பண்டிகைகளில் பொம்மைகளை அமைத்தல்.

**வலமிருந்து இடம்**
08. செவிலியை இப்படி அழைப்பர்.
11. மிதந்து செல் (குழம்பியுள்ளது).
18. அடையாளம்.

**மூளைக்கு வேலை பகுதியில் தரப்படுகின்ற ஆக்கங்களுக்கான சரியான விடைகளை thamilanweekly@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு எழுதி அனுப்பலாம். வாட்ஸ்அப் இல: 0761393805**

## குறுக்கெழுத்துப் போட்டி - 57க்கான விடைகள்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 க | ழ | ஞ் | 2 சு | ■ | 3 ப | ந் | 4 த | ய | ம் |
| ண் | ■ | ■ | ட் | 5 சீ | டு | ■ | ர் | ■ | ர |
| 6 கூ | த் | 7 தா | டி | ■ | 8 கொ | கு | க் | ■ | க |
| டு | ■ | ர | ■ | 9 க | லை | ■ | 10 க | ண் | ணி |
| ■ | ப் | 11 கை | ப | ற் | ■ | ■ | ம் | ■ | 12 து |
| ணி | 13 த | ■ | ■ | றா | 14 பு | ■ | ■ | ■ | ■ |
| ■ | 15 க | ள் | ■ | ழை | ■ | ■ | தி | ■ | க |
| ■ | ன் | ■ | சை | ■ | 16 தி | ர | 17 வி | ய | ம் |
| ■ | 18 ப | 19 த | 20 வி | ■ | ■ | ன் | ■ | ■ | ங் |
| ■ | ■ | டு | ■ | 21 ம | து | 22 சூ | ன | ன் | 23 த |

# உலகின் மிகவும் ஆபத்தான பறவைகள்

அமெரிக்காவை மையமாகக்கொண்ட பார்ன் ஃப்ரீ யுஎஸ்ஏ ஏவியன் வெல்ஃபேர் (Born Free USA Avian Welfare) உலகின் அனைத்துப் பறவைகளையும் கண்காணித்து அவற்றின் நலனைப் பேணிக் காத்து வருகிறது. அந்த நிறுவனம்தான் உலகின் மிகவும் கொடிய வகை பறவைகளைப் பட்டியலிட்டு உள்ளது. அவற்றில் நீங்கள் பார்த்த பறவைகளும் கூட உள்ளதென்றால் நம்புவீர்களா? அவை பற்றிய சிறிய குறிப்பு இது...



**காசோவரி :** 'காசோவரி' பூமியில் மிகவும் ஆபத்தான பறவை என்ற தலைப்புக்குத் தகுதியானதென்று பலர் கூறுகின்றனர். 70 கிலோ எடையும் முழு ஆறு அடி உயரமும் கொண்ட இது, தற்போதுள்ள மிகப்பெரிய பறவைகளுள் ஒன்றாகும். அழிந்துவரும் உயிரினங்களின் பட்டியலில் இடம்பெறும் அளவுக்கு இதன் எண்ணிக்கை இருந்தாலும் கூட, பூமியிலுள்ள இந்தக் கொடிய பறவை மனிதர்கள் மீது நூற்றுக்கணக்கான தாக்குதல்களை நடத்தியுள்ளது.


காசோவரிகள் வேகமாக ஓடும் இயல்புடையவை. இதன் இறக்கைகள் மிகவும் சிறியவை. தலையில் புடைப்பு இருக்கும். கால்களில் மூன்று விரல்கள் மட்டுமே உள்ளன. உள் விரல் நகம் உடையது. தலை நீல வர்ணத்துடனும் கழுத்து பளபளப்பான சிவப்பு நிறத்துடனும் இருக்கும். தன்னைப் பாதுகாத்துக்கொள்ள இது எதிரிகளை காலால் உதைத்துத் தள்ளிவிட்டு விரைவாக ஓடிவிடும்.



**சாண்ட்ஹில் கிரேன்:** சாண்ட்ஹில் கிரேன் என்பது வட அமெரிக்கா மற்றும் வடகிழக்கு சைபீரியாவின் பெரிய கொக்கு வகையாகும். சாண்டில் கிரேன்கள் நீர்நிலைகளின் விளிம்புகளில் குறிப்பாக, மத்திய புளோரிடா பகுதியில் அதிகம் காணப்படுகின்றன. நெப்ராஸ்காவிலுள்ள மத்திய பிளாட் நதிப் பள்ளத்தாக்கு, பெயரளவிலான துணை இனங்கள், குறைந்த சாண்ட்ஹில் கிரேன் பல்வேறு வகைகளில் பெர்ரி, சிறிய பாலூட்டிகள், பூச்சிகள், நத்தைகள், ஊர்வன மற்றும் நீர்வீழ்ச்சிகளை உண்கின்றன. விரைவாக ஓடிவிடும்.



**பொட்டூஸ்:** கோஸ்ட் பேர்ட் என்றும் அழைக்கப்படுபவை. நைட்ஜார்ஸ் மற்றும் தவளை வாய்களுடன் தொடர்புடைய பறவைகளின் குழுவாகும். வெப்பமண்டல மத்திய மற்றும் தென் அமெரிக்காவில் இரண்டு வகைகளில் ஏழு இனங்கள் உள்ளனவாம். பொட்டூஸ் அந்திவேளையிலும் இரவில் பறக்கும் பூச்சிகளுக்கு உணவளிக்கும். ஒரு கிளையில் அமர்ந்து, கடந்து செல்லும் பூச்சியைப் பிடுங்குவதற்காக ஒரு ப்ளைகேட்சர் முறையில் வெளியே பறப்பது அவர்களின் வழக்கமான உத்தியாகும்.



**தாடி கழுகுகள்:** இது தெற்கு ஐரோப்பா, கிழக்கு ஆபிரிக்கா, இந்திய துணைக் கண்டம், திபெத் மற்றும் காகசஸ் ஆகிய இடங்களிலுள்ள உயரமான மலைகளில் பாறைகளில் வாழ்கிறது மற்றும் இனப்பெருக்கம் செய்கிறது. தான் உண்ணும் உணவில் 85% எலும்பாக இருப்பதால் இது எலும்புண்ணிக் கழுகு அல்லது எலும்புண்ணிப்பாறு என்று அழைக்கப்படுகின்றது.

எலும்புண்ணிப்பாறு தன் சிறகை விரித்து இருக்கும்போது ஏறத்தாழ 3 மீற்றர் (9-10 அடி) அகலமும், தலையிலிருந்து வால் வரையில் நீளம் ஏறத்தாழ ஒரு மீற்றரும் இருக்கும்.



**தீக்கோழி:** தீக்கோழிகள் நீண்ட கழுத்தையும் கால் களையும் கொண்டவை. 70 கி.மீ./மணி (43 மைல்/மணி) வேகத்தில் ஓடக்கூடியவை. தீக்கோழிகள் இயற்கையில் ஆபிரிக்காவின் பூமத்திய ரேகைக் காட்டு வலயங் களில், வடக்கு, தெற்கு ஆகிய இரு பகுதிகளிலும் உள்ள சவான்னாக்கள், அரைப் பாலைவனங்களில் காணப்படுகின்றன.



**ஷூபில்:** ஷூபில் பண்டைய எகிப்தியர்களுக்குத் தெரிந்திருக்கலாம். ஆனால், 19 ஆம் நூற்றாண்டு வரை, தோல்கள் மற்றும் இறுதியில் உயிருள்ள மாதிரிகள் ஐரோப்பாவுக்குக் கொண்டுவரப்பட்ட பிறகு வகைப்படுத்தப்படவில்லை. ஷூபில் மத்திய வெப்பமண்டல ஆபிரிக்காவின் நன்னீர் சதுப்பு நிலங்களில், தெற்கு சூடான் மற்றும் தெற்கு சூடானிலிருந்து கிழக்கு கொங்கோ, ருவண்டா, உகண்டா, மேற்கு தான்சானியா மற்றும் வடக்கு சாம்பியாவின் பகுதிகள் வழியாக பறந்து திரிகின்றன.



**ஹெல்மெட் ஹார்ன்பில் :** ஹெல்மெட் ஹார்ன்பிலானது ஹார்ன்பில் குடும்பத்தில் ஒரு மிகப் பெரிய பறவை. இது மலேசிய தீபகற்பம், சுமத்ரா, போர்னியோ, தாய்லாந்து மற்றும் மியன்மார் ஆகிய இடங்களில் காணப்படுகிறது. கேஸ்க் (தலையில் ஹெல்மெட் போன்ற அமைப்பு) அதன் 3 கிலோ எடையில் 11% எடையைக் கொண்டுள்ளதாம். மற்ற ஹார்ன்பில் போலல்லாமல், காஸ்க் கிட்டத்தட்ட திடமானது. இவை இரைகளைக் குறி வைத்து தாக்குவதில் மிகவும் வல்லமை வாய்ந்தவை.



**பெரிய கொம்பு ஆந்தை**

இந்தப் பறவை வட அமெரிக்காவுக்குச் சொந்தமானது. வளர்ந்த பறவைகள் 17 முதல் 25 அங்குல நீளம், இறக்கைகள் மூன்று முதல் ஐந்து அடி வரை இருக்கும். அவற்றின் கூடு கட்டும் இடங்களை உள்ளடக்கிய அவற்றின் பிரதேசங்கள் தொந்தரவு செய்யப்பட்டாலோ அல்லது அச்சுறுத்தப்பட்டாலோ அவை எந்த இலக்கின் அளவைப் பொருட்படுத்தாமல் தாக்கும்.



**பெரெக்ரின் போல்கன்:** பொதுவாக புறாக்கள் மற்றும் நீர்ப்பறவைகள், விளையாட்டுப் பறவைகள், பாடல் பறவைகள், கிளிகள், கடற்பறவைகளை உண்டு வாழும் பெரெக்ரின் போல்கன் புல்லட் ரயில்களை விட வேகம் அதிகம். இது உலகிலேயே அதி வேகமாகப் பறக்கும் பறவையாக உள்ளது. அதன் சிறப்பியல்பு வேட்டையாடும்போது 200 கி.மீ. வேகத்தில் பறந்து வேட்டையாடுகின்றது.



**ஹோட்சின்:** ஹோட்சினானது அமெரிக்காவின் சில பகுதிகளில் காணலாம். வெப்பமண்டலப் பறவை இனமாகும். மற்றும் தென் அமெரிக்காவிலுள்ள அமேசான் மற்றும் ஓரினோகோ படுகைகளின் சதுப்புநிலங்களில் காணப்படுகின்றன. இவையும் மிகவும் அச்சுறுத்தல் செய்யும் பறவை இனமாகக் குறிப் பிடப்பட்டுள்ளன. இதன் உணவு வெறும் இலைகள் தான்.

# ஆக்கபூர்வமான விமர்சனம் எப்போதும் ஆரோக்கியமானது

**– அனிகா**



குழந்தை நட்சத்திரமாக அறிமுகமானவர் அனிகா சுரேந்திரன். ‘விஸ்வாசம்’ படத்தில் அஜித் மகளாக நடித்த பிறகு தமிழர்களின் செல்ல மகளாக மாறினார். இப்போது ஸ்டைலான பருவ மங்கையாக வளர்ந்து நிற்கிறார்.

தனுஷ் இயக்கியுள்ள ‘நிலவுக்கு என்மேல் என்னடி கோபம்’ படத்தின் மூலம் தமிழில் கதாநாயகியாக அறிமுகமாகியுள்ளார். கதாநாயகி அனுபவம் குறித்து அனிகா மனம் திறந்து பேசினார்.

**தனுஷ் இயக்கத்தில் கதாநாயகியாக அறிமுகமாவோம் என்று எதிர்பார்த்தீர்களா?**

மலையாளத்தில் நான் கதாநாயகியாக அறிமுகமாகிவிட்டேன். தமிழில் நல்ல கதைக்காக வெயிட் பண்ணினேன். காதல் கலந்த கொமடி கதை எனக்குப் பிடிக்கும். ஆடிஷனில் கலந்துகிட்டேன். தனுஷ் சார் டைரக்‌ஷனில் அறிமுகமாவேன் என்று எதிர்பார்க்கவில்லை.

**இயக்குநர் தனுஷ் எப்படி?**

கதாநாயகியாக என்னுடைய முதல் படம் இது. தனுஷ் சார் டைரக்‌ஷனில் நடிச்சதை ரொம்பவே சந்தோஷமாகப் பார்க்கிறேன். இப்போது வரை என்னால் நம்பவே முடியவில்லை. நல்ல டீமுடன் வேலை பார்த்தது பெரிய சந்தோஷம். அவர் டைரக்‌ஷனில் நடிச்சேன் என்பதைவிட சினிமாவை கற்றுக்கொண்டேன் என்று சொல்லலாம். தனுஷ் சாரின் டைரக்‌ஷன் ஸ்டைலை பற்றி சொல்வதாக இருந்தால் முதலில் நம்முடைய ஸ்டைலில் பண்ணச் சொல்லுவார்.

மாற்றம் தேவைப்படுவதாக இருந்தாலோ அல்லது அவர் எதிர்பார்க்கிற மாதிரி வேண்டும் என்றாலோ நடிச்சுக் காட்டி, அதை அப்படியே பண்ணச் சொல்வார். அதுல நம்முடைய ஸ்டைல், இம்ப்ரவைஸ் என்று எதையாவது சேர்க்கச்சொல்வார்.

படம் பார்த்து பலரும் பாராட்டினார்கள். என்னதான் நான் நல்லா நடிச்சிருந்தாலும் அதோட அடித்தளம் என்பது அவர் அமைச்சுக் கொடுத்தது. படத்துல நடிச்ச பவிஷ், பிரியா வாரியர், மாத்யூ தோமஸ் உட்பட எல்லோருமே நியூ கம்மர்ஸ்.

படம் கமிட்டான முதல் நாளிலிருந்து எனக்கான ஃப்ரீடம் கொடுத்தார். எந்த இடத்திலும் அழுத்தம் கொடுத்ததில்லை. படப்பிடிப்பு துவங்குவதற்கு முன் ஒர்க் ஷாப் நடந்துச்சு. அது யூஸ்ஃபுல்லா இருந்துச்சு.

**தனுஷிடமிருந்து என்ன கத்துக்கிட்டீங்க?**

அவர் ஓல்ரவுண்டர்ன்னு எல்லோருக்கும் தெரியும். எதைப் பண்ணினாலும் அதை பேஷனோடு பண்ணுவார். எல்லாத்தையும் கத்துக்கிட்டு பண்ணணும்னு நினைப்பார். நடனம் அவரே சொல்லித்தருவார். ஒருமுறை வெப் சீரீஸ் பார்த்துக் கொண்டிருப்பதாகச் சொல்லிவிட்டு, கத்துக்கணும்ல என்று ரியாக்‌ஷன் காட்டினார். அது சினிமாவுல வளர்ந்து வர்ற நான் எவ்வளவு கத்துக்க வேண்டியது அவசியம் என்பதை காண்பிச்சது.

கடின உழைப்பு, பொறுமை அவரிடமிருந்து கத்துக்க வேண்டிய இன்னொரு விஷயம். படப்பிடிப்பு, கம்போஸிங், அவர் நடிக்கும் பட வேலைகள் என சோர்வு இல்லாம வேலை செய்தது பெரிய உத்வேகத்தைக் கொடுத்துச்சு.

தூக்கம் இல்லன்னாலும் அப்புறம் தூங்கிக்கலாம்னு சொல்வார். எந்த இடத்திலும் அவர் டென்ஷனாகி பார்த்ததே இல்லை. சின்சியரா வேலை பார்த்தாலும் ஜாலியாவும் பழகுவார். கொஞ்சம் இறுக்கமா இருந்தாலும் அவரே அதை உடைச்சு ஜாலியா இருங்கப்பான்னு சகஜ நிலைக்குக் கொண்டுவருவார்.

**அஜித் மகளாக நடித்ததை எப்படிப் பார்க்கிறார்கள்?**

‘விஸ்வாசம்’ படத்துக்குப் பிறகு மக்கள் எல்லோரும் என்னை அஜித் சார் மகளாகப் பார்ப்பது பெரிய சந்தோஷம். அது சினிமாவில் எனக்குப் பெரிய அங்கீகாரத்தைக் கொடுத்துச்சு.

ப்ரொமோஷனுக்காக பல இடங்களுக்குச் செல்லும்போது ‘அஜித் சாரின் மகளா நீங்கள்’ என்று கேட்டிருக்கிறார்கள். அஜித் சார் எப்போதும் தன்னை உச்ச நட்சத்திரமாக வெளிப்படுத்தவே மாட்டார். மிகவும் எளிமையாகப் பழகுவார். இனிமையாகப் பேசுவார்.

**விமர்சனங்களை எப்படிப் பார்க்கிறீங்க?**

நான் இன்னும் குழந்தைத்தனமாக இருக்கிறேன் என்று சொல்லியிருக்கிறார்கள். இதுவரை அப்படிப்பட்ட கெரக்டர்களைத்தான் செய்துள்ளேன். சிலர் என்னுடைய உயரத்தைக் கமெண்ட் அடிச்சதுண்டு. ஆரம்பத்தில் என்னை அது காயப்படுத்தியது. இந்த வயதிலேயே பொடி ஷேமிங் கமெண்ட் செய்வது மிகவும் வருத்தப்பட வேண்டிய விஷயம்.

பெரும்பாலும் நான் கமெண்ட்ஸ் படிப்பதில்லை. என்னை அறியாதவர்களின் வெற்று வார்த்தைகளை நான் ஏன் கவனிக்க வேண்டும்? பகிர்வதற்கு நல்ல விஷயம் இருந்தாலோ அல்லது நாலு பேருக்கு யூஸாகும் என்று இருந்தாலோ விமர்சனம் பண்ணலாம். இல்லைன்னா பேசாம இருப்பது மேல்.

ஆக்கபூர்வமான விமர்சனம் எப்போதும் ஆரோக்கியமானது. ஆனால், ஒருவரை கீழே தள்ளி ரசிப்பதுதான் பலரின் விருப்பமாக இருக்கிறது. அப்படி இருக்கக் கூடாது. ஆக்கபூர்வமான விமர்சனம் வரும்போதுதான் பலருடைய திறமை வெளியுலகத்துக்குத் தெரியவரும்.

# “லேடி சூப்பர் ஸ்டார் என அழைக்க வேண்டாம்”

**- நயன்தாரா**



தமிழ்த் திரையுலகின் லேடி சூப்பர் ஸ்டாராக கொடிகட்டிப் பறக்கும் நயன்தாரா தற்போது ஓர் அறிக்கை வெளியிட்டுள்ளார். அவர் அதில் தன்னை "லேடி சூப்பர் ஸ்டார்" என்று அழைக்க வேண்டாமென்று ரசிகர்களுக்கு கோரிக்கை விடுத்துள்ளார்.

அந்த அறிக்கையில்,

‘‘நான் ஒரு நடிகையாக பயணித்துவரும் இந்தப் பாதையில் மகிழ்ச்சி மற்றும் வெற்றியின் அனைத்து ஆதாரங்களுக்கும் மனமார்ந்த நன்றி தெரிவிக்கிறேன். இந்தக் கடிதம் நீங்களும் உங்கள் குடும்பத்தினரும் ஆரோக்கியத்துடனும் மகிழ்ச்சியுடனும் இருப்பீர்கள் என்பதற்கான என் உள்ளார்ந்த ஆசையாக இருக்கட்டும். என் வாழ்க்கை எப்போதும் ஒரு திறந்த புத்தகமாகவே இருந்துள்ளது. என் வெற்றியின்போது என் தோளில் சாய்ந்து பாராட்டியதோடு, கடினமான தருணங்களில் என்னை தூக்கி நிறுத்தவும் நீங்கள் எப்போதும் இருந்தீர்கள். நீங்கள் பலரும் எனக்கு ‘‘லேடி சூப்பர்ஸ்டார்’’ என்று அன்புடன் அழைத்து வாழ்த்தியிருக்கிறீர்கள். உங்கள் பேராதரவால் உருவான இந்தப் பட்டத்துக்கு நான் மிகவும் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால், இனிமேல் என்னை ‘‘நயன்தாரா’’ என்று அழைக்குமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். ஏனெனில், என் பெயர்தான் எனக்கு மிகவும் நெருக்கமான ஒன்று. அது என்னை மட்டும் குறிக்கிறது. ஒரு நடிகையாக மட்டுமல்ல, ஒரு தனிநபராகவும் பட்டங்களும் விருதுகளும் மதிப்புமிக்கவைதான். ஆனால், சில சமயங்களில் அவை நம்மை நம் வேலையிலிருந்து, நம் கலைத் தொழிலிலிருந்து, உங்கள் அன்பான தொடர்பிலிருந்து பிரிக்கக்கூடும். நாம் அனைவரும் பகிர்ந்துகொள்ளும் அன்பின் மொழி நம்மை எல்லா எல்லைகளையும் கடந்து இணைத்திருக்கிறது. எதிர்காலம் எதை கொண்டுவந்தாலும் உங்கள் ஆதரவு என்றும் மாறாது என்பதை தெரிந்துகொள்வதில் எனக்குப் பேரானந்தம். அதேசமயம், உங்கள் அனைவரையும் மகிழ்விக்க என் கடின உழைப்பு தொடர்ந்து இருக்கும். சினிமாதான் நம்மை ஒன்றாக இணைக்கிறது. அதை நாமெல்லோரும் சேர்ந்து கொண்டாடிக்கொண்டே போகலாம்’’ என்று கூறியுள்ளார்.




# கோலாகலமாக நடைபெற்ற ‘மூக்குத்தி அம்மன் 2’ பட பூஜை







இயக்குநர் சுந்தர் சி. தற்போது தயாரிக்கவுள்ள படம் ‘மூக்குத்தி அம்மன் 2’. இப்படத்தை வேல்ஸ் நிறுவனம், ரௌடி பிக்சர்ஸ், அவ்னி சினி மேக்ஸ் ஆகிய நிறுவனங்கள் இணைந்து தயாரிக்கவுள்ளன. இப்படத்தில் நயன்தாரா முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்கவுள்ளார். முதல் பாகம் போலல்லாமல் இரண்டாம் பாகத்தைப் பிரம்மாண்டமாகத் தயாரிக்க தயாரிப்பு நிறுவனம் திட்டமிட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து படத்துக்கான பூஜை தொடங்குவதை முன்னிட்டு வேல்ஸ் நிறுவுனர் ஐசரி கணேஷ், நடிகர்கள் ரஜினிகாந்த், கமல் ஹாசன் ஆகியோரை சந்தித்து வாழ்த்து பெற்றார்.

இந்நிலையில், ‘மூக்குத்தி அம்மன் 2’ திரைப்படத்துக்கான பூஜை கடந்த வியாழக்கிழமை விமரிசையாக நடைபெற்றது. பூஜை விழா வுக்காக பிரம்மாண்டமான கோயில் போன்ற செட்டை அமைத்து யாகம் வளர்த்து பூஜை நடைபெற்றது. பூஜையில் தயாரிப்பாளர்கள், இயக்குநர் சுந்தர் சி., நடிகர்கள், நடிகைகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

விழாவில் ஹிப்ஆப் தமிழா இசையில் ஃப்ர்ஸ்ட் லுக் வீடியோ வெளியானது. அதில் படத்தின் தலைப்பு மற்றும் படப்பிடிப்பு தொடங்கியமை அறிவிக்கப்பட்டுள்ளது. பூஜை விழா தொடர்பான வீடியோக்கள் சமூக வலைத்தளங்களில் வைரலான நிலையில், படத்தின் மீதான எதிர்பார்ப்பு மேலும் அதிகரித்துள்ளது. திகதி முதல் ஆரம்பமாகிறது. இப்படத்தில் வில்லனாக நடிக்க அருண் விஜய்யுடன் பேச்சுவார்த்தை நடந்த நிலையில் சம்பள பிரச்னையால் அவர் நடிக்கவில்லை. தற்போது துனியா விஜய், கருடா ராம் ஆகியோர் இப்படத்தில் வில்லனாக நடிக்கின்றனர். இப்படத்தின் படப்பிடிப்பு மார்ச் 15 ஆம் திகதி ஆரம்பமாகிறது.

# ஸ்வீட் கிக்ஸ்டி

**ச.சுந்தரதாஸ்**

## பழநி



மகாபாரதத்தில் நீதிக்கும் நேர்மைக்கும் தர்மத்துக்கும் பெயர் பெற்றவன் தருமன். அவனுடைய தலைமையின்கீழ், வழிகாட்டுதலின் பேரில் அவனின் நான்கு தம்பிகளும் நடந்தார்கள். ஆனாலும் தர்மர் சூதாட சென்றபோது அதனை அவனின் தம்பிகளால் தடுக்க முடியவில்லை. இறுதியில் சூதாட்டத்தில் தருமன் தோற்றபோது அவனுடன் சேர்த்து நான்கு தம்பிகளும் பாஞ்சாலியும் எல்லாவற்றையும் இழந்து நின்றார்கள்.

இந்த கதைக் கருவைக்கொண்டு கிராமிய பின்னணியில் 1965ஆம் ஆண்டு படமொன்று வந்தது. அந்தப் படம்தான் ‘பழநி’. மகாபாரத கதையில் பாண்டவர்களிடம் வீரமும் இருந்தது, விவேகமும் இருந்தது. ஆனால், படத்தில் வரும் சகோதரர்களிடம் இரண்டுமே இல்லை. இதனால் திரும்பிய பக்கம் எல்லாம் அவர்களுக்குத் துன்பமும் துயரமும்தான் கிடைத்தன.

தொடர்ந்து வெற்றிப்படங்களைக் கொடுத்துக்கொண்டிருந்த இயக்குநர் பீம்சிங், அகிம்சையின் மகத்துவத்தைப் போற்றும்வண்ணம் இப்படத்தை இயக்கியிருந்தார். ஆனால், கதை பலவீனமாக அமைக்கப்பட்டு ரசிகர்களின் பொறுமையைச் சோதித்தது.

இத்தனைக்கும் சிவாஜி, எஸ்.எஸ்.ஆர், முத்துராமன், எம்.ஆர்.ராதா, டி.எஸ்.பாலையா, ஸ்ரீராம், நாகேஷ், தேவிகா என்று நட்சத்திர நடிகர்கள் நடித்திருந்தார்கள். அவர்களின் நடிப்பும் குறை சொல்லும் வகையில் அமையவில்லை. ஆனாலும் கதை ரசிகர்களை ரொம்பத்தான் சோதித்து விட்டது.



கிராமத்தில் தன் மூன்று தம்பிகளுடன் விவசாயம் செய்து ஒற்றுமையுடன் வாழ்ந்து வருகிறான் பழநி. சூது வாது தெரியாத அப்பாவியான அவன் தன் மனைவி இறந்த பிறகு மறுமணம் செய்யாமல் தம்பிகளின் நல்வாழ்வே தன் வாழ்வென வாழ்கிறான். தம்பிகளும் அவன் பேச்சை வேதம் என நினைத்து வாழ்கிறார்கள். என்னத்தான் நல்லவனாக இருந்தாலும் அவன் வாழ்விலும் அடுத்தடுத்து புயல் வீசுகிறது. தம்பி வேலுவின் மனைவியின் பிடிவாதத்தால் வேலு தனிக்குடித்தனம் போகிறான். அதேசமயம் பண்ணையார் செய்யும் அநியாயத்தால் பலவித சிரமங்கள் ஏற்படுகின்றன. விவசாயம் செய்த காணியும் பறி போகிறது. இனி கிராமத்திலிருந்து பிழைக்க முடியாதென்று இரு சகோதரர்களும் பழநியை விட்டு விலகி பட்டணம் போகிறார்கள். சென்ற இடத்தில் அங்கேயும் அவர்களுக்குக் கஷ்டம்தான். இங்கே பண்ணையார் எவ்வளவு கெடுதல் செய்தபோதும் அவரை நல்லவர் என்று போற்றி வணங்குகிறான் பழநி! ஆத்திரமோ, பழி உணர்வோ அவனிடம் இல்லை.



இப்படி அமைந்த கதையை ஜி.வி.ஐயர் எழுதியிருந்தார். அஹிம்சை, சகிப்புத்தனம், பூமி தானம் போன்றவை அவர் மனதில் இருந்திருக்க வேண்டும். அதற்கமைய கதை அமைக்கப்பட்டது. பழநியாக வரும் சிவாஜியின் நடிப்பு குறையில்லாத போதும், அவரின் பாத்திர அமைப்பு ஓரளவுக்குப் பிறகு சப்பென்றாகிவிட்டது. படம் முழுவதும் வெகுளியாகவும் அப்பாவியாகவும் வெளுத்ததெல்லாம் பாலாகவும் இருந்தால் எப்படித்தான் சகிப்பது.

படத்தில் கதாநாயகன் சிவாஜிக்கு ஜோடி இல்லை, காதல் இல்லை. அதனால் டூயட்டும் இல்லை. தனி ஆவர்த்தனம் வாசித்து நடிப்பால் மட்டும் ஸ்கோர் செய்கிறார் சிவாஜி.

எஸ்.எஸ்.ஆர், முத்துராமன் இருவரும் கதையிலும் நடிப்பிலும் சிவாஜிக்கு



அடங்கியே வருகிறார்கள். பீம்சிங் படம் என்றாலே எம்.ஆர்.ராதா இருப்பார். இதிலும் இருக்கிறார். அவரை விட நாகேஷ் கவருகிறார். படத்தில் வில்லன் டி.எஸ்.பாலையா அலட்டிக்கொள்ளாமல் கெட்டவனாக நடித்து நல்ல பேரை வாங்கிக் கொள்கிறார்.

படத்தில் ஒரே ஆறுதல் தேவிகாதான். என்ன துறுதுறுப்பு, கெஞ்சல், கொஞ்சல் வெரி நைஸ்!

ஸ்ரீராம், புஷ்பலதா இருவரும் சில காட்சிகளில் மட்டும் வந்து போகிறார்கள். நாகேஷ் படம் முழுவதும் வருவதோடு சொந்தக் குரலில் கதாகாலஷேபணையும் நடத்துகிறார். இவர்களோடு சி.கே.சரஸ்வதி, நம்பிராஜன், சிவகாமி ஆகியோரும் நடித்திருந்தனர். படம் எப்படி என்றாலும் பாடல்கள் அற்புதம்!

கண்ணதாசனின் கவி வரிகளில் உருவான அண்ணன் என்னடா தம்பி என்னடா அவசரமான உலகத்திலேயே, இதயம் இருக்கின்றதே தம்பி, ஆரோடும் மண்ணில் என்றும் நீரோடும், உள்ளத்துக்குள்ளே ஒளிந்திருப்பது ஒன்றல்ல கண்ணே, வட்ட வட்ட பாறையிலேயே வந்து நிற்கும் வேளையிலேயே பாடல்கள் விஸ்வநாதன், ராமமூர்த்தி இசையில் டி.எம்.எஸ், சுசிலா, சீர்காழி குரலில் கருத்தோடும், இனிமையோடும் ஒலித்தன.

படத்தின் வசனங்களை எம்.எஸ். சோலைமலை எழுதினார். ஜி. விட்டலராவ் ஒளிப்பதிவை செய்தார். திரைக்கதை அமைத்து டைரக்ட் செய்தார் பீம்சிங். பொறுமைதான் சிறந்த ஆயுதம் என்றாலும் அப்பாவியிடம் காணப்படும் பொறுமை அவனை உருப்பட விடாது. அவனோடு சேர்ந்து குடும்பத்தையும் நிர்க்கதியாக்கி விடும் என்பதைத்தான் படத்தின் கதை கடைசியில் உணர்த்தியது.

ரசிகர்களின் வரவேற்பை படம் பெறாத போதும் சிறந்த பிராந்திய படத்துக்கான இந்தியா தேசிய விருதை பெற்றுக்கொண்டது!

suntheradas@hotmail.com

# ரமழான்..

ரமழான்
மனதை புனிதமாக்கும்
பள்ளிகள்
கண்ணாடிகளால்
கதவிட்டு பளபளக்கின்றன
ஆனால் மனித
மனசுகள்தான் காலமெல்லாம்
பளபளப்பதில்லை...

சாதாரண
காலத்தில் பட்டினி
பயம் என்ற பேய்
ஆட்டும்...அக்காலத்தில்
ஒரு சக்கரத்தின்
நட்டைப் போல
கழன்று போயிருக்கும்
பிறர் நலம்..

இக்காலத்தில்
மஃரிப் சுபஹ் சிறகு
சடசடத்து
புறாபோல...
சப் கூரையில்
தங்கும் மனிதர்கள்
செயல் பார்த்து
நீயும் பிற காலத்தில்
இறை அடியான் தானா..?
என வெட்கிக்கும்
பள்ளி..

வெள்ளி போல
மினுங்கும்
மனசில் விடிய விடிய
ஓதலின் உதிப்பு
வரும்...

உதயத்தில்
ஒரு காலமும்
சாப்பிடாத...
கவளம்..
தூக்கத்தை கருவாடிடும்.

அரிவாள்
பிறை...
அமலில்
குறைவின்றிச் செய்தார்
முன்னோர்...
இன்றோ வாழ்வுத்
தறியில்
வருமானம் நெய்வோர்
முறையின்றி
தொழில் போட்டிக்கு
இரை....

-ஏ.எச்.எம்.ஜிஹார்-

# ரமழான் நோன்பு

உன்வரவை தினம் தினம்
எதிர்பார்ப்பேன்
உன்னை பார்க்க முடியாது
என்று தெரிந்தும்

வருடத்துக்கோர்முறை தான்
வருவாய் என்று அறிந்தும்
உன்னை அடையவே
ஆவலாய் இருந்தேன்

என்னால் உனக்கோ
எந்தப்பயனும் இல்லை
உன் வருகையால்
எனக்கோ முடிவிலா பயன்

உன் வருகையை நம்பியே
செய்த பாவக்கறையை
சுத்தம் தினம் செய்து
மாதம் உடனிருப்பாயே

பதினொரு திங்கள்
தினம் பலவேளை உண்ட
உணவால் என்னை
உறைவிடமாக்கிய
கொழுப்பும் சீனியும்
விறன்டோட உன்னை
ஆயுதமாக்குவேன்

ஏழையின் பசியறிந்து
தருமப் பயணம்
வாழ்வில் மேற்கொள்ள
உன் வருகையே காரணம்

எந்தக்கண்ணும் கண்டிராத
எந்தக்காதுகளும் கேட்டிராத
யாராலும் சிந்திக்க முடியாத
இன்பச் சுவனத்தை அடையவே
முப்பது நாட்கள் உடனிருந்தாயே

வருடம் முழுக்கு உன்னை
வைத்திருக்க ஆசைதான்
ஒரு மாதமே நீ இருப்பாய்
வருடத்துக்காக பயிற்றுவிப்பாய்
உன்னை வழியனுப்பி
மீண்டும் உன் வருகைக்காய்
நித்தமும் காத்திருப்பேன்

**முஹம்மது முகைதீன்,**
**நௌபீக்,**
**தோப்பூர்.**

# விதியோடு விளையாடும் மனம்

சத்தமின்றி முத்தமிட்டாய்
சித்தமின்றி நிற்கின்றேன்
சித்தமின்றி நின்றவனில்
சித்திரமாய் நின்றுவிட்டாய்
சிங்காரி நீயெனக்கு
சிந்திய முத்தமெல்லாம்
சிறைக்கம்பி ஆக்கிவிட
கண்ணின் பார்வையிலும்
கைதியாய் நிற்கின்றேன்!

விதியொன்று விளையாடும்
விளங்காத காலம்தனில்
அடங்காத ஆசைதானே
அடி முற்றிய செங்கரும்பாய்
இனிக்க இனிக்க சுவைத்தாலும்
மீண்டும் மீண்டும் கடியெரும்பாய்
கனதூரம் ஊர்கிறேன்!

விட்டு பிரிவதற்கும் வேதனைதான்
சற்றும் உடல் மறந்து மனம்
சயனம் புரிந்ததால்
இடையனைக்கும் இடைவேளை
என்னை பிரித்தது வேதனையும்
சோதனையும் தொட்டு அடங்காத
சுகமே சோதனைகளின் நிலையாய்
தொடர்வதால் ஆசையை அணையிட்டு
உள்ளத்தை தூய்மையாய் உரமேற்று!

**-கலைச்சுடர் வே.இராமர்-**

# காலம்

காலம் எனும் நீரோட்டம்
போலே,
ஓயாது ஓடி மறைகிறது;
நேற்று இருந்தது இன்று இல்லை,
இன்று உள்ளது நாளை இல்லை.

காலம் கரம் பிடித்து நடத்தும்
இளமை முதல் முதுமை வரை;
சிரிப்பும் கண்ணீரும் சேர்த்து
வைக்கும்
வாழ்வின் படைப்பு அதன்
கையில்.

காலம் கடந்து போகும் போது
மலர்கள் வாடி மரங்கள் உதிரும்
ஆனால் மீண்டும் வசந்தம் வரும்
புது வாழ்வை தூக்கி நிறுத்தும்.

காலம் எனும் கண்ணாடியில்,
நாம் அனைவரும்
பிரதிபலிப்போம்
நேற்று இருந்தோம், இன்று
இருக்கிறோம்,
நாளை இருப்போம் என்று
நினைப்போம்.

காலம் காட்டும் பாதையில்,
நடந்து செல்வோம் துணிவுடன்
ஒவ்வொரு கணமும்
அருமையானது,
அதை மகிழ்ச்சியாய் வாழ்வோம்.

கவிஞர்.த.ரூபன்,
ஈச்சிலம்பற்று,
திருகோணமலை.

# தோழியின் பிரிவு

மழையைத் தேடி சாரல்
வந்தது
வானம் தேடி மேகம் வந்தது
கனியைத் தேடி சுவை
வந்தது
பூக்களைத் தேடி வண்டு
வந்தது!

இயற்கையைத் தேடி அழகு
வந்தது
இசையைத் தேடி கீதம்
வந்தது
இரவைத் தேடி நிலவு
வந்தது
பகலைத் தேடி சூரியன்
வந்தது!

மண்ணைத் தேடி மழை
வந்தது
உன்னைத் தேடி நான்
வந்தேன்
என்னைத் தேடி நீ வந்தாய்
தோழி நம்மைத் தேடி பிரிவு
வந்தது!

**அஸ்மா பாரிஸ்,**
**மல்வானை.**

## தூறல்கள்

# கவிஞர் வாலியின் நினைவுகள்





நான் தலையை மொட்டையடித்திருந்தேன்.

'இது என்ன மொட்டை?' என்று அண்ணா கேட்டார்கள்.

'திருப்பதி' என்றேன்.

'என்ன, நேர்த்திக்கடனா?' வினவினார் அண்ணா.

'ஆம்!' என்றேன்.

அத்துடன் அண்ணா விடவில்லை; 'என்ன நேர்த்திக்கடன்? நான் தெரிஞ்சுக்கலாமா?' என்றார்.

'உங்களால்தான் சார், மொட்டையடித்துக் கொண்டேன்!' என்றேன். அண்ணா அவர்களை நான் ஆரம்ப காலங்களில் 'சார்' என்றுதான் விளிப்பேன்.

'என்னாலா?' என்று வியப்போடு வினவினார்கள் அண்ணா.

நான் சற்று விரிவாகச் சொல்லலானேன்.

"சார்! நான் படங்களில் பாட்டெழுதும் வாய்ப்பு இந்தப் பிறவியில் எனக்குக் கிட்டாது என்று சலித்து, வறுமை வேக்காட்டில் எரியும் சூளையில் வைத்த ஈர மண்ணாக வெந்து கொண்டிருந்தேன். 'நல்லவன் வாழ்வான்' வாய்ப்பு வந்தது. அப்போது நான் திருப்பதி வெங்கடாசலபதிக்கு வேண்டிக் கொண்டேன் 'அண்ணா அவர்கள் என் பாட்டை தேர்வு செய்துவிட்டால், நான் மலைக்கு வந்து முடியிறக்கிக் கொள்கிறேன்!' என்று. ஏழுமலையான் உங்க உள்ளத்தில் புகுந்து என் பாட்டை தேர்வு செய்ய வைத்திருக்கிறான் என்று உணர்ந்து அந்த நன்றிக்கடனை அடைக்கச் சென்ற வாரம்தான் திருப்பதி சென்று மொட்டை போட்டேன்!" என்றேன்.

வெற்றிலைக் காவி இலேசாக வீற்றிருக்கும் பல் வரிசை தெரிய அண்ணா அவர்கள் சிரித்தவாறு சொன்னார்கள்.

'வாலி! உங்க பாட்டை தேர்வு செய்ய வைத்தது, உங்க எழுத்தே தவிர ஏழுமலையான் இல்லே!' என்றார்.

தமிழன் தர்பார்

இது எங்க ஏரியா

# அரசரும் பூனையும்

ஒரு நாட்டில் ஒரு இளவரசன் இருந்தான். அவன் சிறந்த போர் வீரன். அவனுடைய வாள் வீச்சுக்கு அந்த நாடே ஈடு கொடுக்க முடியாது. அந்த அளவுக்குச் சிறந்த வீரன்.

அவன் ஒருமுறை அரண்மனையில் வாள் வீசி பயிற்சி செய்து கொண்டிருக்கையில், ஒரு எலி குறுக்கே ஓடியது.

உடனே அதன் மீது வாளை வீசினான். அந்த எலி இலாவகமாக தப்பித்துச் சென்றது. பிறகு மீண்டும் அதனைத் துரத்தி வாளை வீசினான். மீண்டும் தப்பித்து வளைக்குள் புகுந்துக் கொண்டது. உடனே மனம் உடைந்து போனான்.

அப்போது வந்த அரசர் "ஏன் சோகமாக இருக்கிறாய்?" என கேட்க "இந்த நாடே எனது வாள் வீசும் திறமைக்கு ஈடு கொடுக்க முடியாத போது, இந்த சாதாரண எலியை என்னால் கொல்ல முடியவில்லையே!" என விவரித்தான் இளவரசன்.

மன்னர் சிரித்து விட்டு "எலியைக் கொல்ல வாள் பயிற்சி எதற்கு? அரண்மனைப் பூனையைக் கொண்டு வந்தாலே போதுமே!" என்றார். உடனே அரண்மனை பூனை வரவழைக்கப்பட்டது.

அந்தப் பூனையும் எலியை வேட்டையாட முயன்றது. ஆனாலும் அந்த எலி எளிதாக அதனிடம் இருந்து தப்பித்து, தப்பித்துச் சென்றது.

மீண்டும் இளவரசருடன் அரசரும் சோகமானார்.

அப்போது மந்திரிவந்தார். "என்ன அரசே. நீங்களும் இளவரசரும் சோகமாக இருக்கிறீர்கள்?" என்றார்.

அதற்கு அரசர் நடந்ததைக் கூறினார். "நம் நாட்டு பூனைகள் எதற்கு லாயக்கு...? ஜப்பான், பாரசீகம் போன்ற நாடுகளில் உள்ள பூனைகள் புலி உயரம் உள்ளன.

எனவே அங்கிருந்து வரவழைப்போம்" என்றார் மந்திரி. அதேபோல் அந்நாடுகளில் இருந்து பூனைகள் வரவழைக்கப்பட்டன.



ஆனால் அவற்றிடமிருந்தும் அந்த எலி சாமர்த்தியமாகத் தப்பித்துச் சென்று வளைக்குள் புகுந்தது.

எலிக்கு இவ்வளவு திறமையா என அனைவரும் வியந்துக் கொண்டிருக்கையில், அங்கே இருந்த அரண்மனைக் காவலன் "இளவரசே! இந்த எலிக்குப் போய் ஜப்பான், பாரசீகப் பூனையெல்லாம் எதுக்கு? எங்க வீட்டுப் பூனையே போதும்" என்றான்.

மன்னருக்கு நம்பிக்கை ஏற்படவில்லை. "என்ன அரண்மனையில் வளர்ந்து வரும் பூனையால் முடியாதது சாதாரண பூனையால் முடியுமா?" என்றார்.

உடனே இளவரசர் மறித்து "சரி... எடுத்து வா உனது பூனையை" என்றார். வீட்டுக்குச் சென்று தனது பூனையைக் கொண்டு வந்தான் காவலன்.

அந்தப் பூனை அந்த எலியை ஒரே தாவலில் "லபக்" என்று கவ்விச் சென்றது. இதனைப் பார்த்த இளவரசருக்குப் பெருத்த ஆச்சரியம். "என்ன இது அதியசம்!

ஜப்பான், பாரசீக, அரண்மனையில் வளர்ந்த பூனைகளிடம் இல்லாத திறமை எப்படி இந்தச் சாதாரண பூனைக்கு ஏற்பட்டது? எப்படி சாத்தியம்? என்ன பயிற்சி கொடுத்துப் பூனையை வளர்க்கிறீர்கள்?" என்று வியந்தவாறே கேள்விகளைக் கேட்க தொடங்கினார்.

அதற்குக் காவலாளி "பெரிதாக என் பூனைக்குத் திறமையோ பயிற்சிகளோ எதுவும் இல்லை இளவரசே. என் பூனைக்கு ரொம்பப் பசி அவ்வளவு தான்" என்றான்.

உடனே இளவரசருக்கு "சுரீர்" என்றது. அரண்மனைக்குள் பூனைகள் நன்கு தின்றுக் கொழுத்திருப்பதால் அவற்றுக்கு பசி என்பதே என்னவென்று தெரிய வாய்ப்பில்லை. எனவே அவற்றால் எலியை எப்படி பிடிக்கமுடியும்?.

ஆக எந்த ஒரு வேலையையும் வெற்றிகரமாகச் செய்து முடிக்க வேண்டுமென்றாள், முதலில் அதனைப் பற்றிய பசி அல்லது தேவை இருக்க வேண்டும்.

அப்போது தான் அந்தக் காரியத்தை கச்சிதமாக செய்து முடிக்க முடியும்.

# தியாகி கக்கனின் துயர் துடைத்த எம்.ஜி.ஆர்.

எம்.ஜி.ஆர். முதல்வராக இருந்த சமயம். 1978-ஆம் ஆண்டு இறுதியில் ஒருநாள். முதல்வரை சந்தித்து மனுக்கள் அளிக்க எம்.ஜி.ஆரின் ராமாவரம் தோட்ட வீட்டில் மக்கள் குழுமியிருக்கின்றனர். அவர்களிடையே ஒரு பெண்மணி தயங்கித் தயங்கி நிற்கிறார். எம்.ஜி.ஆரின் உதவியாளர்கள் அந்தப் பெண்மணியிடம் விசாரிக்கின்றனர். தனது கணவர் பற்றிய விவரங்களைச் சொல்லி தானும் தனது குடும்பமும் படும் கஷ்டங்களை கூறி முதல்வரை சந்தித்தால் நிவாரணம் கிடைக்கும் என்ற நம்பிக்கையோடு வந்திருக்கிறார் அந்தப் பெண்மணி.

வீட்டில் இருந்து வெளியே வந்து மக்களிடம் மனுக்களை பெற்றுக் கொண்டு கோட்டைக்கு காரில் ஏறிப் புறப்பட தயாரான எம்.ஜி.ஆரிடம் அந்த பெண்மணி பற்றிய விஷயம் தெரிவிக்கப்பட்டது. காரில் இருந்து இறங்கி பெண்மணி நின்றிருந்த இடத்துக்கே சென்று



வணக்கம் தெரிவித்து வரவேற்று முதலில் அவரது கணவரின் நலன் பற்றி விசாரிக்கிறார். அவரை சாப்பிடச் சொல்லிவிட்டு, பின்னர், அவரது குடும்ப நிலைமை அறிந்து கொண்ட பின், தனது சாரதியை அழைத்து அந்த பெண்மணியை வேறு காரில் அவரது வீட்டில் கொண்டு விட்டு வருமாறு கூறுகிறார். கவலை தீரும் என்ற நம்பிக்கையில் அந்தப் பெண்ணும் நிம்மதியாக எம்.ஜி.ஆரின் காரில் சென்றார்.

அந்தப் பெண்மணி... பெருந்தலைவர் காமராஜர் ஆட்சியில் அமைச்சராக இருந்த தியாகி கக்கனின் மனைவிதான். மதுரை மாவட்டம், மேலூர் அருகே தும்பைப்பட்டி என்ற ஊரில் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தில் பிறந்தவர் தியாகி கக்கன். சுதந்திரப் போராட்ட வீரரான அவர் 10 ஆண்டுகள் தமிழக அமைச்சரவையில் பணியாற்றியவர். அமைச்சர் பதவிக் காலத்துக்குப் பின் மக்களோடு மக்களாக பஸ்ஸில் சென்றவர் என்பதிலிருந்தே பொது வாழ்வில் அவர் எவ்வளவு புடம் போட்ட தங்கமாக வாழ்ந்திருக்கிறார் என்பது விளங்கும். வீட்டு வசதி வாரிய குடியிருப்பில் வசித்து வந்த கக்கனுக்கு வாடகைப் பணம் 170 ரூபாயை கூட கொடுக்க முடியாத துரதிர்ஷ்டவசமான நிலைமை. பல மாதங்களாக வாடகை பாக்கி இருந்ததால் அவருக்கு நோட்டீஸ் அனுப்பினர் அதிகாரிகள். இருந்தாலும் தன் கஷ்டம் தன்னோடே இருக்கட்டும் என்று காலம் கடத்தி வந்தார் கக்கன். ஒருநாள் வீட்டுக்கு சீல் வைப்பதற்காக அதிகாரிகள் வந்துவிட்டார்கள். ''வாடகையை கட்டுங்கள் இல்லை, வீட்டிலிருந்து வெளியேறுங்கள்" என்று கூறுகின்றனர். அவர்களிடம் ஒரு நாள் அவகாசம் கேட்கிறார் கக்கனின் மனைவி.

கிடைத்த ஒருநாள் அவகாசத்தில் தங்கள் பிரச்சினை தீர்ந்துவிடும் என்று நம்பிய கக்கனின் மனைவிதான் ஆரம்பத்தில் உள்ளபடி, ராமாவரம் தோட்டத்துக்கு சென்று முதல்வர் எம்.ஜி.ஆரிடம் தங்கள் நிலைமையை விளக்கிவிட்டு நம்பிக்கையுடன் சென்ற அந்தப் பெண்மணி, அவரது நம்பிக்கை வீண் போகவில்லை. யாருமே கஷ்டப்படுவதை பொறுத்துக் கொள்ளாதவரான எம்.ஜி.ஆர்., நாட்டுக்கு தொண்டாற்றிய தியாகி கக்கனின் குடும்பம் சிரமப்படுவதை பொறுத்துக் கொள்வாரா? வீட்டு வசதி வாரியத்துக்கு கட்ட வேண்டிய வாடகை பாக்கி மொத்தத்தையும் எம்.ஜி.ஆர். அன்றே கட்டிவிட்டார். இங்கே, ஒன்றை கவனிக்க வேண்டும். முதல்வர் எம்.ஜி.ஆர். நினைத்திருந்தால் வாடகை பாக்கி முழுவதையும் தள்ளுபடி செய்து உத்தரவிடச் செய்திருக்க முடியும். ஆனால், தனது சொந்தப் பணத்தில் இருந்து வீட்டு வாடகையை கட்டியிருக்கிறார் என்றால் அதுதான் தியாகத்துக்கு எம்.ஜி.ஆர். கொடுத்த மரியாதை.

தான் மட்டும் மரியாதை காட்டினால் போதாது, அரசு சார்பிலும் கக்கனின் தியாகத்துக்கு மரியாதை செய்யப்பட வேண்டும் என்று விரும்பிய எம்.ஜி.ஆர். மறுநாளே உத்தரவு போட்டார்.

''முன்னாள் அமைச்சரும் சுதந்திரப் போராட்ட வீரருமான தியாகி கக்கனின் மகத்தான தேச சேவையை கருத்தில் கொண்டு அவர் வாழ்நாள் முழுவதும் வசிக்க இலவசமாக வீட்டு வசதி செய்யப்படும். அவரது குடும்பத்துக்கு மாதம் 500 ரூபாய் அரசு உதவித் தொகை வழங்கப்படும்'' என்பதுதான் எம்.ஜி.ஆர். போட்ட உத்தரவு.

அதோடு நில்லாமல் அந்த உத்தரவுக்கான அரசாணை சான்றிதழையும் வெள்ளிப் பேழையில் வைத்து சென்னை வள்ளுவர் கோட்டத்தில் 1979-ஆம் ஆண்டு நடந்த திருவள்ளுவர் தின விழாவில் கக்கனிடம் முதல்வர் எம்.ஜி.ஆர். வழங்கினார்.



# நம்ம தோட்டம் 05

## “மாட்டுப் பொங்கலோ பொங்கல்”

அருணா

வருசமெல்லாம் ஒழைச்சி கொடுக்கிற மாடு ஆடுகளுக்கு இன்னைக்கு விசேசமான நாள்,

நம்ம தோட்டங்கள்ல எல்லா வீட்டுகள்லையும் மாடு வளப்பாங்க. இல்லாட்டியும் ஆடாவது கட்டாயம் இருக்கும்.

கோழி கட்டாயம் எல்லா வீட்லயும் வளர்ப்போம்.

அட இந்த மூணு பிராணிகளுக்கிட்ட இருந்து கிடைக்கிற பாலும் முட்டையும்தானே ரொம்பப் ஆரோக்கியமானது.

பாலு முட்டைன்றது ரொம்ப இலகுவா குடிச்சி சாப்பிட்டோம். இன்னைக்கு என்னடானா, எல்லாம் மருந்தா போச்சி.

மாசத்துக்கு ஒரு தடைவ கோழி சாப்பிட்டாலும் மனசில அந்த கறியோட ருசி பதிஞ்சிக்கிட்டே இருக்கும்.

எத்தனை மணிக்கு தூங்கினாலும் விடிய நாலு மணிக்கொல்லாம் எழுப்பிறனும்.

லைசன் பட்டியில்தான் மாடுக இருக்கும்.

ஒவ்வொரு தோட்ட நிர்வாகமும் ஆளுக மாடு வளக்கிறதுக்கு வசதி செய்து கொடுத்திருப்பாங்க.

மாடு வளக்கிறவங்கவுட்டு மாடுகளை கட்ட லைசன் பட்டி, புள்ளு வளக்கிறதுக்கு புள்ளு காணு. இப்பிடியெல்லாம் இருக்கும்.

புள்ளு காணுக்கு மாட்டு உரம் போட்டு வளப்போம். புள்ளும் ஆரோக்கியமா இருக்கும்.

மாட்டு ஆட்டு ஒரம் தாராளமா கெடைக்கிறனால நம்ம வீட்டுத் தோட்ட மண்ணும் கண்ணேங்கரேனு இருக்கும்.

வெள்ளாமையும் தாராளமா வளரும்.

கீரை வகை வைக்காமலே அது பாட்டுக்கு வளரும். தெனமும் கீரை சாப்பிட்டுருவோம். பாலு குடிச்சிருவோம்.

இல்லனா நம்மலால ஆரோக்கியமா இருக்க முடியுமா?

அட புளிச்சைக்கீரையெல்லாம் நம்ம தோட்டங்கள்ல தாராளமா இருக்கும். புளிச்சைக்கீரைவுட்டு பெறுமதி நம்ம ஆளுகளுக்கு தெரியிரது இல்லை.

இன்னைக்கு பொண்ணுங்களுக்கு கர்ப்பப்பைய திடப்படுத்திறதுக்கும் பிரசவத்த இலகுபடுத்திறதுக்கும் போலிக் எசிட்ன்ற மருந்த குடிக்கிறாங்க.

அட அதுல உள்ள சத்துகதானே இந்த புளிச்சை கீரையில இருக்கு.

அதை வலியுறுத்திறதுக்குத்தானே நம்ம ஆளுக நையாண்டியா இப்பிடி ஒரு கதைய பேசிக்கிருவாங்க.

“சிங்கள புத்தா, உங்கம்மா எப்படி பெத்தா? அப்பிடி கேள்வி கேட்டு “புளிச்சைக்கீரையை திண்ணுப்புட்டு புளுக்குனு பெத்தா” அப்படினு சொல்வாங்க.

அது மட்டுமில்ல கரப்பொத்தான் பூச்சிய நம்மாளுக “சிங்கள வண்டு” அப்பிடினுதான் சொல்லுவாங்க.

அப்பிடி சொல்லி வாங்கிகட்டிக்கிட்ட சம்பவங்களும் நடந்திருக்கு.

நம்ம தோட்டங்கள்ல சிங்கள ஆளுகளும் கொஞ்சம் பேர் இருந்தாங்க. அவங்களும் நம்ம மக்களோட மக்களாகவே துவேசம் இல்லாம வாழ்ந்தாங்க.

நல்லா தமிழ் பேசுவாங்க. அவங்கக்குள்ளேயே தமிழ்லதான் பேசிக்கிருவாங்கனா பாத்துக்குங்களே!

இப்புடித்தான் ஒரு அம்மா தன்னோட மகன்கிட்ட பேசின விசயம் ஞாபகத்துக்கு வருது.

“அடேய் பச்சத்தண்ணி பொண்ட எப்பாடா, தடிமன் புடிச்சிக்கராய்” இபபடிதான் நம்ம வாழ்க்கை முறையோட ஒன்றிச்சி வாழ்ந்தாங்க.

கம்பம் தூக்கிறதுல இருந்து கரகம் பாலிக்கிற வரைக்கும் நெறையவே நம்மளோட சேரந்திருப்பாங்க.

அட வந்த விசயத்தை விட்டுட்டு எங்கேயோ போயிட்டோம்.

தோட்டத்தில் முக்கால்வாசி பேர் வீட்ல மாட்டுப் பொங்கல்தான்.

“மாடு பட்டிக்குள்ள சொகுசா இருக்கும், நம்மதான் மாடா உழைக்கணும்” அப்பிடினு நம்ம ஆளுக அடிக்கடி சொல்லுவாங்க.

உம்மதான் காலையில் நாலு மணிக்கு எழும்பி லந்தர பத்தவைச்சி எடுத்துக்கிட்டு, சுடுதண்ணியில கரைச்சி வைச்ச புண்ணாக்கையும் தூக்கிக்கிட்டு போகணும்.

காலையில் பாத்தா வரிசையா ஆளுக லந்தரோட போவாங்க. மாட கழுவி, புள்ளு போட்டு பால கரந்து, பால் சேக்கிற எடத்தில் அளந்து ஊத்திட்டு ஆறு மணிக்கெல்லாம் பெரட்டுக்கும் போகணும்.

அந்திலேயே புல்லு அறுத்து வைச்சிறதும் லேசா போயிரும். அந்தியில புல்லு அறுக்கிறது மட்டுமா வேலை. வீட்டுத் தோட்டத்தையும் பாத்துக்கிறணும். அப்பத்தானே கறிப்பாட்ட சமாளிச்சிக்கலாம்.

கஷ்டமா இருந்தாலும் நம்மாளுக இஷ்டப்பட்டுதானே செய்தாங்க. வாழ்க்கை முறையும் நல்லாதானே இருந்திச்சி.

தோட்டமே மாட்டுப் பொங்கல கொண்டாடின இடங்கள்ல இன்னைக்கு ரெண்டு மூணு பேருக மட்டும்தான் மாட்டுப் பொங்கல் வைக்கிறாங்க.

அட நம்ம தலைவருங்கதான் கால்நடை அமைச்ச பரம்பரையா வைச்சிருந்தாங்க. என்ன புண்ணியம். இந்த தொழில வளர்த்து விட்டிருந்தாலும் நம்மாளுக தன்னிறைவா வாழ்ந்திருப்பாங்க.

அவுஸ்திரேலியா, நியூசிலாந்துல எல்லாம் விவசாயத்தில படிச்சி பட்டம் வாங்கினவங்களும் மாடு ஆடு வளக்கிறாங்க. ஏனா அந்தத் தொழில் முறையே அப்பிடி மாத்திருக்காங்க.

படிச்சவங்களும் ஈடுபடுற மனநிலையோடையே அந்த தொழில் துறையும் வளர்ந்திருக்கு.

பட்டதாரிகத்தான் பால் கரக்கிறாங்க, உயர் பட்டதாரிகளும் மாடுகளுக்கு புல்லு போடுறாங்க. அதுனாலதான் ஒஸ்ட்ரேலியா, நியூசிலாந்தும் ஒலக நாடுகளுக்கே பால் போடுறாங்க.

நம்மளுக்கே இருந்த பெருந்தோட்ட தொழிற்றுறையே போச்சி, கால்நடை வளர்ப்பையே மறந்திட்டு வாரோம்.

பெருந்தோட்டத் துறையவும் கால மாற்றத்திற்கு ஏத்த வகையில மாத்திருக்கலாமே? அப்பிடி மாத்தியிருந்தா படிச்சவங்களும் இந்தத் தொழில்ல ஈடுபட்டிருப்பாங்க.

தொழில் கௌரவம்ன்றதையே இல்லாமாக்கிட்டாங்களே!

அந்திவேளையிலதான் பட்டில மாட்டுப் பொங்கல் பூசை பண்ணுவாங்க.

காலையிலை இருந்து ஒரே பட்டி வேலையா இருக்கும். ஆடு மாடுகளை குளிப்பாட்டி, அதுகல காய வைச்சி டை பூசி, மாட கலராக்கி வைக்கிற வரைக்கும் ஒரே வேலையா இருக்கும்.

பொங்கலோ பொங்கல் மாட்டுப்பொங்கல்ன்ற சத்தம் தோட்டத்தையே இரண்டாக்கிரும்.

தோட்டம் முழுக்க சாணி இருந்தனால வாசல் வளவெல்லாம் ஒரே சாணி மயமா இருக்கும். சாணிக்கு கிருமிய அழிக்கிற சக்தி இருக்குதுனு சொல்லுவாங்க.

அந்த வாய்ப்பெல்லாம் இல்லாம போயிருச்சேனுதான் கவலையா இருக்கு.

மாடு ஆடுகளுக்கு சாம்பிராணி சூடத்த காட்டி இனிப்பு பொங்கல், வெள்ள பொங்கல், பூசணிக்காய் இதெல்லாத்தையும் ஊட்டிவிடுரதுல எவ்வளவு சந்தோஷம் இருக்கு தெரியுமா?

காடுகளை அழிச்சி உருவாக்கினதுதான் இந்த தோட்டம். திரும்பவும் காடுகளாதானே ஆகிக்கிட்டு இருக்கு.

அட சண்டப் போட்டாலும் ஊருல ஓர் எல்லைய காட்டி, இங்க வந்துரு பாப்போம். அப்பிடீன்னு சொன்னது ஒரு காலம்.

இந்த தோட்டங்கள் காடா போறதுக்கு பல காரணங்கள் இருக்கு, அதுல முத காரணம் நம்மதான்.

நம்ம தோட்டம், நம்ம தோட்டம்ன்ற உணர்வோட வாழ்ந்தோம். தோட்டமும் நல்லா இருந்திச்சி, நம்மலும் நல்லா இருந்தோம்.

இப்ப என்னாடானா நம்ம தோட்டம்ன்ற உணர்வு செத்துப் போச்சி. எவனுட்டு தோட்டம் தானேன்ற உணர்வு கூடி போச்சி.

இதை வச்சி தோட்டங்கல கூறு போடுறதுல பெரும்பான்மை எம்.பிமாறு என்னமா? வெளையாட்டு காட்டுறாங்க.

இது தெரியாம நம்ம ஆளுகளும் அவங்க காலடியில் கெடக்கிறதுதான் ரொம்ப பெரிய சாபம்.

முன்னையெல்லாம் தோட்டத்துக்கு புதுசா ஒரு ஆளு வர முடியுமா?

இப்ப ஊர்ல வந்து அடிச்சிட்டு போனாலும் அடுத்த வீட்டுக்காரன் கூட கேட்க மாட்டேங்ரா.

என்னத்த சொல்ல.

**தோட்டத்தில் வலம் வருவோம்.**

## பேசவேண்டியவை மூடியே கிடக்கின்றன



– ஷாமிலா ஷெரீப்

நினைவு 34

***பாடசாலைகளில் தினம் தினம் ஒவ்வொரு நிகழ்ச்சிகள் நடைபெற்றுக்கொண்டே இருக்கும்.***

***ஓரிரு மணித்தியால நிகழ்சிகளுக்காக விரயம் செய்யப்படும் பணம் குறித்து இந்த அரங்கத்தில் பேசலாம் என்று நினைக்கிறேன்.***

***நாங்கள் கற்ற காலங்களில் இல்ல விளையாட்டுப் போட்டியின்போது அணி கண்காட்சிக்காக இல்ல நிறங்களில் பொலித்தீன் ஆடையில் வைத்து தைக்கப்படும் அல்லது பொலித்தீனால் மேலங்கி ஒன்று செய்து தரப்படும். தற்போது பொலித்தீன் பாவனை தடை செய்யப்பட்டிருப்பதால் உடற்பயிற்சி, கண்காட்சி போன்ற நிகழ்ச்சிகளுக்குப் பெருமளவு பணம் செலவழிக்கப்படுகின்றது. காலுறை, கையுறை, ஆடை, தொப்பி, அணிகலன்கள் என பயனற்றதாகக் கொள்வனவு செய்கின்றனர்.***

***சிங்கள பாடசாலைகளில் மாணவர்கள் பயன்படுத்தக்கூடிய விதத்தில் குறைந்த செலவில் ஆடை அணிகலன்கள் கொள்வனவு செய்து கொடுக்கப்படுகின்றன. கொழும்பிலுள்ள பாலர் பாடசாலையில் மாணவர் வெளியேற்றுகை நிகழ்வுக்காக கொடுக்கப்பட்ட ஆடைகள் தொடர்ந்து பயன்படுத்தக்கூடிய விதத்தில் அமைந்திருந்தன.***

***மேலும், எனது பிள்ளைகள் கொழும்பு - 09 இல் உள்ள தனியார் பாடசாலையில் கல்வி கற்கின்றனர். அந்தப் பாடசாலையின் அதிபர் சகோதர மொழி பேசுகின்றவர். எனவே, ஒவ்வொரு விழாவை மிகச் சிறப்பாக நடத்தி முடிப்பார். அடிக்கடி பெற்றோரிடம் எதற்கும் பணம் அறவிட்டதில்லை.***

***மொழி தின விழா ஒன்றை நடத்துவதற்காக மண்டப அலங்காரத்துக்கென மாணவர்களிடமிருந்து மூன்று பூக்களும் இரண்டு இலைகளும் நிறத்தாளால் செய்து வர வேண்டும் என்றும் அதனை எவ்வாறு செய்யவேண்டும் என்றும் யூரியூப் லிங்கும் வட்ஸ்அப்பில் அனுப்பப்பட்டிருந்தது***

***நானும் இணைப்பிலுள்ள வீடியோவைப் பார்த்து அதற்கேற்ற மாதிரி பூக்களை வடிவமைத்து அனுப்பியிருந்தேன். இதுபோன்று அனைத்து மாணவர்களும் செய்து வழங்கியிருந்தனர்.***

***மொழிகள் தினம் என்பதால் தமிழ் ஆங்கில மொழி எழுத்துகளையும் பழைய பத்திரிகைகளால் வடிவமைப்பு செய்து பார்ப்பதற்கு பிரமிக்க வைக்கும் வகையில் மண்டப அலங்காரம் அமைந்திருந்தது.***

***நிகழ்வுக்கு வந்த அனைவருக்கும் குளிர்பானங்களுடன் சிற்றூண்டி பறிமாறப்பட்டது. பெருமளவான பணம் உணவுக்காகவே செலவிடப்பட்டது.***

***மேற்படி சம்பவத்தின் மறுபக்கத்தைப் பல பாடசாலைகளில் காண்கிறேன். ஒவ்வொரு விழாவுக்கும் கோலமிட இரண்டு மூன்று கிலோ அரிசி பயன்படுத்தப்படுகிறது. உண்மையில் தமிழர் பண்பாட்டில் கோலம் போடுவதன் நோக்கம் எறும்புகளுக்கு உணவாக அமையும் என்கின்ற உயரிய பண்பாகும். ஆனால், அழகியல் நவீனமயப்படுத்தப்பட்டு அரிசியில் - மாவில் பல நிறங்களைக் கலந்து கோலமிடுகின்றனர். நிகழ்வு முடிய அள்ளி குப்பையில் போடப்படுகிறது. என்னுடைய கவலை என்னவெனில் குப்பையில் போடுவதற்கு ஏன் உணவை வீண் விரயம் செய்யவேண்டும் என்பதாகும்.***

***பாடசாலை நிகழ்வுகள் பெரும்பாலும் பாடசாலை அபிவிருத்திச்சங்க கட்டண நிதியிலிருந்து (மாணவர்களின் பணம்) வீண்விரயம் செய்யப்படுகிறது.***

***இல்ல விளையாட்டுப் போட்டிக்கு இல்ல அலங்காரம் செய்ய தலா 25 ஆயிரம் ரூபா என நான்கு இல்லங்கள் அலங்கரிக்கப்பட்டன. தனியார் பாடசாலையொன்றில் இல்ல அலங்காரத்துக்கு ஒரு இலட்சத்துக்கும் மேல் பெற்றோரால் செலவழிக்கப்பட்டது. பொருளாதார கஷ்டமுடைய மாணவர்களின் நிலை குறித்து யோசிப்பதில்லை. குழுச் செயற்பாடு என வழங்கி வயிற்றில் அடிக்கும் நிலை உள்ளது.***

***கண்காட்சி ஒன்றுக்காக வகுப்பறையை கோள்மண்டலமாக மாற்ற 50 ஆயிரம் பாதீடு கொடுக்கப்பட்டது. பின் அது 35 ஆயிரமாக்கப்பட்டு ஒன்பது மாணவர்களின் பெற்றோர்களால் அப்பணம் பிரித்துக்கொடுக்கப்பட்டது. கண்காட்சி ஒன்றை நடத்துவதன் நோக்கம் மாணவர்களிடமுள்ள சுய ஆக்கத்திறனை மேம்படுத்துவதற்காகவும் மேற்கொள்ளப்படுகின்ற செயற்றிட்டமாகும். ஆனால், அதனைப் பெருமளவு பணத்தைப் பிள்ளைக்குக் கொடுத்து மாணவர்களின் ஆக்க முயற்சி மழுங்கடிக் கப்படுகிறது. ஆனால், இன்னும் ஜப்பானிய கல்வி முறைமை குறித்து பேசிக்கொண்டிருக்கின்றோம். நாங்கள் மாறுவதாக இல்லை.***

**தொடர்வாள்...**

## ஆட்சிக்கவிழ்ப்பு...

(11ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதனால் இலங்கை மின்சார சபையின் கடன்தொகை மீண்டும் அதிகரித்துச் செல்லும் அபாயம் காணப்படுவதாகவும் அவ்வாறு கடன் அதிகரித்தால் இலங்கை மின்சார சபை அரசாங்கத்துக்கு மீண்டும் சுமையாக அமையக்கூடும் எனவும் பீட்டர் புவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

எனவே, மின்சார சபையின் செலவுகளை ஈடுசெய்யக்கூடிய வகையில் மின்கட்டணங்களில் திருத்தம் செய்யப்பட வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார். இதுவும் மக்களுக்குச் சுமையாக மாறி எதிர்காலத்தில் தேசிய அரசியலில் மட்டுமல்ல, அரசாங்கத்தின் பின்னடைவிலும் செல்வாக்குச் செலுத்தும் காரணியாக அமையவுள்ளது.

அதனையொட்டியதாக அரசாங்கம் எரிபொருள் விலை சூத்திரத்தை அங்கீகரிக்குமா அல்லது முன்னர் மேடைகளில் கூறியதுபோல் விலை சூத்திரத்தை மாற்றுமா என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச பாராளுமன்றத்தில் அரசாங்கத்திடம் கேள்வியெழுப்பியும் உள்ளார்.

விலை சூத்திரம் மாற்றப்பட்டால் புதிய சூத்திரம் என்னவாக இருக்கும்? இல்லையெனில், அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்தின் தாளத்துக்கேற்ப தொடர்ந்து நடனமாடுமா என்றுதான் கேட்பேன் என்று எதிர்க்கட்சித் தலைவர் பாராளுமன்றில் கேள்வியெழுப்பியிருந்தார்.

“முழு நாடும் எரிசக்தி நெருக்கடிக்காக உருவாக்கப்படுவது பற்றி” - இது குரங்கால் ஏற்பட்டதா அல்லது எலியால் ஏற்பட்டதா என்பது குறித்து ஒரு விவாதம் நடந்தது. அல்லது ஆற்றல் கட்டமைப்பிலிருந்த ஒரு தேவைக்கு சூரிய சக்தி ஒரு தீர்வை வழங்க முடியாததால் இவை நடந்ததா? அமைச்சருக்கு நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். சர்வதேச முக்கிய செய்தி என்னவென்றால், ஒரு குரங்கு மின்சார அமைப்பை செயலிழக்கச் செய்தது. இது குறித்து சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தன.

ஒரு குரங்கால் ஏற்பட்ட மின்வெட்டு குறித்து சர்வதேசத்துக்கு அறிவிக்கும்போது, அந்நிய நேரடி முதலீடு அதிகரிக்குமா. மேலும், நாட்டுக்கு வளங்களைக் கொண்டுவர விரும்பும் குழுக்கள் அந்தப் பணத்தைக் கொண்டுவருமா? ஒரு பிரச்சினை எழும்போது தெளிவான மற்றும் வெளிப்படையான பதில்களை வழங்க நீங்கள் கடமைப்பட்டுள்ளீர்கள். அவ்வாறு செய்யத் தவறினால் மின்சார நுகர்வோர் சமூகத்துக்கு அசௌகரியம் ஏற்படும். மேலும், நாட்டின் ஒட்டுமொத்த மக்களுக்கும் சிரமம் ஏற்படும். இந்த நாடு அதன் விரும்பிய பொருளாதார வளர்ச்சி இலக்குகளை நோக்கி நகர வேண்டிய அந்நிய நேரடி முதலீட்டில் இது எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்துகிறது என்ற அவரின் கருத்து ஆராயப்பட வேண்டியது மட்டுமல்ல, அரசாங்கம் கவனம் செலுத்தவும் வேண்டும்.

நாட்டைக் குழப்ப சதி செய்வதாக அரசாங்கம் நேரடியாகவும் மறைமுகமாகவும் விரல் நீட்டும் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, “காற்றாலை மின் திட்டம் தொடர்பாக புதிய அரசின் நிலைப்பாட்டை காண ஆர்வமாகவுள்ளேன்” என்று இந்திய தலைநகர் புதுடெல்லியில் நடைபெற்றுவரும் ‘NXT சர்வதேச மாநாட்டில்’ வைத்து தெரிவித்து இந்தியாவுடன் இணைந்து செயற்படுத்துவதற்கு முன்மொழியப்பட்ட காற்றாலை மின்திட்டம் தொடர்பாக புதிய அரசாங்கம் என்ன செய்யப் போகிறது என்பதைப் பார்க்கக் காத்திருப்பதாக அங்கு நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் வைத்து தெரிவித்துள்ளார். இந்தியப் பயணத்தின்போது முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியையும் சந்தித்துக் கலந்துரையாடியிருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

அரசாங்கம் என்ற வகையில் நாம் மக்களுக்கு சுமையாக இருக்கக் கூடாது. மக்கள் மீது சுமையை ஏற்றும் வகையிலேயே கடந்த அரசுகள் செயற்பட்டன. அரச சேவை மட்டுமன்றி அரசும் மக்களுக்குச் சுமையாக மாறியிருந்தது. இந்த நாட்டின் அமைச்சர்கள், பிரதமர்கள், ஜனாதிபதிகள் மக்களுக்குச் சுமையாக மாறியிருந்தனர். மக்களின் சுமையைக் குறைப்பதே எங்கள் அரசின் நோக்கம். அதனால்தான் நாங்கள் விசேட கவனம் செலுத்துகிறோம்.

ஓர் அரசாங்கம் மக்களிடமிருந்து நேரடியாகவும் மறைமுகமாகவும் பெறும் வரிகளாலேயே பராமரிக்கப்படுகிறது. மேலும், ஒவ்வொரு ரூபாவுக்கும் நாங்கள் பொறுப்புக்கூற வேண்டியவர்கள் என்று பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய எதிர்க்கட்சிகளுக்குப் பதிலளிக்கும் வகையில் தெரிவித்து, பதவிகள் மற்றும் சிறப்புரிமைகளை தனிப்பட்ட ரீதியில் பெற்ற ஒன்றாகக் கருதுவது மோசடிக்கும் ஊழலுக்கும் காரணம் என்பதை அரசாங்கம் என்ற வகையில் நாம் புரிந்துகொண்டுள்ளோம்.

பதவியின் காரணமாக - சிறப்புரிமை காரணமாக கிடைக்கும் அதிகாரத்தை வைத்து தாம் தனித்துவமானவர்கள் என்று எண்ணும் அகங்காரம் மிகவும் ஆபத்தானது. சிறப்புரிமைப் பதவிக்கானதேயன்றி தனிநபருக்குரியதல்ல என்பதை அரசியல்வாதிகள் மட்டுமன்றி அனைவரும் புரிந்துகொள்ள வேண்டுமெனவும் வலியுறுத்தியிருக்கிறார்.

கோட்டாபய அரசாங்கத்தைக் கவிழ்க்க முதலில் காரணமாக அமைந்தது அந்த அரசாங்கத்திலிருந்த ஓர் அமைச்சர்தான் என புதிய ஜனநாயக முன்னணியின் பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சாமர சம்பத் தசநாயக்க பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அப்போது, “2022இல் அரசாங்கம் வீழ்ச்சியடைந்ததற்கு முக்கிய காரணம் என்ன? அந்த நேரத்தில் அரசாங்கத்திலிருந்த ஓர் அமைச்சர் நாட்டில் இன்னும் ஒரு வாரம் மட்டுமே எரிபொருள் இருக்குமென்று கூறினார். பின்னர் மக்கள் பீப்பாய்களாக எரிபொருளைப் பெற்றுக்கொண்டனர். கோட்டாபய அரசாங்கத்தைக் கவிழ்க்க முதலில் காரணமாக அமைந்தது - செய்தது அரசாங்கத்தின் சொந்த அமைச்சர்தான். இன்றும் அதேதான் நடக்கிறது. இப்போது அவர்கள் குரங்குகளை எண்ணும் விளையாட்டை விளையாட முயற்சிக்கிறார்கள்” எனத் தெரிவித்த கருத்தை அரசாங்கம் கடந்து செல்லாமல் ஆழமாகச் சிந்தித்தால் கவிழும் நிலைக்குச் சென்றுகொண்டிருக்கும் அரசாங்கத்தை இலகுவாக சுமுகமாக நடத்திச் செல்லலாம்.

## இலங்கையை....

(13ஆம் பக்கத் தொடர்ச்சி)

நீதிமன்றத்தில் ஆஜராகும்போது அதிக ஆபத்துள்ள கைதிகளுக்கு ஆயுதமேந்திய எஸ்கார்ட்களை அனுப்புதல் மற்றும் நீதிமன்ற அறைகளிலிருக்கும் நபர்களின் நம்பகத்தன்மையை உறுதிப்படுத்த கைரேகை சரிபார்ப்பு நெறிமுறைகளை செயற்படுத்துதல் ஆகியவை இந்த நடவடிக்கைகளில் அடங்கும்.

இச்சம்பவம் இலங்கையில் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச்செயல்களின் பரவலானது மற்றும் சட்டத்தை அமுல்படுத்தும் கட்டமைப்புகள் எதிர்நோக்கும் சவால்கள் குறித்த பொதுப் பேச்சுகளை தீவிரப்படுத்தியுள்ளது. நீதிமன்றக் கொலையின் வெட்கக்கேடான தன்மை, பொதுப் பாதுகாப்பை மேம்படுத்துவதற்கும் சட்டத்தின் ஆட்சியை நிலைநிறுத்துவதற்கும் விரிவான உத்திகளின் அவசரதேவையை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.

நாடு எதிர்நோக்கியிருக்கும் பல சவால்களுடன் பொதுப் பாதுகாப்புக்கு ஏற்பட்டுள்ள களங்கம் வெளிநாட்டு முதலீட்டாளர்களின் வருகையை தாமதப்படுத்தும் என்பதில் சந்தேகமில்லை. எனவே, தேசிய பாதுகாப்புக்கான உடனடித் தீர்வுகளை தீவிரப்படுத்துவது பொறுப்புள்ள அரசாங்கத்தின் பிரதான கடமையுமாகும் என்பதை பொறுப்புக் கூறவேண்டியவர்கள் உணர்ந்து செயற்படவேண்டும். சாக்குப்போக்குச் சொல்லி காலத்தைக் கடத்துவது சட்ட ஆட்சியை சீர்குலைக்கும்.

முடிவாக, இலங்கையின் தற்போதைய நெருக்கடியைச் சமாளிப்பதற்கும் நெகிழ்ச்சியான பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கும் இலங்கையின் பாதை அரசியல், பொருளாதார மற்றும் சமூக பரிமாணங்களைக் கையாளும் சமநிலையான அணுகுமுறையில் தங்கியுள்ளது.

பாரபட்சமற்ற, அரசியல் தலையீடுகளற்ற, திட்டமிட்ட நிர்வாகத்தை வளர்ப்பதன் மூலமும் விவேகமான பொருளாதாரக் கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதன் மூலமும் மனித மற்றும் உட்கட்டமைப்பு மூலதனத்தில் முதலீடு செய்வதன் மூலமும் தேசம் அதன் சவால்களை வழிநடத்தி, நிலையான வளர்ச்சிக்கு வழிவகுக்கும். சவால்கள் நிறைந்த பயணத்துக்கு கூட்டு முயற்சி, வெளிப்படைத்தன்மை மற்றும் அனைத்து இலங்கையர்களின் நல்வாழ்வுக்கான அசைக்க முடியாத அர்ப்பணிப்பும் தேவைப்படுகிறது.

# மெல்லத் திறக்குமா கண்கள்?

தமிழன் சிறுகதை

ஜெனீரா தௌபீக் ஹைருல் அமான்

பாடசாலைக்கு லீவு எடுக்காமல் வரும் மாணவிகளில் ஹனூனா மர்யமும் ஒருத்தி. வழமையாகப் பாடசாலை ஆரம்பமாகும் முன்னரே வகுப்பறைக்குள் வந்துவிடுவாள்.

அன்று அவள் வரவில்லை. எங்காவது வெளியில் நிற்பாளோ? ஆசிரியரின் கண்கள் நோட்டமிட்டன. அவளை எங்கேயுமே காணவில்லை.

இன்னுமொரு மாணவி இடாப்பை எடுத்து வந்தாள். வருகை தந்த மாணவர்கள் “பிரசன்ட்” சொல்லிக்கொண்டிருந்தார்கள்.

சற்று நேரத்தின் பின் ஹனூனா மர்யம் தாயுடன் வருகை தந்தாள். ஆயிஷா ரீச்சர் அப்பாடசாலையின் ஸ்டாப்.



‘‘மகள் பாடசாலை வருவதற்கு ஆயத்தமானபோது வயிற்று வலி ஏற்பட்டது. அதனால உரிய நேரத்துக்கு வர முடியல ரீச்சர்.’’

‘‘நல்ல வேளை ‘எப்சன்ட்’ போடல. அதற்கிடையில் வந்திட்டீங்க. ஏலாம இருக்கையில ஏன் கூட்டி வந்தீங்க..? வீட்டில விட்டிட்டு வந்திரிக்கலாமே..’’

‘‘வீட்டில யாரிருக்கிற..? நானும் ஸ்கூல் வந்தா.. ஹனூனா தனிமையில் என்ன செய்வாள்..? அவளுக்குப் பாதுகாப்பில்லையே.. முன்பு உம்மா இருக்கும்போது விட்டிட்டு வந்தேன். அவங்க மௌத்தான பின், எனக்குச் சரியான கஷ்டம். வாப்பாக்கும் சுகமில்லை. அவங்களும் ஹொஸ்பிட்டலில் இருந்தாங்க. மன ஆறுதலுக்காகச் சொந்தம் பந்தம் எனப் போயிருவாங்க’’ என்றவாறு கையிலுள்ள சொக்லேட் பக்கற்றை நீட்டினாள்.

‘‘என்ன இது..? எதற்காக..?’’

‘‘இன்று வெளியான புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவிகளுக்குக் கொடுத்துவிட்டு மீதியை உங்களுக்கும் கொண்டு வந்தேன் ரீச்சர். எனது மகள் சம்ஹா மர்யம் இவர்களுடன்தான் படித்தாள். அவள் இருந்திருந்தால். புலமைப்பரிசில் பரீட்சை எழுதியிருப்பாள். சம்ஹா எம்மை விட்டுப் பிரிந்துவிட்டாளே..’’ என அழுதாள்.

ஆயிஷா ரீச்சர் தைரியமானவள். எதையும் தாங்கும் உள்ளம் படைத்தவள் என்றே நினைத்திருந்தேன். அவள் மனமுருகி அழுவதைப் பார்த்து ரீச்சரும் கண்ணீர் வடித்தாள்.

‘‘அழாதீங்க.. ஆயிஷா ரீச்சர். நல்லவங்கள அல்லாஹ் சோதிப்பான். ஆனால் அல்லாஹ் கைவிட மாட்டான்.”

இதைத் தவிர வேறு ஆறுதல் வார்த்தை அவளால் கூற முடியல.

‘‘மகள் சம்ஹா மர்யம் பிறந்த மாதமும் மௌத்தான மாதமும் வரும்போது சம்ஹாவின் வாப்பா ஆடிப்போய் விடுகிறார். ஒரே யோசனை. அல்சர் கூடிக்கொண்டே போகிறது. ம்... என்ன செய்ய..?’’ பெரியதொரு ஏக்கப் பெருமூச்சு விட்டாள் ஆயிஷா ரீச்சர்.

தொடர்ந்தார்,

அன்று பாடசாலை சென்று வந்த சம்ஹா, வழமைக்கு மாறாக சோர்ந்து காணப்பட்டாள்.

‘‘ஏம்மா.... ஒரு மாதிரியா இருக்கா.. என்ன செய்து..?’’ தாய் ஆயிஷா வினவியபோது சம்ஹா எதுவுமே பேசாமல் சுருண்டு படுத்தாள்.

நெற்றியிலும் கழுத்திலும் கையை வைத்துப் பார்த்தாள். காய்ச்சல் நெருப்பாய்க் கொதித்தது. மகளை வைத்தியரிடம் கொண்டு ஓடினாள்.

வைத்தியர் பரிசோதித்து விட்டு, ‘‘காய்ச்சல் அதிகரித்துள்ளது. டெங்கின் அறிகுறி காணப்படுகிறது’’ என்றார்.

ஆயிஷா ரீச்சர் அதிர்ந்து போகல்ல. மனசைக் கல்லாக்கி, அல்லாஹ்விடம் இருகரமேந்தி மன்றாடினாள்.

‘‘இறைவா! எனது பிள்ளையைக் காப்பாற்று..’’

சம்ஹாவின் வெண்ணிற மேனியெங்கும் மாதுளம் முத்துக்கள் பதித்ததுபோல சிவப்பு நிறக் கொப்புளங்கள் காணப்பட்டன. இரத்தம் குறைந்து கொண்டு சென்றன. கண்கள் இறுக மூடிக்கொண்டன. உதடுகள் மட்டும் ‘‘வாப்பா..வாப்பா..’’ என அசைந்தன.

ஆயிஷா ரீச்சரின் கணவர் மன்னாரில் வேலை செய்பவர். மூன்று நாள் லீவில் வந்தவர், மகள் சம்ஹாவுக்கு ஸ்கூல் பேக், பைசிக்கிள் என அவள் விரும்பிக் கேட்டதையெல்லாம் வாங்கிக் கொடுத்துவிட்டே சென்றார்.

அவர் செல்லும்போது சந்தோஷமாகவே வழியனுப்பி வைத்தாள்.

ஆயிஷா ரீச்சர் சொல்லவும் முடியாமல் மெல்லவும் முடியாமல் தட்டுத்தடுமாறி விடயத்தைக் கூறினாள்.

அவரால் நம்ப முடியல. தலை சுற்றியது. உலகமே இருண்டது.

‘‘எனது பிள்ளைக்கு டெங்கா..?’’

பதற்றத்துடன் மகளின் நிலைமையைக் கூறி லீவு கேட்டார். மூன்று நாள் லீவில் போய் நேற்றுத் தான் வந்துள்ளாய். அதற்கிடையில் இன்னுமொரு லீவா..?’’ ஒரே வார்த்தையில் “முடியாது” எனக் கூறினார்.

உண்மையில் தலைமைத்துவம் மற்றவர்களின் துன்ப, துயரங்களை அறிவதில்லை. நாமும் மனிதர்தான். நமக்கும் இதே நிலை ஏற்பட்டால்.. என உணர்பவனே மனிதன்.

மகள் சம்ஹாவின் நிலைமையை நினைத்துக் கண்ணீர் வடித்தார். கவலை நெஞ்சைப் பிளந்தது. மயக்கமானார்.

இவ்விடயம் ஸ்டாப்புக்குத் தெரிய வரவே லீவும் கெட்ட கேடும். ஆபத்துக்கு உதவாத லீவு எதற்கு..? வேன் ஹயர் பண்ணி வீடு வந்து சேர்ந்தனர்.

ஆயிஷா ரீச்சர் தொங்கோட்டம் ஓடிக்கொண்டிருந்தார். ஹனூனா பதினொரு மாதக் குழந்தை. அவளுக்குப் பாலூட்ட வேண்டும். சம்ஹா வைத்தியசாலையில். இரு குழந்தைக்கும் தாய்தான்வேண்டும்.

அப்போதே தள்ளாடித் தள்ளாடி மிகவும் சோகத்துடன் வைத்தியசாலையை வந்தடைந்தார். மகள் சம்ஹா எதுவித உணர்வுமற்றவளாகக் கட்டிலில் படுத்திருந்தாள்.

‘‘சம்ஹா குட்டி. வாப்பா வந்திருக்கேன். கண்ணைத் திறந்து பார் செல்லம்..’’ கெஞ்சினார். மன்றாடினார். அவள் மூடிய கண்களைத் திறக்கவே இல்லை. சம்ஹா இவ்வுலகை விட்டே சென்றிருந்தாள்.

யாருக்கு யார் ஆறுதல் கூறுவது..?

போன உயிரை மீட்க முடியுமா..?

‘டெங்கு’ எனும் கொடிய நோயை உச்சரிக்கும்போதெல்லாம் ஆயிஷா ரீச்சரின் குடும்பத்தின் உள்ளங்களில் தாங்க முடியாத வலி ஏற்பட்டுக்கொண்டே இருக்கும்.

நோன்பு காலமென்றால் சம்ஹாவின் ஞாபகம் அடிக்கடி எழும். தலைப்பிறை பார்ப்பதற்காகச் செல்லச் சிட்டாய் வீதியில் குதூகலமாய் வலம் வருவாள்.

நோன்பு பிடிக்க என்னையும் எழுப்பணும். வாய் ஓயாமல் கேட்டுக்கொண்டே இருப்பாள். எழுப்ப மாட்டாங்களோ எனப் பயந்து எல்லோருக்கும் முன்பே ஸஹர் செய்வதற்காக எழுந்து எல்லோரையும் எழுப்புவாள்.

இன்று அவளில்லாமல் வீடே வெறிச்சோடிக் கிடக்கிறது. கடைசியாகச் சம்ஹாவுக்காக வாங்கிய ஸ்கூல் பேக்கை ஹனூனா மர்யம் அணிந்து வருகிறாள். அவள் சைக்கிளை மகன் ஓடுகிறான்.

‘‘திரும்பும் திசையெல்லாம் அவள் முகமே நெஞ்சில் நிழலாடுகிறது. சம்ஹா முந்திக்கொண்டாள், நாமும் அதே இடத்துக்குப் பிந்திச் செல்வோம்’’ என ஆயிஷா ரீச்சர் மன ஆறுதலடைந்தாள்.

## மலையகத்தின் சொல்ல மறந்த கதை
## உணர்வு தாகங்கள்

தாயகத்தில் இருந்து
வந்து
கொண்டு வந்த கதையை
எல்லாம்
சொல்ல மறந்து விட்டு
புறப்பட்டு
பயணப்பட்டால்
பாப்பாத்தி...

நூற்றாண்டு காலமாக
புடிச்சி வெச்ச
பெருமூச்ச
வந்து சேர்ந்த
மலைகாட்டில்
அவுத்துவிட்டா
பாப்பாத்தி...

எதிர்கால சந்ததிக்கு
சேதி போய் சேரணும்னு
தேல வாதில் எல்லாம்
தன்னோட சோக
கதைகளையே
ரத்தத்தில்
எழுதி வைத்து
புறப்பட்டா பாப்பாத்தி...

கங்காணி கொடுத்த அடி
துரைக்காரன்
படுத்திவிட்ட
துன்பமான பெரும்பாடு
நெத்தி வியர்வை
எல்லாம்
பீலியாக நிலத்தில் சிந்த
பாடுபட்ட பாப்பாத்தி
அத்தனைக்கும் ஓய்வு
தந்து
முதல் முறையா
புறப்பட்டா...

எழுத்தாணி வச்சி
எல்லாம்
எழுதிடவே முடியாதது
அவளோட அந்தக் கதை
எழுத்தாணி கூறும்
எல்லாம்
அவளோட கதையைக்
கேட்டா
துன்பம் தாளாம
உடைந்து தானே
போய்விடும்...

உழைத்த காலங்களில்
உண்டு கழுத்திடாம
காலம் பூரா ஓடி ஓடி
கழித்து விட்ட பாப்பாத்தி
கைகாலுக்கு ஓய்வு தந்து
வாய்மூடி மௌனியாகி
முதல் முறையா
புறப்பட்டா....

மடிமேல ஏந்தி இருக்கும்
முனியாண்டி அண்ணன்
அவர்
பாப்பாத்தி முகம்
தனையே
சிமிட்டாம பார்த்து நிக்க
அங்கே அரங்கேறி
நிற்கிறது
இன்னும் ஓர்
அதிசயம் தான்....

கை கால் இயலாம
கண்மூடி கிடந்தவ
கண்ண முழிச்சிவிட்டு
முனியாண்டி முகமதினை
மெதுவாக பார்கிறாள்...

அடி எத்தனை
கூர்மையம்மா
அந்த கண்ணு ரெண்டில்
பாப்பாத்தி பழையபடி
மாறிட்டாளா...

கையை மெல்ல அசைச்சி
முனியாண்டி முகம்
மேலே
கைய வெச்சி
அண்ணே என்று
சொன்னா
பாப்பாத்தி...

உடம்பெல்லாம் புல்லரிக்க
கை கால்கள் எல்லாமே
அந்தரத்தில் பறக்கும் படி
உலகமே புரியவில்லை
அண்ணங்காரே
முனியாண்டிக்கு....

அண்ணே அண்ணே
என்று சொல்லி
மூணு முற கூப்புட்டுட்டு
முகத்தை தடவி விட்டா
அத்தன பரிவோட...

யம்மா பாப்பாத்தி
நீயா பேசுறது
இத்தனை காலமாக
நினைவத்து கிடந்த நிய்யி
எம்பேரு சொல்லிடவா
இத்தனை நேரம்
காத்திருந்த

கதறுகிறார்
முனியாண்டி...

(சொல்ல மறந்த கதை
இன்னும் சொல்லப்படும்)

எம்.ராமதாஸ்,
இறம்பொடை.

தமிழன் தொடர்கதை

# புலரும் பொழுது

அத்தியாயம் 12

கலாபூஷணம் சபீனா வைத்துல்லாஹ்

பிள்ளைகள் சந்தோசப்பட்டனர். வயல் விற்பதற்கான ஒழுங்குகள் நடந்தன. நல்ல விளைச்சல் தரக்கூடிய வளமான அந்தக் காணியைப் பலரும் வந்து விலை பேசினர். சில நாட்களில் நியாயமான விலைக்கு அது விற்கப்பட்டது.

கலியாணப் பேச்சுவார்த்தைகளும் தொடர்ந்தன. அத்தோடு நகரத்துக்குள் வீடு வாங்கும் முயற்சியும் தொடர்ந்தது. அமுதனும் ஆனந்தனும் அப்பாவிடம் ஆலோசனைகள் பெற்று அயராத முயற்சியில் ஈடுபட்டனர்.

வாகனம் நிறுத்தும் இடத்துடன் கூடிய வசிப்பிடம் தேடியலைந்தனர் நாதனின் குடும்பத்தினர். அவர்களுக்குப் பொருத்தமான இடம் கிடைக்கவில்லை.

புரோக்கர் மூலமும் இடம் பார்த்தனர்.

“பெண்ணைப் பெற்றவர்கள் படும்பாடு சொல்லி முடியாது” என அமுதன் வருந்தினான்.

தான் எந்த வகையிலும் “வாழ்க்கைத் துணையின் ஈன்றோரை இம்சைப் படுத்துவதில்லை” என்று உறுதிகொண்டான்.

“பெண் எவ்வளவு பெரிய படிப்புப் படிச்சாலும் மாப்புள்ளக்குக் குடுக்கிறத்துக்கு சீதனமும் சேர்க்கணுமே. இதென்ன கொடுமை. இந்தப் பிரச்சினை முடிவுக்கு வராதா” என்று கலங்கினான் அமுதன்.

‘‘நல்ல இடம் நமக்குக் கெடைக்கும். ஆறுதலாத் தேடுவோம்” என்று சொல்லுவார் மாலா.



அமுதன் மணம் முடிப்பதற்கு நிச்சயம் பண்ணியிருக்கும் பெண்ணின் தூரத்து உறவினர் ஒருவர் நகரத்தில் தனது பழைய வீட்டுடன் காணி விற்க இருப்பதாக அறிந்தார் நாதன். அதை விசாரித்தார்கள்.

அது பொருத்தமான இடமாகத் தெரிந்தது. அதை வாங்குவதற்கு முடிவெடுத்தனர்.

தங்களின் வயல் விற்ற பணம் அதை வாங்குவதற்குப் போதாமல் இருந்தது.

“அப்பா, நம்ம பட்டியில இருக்கிற மாடுகள் கொஞ்சத்தக் குடுத்துக் காசெடுப்போமே’’ என்றான் அமுதன்.

“ஓமப்பா இந்த வீட்ட விட்டோமெண்டால், டவுனில வீடு வாங்கக் கஷ்டமாப் போயிடும்” என்றார் மாலா.

“மாடு கன்று தேடிக் கொள்ள ஏலுமப்பா’’ என்றான் அமுதன்.

நீண்ட நேர யோசனையின் பின்னர், “சரி நம்ம இந்த வீட்டை வாங்குவோம்’’ என்று சம்மதம் சொன்னார் அப்பா.

அந்த நேரத்தின் மகிழ்ச்சியை அமைதியாகக் கொண்டாடியது அந்தக் குடும்பம்.

நாதனின் பண்ணையிலிருந்து பசுமாடுகள் கைமாறிக் காசாயின.

தாங்கள் வாங்க இருக்கும் வீட்டை எல்லோரும் சென்று பார்வையிட்டனர். பழைய வீடு என்பதால், அது முற்றாகத் திருத்தவேண்டிய நிலைமையில் இருந்தது. அந்தப் பொறுப்பை அமுதனும் ஆனந்தனும் ஏற்றுக்கொண்டனர். அவர்கள் இருவரும் உழைத்து மாலாவுக்கு வீடு கட்டிக் கொடுக்கச் சம்மதித்தனர். திருமணத்துக்குச் சீதனமாய் நகரத்தில் வீடு எனும் விஷயம் நிறைவேறியது.

“இந்தக் கலியாணம் நெறவேறும் வரை இன்னும் என்னென்ன செலவுகள் வருமோ. எத்தனை வலிகள் தாங்கணுமோ” என்றெண்ணிப் பெருமூச்சுவிட்டாள் மாலா.

‘‘எனக்குச் சீதன வீடு தேடி, என் குடும்பம் எவ்வளவு கஷ்டங்களைத்தான் அனுபவிச்சாங்க!” என எண்ணி வருந்தி “இந்த நெலமை மாறுங்காலம் வராதா” என ஏங்கினாள் மலர்.

“வீடு வாங்கியாச்சு. இனிக் கலியாணப் பேச்சை மொறையாகத் தொடங்குவோம்” என முடிவெடுத்தனர்.

நாதனின் மகளுக்கு மருத்துவப் பட்டப் பரீட்சையும் முடிந்தது. மலருக்கு மணநாளும் குறிக்கப்பட்டது.

“பூவரசம்பூ பூத்தாச்சு,
என் பொண்ணுக்கு சேதியும் வந்தாச்சு,
காவேரி போல பொங்குது மனசு
தாலேலோ!”

என்று தனக்குள் பாடி மகிழ்ந்தாள் மாலா.

மகளுக்கு அழகான வாழ்க்கை அமையப் போவது, தன் வாழ்க்கையில் கிடைத்த மிகப் பெரிய வெற்றி என எண்ணினாள்.

பொறுமைக்கும் நிதானமாக நடந்து கொண்டமைக்கும் கிடைத்த பரிசாகப் பொருந்திக்கொண்டாள்.

மாலாவின் சொந்தங்களைத் தேடிப் போய் திருமண அழைப்பு விடுத்தாள்.

நாதனின் குடும்பத்தில் அனைவரையும் கௌரவமாய்த் திருமணத்துக்கு அழைத்தாள்.

அதிக ஆடம்பரமின்றித் திருமண ஏற்பாடுகள் இடம்பெற்றன.

விவசாயி நாதனின் மகள் டொக்டர், மதிமலருக்கும் வாத்தியார் மகன் டொக்டர், ஞான குணாளனுக்கும் திருமணம் இனிதே நிறைவேறியது.

திருமணத்துக்கு வந்த உறவினர்கள் சீதன விபரங்களைத் தங்களுக்குள் ஒவ்வொரு விதமாகப் பேசிக்கொண்டனர்.

“பொண்ணுக்குச் சீதனவீடு டவுனுக்குள்ள குடுத்ததாமே”

என்றார் நாதனின் சகோதரி ஐஸ்வர்யா!

“ஓமாம் ஒரு பழைய வீடாம். நகைகள் குடுக்க இல்லையாமே” என்றாள் கவிதா.

“ மலர் தனக்கு நகையெல்லாம் தேவையில் லண்டு சொல் லிட்டாவாம். அண்ணன் சுகமில்லாம இருந்ததிலே செலவு அதிகந்தானே” என்றார் நாதனின் கடைசித் தங்கை சுகந்தி.

ஊரும் உறவுகளும் ஒவ்வொரு கோணத்தில் நின்ற பார்வையின் மூலம் விமர்சனங்களை அள்ளி வீசுவது ஆச்சரியமில்லைதான்!

அவரவர் வாழ்க்கையில் சந்திக்கும் இன்ப துன்பங்களின்போது நின்று நிதானித்துப் பயணிப்பதில்தான் வெற்றியுண்டு என்பதை மாலா ரீச்சர் நன்குணர்ந்தவர்.

(தொடரும்)

# சம்பியன் கிண்ண இறுதிப் போட்டியில் ரோஹித் - சாண்ட்னர் பலப்பரீட்சை




(ரமணி)

இந்தியா, நியூசிலாந்து அணிகள் மோதவுள்ள ஐசிசி சம்பியன்ஸ் கிண்ண இறுதிப்போட்டி எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை டுபாயில் நடைபெறவுள்ளது.

இரண்டு அணிகளும் இதே மைதானத்தில் லீக் சுற்றில் மோதியதால் மைதானத்தில் சூழல் எப்படி இருக்குமென இரண்டு அணிகளும் அறிந்திருக்கின்றன. இதனால், போட்டி கடும் சவால் நிறைந்ததாக இருக்கும். இந்தியாவை விட நியூசிலாந்து அணி வலுவாக இருப்பதாக விமர்சகர்கள் கூறுகிறார்கள்.

இந்தியாவுக்கு கடும் நெருக்கடி கொடுக்கக்கூடிய அணியாக நியூசிலாந்து உள்ளது. இடது கை சுழற்பந்து வீச்சாளர் மிட்செல் சாண்ட்னர் தலைமையிலான அந்த அணியில் மைக்கேல் பிரேஸ்வெல், க்ளென் பிலிப்ஸ், ரச்சின் ரவீந்திர ஆகிய மூன்று சுழற்பந்து வீச்சாளர்கள் இடம்பெற்றுள்ளனர். எனவே, சுழற்பந்து வீச்சிலுள்ள பன்முகத்தன்மையின் அடிப்படையில் வலுவாக உள்ளனர். லீக் சுற்றுப் போட்டியில் அவர்களின் பந்துவீச்சை இந்திய வீரர்கள் சமாளித்தாலும் இறுதிப்போட்டி கடும் சவாலாக இருக்கும்.

நியூசிலாந்து அணி களத்தில் ஃபீல்டிங் மூலம் மட்டுமே 30/40 ஓட்டங்களை சேமிக்கும் திறன் கொண்டுள்ளது. அட்டகாசமான கேட்சுகள் அதிர்ச்சியளிப்பதாக உள்ளன. சாண்ட்னர், வில் யங், மைக்கேல் பிரேஸ்வெல் போன்றவர்கள் சிறந்த பீல்டர்களாக திகழ்கின்றனர். கூடுதலாக எதிரணி வீரர்களையும் ரசிகர்களையும் ஆச்சரியப்படுத்தக்கூடிய க்ளென் பிலிப்ஸ்ம் நியூசிலாந்து அணியில் இருக்கிறார். அவர் தனது விதிவிலக்கான பீல்டிங் மூலம் ஆட்டத்தின் போக்கை மாற்ற முடியும். சுழற்பந்து வீச்சாளர்கள் செயற்படும்போது, அவர்களின் சிறந்த ஃபீல்டர்கள் அனைவரும் வளையத்தில் இருப்பதால், அவர்கள் ஒற்றை ஓட்டத்தை நிறுத்துவதன் மூலம் அழுத்தத்தை அதிகரிக்கின்றனர்.

இந்தியாவைப்போலவே, நியூசிலாந்து அணியும் சூழ்நிலைக்கேற்ற துடுப்பாட்ட வரிசையைக் கொண்டுள்ளது. லீக் போட்டியில் அவர்கள் சிறப்பாகச் செயற்படவில்லை என்றாலும், கம்பேக் கொடுக்கும் திறன் கொண்டுள்ளனர். ரச்சின், யங் மற்றும் கேன் வில்லியம்சன் ஆகியோரை உள்ளடக்கிய டொப் ஆர்டர் விரைவான தொடக்கத்தை வழங்குவதோடு மட்டுமல்லாமல், மிடில் ஆர்டருக்கு ஓர் அடித்தளத்தை உருவாக்கித் தருகின்றனர். பெரும்பாலான அணிகள் இந்தியாவின் சுழற்பந்து வீச்சாளர்களை எதிர்த்துப் போராடுவதில் சிரமப்பட்டாலும் டொம் லாதம், டேரில் மிட்செல் மற்றும் பிலிப்ஸ் போன்றவர்கள் சிறந்து விளங்குகின்றனர்.

இந்தியாவும் சளைத்ததல்ல. 2013 சம்பியன்ஸ் தொடரில் டோனி தலைமையில் இறுதிப் போட்டியில் விளையாடிய இந்தியா கிண்ணத்தையும் வென்றது. சம்பியனது. 2017 சம்பியன்ஸ் கிண்ணப் போட்டியில் விராட் கோஹ்லி தலைமையில் இறுதிப் போட்டிக்குச் சென்ற இந்திய அணி பாகிஸ்தானிடம் தோற்றது. தற்போது ரோகித் சர்மா தலைமையில் இறுதிப் போட்டிக்குச் சென்றுள்ளது.

சம்பியன்ஸ் கிண்ண வரலாற்றில் தொடர்ந்து மூன்று தொடர்களில் (2013, 2017, 2025) இறுதிப்போட்டிக்குச் சென்று தகுதிபெற்ற முதல் அணி என்ற ஹட்ரிக் உலக சாதனையை இந்தியா படைத்துள்ளது

2023 டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்ற இந்தியா அடுத்ததாக நடைபெற்ற 2023 உலகக் கிண்ணம், 2024 இல் ரி20 உலகக் கிண்ணம் ஆகியவற்றில் இந்திய சம்பியன்ஸ் பட்டத்தை வென்றது.

தற்போது நடைபெறும் சம்பியன்ஸ் டிராபி இறுதிப் போட்டிக்கும் இந்தியா தகுதிபெற்றுள்ளது. கடைசியாக நடைபெற்ற 4 ஐ.சி.சி. தொடர்களிலும் இந்திய அணி இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளது. ஐ.சி.சி. தொடர்களில் தொடர்ச்சியாக இறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்ற முதல் அணி என்ற சாதனையை இந்தியா படைத்துள்ளது.

இதற்கு முன் 1975 – 1983 காலகட்டங்களில் மேற்கிந்தியா, 2000 – 2003 காலகட்டங்களில் இந்தியா, 2019 – 2021 காலகட்டங்களில் நியூசிலாந்து அணிகள் தலா 3 இறுதிப் போட்டிக்குத் தொடர்ந்து தகுதிபெற்றதே முந்தைய சாதனை. இதிலிருந்து மற்ற அணிகளைக் காட்டிலும் இந்திய ஐ.சி.சி. தொடர்களில் நன்றாகச் செயற்படுவது தெரிகிறது.

கோஹ்லி, ரோஹித் ஆகியோருக்கு கடைசி சம்பியன் தொடர் என்பதால் கூடுதல் கவனம் பெற்றுள்ளது.

# பீபா போட்டிகளில் விளையாட மூன்று நாடுகளுக்குத் தடை




(சிலம்பு)

**விளையாட்டு ரசிகர்களால் கொண்டாடப்படும் உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டிக்கு இன்னும் 14 மாதங்களே உள்ள நிலையில், பாகிஸ்தான், ரஷ்யா, கொங்கோ ஆகிய மூன்று நாடுகளுக்கு பீபா தடை விதித்துள்ளது.**

**பீபாவின் வரலாற்றில் முதன்முறையாக 2026ஆம் ஆண்டு உலகக்கிண்ண உதைபந்தாட்டப் போட்டியில் 48 நாடுகள் கலந்துகொள்ளவுள்ளன. அமெரிக்கா, கனடா, மெக்சிகோ ஆகிய நாடுகளில் அடுத்தாண்டு ஜூன் மாதம் 11ஆம் திகதி தொடங்கும் உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டி ஜூலை 19ஆம் திகதி வரை நடைபெறுகிறது. முதன்முறையாக இப்போட்டி மூன்று நாடுகளில் நடைபெறவுள்ளது.**

**பாகிஸ்தான்:** போட்டியிலிருந்து தடைசெய்யப்பட்ட மூன்று நாடுகளில் பாகிஸ்தானும் ஒன்று. பாகிஸ்தான் உதைபந்தாட்டக் கூட்டமைப்பு (PFF) சுதந்திரமான, நியாயமான தேர்தல்களை உறுதிசெய்யும் புதிய அரசியலமைப்பை அமுல்படுத்தவில்லை. உதைபந்தாட்ட கூட்டமைப்பில் தேர்தல் நடத்துவதென்பது பீபா, ஆசிய உதைபந்தாட்டக் கூட்டமைப்பு (AFC) விதிகளின்படி கட்டாயமாகும்.

தேர்தல் நடத்தாத காரணத்தால் கடந்த பெப்ரவரி 06ஆம் திகதி பாகிஸ்தான் உதைபந்தாட்டக் கூட்டமைப்பை பீபா இடைநீக்கம் செய்தது. கடந்த 2019ஆம் ஆண்டு, ஜூன் மாதம் முதல் பீபா நியமித்த குழுவால் பாகிஸ்தான் உதைபந்தாட்டம் நிர்வகிக்கப்படுகிறது.

**ரஷ்யா:** 2022ஆம் ஆண்டு, உக்ரைன் மீது படையெடுத்ததிலிருந்து ரஷ்ய உதைபந்தாட்ட அணியை பீபாவும் ஐரோப்பிய லீக்கும் தடை விதித்தன.

**கொங்கோ:** கொங்கோ உதைபந்தாட்டக் கூட்டமைப்பின் நிர்வாகத்தில் சட்டவிரோதமான மூன்றாம் தரப்பு தலையீட்டின் காரணமாக பீபா போட்டிகளிலிருந்து கொங்கோ தடைசெய்யப்பட்டுள்ளது.

# கென்ய அணியின் பயிற்சியாளராக மெக்கார்த்தி நியமனம்



தென்னாபிரிக்காவின் முன்னாள் கப்டன் பென்னி மெக்கார்த்தி கென்யாவின் தேசிய உதைபந்தாட்ட அணியின் தலைமைப் பயிற்சியாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்தப் பொறுப்பை ஏற்க கடந்த வாரம் நாட்டுக்கு விமானத்தில் வந்த மெக்கார்த்தி, திங்களன்று தலைநகர் நைரோபியில் கால்பந்து கென்யா கூட்டமைப்பு (FKF) அதிகாரபூர்வமாக வழங்கினார். இரண்டு வருட ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ள இவர், கடந்த டிசம்பரில் இராஜிநாமா செய்த துருக்கிய எஞ்சின் ஃபிராட்டிடமிருந்து பொறுப்பேற்கிறார்.

மெக்கார்த்தியின் தொழில்நுட்பப் பிரிவில் உதவிப் பயிற்சியாளராக வாசிலி மனூசாகிஸ், கோல்கீப்பர் பயிற்சியாளராக முன்னாள் தென்னாபிரிக்க சர்வதேச வீராங்கனை மொனீப் ஜோசப்ஸ், செயற்றிறன் ஆய்வாளராக பிலேலா மபோசா ஆகியோர் இணைந்துள்ளனர். மூவரும் இரண்டு வருட ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டுள்ளனர்.

இந்த மாதம் காம்பியா மற்றும் காபோனுக்கு எதிரான 2026 ஃப் பீபா உலகக் கிண்ண தகுதிச்சுற்றுப் போட்டிகளுக்கு கென்யா தயாராகி வருவதால், மெக்கார்த்தியும் அவரது குழுவும் உடனடியாகப் பொறுப்பேற்பார்கள்.

மெக்கார்த்தி கடந்த ஆண்டு இங்கிலீஷ் பிரீமியர் லீக் அணியான மான்செஸ்டர் யுனைடெட்டில் உதவிப் பயிற்சியாளராகப் பணியாற்றினார்.

# பராலிம்புக்குத் தயாராகிறது மிலானோ கோர்டினா



2026 குளிர்கால விளையாட்டுகளின் ஏற்பாட்டாளர்கள், சர்வதேச பராலிம்பிக் குழு, இத்தாலிய பராலிம்பிக் குழு ஆகியவற்றுடன் இணைந்து செயற்பாடுகளை ஆரம்பித்துள்ளனர்.

2026ஆம் ஆண்டு மார்ச் ஆறாம் திகதி, அரினா டி வெரோனாவில் நடைபெறும் தொடக்க விழாவுக்கு ஒரு வருடம் முன்னதாக புதன்கிழமை ஏற்பாட்டுக் குழுவின் தலைமையகத்தில் IPC தலைவர் ஆண்ட்ரூ பார்சன்ஸ், மிலானோ கோர்டினா அறக்கட்டளை மற்றும் CONIஇன் அவரது சகா, ஜியோவானி மலகோ மற்றும் CIP தலைவர் லூகா பான்கல்லி ஆகியோரின் செய்தியாளர் சந்திப்புடன் கொண்டாட்டங்கள் தொடங்கின.

ஒலிம்பிக் போட்டியின் ஐந்து புதிய தூதர்களான தடகள வீரர்கள் மார்டினா கெய்ரோனி, ஆண்ட்ரியா மேக்ரி, கேப்ரியல் லான்சா, அலெஸாண்ட்ரோ ஆண்ட்ரியோனி, சிமோன் பர்லாம் ஆகியோர் இந்த விழாவில் பங்குபற்றினர்.

அவர்களுடன் மற்ற விளையாட்டு வீரர்களும் சேர்ந்து விளையாட்டுகள் பற்றிய தங்கள் அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டனர்.

ஒமேகா பிராண்டால் உருவாக்கப்பட்ட விளையாட்டுகளின் அதிகாரபூர்வ கவுண்ட்டவுன் கடிகாரம், போட்டிகள் தொடங்கும் வரை மீதமுள்ள நேரத்தைக் குறிக்கும் வகையில், அதே நாளில் பியாஸ்ஸா போனாவில் திறக்கப்படும். இந்த விளக்கக்காட்சியுடன் இணைந்து, பராலிம்பிக் போட்டிகளுக்கான டிக்கெட் விற்பனை தொடங்கும் 14 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு $10.7 (10)இல் தொடங்கும் விலையும் 2,00,000க்கும் மேற்பட்ட டிக்கெட்டுகள் $37.5 (35)க்கும் குறைவாகவும் கிடைக்கும். விசா அட்டைதாரர்களுக்குப் பொது திறப்புக்கு முன் 24 மணிநேர பிரத்தியேக முன் விற்பனை இருக்கும்.

# 50,000 புள்ளிகளை எட்டிய முதல் வீரர் லெப்ரான் ஜேம்ஸ்




லொஸ் ஏஞ்சல்ஸ் லேக்கர்ஸ் ஃபார்வர்ட் வீரரான லெப்ரான் ஜேம்ஸ் கூடைப்பந்தாட்ட வரலாற்றில் 50,000 புள்ளிகளைப் பெற்ற முதல் வீரரானார்.

நியூ ஆர்லியன்ஸ் பெலிகன்ஸுக்கு எதிரான ஆட்டத்தில் ஜேம்ஸ் 50,000 புள்ளிகளுக்கு ஒரு புள்ளி குறைவாக நுழைந்தார், முதல் காலாண்டின் தொடக்கத்தில் 3 புள்ளிகள் எடுத்து அதை முறியடித்தார்.

40 வயதில் ஜேம்ஸ் தொடர்ந்து வரலாற்றைப் படைத்து வருகிறார். 2023ஆம் ஆண்டு பெப்ரவரி 07ஆம் திகதி கரீம் அப்துல்- ஜப்பாரின் 38,387 புள்ளிகளின் சாதனையை முறியடித்தபோது, அவர் லீக்கின் எல்லா நேரத்திலும் முன்னணி வழக்கமான சீசன் ஸ்கோரராக ஆனார்.

அப்துல்-ஜப்பார் 44,149 புள்ளிகளுடன் இரண்டாவது இடத்திலுள்ளார்.




Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7